
# தமிழ்ச் செவ்வியல் நூல்களில்

## அறம் - அறிவியல் - சமூகம்

முனைவர் ஆ. மணவழகன்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

# தமிழ்ச் செவ்வியல் நூல்களில்
# அறம்-அறிவியல்- சமூகம்

முனைவர் ஆ. மணவழகன்

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை – 600 113

## நூல்விவரக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல்தலைப்பு | : | தமிழ்ச் செவ்வியல் நூல்களில் அறம் – அறிவியல் – சமூகம் |
| ஆசிரியர் | : | முனைவர் ஆ. மணவழகன்<br>இணைப் பேராசிரியர்<br>சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்<br>தரமணி, சென்னை 600 113<br>தொலைபேசி எண் 044–22542992 |
| வெளியீட்டு எண் | : | 755 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2013 |
| ISBN எண் | : | 978–81–925359–2–0 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6 கிகி டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | 1/8 டெம்மி |
| எழுத்தின் அளவு | : | 10 புள்ளி |
| பக்க எண்ணிக்கை | : | 10+150 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| விலை | : | ரூ. 70/– (ரூபாய் எழுபது மட்டும்) |
| அச்சகம் | : | ஸ்ரீ சரவணா அச்சகம்<br>144, தம்புத் தெரு<br>சென்னை 600 001 |
| பாடம் | : | பழந்தமிழ் இலக்கியம் |

**முனைவர் கோ. விசயராகவன்,** எம்.ஏ., எம்.ஃபில், பி.எட்., பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600113

# அணிந்துரை

பழந்தமிழ்ச் சமூகம் அறிவை உடைமையாகக் கொண்டது. அது தம் தேடல்களை அரசியல், சமூகவியல், பொருளாதாரம், அறிவியல், அறவியல், கலைகள் என நாள்தோறும் விரிவுபடுத்தியது. தேடலின் முடிவுகளைப் பொதுமன்றங்களில் வைத்து முறைப்படி பதிவு செய்தது. அப்பதிவுகள் பழந்தமிழ் இலக்கியங்களாக நம்முன் ஒளிர்கின்றன. இன்றைக்கும் உலகம் வியந்து போற்றுகிற கருத்துக் கருவூலமாக அவை திகழ்கின்றன. அதனாலேயே பழந்தமிழ் இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகள் இன்றும் பல்வேறு கோணங்களில், புதுப்புது ஆய்வுப் பொருண்மைகளோடு தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

அவ்வகையில், பழந்தமிழ் இலக்கிய ஆய்வு குறித்த பொருண்மைகளான இயற்கை, வருணனை, உவமை, தலைவன், தலைவி, தோழி, காதல், நட்பு என்பனவற்றிலிருந்து விலகி சமூகம், தொழில்கள், மேலாண்மை, மனிதவளம், தொழில்நுட்பம், எதிர்காலவியல், தொலைநோக்கு என இன்று நவீனத் தேடல்களோடு புதிய தடங்களில் ஆய்வுகள் வளர்ந்திருப்பது சிறப்பு. அவ்வகையில், எவ்வகைப் பொருண்மைக்கும் தேடலுக்கும் ஆய்வுக் களத்தை அமைத்துக் கொடுக்கும் பழந்தமிழ் இலக்கியங்கள் என்றும் வியப்பிற்குரியனவே.

நூலாசிரியரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சமூகவியல், கலை (ம) பண்பாட்டுப் புலத்தின் இணைப்பேராசிரியருமான **முனைவர் ஆ.மணவழகன்** அவர்கள், பழந்தமிழ் இலக்கியங்களை நவீனப் பொருண்மைகளோடு அணுகுபவர். செவ்வியல் இலக்கிய ஆய்வுகளுக்காகக் குடியரசுத் தலைவரின் **'இளம் ஆய்வு அறிஞர்'** விருதினைப் பெற்றவர். பண்டைத் தமிழரின் தொலைநோக்குப் பார்வை, சங்க இலக்கியத்தில் மேலாண்மை, பழந்தமிழர் தொழில்நுட்பம், தொலைநோக்கு போன்ற இவரின் முந்தைய நூல்களும் நூற்பொருண்மைகளும் பழந்தமிழ் இலக்கியங்களை நவீனப் பார்வையில் அணுகும் ஆய்வுமுறைக்குச் சான்றுகள்.

அவ்வகையில், இந்நூலும் பழந்தமிழ் இலக்கியங்களை ஆய்வுக் களமாகக் கொண்டு புதிய ஆய்வுப் பொருண்மைகளோடு எழுதப்பட்டுள்ளது சிறப்பு.

மகளிர் தொழில்முனைவோர், திணைசார் வாழ்வியல், பொறியியல் நுட்பம், மனிதவள மேம்பாடு, ஆளுமைத்திறன், மருத்துவம், உடல்நல மேலாண்மை, பல்துறை நுட்பம், சமூக மதிப்பீடு, சமயநிலை, அறம், மரபு அறிவு எனப் பன்முகத் தன்மைகளோடு ஆராயப்பட்ட கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. பழந்தமிழ் இலக்கியங்களைக் களமாகக் கொண்டு ஆய்வினை மேற்கொள்ள விழையும் ஆய்வாளர்களுக்கு இப்பொருண்மைகள் மேலாய்வுக் களங்களாகத் திகழும். அவ்வகையில், பழந்தமிழ் இலக்கியங்களில் பொதிந்துள்ள பல்வேறு நுண்கருத்துகளை நுணுகி ஆய்ந்து கொடுத்துள்ள நூலாசிரியர் முனைவர் ஆ.மணவழகன் அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ் மீதும், தமிழர் மீதும், தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பரியன. தமிழின் மேம்பாட்டுக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றார்கள். ஒல்லும் வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிணைப் பதிவு செய்கின்றேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் தொழிற்கல்வி, உயர்கல்வி, பள்ளிக்கல்வி, தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவருமாகிய மாண்புமிகு பி. பழனியப்பன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சியில் எங்களை வழிநடத்திவரும் தமிழ் வளர்ச்சி, மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப. அவர்களுக்கும் என் இனிய நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன். இந்நூலை வடிவமைப்பு செய்த திருமதி இலட்சுமி மற்றும் செல்வி தீபிகா ஆகியோருக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ சரவணா அச்சகத்தாருக்கும் என் பாராட்டுகள்.

இயக்குநர்

# புகுமுன்

பழந்தமிழ் இலக்கியங்கள் பரந்து விரிந்த ஆழ்கடலாக நம்முன் காட்சியளிக்கின்றன. அக்கடல் சிலரை அன்போடு அரவணைக்கிறது; சிலரைப் பயமுறுத்துகிறது. அது எப்போதும் வியப்பிற்குரியதாகவே இருக்கிறது.

அந்த ஆழ்கடலுள் விலைமதிப்பற்ற பலவித நன்மணிகள் புதைந்து கிடக்கின்றன. ஆர்வமும் விருப்பமும் கொண்டோர் அவற்றைத் தேடி காலந்தோறும் அக்கடலில் நீந்திக்கொண்டே இருக்கின்றனர்; மூழ்கிமூழ்கி முயற்சித்துக்கொண்டே இருக்கின்றனர். அவர்களின் முயற்சிக்கேற்ப அறிவுச் செல்வங்களோடு கரை சேர்க்கிறது அலை. ஆழம் கண்டு அஞ்சுவோர் சிலர், 'என்ன இருக்கிறது இதில்'? என்று குறைகூறி, கடலையும் நீந்துபவரையும் வெறுப்போடு பார்த்துச் செல்கின்றனர். இலக்கியக் கடல், அவர்களுக்கும் சேர்த்தே கருத்து மணிகளை விதைத்து வைத்திருக்கிறது.

கடலில் நீந்தவில்லை என்றாலும் கால்களை நனைத்துப் பார்த்தவன் என்கிற மகிழ்ச்சி எனக்குள் எப்போதும் உண்டு. கடலையும் அதன் அருமையையும் எனக்கு அறிமுகப் படுத்தியவர்களே அந்தப் பெருமையை எனக்கு வழங்கியோர். அவர்கள் எப்போதும் என் நன்றிக்கு உரியோர்.

பழந்தமிழ் இலக்கியத்தில் இது எனது நான்காவது நூல். இந்நூல், செவ்வியல் இலக்கியங்களாக அடையாளப்படுத்தப்பட்ட பழந்தமிழ் நூல்களை ஆய்வுக் களமாகக் கொண்ட பத்து ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்புநூல். அறம், அறிவியல், சமூகம், சமயம், மருத்துவம், மனிதவளம், ஆளுமைத் திறன் எனப் பலவித நுண்பொருண்மைகளைக் கொண்டது. இக் கட்டுரைகள் முடிவைச் சுட்டுவன அல்ல. மேலும் ஆய்விற்கு வித்திடுவன.

சிலரால்தான் சில நற்செயல்கள் நடந்தேறும். அந்தவகையில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அண்மைகாலச் செயல்பாடுகளுக்குச் சொந்தக்காரர் இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் அவர்கள். ஆராய்ச்சிப் பணி, அலுவலகப் பணி,

மேம்பாட்டுப் பணி என அனைத்திலும் ஒருங்கே கவனம் செலுத்துகிற பன்முக ஆளுமைக்குச் சொந்தக்காரர். இந்நூல் அவரால்தான் வெளிவருகிறது. அவருக்கு என் நன்றியை நவில்கிறேன்.

என் ஆய்வுப் பணிகளைப் பாராட்டியும் ஊக்கப்படுத்தியும் பல்வேறு தமிழியல் பணிகளில் ஆற்றுப்படுத்தியும் வருகிற உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மேனாள் இயக்குநரும் தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநருமான முனைவர் கா.மு. சேகர் அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

'மாதத்திற்கு ஓர் ஆய்வுக் கட்டுரை; ஆண்டிற்கு ஓர் ஆய்வு நூல். இதனை எப்போதும் மனத்தில் வைத்து ஆய்வு செய்யவேண்டும்' என்று காணுந்தோறும் அறிவுரை கூறுவார் முதுபெரும் தமிழறிஞர் முனைவர் ச.வே.சுப்பிரமணியன் அவர்கள். அவரின் சிந்தனையை முறையாகச் செயல்படுத்த முடியவில்லை என்றாலும், என் நூல் வெளிவருகிற போதெல்லாம் அவரின் அறிவுறுத்தலை எண்ணுகிறேன். அதேபோல், பேசுகிற போதெல்லாம் என் ஆய்வுப் பணிகள் குறித்து கேட்டறிந்து, விரைந்து செய்யுங்கள் என்று ஊக்கப்படுத்தி வருகிற என்னுடைய பேராசிரியர் முனைவர் அன்னிதாமசு அவர்களையும் நன்றியோடு நினைக்கிறேன்.

இந்த ஆய்வுப் பொருண்மைகளில் பொழிவுகள் மற்றும் கட்டுரைகள் வழங்க வாய்ப்பளித்த பொறுப்பாளர்களுக்கு என் நன்றி. நூலினைச் செப்பம் செய்ய உதவிய முனைவர் க.ஜெயந்தி மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன உதவிப் பேராசிரியர் முனைவர் சு.தாமரைப்பாண்டியன் ஆகியோர்க்கும் நூல் வடிவமைப்புச் செய்த திருமதி லட்சுமி மற்றும் செல்வி தீபிகா ஆகியோர்க்கும், அட்டை வடிவமைப்புச் செய்த நண்பர் திரு. இரவிசந்திரஹாசன் அவர்களுக்கும் என் நன்றி.

அன்புடன்

ஆ. மணவழகன்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பழந்தமிழகத்தில் மகளிர் தொழில்முனைவோர் | 01 |
| 2. | அகநானூறு: நெய்தல் திணைசார் வாழ்வியலில் இடர்ப்பாடுகள் | 12 |
| 3. | பழந்தமிழர் பொறியியல் நுட்பம் | 21 |
| 4. | சங்க இலக்கியத்தில் மனிதவள மேம்பாடும் ஆளுமைத் திறனும் | 37 |
| 5. | பழந்தமிழர் மருத்துவ முறைகளும் உடல்நல மேலாண்மையும் | 51 |
| 6. | சங்க இலக்கியத்தில் சமூக மதிப்பீடுகள் | 66 |
| 7. | தனித்தமிழ் இயக்கப் பார்வையில் செவ்வியல் இலக்கியங்களின் சமயநிலை | 80 |
| 8. | சங்க இலக்கிய அகவாழ்வில் ஆடவர்க்கான அறம் | 93 |
| 9. | செந்தமிழ் இதழில் சேர அரசர் - சேர நாடு - சேரர் இலக்கியம் | 112 |
| 10. | பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் மரபு அறிவும் பல்துறை நுட்பமும் | 130 |

# பழந்தமிழகத்தில் மகளிர் தொழில்முனைவோர்

அடிப்படைத் தேவைகளில் ஓரளவிற்கு நிறைவை எட்டிய ஒரு சமூகம், அவ்வகை நிறைவுகளை முதன்மை அடிப்படைகளாகக் கொண்டு, சமூகமேம்பாடு, பொருளாதார முன்னேற்றம் போன்ற பலவழிகளிலும் தம்மை நிலைப்படுத்திக்கொள்ள முனைகிறது. சமூக மேம்பாடும், பொருளாதார முன்னேற்றமும் தொழில்துறை வளர்ச்சியை மையமாகக் கொண்டவை. மேலும், உள்நாட்டு இயற்கை மூலதனங்கள், பிற நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் மூலப்பொருட்கள், தொழில்நுட்ப அறிவு ஆகியவை தொழிற்துறை வளர்ச்சிக்கான காரணிகளாக அமைகின்றன. எப்படியாயினும், ஒரு சமூகத்தின், நாட்டின் வளர்ச்சிக்கும் வல்லமைத் தன்மைக்கும் தொழில்துறை வளர்ச்சி இன்றியமையாததாக இன்றைக்கும் வலியுறுத்தப்படுகிறது.

'கிராமப்புற மற்றும் வேளாண்மைத் தொழிலையே பெரும்பாலும் நம்பியுள்ள இந்தியா போன்ற வளரும் நாடுகளில் ஏழ்மையை அகற்றி, மக்கள் அனைவருக்கும் போதுமான முறையில் உணவினைக் கிடைக்கச் செய்து, தேசம் வலுப்பெற, பயிர்த் தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு, மீன்வளம், வனம் சார்ந்த வேளாண்மை, வேளாண்மை சார்ந்த வணிகம் ஆகிய துறைகளில் விரைந்து வளர்ச்சி அடைய வேண்டும்' என்பது இன்றைய சமூகத் தொலைநோக்காக வலியுறுத்தப்படுகிறது. இவ்வகைச் செயல்பாடுகளில் பழந்தமிழகம் கருத்தைச் செலுத்தியதையும் வளர்ச்சி பெற்றிருந்ததையும் பழந்தமிழ் இலக்கியச் சான்றுகள் உணர்த்துகின்றன. அவ்வகைச் செயல்பாடுகளில் மகளிரின் பங்களிப்பு எவ்வகையில் இருந்தது என்பதை வெளிக் கொணர்தல் மகளிர் தொழில் முனைவோர் பெருகியுள்ள இன்றைய சூழலில் தேவையாகிறது.

மேலும், 'பொருளாதார வளர்ச்சியின் தொடக்க உந்து சக்தி வேளாண் துறையின் மூலமும், அதன் தொடர்வளர்ச்சி தொழில்

துறையைப் பொறுத்தும்' அமைவதாக இன்று கணிக்கப்படுகிறது. ஆகவே, இவ்விரு துறைகளுக்கும் பழந்தமிழகம் கொடுத்த முதன்மையையும் அத்துறைகளில் மகளிர் பங்களிப்புகளையும் நோக்குதல் தேவையாகிறது.

## வேளாண் உற்பத்தி மற்றும் வேளாண் வணிகத்தில் மகளிர்

### உணவு உற்பத்தி

வேளாண் தொழிலில் முக்கிய உற்பத்திப் பொருள் உணவு. அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானதான இவ்வுணவு மேலாண்மையில், உணவுப் பொருட்களின் உற்பத்தி - பாதுகாப்பு - பெருக்கம் - பரவலாக்கம் - உணவு வணிகம் என்ற அனைத்து நிலைகளிலும் பழந்தமிழக மகளிரின் தொழில்முறைச் செயல் பாடுகள் குறிப்பிடத்தக்கன. உணவு உற்பத்தியில், நாற்றுநடுதல் (பெரும்பாண்.211-12) தொடங்கி, களை எடுத்தல்(பதி.19), பயிரைக் காத்தல் (புறம்.344), அறுவடை செய்தல் (அகம்.116; மதுரைக்.110), தானியங்களைப் பதப்படுத்துதல் (பட்டினப்.22,23) போன்ற முக்கிய தொழில்களில் பெண்கள் ஈடுபட்டனர். இச்செயல்கள் மூலதனத்தைப் பெருக்கியதோடு பொருளாதார மேம்பாட்டிற்கும் வழிவகை செய்தன.

### பயிர்ப் பாதுகாப்பு

வேளாண்தொழிலில் பயிர்ப்பாதுகாப்பு என்பது இன்றியமையாத பணியாகும். விளைச்சலின் முழுப் பயனையும் அடைய பயிர்களை நன்கு பராமரித்தால் மட்டும் போதாது, அறுவடைக்குத் தயாரான பயிர்களை விலங்குகள், பறவைகள் போன்றவற்றிடமிருந்துக் காத்தல் இன்றியமையாதது. இவ்வகையில், பயிர்ப் பாதுகாப்புத் தொழிலைப் பழந்தமிழக மகளிர் மேற்கொண்டனர். மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்தின் முக்கிய விளைபொருள் தினையாகும். தினைக்கதிர்கள் முற்றி காணப்படும் அறுவடைக்குரிய பருவத்தில் கதிர்களைப் பறவைகள் உண்ண வரும். அங்ஙனம் பறவைகளால் தீங்கு ஏற்படாதவாறு குறிஞ்சி நிலத்து இளமகளிர் தினைப்புனத்தைக் காவல் காப்பர். இச் செய்தியைக் குறிப்பிடும் பல இடங்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

மலையிடத்திலுள்ள சிறிய தினைப்புனத்தை நாடிவரும் சிவந்த வாயையுடைய பசுங்கிளிகளின் கூட்டத்தை ஓட்டும் பொருட்டு, தலைவியைக் கிளிகடி கருவியாகிய 'தட்டை'யை எடுத்துக்

கொண்டு அத்தினைப் புனத்திற்குச் செல்க என்று அன்னை அனுப்பி வைக்கிறாள்(நற். 134:3-8; நற்.306:1-3). அதேபோல, பஞ்சுநுனி போன்ற தலையையுடைய, அப்பொழுதீன்ற தினைக்கதிர்களெல்லாம் பால் நிறைந்து முற்றித் தலைசாய்த்தன. அவற்றை உண்ணத்தகுமெனக் கருதிய சிவந்த வாயையுடைய பசிய கிளிகள் அக்கதிர்களைக் கொய்துகொண்டு போகக் கூட்டங் கூட்டமாக வரத் தொடங்கின. எனவே, நீ அங்கே சென்று கிளி ஓட்டும் தட்டையைக் கொண்டு ஒலி எழுப்புக என்று மகளிடம் கூறுகிறார் நற்றிணையில் ஒரு தந்தை (நற்.206:1-6).

அவ்வாறு அனுப்பப்பட்ட மகளிர், மலைப் பக்கத்தே கட்டின பரண்மீது ஏறி, தழலும் தட்டையுமாகிய கிளிகளைக் கடியும் கருவிகளைக் கையிலே வாங்கிக் கிளிகளை ஓட்டினர் (குறிஞ்சி. 41-44). வேங்கை மாலை சூடி, ஆயத்துடன் அழகுற நடந்து தழலினைச் சுற்றியும் தட்டையினைத் தட்டியும் தினைப்புனம் காத்தனர் (அகம்.188:1-13;.118;242; குறு.217:1-2; நற்.22:1; 57:8-9; 102:8-9; 128:6; ஐங்குறு.281).

### உணவுத் தேட்டம்

வேளாண் தொழிலில் ஈடுபட்டு உணவுத் தேவையை நிறைவுசெய்துகொள்ளும் இயற்கைவளம் அற்ற திணைப்பகுதி மக்கள், தங்கள் உணவுத் தேவைக்கு வேளாண்மை அல்லாத பிற உணவு மூலதனங்களைத் தேடவேண்டியிருந்தது. அத்தேட்டத்தை, உணவுத்தேவையை நிறைவுசெய்யும் முதன்மைத் தொழிலாக நோக்க வேண்டியுள்ளது. காட்டாக, பாலைநிலத்தில் வாழ்ந்தவர் எயிற்றியர்; இந்நிலத்துப் பெண்களான எயின மகளிர், உளிபோலும் வாயையுடைய பாறைகளாலே கரிய கரம்பு நிலத்தைக் குத்திக் கிளறிப் புழுதியைத் தோண்டி நுண்ணிய புல்லரிசிகளைச் சேர்ப்பர்; பின் அப்புல்லரிசியை விளா மரங்களின் நிழலையுடைய தம்வீட்டு முற்றத்திலே தோண்டப்பட்ட நிலவுரலிலே இட்டு, சிறிய வலிய உலக்கையால் குற்றி எடுப்பர்(பெரும்.88:97). இவ்வாறு, பெண்களின் தேட்டத்தால் கிடைத்த புல்லரிசியும் ஆண்களின் வேட்டையால் கிடைத்த ஊனும் எயினர்களின் உணவுத் தேவையை நிறைவு செய்ததை அறிய முடிகிறது.

### உணவுப் பரவலாக்கம்

நாட்டில் உணவு உற்பத்தி போதுமான அளவில் இருந்தாலும், உணவுப் பொருள் முடக்கம் நாட்டின் பெரும்பகுதி மக்களைப்

பசிப்பிணியில் ஆழ்த்திவிடுகிறது. அதனால், உணவுப் பொருள் பரவலாக்கம் என்பது ‘அனைவருக்கும் உணவு’ என்ற இலக்கை எட்ட வழிவகுப்பதாக அமைகிறது. அறிவியல் கண்டுபிடிப்புகள் வளர்ந்துள்ள இன்றைய நிலையிலும், உணவுப் பொருள் முடக்கம் என்பது வறுமையின் முதன்மைக் காரணிகளில் ஒன்றாகச் சுட்டப் படுகிறது. இந்நிலையில், உணவுப் பொருள் பரவலாக்கத்திற்குப் பழந்தமிழரின் செயல்பாடுகளைப் பழந்தமிழ் இலக்கியப் பதிவுகள் வழி காண்பது தேவையாகிறது.

பண்டைக் காலத்தில் காசுகள் புழக்கத்தில் இருந்தும், வாணிகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையிலேயே நடைபெற்றது. உணவுப்பொருட்களும் இவ்வகை பண்டமாற்று முறையிலேயே பரவலாக்கப்பட்டன. திணைசார் உணவுப்பொருட்கள் பண்டமாற்றில் சிறப்பிடம் பெற்றன. எல்லாவகை நில மக்களும் எல்லாவகை உணவுப் பொருட்களுக்கும் நுகர்வோராய் அமைய இம்முறை வழிவகுத்தது. குறிப்பாக, இவ்வகை உணவுப் பரவலாக்கத்தில் பழந்தமிழக மகளிர் தொழில்முனைவோரின் பங்களிப்பு குறிப்பிடத் தக்கதாக இருந்தது. பரதவர் மற்றும் ஆயர் குடியில், ஆடவர் உணவுப்பொருட்கள் உற்பத்தியிலும் மகளிர் அதைச் சார்ந்த வாணிகத்திலும் ஈடுபட்டு வந்துள்ளமை தெளிவாகிறது. பரதவ இன மகளிர் மீன், உணங்கல் மீன் போன்றவற்றைப் பண்டமாற்றுவதில் முன்னிற்கின்றனர். ஆயர் இன மகளிர் பால்படு பொருட்களின் விற்பனையிலும் அவற்றைச் சார்ந்த பொருளாதார ஈட்டலிலும் முன்னிலை பெறுகின்றனர்.

அதேபோல, பால், தயிர் மற்றும் மோருக்கு தானியமும் (குறு.221:3,4; பெரும்பாண்.155-165; புறம்.33:1-8), மீனுக்கும் இறைச்சிக்கும் வெண்நெல்லும்(நற்.239:3; அகம்.60:4; 340:14; ஐங்குறு.48:1-3; புறம்.33:1-8; 343:1,2; ஐங்குறு.47,47,49), மான் தசைக்குத் தயிரும்(புறம்.33:1-6), பாலுக்குக் கூழமும் (குறு.221: 3-4), நெய்க்கு எருமையோடு கன்றும்(பெரும்பாண்.162-65), தேன் மற்றும் கிழங்கிற்கு மீன்நெய் மற்றும் நறவும் (பொருநர். 214-217), கரும்பு மற்றும் அவலுக்கு மான்தசை மற்றும் கள்ளும் (பொருநர்.214-217), யானை வெண்கோட்டிற்கு உணவும் நறவும் (அகம்.61:9-10), மீன், கருவாடு போன்றவற்றிற்குக் கிழங்குகளும் ஊன் மற்றும் மது வகைகளும் (பொருநர்.215-217), கள்ளிற்கு ஆநிரையும் விலை கூறப்பெற்றன. மேலும், காட்டில் வாழும் வேட்டுவர் கொண்டுவரும் ஊனும், முல்லை நிலத்துப் பெண்டிர் கொண்டுவரும் தயிரும், மருதநில நெல்லுக்குப்

பண்டமாற்றப்பட்டன (புறம்.33:1-6). இவ்வகையில், உணவு வணிகத்தில் மகளிர் தொழில் முனைவோர் தங்கள் இல்லத் தேவைகளை நிறைவு செய்து கொண்டதோடு சமூகப் பொருளாதாரத்தையும் மேம்படுத்தியது தெரியவருகிறது.

## கடல் சார் தொழில் முனைவோர்

கடலும் கடல்சார்ந்த நிலப்பகுதியையும் தங்கள் தொழில் களமாகக் கொண்ட நெய்தல் நில பரதவ மக்கள் கடலில் கலம் செலுத்தி மீன் பிடித்தலை தம் முதன்மைத் தொழிலாகக் கொண்டனர். கடல்படு பொருட்களுள் மீனும், உப்பும் பரதவ மகளிர் தொழில்முனைவோருக்கு முதன்மையான வணிகப் பொருட்களாயின.

## மீன் பிடித்தலும் விற்றலும்

பரதவர் பிடித்து வரும் மீன்களைப் பரதவ மகளிர் ஊருக்குள் எடுத்துச் சென்று விற்றுவிட்டு, அதற்கு ஈடாகத் தமக்குத் தேவையான பிற பொருட்களைப் பெற்று வந்தனர். இதனை,

*ஓங்குதிரைப் பரப்பின் வாங்குவிசைக் கொளீஇ*
––– ––– ––– ––– –––
விழவு அயர் மறுகின் விலையெனப் பருகும் (அகம்.320:1–4)

என்பதில் அறியலாம். பாண்மகள், தன் தமையன்மார் நள்ளிரவில் சென்று பிடித்து விடியலில் கொணர்ந்த, திரண்ட கோடுகளை உடைய வாளை மீன்களுக்கு ஈடாக, நெடிய கொடிகள் பறக்கும் கள் மிக்க தெருவில் பழைய செந்நெல்லை வாங்க மறுத்துக் கழங்கு போன்ற பெரிய முத்துகளையும் அணிகலன்களையும் பெற்று வந்ததையும் (அகம்.126:7-12), வரால் மீன் கொண்டு வந்த வட்டி நிறைய இல்லக்கிழத்திகளிடம் பழைய நெல்லையும் (ஐங்.48:11-3), அரிகாலில் விதைத்துப் பெறும் பயறினையும் (ஐங்.47:1-3) பெற்று வந்ததையும் அறிய முடிகிறது.

இவற்றோடு, பரத ஆண்கள் பிடித்து வரும் மீன்களை வணிகப்படுத்தியதோடு, பெண்களே மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டதும் தெரியவருகிறது. கயிற்றையுடைய தூண்டிற்கோலால் மீன்களைப் பிடித்த பாணர் மகளை,

*நாண்கொள்நுண் கோலின் மீன்கொள் பாண்மகள்*
*தான்புனல் அடைகரைப் படுத்த வராஅல்* (216:1,2)

என்று காட்டுகிறது அகநானூறு.

### உணங்கல் மீன் உற்பத்தி

பரதவ ஆண்கள் பிடித்து வந்த மீன்களுள் விற்றது போக எஞ்சியவற்றையும், விற்பனைக்குரிய காலங்கடந்து பிடித்த வற்றையும் பரதவ மகளிர் உப்பிட்டு உலர வைத்து உணங்கல் மீன் தயாரிப்பர். வருவாயைப் பெருக்கிய தொழிலுள் இதுவும் குறிப்பிடத்தக்கது. இத்தொழிலையும், தொழில்நுட்பத்தையும் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

கடற்கரை மணலில் மீன்கள் உலர்த்தப்பட்டிருந்தன (அகம்.300:1-2); பரதவர் பிடித்து வந்த மீன்களும் இருங்கழியில் முகந்து வந்த இறால்களும் நிலவொளி போலும் எக்கர் மணலில் நன்றாக உலர்ந்து, பாக்கம் எங்கிலும் புலால் நாற்றம் பரவி வீசியது (குறு.320:1-4). பரதவ மகளிர் நிணம் மிகுந்த பெரிய மீன்களைத் துண்டங்களாகத் துணித்து உப்பிட்டு, வெண்மணல் பரப்பில் அவற்றைப் பரப்பி வெயிலில் உலர்த்தி, பறவைகள் அவற்றைக் கவராமல் காவல் காத்தனர். இதனை,

*உரவுக்கடல் உழந்த பெருவலைப் பரதவர்*
*மிகுமீன் உணக்கிய புதுமணல் ஆங்கண்* (நற்.63:1–2)

என்பதிலும்,

*நிணச்சுறா அறுத்த உணக்கல் வேண்டி*
*இனப்புள் ஒப்பும்* (நற்.45:6–7)

என்பதிலும் அறியலாம்.

### உப்பு வணிகம்

எந்தத் திணையைச் சார்ந்த மக்களாயினும் அவர்களின் அன்றாடத் தேவைகளுள் முதன்மையானது உப்பு. அதனால், நெய்தல் நில மகளிர் உப்பு வணிகத்தில் சிறப்புடன் ஈடுபட்டனர். உப்பு வணிகர் உமணர் எனப்பட்டனர். உவர் நிலத்தில் விளைவித்த உப்பினை வண்டிகளில் ஏற்றிச் சென்று மற்ற இடங்களில் வாழும் மக்களிடத்தே விற்பர். உமணர்கள் தங்கள் குடும்பத்தோடு கூட்டங்கூட்டமாக உப்பு விற்கச் சென்றனர். உப்பு வண்டிகளை உமணப் பெண்களே ஓட்டிச் சென்றனர். ஊருக்குள் சென்றதும் உப்பு விலை கூறி விற்பர். உப்பிற்கு ஈடாக பிற பொருட்கள் பண்டமாற்றிக் கொள்ளப்பட்டன (பெரும்பாண்.56-65; நற். 183; அகம்.60:4; 140:7-8; 390:8-9; குறு.269: 5-6; பெரும்பாண்.164-165; மலைபடு. 413; பட்டினப். 28-30).

உப்பிற்கு ஈடாக நெல்லைக் கோரும் உமணப் பெண்களை,

*உமணர் காதல் மடமகள்*
*--- --- --- ---*
*சேரி விலைமாறு கூறலின்* *(அக.140:5-8)*

என்பதிலும்,

*நெல்லும் உப்பும் நேரே ஊரீர்*
*கொள்ளீரோவெனச் சேரிதொறும் நுவலும்* *(அக.390:8-9)*

என்பதிலும் காணலாம்.

**உடை உற்பத்தியில் மகளிர்**

பழந்தமிழக மகளிர் உடை உற்பத்திக்கான தொழில் நுட்பத்தினைக் கற்று அத்தொழிலில் ஈடுபட்டனர். கணவனை இழந்த பெண்கள், பொருளீட்டல், போர் போன்ற காரணங்களால் கணவனைப் பிரிந்து தனித்திருக்கும் பெண்கள் உட்பட இல்லிருப்போர், தங்கள் குடும்பத்திற்குத் தேவையான பொருளாதாரத்தை ஈட்ட, நெசவுத் தொழிலை வீட்டிலிருந்தே மேற்கொண்டனர். இத்தொழிலில் ஈடுபட்ட மகளிர் 'பருத்திப் பெண்டிர்' என அழைக்கப்பட்டனர். இவ்வகைப் பருத்திப் பெண்டிர் செய்த நூலாலான பனுவலை,

*'பருத்திப் பெண்டின் பனுவ லன்ன'* *(புறம்.125: 1)*

என்பதில் காணலாம்.

ஆடை நெய்யப் பயன்படும் பருத்தியை வில்லாலடித்து அதிலுள்ள கொட்டைகளையும், சொத்தைகளையும் நீக்கித் தூய்மை செய்ததை, எஃகுறு பஞ்சிற்று ஆகி (நற்.247:4), வில்லெறி பஞ்சி (நற்.299:7) என்ற குறிப்புகள் காட்டுகின்றன. அதேபோல, பருத்தியை எடுத்துவந்து, அதிலிருக்கும் தூசு, செற்றை ஆகியவற்றை நீக்கும் பணியில் இரவிலும் விளக்கொளி வைத்து ஈடுபட்டிருந்த பருத்திப் பெண்டிரை,

*சிறையும் செற்றையும் புடையுநள் எழுந்த*
*பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்து* *(புறம்.326:4-5)*

என்ற பாடலடிகள் காட்டுகின்றன.

**உடை பராமரிப்புத் தொழில்**

பழந்தமிழர் உடைகளை உற்பத்தி செய்ததோடு, அவ்வுடைகளைப் பராமரிக்கும் நுட்பத்தினையும் பெற்றிருந்தனர். உடைகள் நன்றாக

வெளுத்து உடுக்கப்பட்டன. ஆடை வெளுக்கும் தொழிலில் ஈடுபட்டோர் 'காழிகர்' (அகம்.89:7-9,17) என அழைக்கப்பட்டனர். இவர்கள், உடையை 'உவர்மண்' கொண்டு வெளுத்தனர். உடை வெளுக்கும் தொழிலில் ஈடுபட்ட பெண்கள் 'புலத்தியர்' எனப்பட்டனர் (புறம்.311). உடை- அடிப்படைத் தேவை என்பதும், உடையில் தூய்மை மிகவும் வலியுறுத்தப் பட்டதும் இத்தொழில் செய்வோரின் தேவையை அதிகப்படுத்தியது.

உடை வெளுத்தலோடு, அவற்றிற்குக் கஞ்சி தோய்த்து மெருகூட்டுதல் பல இடங்களில் சுட்டப்படுகிறது. அன்னச் சேவலின் மயிரைப்போன்ற வெண்ணிறக் கஞ்சியினைப் புலத்தி பயன்படுத்தினாள் (அகம்.34:11-12). அழகிய உடைகளின் கரைகளிலே பொருந்திய அழுக்குகளை அகற்றுவதற்காக, தனது கூரிய நகமுடைய பசை சேர்ந்த விரலாலே நெருடி உடைகளை நன்னிறம் அடையச் செய்ததையும், கஞ்சியிலே தோய்த்தெடுத்து, முதல் ஒலிப்பினை ஒலித்த பின்னர், குளிர்ந்த குளத்திலே முறுக்கிய பருத்தி உடைகளைப் போட்டு, பகன்றை மலரைப் போன்ற வெண்ணிறமாக்கியதையும் காணமுடிகிறது (அகம்.387:5-7). மேலும், உடைகள் குளத்து நீரிலே கஞ்சியிடப்பட்டு தோய்க்கப் பட்டு அடித்து வெளுக்கப்பட்டன (குறு.330).

அதேபோல, கூத்தியர் ஆடுகின்ற விழாவின் ஒலியையுடைய மூதூரிலே, உடைகளை ஒலிப்பவள், இரவிலே தோய்த்த சோற்றின் கஞ்சியிட்டுப் புலர்த்திய சிறிய பூத்தொழிலையுடைய உடைகள் காட்டப்படுகின்றன (நற்.90:1-5). புலத்தி துணி வெளுக்கின்ற இடம் 'துறை' எனப்பட்டது (கலி72). உடைகளில் உள்ள அழுக்கினை உவர்நீர் நன்கு நீக்கும் என்பதால், அவ்வகை களர்ப்படு கூவல்களில் புலத்தி நாளும் உடைகளை வெளுத்தாள் (புறம்.311). ஆனால், இவ்வகைத் தொழிலில் பொருளாதார ஈட்டல் என்பது அறியப்படவில்லை.

**கால்நடை வளர்ப்பு**

கால்நடை வளர்ப்பே முல்லை நிலத்தின் முதன்மைத் தொழில். வேளாண்மைத் தொழில் இந்நிலத்தின் துணைத்தொழிலாகும். பண்டைத்தமிழர் கால்நடைகளின் பயனை நன்கு உணர்ந்திருந்தனர். சமுதாயப் பொருளாதார வலிமையைத் தீர்மானிக்கும் காரணிகளுள் ஒன்றாகக் கால்நடைகளின் எண்ணிக்கை அமைந்திருந்தது. பண்டைத்தமிழில் 'மாடு' என்னும் சொல்லே செல்வம் என்பதைக் குறித்திருக்கிறது. அதனால், நாட்டில் செல்வவளம் பெருக, கால்நடை வளம் பெருகவேண்டும் என்று தலைவி வாழ்த்தியதை,

*புலரி விடியல் பகடுபல வாழ்த்தி* (புறம். 385:2)

என்றும்,

*பால்பல ஊறுக! பகடுபல சிறக்க* (ஐங்குறு.3:2)

என்றும் இலக்கியங்கள் காட்டுகின்றன. கால்நடை வளர்ப்புத் தொழிலில் பால்கறத்தல் முதல், பால்படு பொருட்களை வணிகமாக்கி பொருளாதாரத்தை மேம்படுத்துதல் வரை அனைத்து நிலைகளிலும் மகளிர் தொழில் முனைவோரே முன்னிலை பெறுகின்றனர்.

ஆநிரைகளிலிருந்து மாமிசம், பால், தயிர், வெண்ணெய் போன்ற வணிகப் பொருட்கள் பெறப்பட்டன. பால், தயிர், வெண்ணெய், நெய், மோர் போன்றவற்றின் விற்பனையில் ஆயர் மகளிர் ஈடுபட்டனர். இவர்கள், இரவில் பாலுக்குச் சிறிய உறையை ஊற்றிவைப்பர் (புறம்.276:4,5); விடியற்காலையில் தயிரினைக் கடைந்து மோராக்கி விற்கச் செல்வர் (பெரும்பாண்.229; பெரும்பாண்.155:60). ஆயர்குல மகளிர் மோர்விற்று அதற்கு ஈடாகப் பிறபொருட்களைப் பெற்றுத் தன் சுற்றத்தாரை உண்பித்தாள் (பெரும்பாண்.165:66). அதோடு, தான் விற்கும் நெய்க்கு ஈடாகப் பொன்னைப் பெறாமல், நன்கு பால் கொடுக்கும் பசுக்களையும், எருமைகளையும் வாங்கித் தனது தொழில் மூலதனத்தைப் பெருக்கிக் கொண்டாள். இதனை,

நெல்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
*எருமை நல்லான் கருநாகு பெறூஉம்* (169:70)

என்கிறது பெரும்பாணாற்றுப்படை.

**கள் உற்பத்தி மற்றும் வணிகம்**

'கள்ளானது அரித்து எடுக்கப்படுவதால் 'அரியல்' எனப்பட்டது. அதனைக் காய்ச்சி விற்கும் பெண்கள் 'அரியல் பெண்டிர்' எனப்பட்டனர்' (பண்டைத் தமிழர் தொழில்கள், ப.298). வணிகத்திற்காக கள் காய்ச்சிய பழந்தமிழக மகளிரை, 'கள்ளடு மகளிர்' என்கிறது பெரும்பாணாற்றுப்படை(339-40). பரதவ மகளிர், மது உற்பத்தியில் ஈடுபட்டதைச் சிறுபாணாற்றுப்படையும் காட்டுகிறது. இதில், கடலில் அடித்து வரப்பட்ட பெரிய அகில் மரத்தினை விறகாக்கி, பெரிய தோள்களையும் வேல் போன்ற கண்களையுமுடைய நுளைமகள் 'கள்' தயாரித்ததாகச் சுட்டப் படுகிறது (சிறுபாண். 154-59).

அகநானூற்றுப் பாடலில் போர் வீரர்களுக்குக் கள்ளினைக் கொடுக்கும் பெண் காணப்படுகிறாள். இவள் பானையில் கள்ளினைச் சுமந்துச் சென்று வீரர்களுக்கு வழங்குகிறாள் (157;1-4). இதன்வழி, பழந்தமிழக மகளிருள் ஒரு பிரிவினர் கள் உற்பத்தியிலும் வணிகத்திலும் ஈடுபட்டு வந்தது தெரியவருகிறது. கள் திணைசார் பொருள்களுக்கு மாறுகொள்ளப் பட்டதைப் பல பாடல்கள் காட்டுகின்றன.

## பிற சிறுதொழில் முனைவோர்

உணவு உற்பத்தி, வணிகம், கால்நடை வளர்ப்பு போன்ற பெருந்தொழில்களில் ஈடுபட்ட மகளிரோடு, கோழி வளர்ப்பு, பூ விற்றல், பண்ணியம் (பலகாரம்) விற்றல் போன்ற சிறுதொழில் முனையும் மகளிரையும் பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டுகின்றன. மனைகளில் கோழி முதலிய பறவைகளை வளர்த்த பெண்களை அகநானூறு(227), பெரும்பாணாற்றுப் படை (293) போன்றவற்றில் காணமுடிகிறது.

மருத நிலத்துப் பெண்கள் பூ விற்கும் தொழிலில் ஈடுபட்டனர் (நற். 97:6-9). இவர்கள், அவ்வப் பருவங்களில் மலரும் வண்டுமொய்க்கும் புது மலர்களைத் தெருக்கள்தோறும் திரிந்து விற்றனர்(நற்.97:6-9; 118:8-11). கையில் பாதிரி, பித்திகை, குருக்கத்தி போன்ற மலர்களைத் தாங்கிய அகன்ற வட்டிலை ஏந்தியிருந்தனர்(நற்.97:6-9). மலர் மாலைகளும் பின்னினர் (சிறுபாண்.54; மதுரைக்.511-518). அதேபோல, கார்காலத்தில் மலரும் குருக்கத்தி, சிறுசண்பகம் முதலான மலர்களைக் கடகப் பெட்டியில் வைத்துக் கையிலெடுத்துக் கொண்டு "விலைக்குக் கொள்ளீரோ" எனக் கூறிச் சென்று வணிகம் செய்தனர்(நற்.97;6-9). தெருக்களில் மட்டுமல்லாது இல்லங்கள் தோறும் சென்றும் பூக்களை விற்றனர் (நற்.293:2-6).

பழந்தமிழகத்து முதுபெண்டிரும் தங்களால் இயன்ற சிறு வணிகத்தில் ஈடுபட்டுத் தங்கள் வாழ்வை மேம்படுத்திக் கொண்டதைக் காணலாம். இவர்கள், மலர் விற்பனை, பண்ணியம் விற்பனை போன்றவற்றில் ஈடுபட்டனர். இவர்கள், பல்வேறு வகையான செப்புகளில் கண்டோர் விரும்பும் திண்பண்டங்களை மணமிக்க மலர்களோடே ஏந்திச் சென்று இல்லந்தோறும் சிறுவணிகம் செய்தனர்(மதுரைக். 409).

**சான்றுகளின் வழி**

மேற்கண்ட பழந்தமிழ் இலக்கியக் குறிப்புகளின் வழி, பழந்தமிழக மகளிர் அடிப்படைத் தேவைகளின் நிறைவிற்கும் பொருளாதார மேம்பாடிற்கும் முக்கியப் பங்காற்றினர் என்பது தெளிவாகிறது.

இவ்வகைச் செயல்பாடுகளை இல்லத் தலைவனோடு இணைந்தும் தனித்து நின்றும் மேற்கொண்டனர் என்பதும் அறியப்படுகிறது.

மகளிர் பெருந்தொழில் முனைவோராக, உணவுத் தேட்டம், உணவு உற்பத்தி, உணவுப் பரவலாக்கம், உடை உற்பத்தி, மீன் பிடித்தல், மீன் கொள்முதல், உணங்கு மீன் உற்பத்தி, உப்பு உற்பத்தி மற்றும் வணிகம், கள் உற்பத்தி மற்றும் வணிகம் போன்றவற்றில் ஈடுபட்டது தெரிகிறது.

சிறுதொழில் முனைவோராக, கோழி வளர்ப்பு, மலர் வணிகம், பண்ணியம் விற்றல், சுண்ணம் தயாரித்தல் மற்றும் விற்றல் போன்றவற்றில் ஈடுபட்டது தெரிகிறது.

இதன் வழி, பழந்தமிழக மகளிர் தொழில்முனைவோர் தங்கள் குடும்பத் தேவைகளை நிறைவுசெய்து சுற்றத்தைக் காத்ததோடு, சமூகப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்காற்றினர் என்பது தெளிவாகிறது.

# அகநானூறு: நெய்தல் திணைசார் வாழ்வியலில் இடர்ப்பாடுகள்

மக்களின் வாழ்வியலானது, அவர்கள் சார்ந்து வாழும் நிலத்தின் தன்மையை அடிப்படையாகக் கொண்டே கட்டமைக்கப்படுகிறது. உணவு - உடை - உறையுள் போன்ற அடிப்படைத் தேவைகளின் தன்மைகள் மற்றும் நிறைவுகள், பண்பாட்டு விழுமியங்கள், நாகரிக வளர்ச்சிகள், புதிய கண்டுபிடிப்புகள், பல்துறை அறிவின் தேட்டங்கள் போன்றவையாவும் அவர்கள் சார்ந்துள்ள நிலத்தின் தன்மைக்கேற்பவே அமைகின்றன. அதனாலேயே முதல் பொருள்களாக 'நிலத்தையும் பொழுதையும்' (தொல்.950) சுட்டுகிறார் தொல்காப்பியர்.

தமிழகத்தில் நிலம்சார் வாழ்வியல் என்பது இன்றும் அறுபடாத தொடர்ச்சியைக் கொண்டதாகவே உள்ளது. குறிப்பாக, நெய்தல் திணைசார்ந்த வாழ்வியலைச் சுட்டலாம். நெய்தல் திணையானது, வாழ்க்கை முறைகளிலும் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளிலும் இன்றும் மாற்றத்துக்கு உட்படாத ஒன்றாகவே விளங்குகிறது. அவ்வகையில், அகநானூற்றின் வழி நெய்தல் திணை வாழ்வியலில் அம்மக்கள் எதிர்கொண்ட இடர்ப்பாடுகளைக் காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## நெய்தல் நில வாழ்வியல்

கடலும் கடலைச் சார்ந்தும் அமைவது நெய்தல் திணை வாழ்க்கை. ஐந்திணைகளைச் சுட்டும் தொல்காப்பியர்,

*'நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்,*
*படுதிரை வையம் பாத்திய பண்பே'* (தொல்.948)

என்பார். இதில் நடுவண் திணையாகிய பாலை நீங்கலாகக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கின் அடிப்படையில் கடலால் சூழப்பட்ட இவ்வுலகைப் பகுத்துக்கொண்டனர்

என்கிறார். கடலால் சூழப்பட்ட உலகம் என்பதன்வழி, உலகின் அதிகப் பரப்பளவினைக் கொண்டது நெய்தல் திணை என்பதும், மக்கள் அதிகம் சார்ந்துள்ளதும் நெய்தல் திணை வாழ்வியலையே என்பதும் பெறப்படும். நெய்தல் திணை மக்கள் 'வேந்தனை' தெய்வமாகக் கொண்டவர்கள் (தொல்.951). இத்திணை, ஆண்டு முழுவதும் தொழிற்படும் சூழலைக் கொண்டிருப்பதால் பெரும்பொழுது ஆறும் இதற்கு உரியதாகிறது. சிறுபொழுது தொழில் முடித்து திரும்பி வருகிற 'எற்பாடு'(தொல்.954) ஆகும். நெய்தல் நில ஊர்கள் பட்டினம், பாக்கம், சேரி, சிறுகுடி என வழங்கப்படுகின்றன. நெய்தல் நில மக்களின் தொழில்களாக மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல், வளையறுத்தல் (சங்கு வளையல்), முத்தெடுத்தல், உணங்கல் மீன் தயாரித்தல், கடல் வணிகத்தில் ஈடுபடுதல் போன்றவை காணப்படுகின்றன. மீன்பிடித்தலும் உப்பு விளைவித்தலும் முதன்மைத் தொழில்களாகும். இவற்றிலும் மீன் பிடித்தலே இவர்களின் அடையாளத் தொழில் என்பதை,

*'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்'* (அகம்.140:1)

என்ற அடைமொழி காட்டுகிறது.

## வாழ்வியல் இடர்ப்பாடுகள்

அடிப்படைத் தேவைகளாகிய உணவு, உடை, உறையுள் ஆகியவற்றிற்காகவும், முதன்மைத் தொழில்களாகிய மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல் போன்றவற்றிலும் அதன் சார்பு தொழில்களான பண்டமாற்றுதல், வணிகம் செய்தல் போன்ற வற்றிலும் நெய்தல் திணை மக்கள் எதிர்கொண்ட இடர்ப்பாடுகள் மிகுதியாகும். ஆடவரின் நிலையில்லாத வாழ்க்கைச் சூழலில் அவர்களைச் சார்ந்து வாழ்ந்த மகளிரின் நிலையும் துன்பம் மிகுந்ததாகவே இருந்தது. இதன் காரணமாகவே, நெய்தல் நிலத்திற்கான உரிப்பொருளாக,

*'இரங்கலும் இரங்கல் நிமித்தமும்'* (தொல்.960)

என்பதைச் சுட்டுகிறார் தொல்காப்பியர்.

அகநானூற்றுப் பாடல்கள்வழி, இம்மக்கள் எதிர்கொண்ட இடர்ப்பாடுகளை 1. இயற்கையால் ஏற்படும் இடர்ப்பாடுகள், 2. உயிரினங்களால் ஏற்படும் இடர்ப்பாடுகள், 3. மனிதர்களால் ஏற்படும் இடர்ப்பாடுகள், 4. நில அமைப்பால் ஏற்படும் இடர்ப்பாடுகள் என நான்கு வகைகளாகப் பகுத்துக் காணமுடிகிறது.

## 1. இயற்கையால் ஏற்படும் இடர்ப்பாடுகள்

பரதவர்களுடைய வாழ்க்கை இயற்கையோடு இயைந்தது என்பதாலும், இவர்களின் தொழிற்களமாகக் கடலும் கடலைச் சார்ந்த பகுதியும் விளங்குவதாலும் இன்றளவும் இயற்கையின் ஒவ்வொரு சிறு மாற்றமும் இவர்களின் அன்றாட வாழ்க்கையை நேரடிப் பாதிப்பிற்குள்ளாக்குகிறது. கடலின் சீற்றம், காற்றின் நிலை, பருவநிலை மாற்றம், புயல், மழை, வெயில் என அனைத்து நிலைகளிலும் இவர்கள் வாழ்க்கை போராட்டம் நிறைந்ததாக உள்ளது.

### காற்றின் நிலை மாறுபடுதல்

காற்றின் தன்மையறிந்து, அதன் திசை ஓட்டத்தை அறிந்து, அதற்கேற்ப நாவாய்களை இயக்கி, கடற்கரையில் உள்ள மாட விளக்குகளையே இடமறியும் அடையாளங்களாக்கி, கடலையே தம் தொழிற்களமாகக் கொண்டவர்கள் பரதவர்கள் (அகம்.255:1-6). இச்சூழலில், காற்று தேவையான அளவு வீசாவிட்டாலும், இயல்பு மாறி கடுமையாக வீசினாலும் கடற்தொழில் பாதிக்கப்படும். இவ்வகையான கடற்காற்றின் சீற்றத்தால் தொழில்முடக்கம் ஏற்படுவதை அகநானூறு காட்டுகிறது. கீழைக்காற்று பலமாக வீசுவதால் மீன்பிடிக்கச் சென்ற கலம் உடைந்துவிடுகிறது; வலைகளும் கடலில் மூழ்கிவிடுகின்றன. அதனால் வேலை யின்மையும், தொழில் முடக்கமும் ஏற்படுகின்றன. முடங்கிய தொழிலை மீண்டும் தொடங்க, மேடான பகுதிகளில் அமர்ந்து புது வலைகளைப் பின்னிக்கொண்டிருக்கின்றனர் பரதவர்கள் (அகம்.10:8-13). காற்று சீற்றத்துடன் அடித்ததால் தொழில் முடக்கம் ஏற்பட்டது போலவே, தேவையான அளவு காற்று வீசாததாலும் தொழில்முடக்கம் ஏற்பட்ட நிலையையும் காணமுடிகிறது. நாவாய்களை ஓட்டிச் செல்வதற்குக் காற்றின் வேகம் தகுந்த அளவில் தேவை. அப்போதுதான் பாய்விரித்து, காற்றின் போக்கில் கலத்தைச் செலுத்த முடியும். ஆனால், தகுந்த காற்று வீசாததால் தொழிலுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்படுகிறது (பாடல் 50:1). இவ்வகை இடர்ப்பாடுகளால், வேலையற்ற நாட்களும், அதனால் வருமான இழப்பும், கலம், வலை போன்றவை சிதைவுற்று பொருளாதார இழப்பும் எற்பட்டதை அறியமுடிகிறது.

இதுபோலவே, குறிப்பிட்ட பருவக்காலங்களில் கடலில் தொழில்வழங்கா நிலையும் சுட்டப்பட்டுள்ளது. இச்சூழலை,

மலைநிறங்கிளர, வண்டினம் மலர்பாய்ந்து ஊத, குருகினம் ஒலிப்ப, அலவன் அளைவயின்செறிய, 'திரைபாடு அவிய, திமில் தொழில் மறப்ப' (அகம்.260:1-10) என்கிறது அகநானூறு. மேலும், மீன்வேட்டைக்குச் செல்லாததாலே வெறிச்சோடிக்கிடக்கும் கடற்கரைப் பரப்பும், அதனால், கடற் சிறுகாக்கை தன் துணையோடு பசிப்பிணியால் வாடும் நிலையும் (அகம்.170:10-12) காணப்படுகிறது.

### கடல் சீற்றம்

கடற்தொழிலை மேற்கொள்பவருக்கு இன்றும் பெருத்த இடையூறாக இருப்பது கடல் சீற்றமாகும். கடல், சீற்றங் கொண்டு அலைகள் விரைந்தடிக்கும் காலங்களில் கடலில் படகுகளைச் செலுத்த வாய்ப்பின்றி, தொழிற்பட முடியாத சூழல் ஏற்படுகிறது. அகநானூற்றில், கடற்கரை ஓரத்திலிருக்கும் புன்னை மரங்களில் அமர்ந்துள்ள நாரைகள் முதலான பறவைகள் அஞ்சி, நடுங்கி ஓடும்படி கடல் அலையானது மிகுந்த சீற்றத்துடன் எழுந்து, கரைமீது மோதி ஆர்ப்பரிக்கின்ற நிலை காட்டப்படுகிறது (அகம்.190:7-9). மேலும், கடலில் அலை அடித்துக்கொண்டே இருப்பதையும், பரதவர் தம் வலிமை முழுவதும் செலுத்தி திமிலோட்டி, வருந்தி மீன் பிடித்து வருகின்ற நிலையும் காணப்படுகிறது (அகம்.320:1-2).

விடியற்காலையில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று 'எற்பாடு' என்று வழங்கப்படுகிற மாலையில் கரைதிரும்புதல் மீனவத் தொழிலின் இயல்பு. ஆயினும், தொழில்நிமித்தம் அலைகள் வீசுகின்ற கடலிலே, இரவிலே, திமிலில் கட்டிய விளக்கொளியைப் பயன்படுத்தி மீன் பிடிக்கும் பரதவர்களின் இடர்ப்பாடுமிகுந்த வாழ்க்கை பதிவாகியுள்ளது (அகம்.100:6, 240:5). இவ்வகை வாழ்க்கை முறையே பரதவரின் மரபுவழிச் செல்வம் என்பதால், ஆபத்தான இத்தொழிலையும் தம் மகன்களுக்குப் பழக்கி விடுகின்றனர் தந்தையர் (அகம்.140:5-6).

## 2. உயிரினங்களால் ஏற்படும் இடர்ப்பாடுகள்

### கடல் சுறாக்கள்

பரதவர் தொழிற்படு சூழலில் இயற்கையோடு மட்டுமல்லாது கடல்வாழ் உயிரினங்களாலும் பலவிதமான இன்னல்களைச் சந்திக்க நேரிடுகிறது. கூர்மையான கொம்புகளை உடைய வேட்டை

சுறாக்கள் திரிகின்ற கடற்பரப்பில் தம் தொழிலை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதனை,

*'கோட்டுமீன் வழங்கும் வேட்டமடி பரப்பின்'* *(அகம்.170:12)*

என்கிறது அகநானூறு. இவ்வகையான கொடிய சுறாக்கள் மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் பரதவர்களுடைய வலைகளைத் தம் கூரிய கோடுகளால் கிழித்து அழித்து விடுகின்றன. அவ்வாறு கிழித்து வீணடிக்கப்பட்டு, தொழிலுக்குப் பயன்படாதுபோன வலைகள் பரதவரின் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள தாழைகளின் மேல் கிடக்கின்றன (அகம்.340:20-23). இதனால் தொழில் முடக்கமும், பொருளாதார இழப்பும் ஏற்பட்டதை அறிய முடிகிறது. இறால் மீனால் தாக்கப்பட்டு புண்பட்ட பரதவரைக் குறுந்தொகையும் காட்டுகிறது (குறு.பா.269:3-4). இவ்வகை ஆபத்துகள் நிறைந்த தாலே மீன்பிடித் தொழில் 'கொடுந்தொழில்' எனப்பட்டது. கொடுந்தொழில் என்பதற்குக் கொலைத்தொழில் (மீன்களைக் கொல்லுதல்) என்று பொருள்கொள்வர். ஆனால், ஆபத்தான தொழில் என்பதே பொருத்தம்.

கடற்பரப்பில் உயிரிழப்பை விளைவிக்கும் சுறாக் கூட்டத்தை நீக்கி, அவற்றின் கண்களில் படாமல் நீரில் மூழ்கி, வலம்புரிச் சங்கினை எடுத்துவரும் மிகக் கடினமான தொழிலிலும் பரதவர் ஈடுபட்டனர். இவ்வகையான ஆபத்துகளிலிருந்து நீங்கிக் கரை சேரும் பரதவர்களைக் கரையிலிருப்போர் மகிழ்ச்சிப் பெருக்கால் இசை முழங்கி, ஆரவாரித்து வரவேற்கின்றனர். வலம்புரி எடுப்போரை,

*'இலங்கிரும் பரப்பின் எறிசுறா நீக்கி,*
*வலம்புரி மூழ்கிய வான்றிமிற் பரதவர்'* *(அகம்.350:10–11)*

என்கிறது அகநானூறு.

**வணிகக் கப்பலைத் தாக்கும் சுறாக்கள்**

சுறாக்களால் மீன்பிடித் தொழில், முத்தெடுக்கும் தொழில் போன்றவை பாதிக்கப்படுவதோடு கடல் வணிகமும் பாதிப்பிற் குள்ளாகிறது. வெளிநாட்டு வணிகத்தில் ஈடுபட்ட கலன்களைத் தாக்கிச் சிதைக்கும் பெருங்கூட்டமான சுறாக்களை அகநானூறு காட்டுகிறது. இதனை, 'தித்தன் என்பான் பாணரைப் புரந்த பெரிய புகழினன்; சினம் மிக்க படையினன்; அவனது ஒலிக்கும் நீர்ப்பரப்பையுடைய கானலம் பெருந்துறைப்பட்டினத்தில் பொன்னைக் கொண்டு வரும் மரக்கலம் சிதையுமாறு தாக்கும் சுறாமீன் கூட்டம்' (152:6-8) என்பதில் அறியமுடிகிறது.

## 3. மனிதர்களால் ஏற்படும் இடர்ப்பாடுகள்

### தொழில்முறை முரண்பாடுகள்

ஒவ்வொரு திணைக்குமான தொழில்களும் பிற திணைசார் தொழில்களிலிருந்து செயல்படும் விதத்தாலும், தொழிலின் தன்மையாலும் முற்றிலும் வேறுபடுகின்றன. இதனால், சிற்சில நேரங்களில் திணைசார் மக்களிடையே தொழில்முறை முரண்பாடுகளும் போர்களும் ஏற்படும் சூழல் உருவாகிறது. நெய்தல் திணையை அடுத்து அமைவது மருதத் திணை. நெய்தல் திணையின் தொழில்களுக்கும் மருதத் திணையின் தொழில் களுக்கும் செயல்முறையில் வேறுபாடு இருப்பதால் ஒருவரின் தொழில் மற்றவரின் தொழிலைப் பாதிக்கிறது. வேளாண் மக்கள் உழுது விளைவிப்பது நெல் என்றால், பரதவர் உழாமல் விளைவிப்பது உப்பு [உழாஅது செய்த வெண்கலுப்பு (அகம்.140:2)]. இவ்விரு திணைசார் மக்களுக்கும் தொழில்முறையில் ஏற்பட்ட பூசலை அகநானூறு காட்டுகிறது.

வேளாண் நிலத்தில் அறுவடை செய்யும் காலத்தில், அகன்ற களத்தில் வைக்கோல் போரைப் பிரித்து கடாவிட்டு, பின்னர் காற்று நன்றாக வீசிகின்ற பொழுதில் நெற்பொலியைத் தூற்றுகின்றனர். அவ்வாறு தூற்றுதலாலே காற்றினால் பறந்துபோன துரும்புகளும், தூசிகளும் அருகிலுள்ள நெய்தல் நிலத்தின் உப்புப் பாத்திகளில் பரந்து படிகின்றன. இதனால், உணவுக்கு இனிமை தருகின்ற உப்புச் சிதைதலால் சினங்கொண்ட பரதவர், கழனி உழவரோடு பகைத்து எதிர்த்துச் சண்டையிடும் நிலை உருவாகிறது. பின்னர் அங்கிருக்கும் வேளாண் சான்றோர்கள் அச்சண்டையை விடுவித்து பரதவரை அமைதிப்படுத்துகின்றனர் (அகம்.366:1-11). இந்நிலை, பரதவர் தொழிலில் பிற திணை மனிதர்களால் ஏற்படும் இடர்ப்பாடு களையும் இழப்பையும் காட்டுகிறது.

### பெண்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகள்

மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல் போன்றவை நெய்தல் நிலத்து ஆடவர் தொழிலாயினும், அவற்றைப் பண்டமாற்றுதலிலும், வணிகம் செய்தலிலும், உணங்கல் மீன் உற்பத்தி போன்றவற்றிலும் பரதவப் பெண்களே ஈடுபடுகின்றனர். இவ்வகை தொழில்களில் ஈடுபடும் இவர்களுக்கு, நெய்தல் நிலத்து ஆடவர்களாலும் பிற நிலத்து ஆடவர்களாலும் இடையூறுகள் ஏற்படுகின்றன. உப்பு விற்கப்போகும் உமணப் பெண்ணுக்குப் பிறநிலத்து ஆடவர்களால்

இன்னல்கள் ஏற்படுவதை அகநானூறு காட்டுகிறது. இதில், உமணக் கூட்டத்தோடு நெடுந்தொலைவு பயணித்து, ஊர்ஊராக, தெருத் தெருவாகச் சென்று, வருந்தி, 'உப்புக்கு நெல்லை ஈடாகக் கொடுத்து வாங்குவீர் உளீரோ' எனக் கூவி உப்பு விற்கிறாள் உமணப் பெண் ஒருத்தி. அவளை இடைமறிக்கும் ஆடவன் ஒருவன், 'நீ சுமந்துவரும் உப்பு இருக்கட்டும், உன் உடம்பில் ஒட்டியிருக்கும் உப்பின் விலையைக் கூறு வாங்குகிறேன்' என்று எள்ளல் செய்யும் கொடுமை காட்டப்பட்டுள்ளது *(அகம்.390:8-12)*.

மேலும், உமணப் பெண்கள் உப்பு விற்கச் செல்லும் வழிகள் மிகவும் சீர்மையற்றவையாக, ஆபத்து நிறைந்தவையாக உள்ளன *(அகம்.140:2-5)*. வணிகர்கள் செல்லும் வழிகளின் கொடுமையைக் குறிப்பிடுமிடத்து, வழிப்பறிக் கொள்ளையர்கள், சுமை மிக்க கழுதைகளின் நீண்ட நிரைகளைப் பின்பற்றி வரும் வணிகர்களை வெட்டி, அவர்களின் தலைகளைத் துண்டித்து, தம் வெற்றிக்கு அறிகுறியாய் மெல்லத் துடியை முழக்கி, அவரவர் கொள்ள வேண்டிய முறையில் பிரித்துக்கொள்ளும் வறிய கொல்லையையும் தினைப் புனங்களையும் உடைய வழிகள் *(அகம்.89:10-16)* என்று காட்டுகிறது அகநானூறு. மேலும், வழிப்பறி செய்வதற்குப் பொருள்கள் எதுவும் இல்லையென்றாலும், வழிப்போக்கரின் உயிரைப் போக்கிவிடுகிற கள்வர்களின் இரக்கமற்ற கொடுஞ் செயலையும் *(அகம்.109:11-15)*; வழிப்போக்கர்கள் எவரேனும் வருகிறார்களா என்று வழிபார்த்திருக்கும் கள்வர்களின் நிலையையும் *(அகம்.127:16-18)*; கள்வர்களின் தொல்லையால் மக்கள் அனைவரும் ஊரைவிட்டு வேற்றிடம் பெயர்ந்துவிட்ட அவலத்தையும் *(அகம்.167:7-10)* அகநானூற்றில் காணமுடிகிறது. இவையாவும் பரதவர் வாழ்க்கையில் மனிதர்களால் ஏற்பட்ட இடர்ப்பாடுகளாக உள்ளன.

### 4. நில அமைப்பால் ஏற்படும் இடர்ப்பாடுகள்

கடற்கரையும், கழிவாய் முகத் துவாரங்களும் நிறைந்த பகுதியே நெய்தல் நில வாழ்விடம் என்பதால், மருதம், முல்லை போன்ற திணைகளின் சுற்றுச்சூழலுக்கும், நெய்தல் நிலச் சுற்றுச் சூழலுக்கும் பெருத்த வேறுபாடு காணப்படுகிறது. கடற்காற்று எப்போதும் வீசிக் கொண்டிருப்பதால் தொழிற்படு இடங்களில் உயர்ந்த குடியிருப்புகளை அமைக்க முடியாத நிலை, கடல் அலைகளின் சீற்றத்தால் குடியிருப்புகள் அடிக்கடி நீரால் சூழப்படுதல், கழிவாய் துவாரங்களில் வாழும் ஆபத்தான உயிர்களால் துன்பம் ஏற்படுதல்,

மணல் பரந்த தெருக்கள், நீர் சூழ்ந்த ஊர்கள், பாதைவசதி இன்மை போன்றவை நில அமைப்பால் நெய்தல் திணை மக்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளாக உள்ளன.

### குடியிருப்புகளின் அவல நிலை

பரதவர்தம் குடியிருப்புகள் தன்னிறைவு அற்றவையாகவே காணப்படுகின்றன. நிலவே விளக்காக, வீடுகள் புல்லால் வேயப்பட்டதாக, தெருக்கள் மணல்கள் நிறைந்ததாக, காண்பவர் இது ஓர் ஊர் என்று எண்ண முடியாத அளவிற்குச் சிறுமை யுடையதாக, நீரால் சூழப்பட்டதாக, துன்பம் மிக உடையதாக இருக்கும் பரதவர் இருப்பை அகநானூறு காட்டுகிறது (அகம்.200:1-4). அகன்ற வாயில்களைக் கொண்டிருந்தால் கடற்காற்றால் வீடு களையப்படும் என்பதால், சிறிய வாயில்களைக் கொண்ட சிறு குடில்களாக அவை இருந்தன. மூங்கிலைப் பரப்பி அதன்மேல் வெண்மையான கிளைகளை வைத்து, தாழை நாரினைக் கொண்டு கட்டி, அதன்மேல் தருப்பைப் புல்லை வைத்து வேந்து குடிசை களையும், அக்குடிசைகளின் முற்றங்களில் மீன் பிடிக்கும் பறிகள் இருந்ததையும்,

*வேழம் நிரைத்து வெண்கோடு விரைஇத்*
*தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த*
*குறியிறைக் குரம்பை பறியுடை முன்றில்* (பெரும்.263–265)

என்ற அடிகள் காட்டுகின்றன. சிறுசிறு குடியிருப்பில் வாழ்ந்ததால் அவர்கள் 'சிறுகுடி பரதவர்' என்ற அடைமொழியால் அழைக்கப் பட்டனர்.

அதேபோல, குடியிருப்பை ஒட்டியுள்ள நீர்நிலைகளில் முதலை, சுறா போன்ற கொடிய உயிரினங்கள் வாழ்ந்ததால் அவற்றால் இத்திணை மக்களுக்கும் அவர்களின் வளர்ப்பு விலங்குகளுக்கும் துன்பங்கள் ஏற்பட்டன(அகம்.50). மேலும், ஊரைச் சுற்றிலும் நீர் நிறைந்து போக்குவரத்து முதலான எந்த அடிப்படை வசதியுமின்றிக் காணப்பட்ட பரதவர் குடியிருப்புகளை.

*'பெருநீர் வேலியெஞ் சிறுநல் லூரே'* (அகம்.310:17)

என்கு காட்டுகிறது அகநானூறு.

மேற்கண்ட அகநானூற்றுச் சான்றுகளின் வழி திணைசார் வாழ்வியலில் பரதவர்களுக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகள் அறியப் பட்டன. அதேவேளை, மீனவர்களின் வாழ்க்கை இன்றும்

இடர்ப்பாடுகளும் துன்பங்களும் நிறைந்ததாகவே தொடர்கின்றது. காற்று, கடற்சீற்றம், இயற்கை மாறுபாடு, கடல்வாழ் உயிரினங்கள் போன்றவற்றால் ஏற்படும் துன்பங்களைக் காட்டிலும் அண்டை நாட்டினரான சிங்களவர்களாலும் சிங்களப் படையினராலும் தமிழக மீனவர்களுக்கு ஏற்படும் இன்னல்களும் கொடுமைகளும் உயிரிழப்புகளும் அதிகம் என்பதை நாளிட்ட செய்திகள் காட்டுகின்றன.

# பழந்தமிழர் பொறியியல் நுட்பம்

'பல்வேறு அறிவியல் துறைகளின் அடிப்படையில் இயந்திரங்கள், கட்டடங்கள், சாலைகள், விமானங்கள், கப்பல்கள் போன்றவற்றை உருவாக்குதல், பராமரித்தல் ஆகியவை குறித்த தொழில் நுட்பத்துறை பொறியியல் எனப்படுகிறது (க்ரியா, ப.1038). பழந்தமிழ் இலக்கியங்களில் இவ்வகையான பொறியியல் நுட்பக் கூறுகள் எவ்விதம் பதிவுசெய்ப்பட்டிருக்கின்றன என்பதைக் காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## வேளாண்மைத் துறையில் பொறியியல் நுட்பம்

### கலப்பை

வேளாண்துறையின் பயன்பாட்டுக் கருவிகளுள் இன்றியமையாதது 'கலப்பை'. 'உறுதியான மண்ணை கீழ்மேலாகக் கலப்பது கலப்பை' என்கிறது அபிதான சிந்தாமணி. இவ்வகை கருவியை உருவாக்கிப் பயன்படுத்தும் நுட்பத்தைப் பழந்தமிழர் அறிந்திருந்தனர். இக்கருவி ஏர், நாஞ்சில் (அகம். 26 ;23) என்று வழங்கப்படுகிறது. கலப்பையின் உறுப்பாகிய 'கொழு' (அகம்.26;24) பல இடங்களில் சுட்டப்படுகிறது.

### தளம்பு

விளைநிலத்தைப் பண்படுத்தும் கருவிகளுள் ஒன்றாக 'தளம்பு' அறியப்படுகிறது. நன்செய் நிலத்தில் உள்ள கட்டிகளை உடைக்க, நிலத்தைச் சமன்படுத்த இக்கருவி பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை,

*மலங்குமிளிர் செறுவில் தளம்புதடிந் திட்ட*
*பழன வாளை* (புறம்.61;3–4)

என்பதில் அறியலாம். இதில், நன்செய் நிலத்தில் உள்ள வாளை மீன்கள் தளம்பிடை மாட்டி வெட்டுப்பட்டன என்று சுட்டப் படுகிறது. எனவே, தளம்பு என்பது எஃகினாலான தகடுகளைக் கொண்டு, பொறியியல் நுட்பத்தோடு சுழலும் அமைப்பில் உருவாக்கப்பட்ட வேளாண் கருவி என்பது பெறப்படுகிறது.

### நீர் ஏற்றக் கருவிகள்

வேளாண் நிலங்களில் நீர்ப்பாசனத்திற்கு இயற்கையான ஆறு, உருவாக்கப்பட்ட குளம், ஏரி போன்ற நீர்நிலைகளைப் பயன்படுத்தினர். இந்நீர் நிலைகளில் இருந்து நீர் பாய்ச்சுவதற்கு நீர்ஏற்றக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இவை பட்டை, பன்றிப்பொறி, ஆம்பி, சால், தொப்பரை, துலா, பூட்டைப்பொறி போன்ற பெயர்களால் இலக்கியங்களில் வழங்கப்படுகின்றன. இவை நீரை முகக்கவும், இறைக்கவும் ஏற்ற வகையில் பொறியியல் நுட்பத்தோடு வடிவமைக்கப் பட்டிருந்தது தெரியவருகிறது.

### பயிர்ப்பாதுகாப்பு மற்றும் வேட்டை

விளைபயிர்களை விலங்குகளிடமிருந்து காக்கவும், ஊன் உணவுகளைப் பெறவும், விலங்குகளை வீழ்த்தவும், பிடிக்கவும் விலங்குப் பொறிகள் உருவாக்கியிருந்த பொறியியல் நுட்பம் அறியப்படுகிறது. விலங்குகளின் தன்மைக்கேற்ப பொறிகளின் செயல்திறனும், வடிவமைப்பும் மாறுபட்டிருந்தை அறியமுடிகிறது. அதேபோன்று, பறவைகள், சிறிய விலங்குகள் போன்றவற்றிடருந்து விளைச்சலைக் காக்க, சிறிய அளவிலான கைக் கருவிகள் பயன்படுத்தப் பட்டதையும் காணமுடிகிறது.

### பெரிய பொறிகள்

முள் போன்ற பருத்த மயிருடைய பிடரியைக் கொண்டதும், சிறிய கண்களைக் கொண்டதுமான, நிலத்தில் மேயும் முள்ளம்பன்றி தினைப்புனம் நோக்கி வரும்போது, அதனைப் பிடிக்க பெரிய துவாரத்தினை உடைய எந்திரம் வைக்கப்பட்டதை நற்றிணை காட்டுகிறது(*98:1-4*). தினைப் புனத்தை அழித்து விடுவதால், பன்றிகட்கு அஞ்சி அவை வரும் வழியில் வைக்கப்பட்ட எந்திரப் பொறியை மலைபடுகடாம்(*193-195*) சுட்டுகிறது.

அதே போல, தினையை உண்ணும் பன்றி அஞ்சி ஓடும்படி, புனத்திற்குரியவன் அமைத்திருந்த பொறியாக 'பெருங்கல் அடாஅர்' என்பது அறியப்படுகிறது. இதில் வலிய புலிகளும் அகப்பட்ட காட்சியை,

*தினை உண் கேழல் இரிய புனவன்*
*சிறு பொறி மாட்டிய பெருங் கல் அடாஅர்*
*ஒண் கேழ் வயப் புலி படூஉம்* (நற்.119:1–3)

என்ற அடிகள் காட்டுகின்றன. இதில், 'வலிமை மிகுந்த புலி மாட்டும்' என்பதால் எந்திரத்தின் தொழில்நுட்பத்தையும் செயல் திறனையும் உணரமுடிகிறது.

## சிறிய கருவிகள்

### தழல் மற்றும் தட்டை

தினைப்புனம் காக்கப் பயன்படுத்தப்பட்ட சிறிய கருவிகளாக தழல், தட்டை ஆகியவை அறியப்படுகின்றன. மலைப் பக்கத்தே கட்டிய பரண்மீது ஏறி, தழலும் தட்டையுமாகிய கிளிகளை விரட்டும் கருவிகளைக் கையிலே வாங்கிக் கிளிகளை ஓட்டினர் (குறிஞ்சி.41-44). தலைவி, வேங்கை மாலை சூடி, ஆயத்துடன் அழகுற நடந்து தழலினைச் சுற்றியும், தட்டையினைத் தட்டியும் தினைப்புனம் காத்தாள் (அகம்.188:1-13). தழலும் தட்டையுமாகிய கிளிகடி கருவிகளைத் தந்தும், தழையாடையைக் கொடுத்தும் இப்பொருள்கள் உனக்கு ஏற்புடையன என்று புனைந்துரைகளைக் கூறி தலைவியின் நலத்தைத் தலைவன் கொள்ளை கொண்டான் (குறு.223:4-7) என்பன போன்ற குறிப்புகளிலிருந்து வேளாண்மைத் துறையில் பாதுகாப்புக் கருவிகளாகத் தழலும், தட்டையும் உருவாக்கப்பட்டது தெரிகிறது. மேலும் இவை, விலங்குப் பொறிகளைப் போலல்லாது, சிறிய வடிவில் கையால் இயக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டன என்பதும் இரண்டு வடிவங்களும் ஒலிகளை அதிகப்படியாக எழுப்பும் தன்மையில் உருவாக்கப்பட்டிருந்தன என்பதும் பெறப்படுகிறது.

## கரும்புபிழி எந்திரம்

நிலத்தைப் பண்படுத்துதல், பலவித விதைகளைப் பயன்படுத்துதல், நீரினைத் தேக்கி வைத்தல் போன்ற நுட்பமான செயல்களின் மூலம் பழந்தமிழர் வேளாண் உற்பத்தியைப் பெருக்கினர். விளைபொருள்களாகிய உற்பத்திப் பொருள்களிலிருந்து இரண்டாம்நிலை உருவாக்கப் பொருள்களைப் பிரித்தெடுக்க எந்திரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வகையில், விளைபொருளாகிய கரும்பிலிருந்து தேவையான இரண்டாம் நிலை பொருளாகிய கரும்புச் சாறு பிரித்தெடுத்து, வெல்லக்கட்டிகள் தயாரிக்க 'கரும்புபிழி எந்திரம்' பயன்படுத்தப்பட்ட செய்தி பல இடங்களில் காணப்படுகிறது.

இவ்வெந்திரம் ஆண் யானை முழங்கும் முழக்கத்திற்கு எதிராக ஒலித்ததை,

*'கரும்பின் எந்திரம் களிற்றெதிர் பிளிற்றும்'* (ஐங்குறு.55:1)

என்றும், இவ் எந்திரத்தின் மிக்கொலியை,

*'கரும்பின் எந்திரம் கட்பி னோதை'* (மதுரைக்.258)

என்றும் இலக்கியங்கள் காட்டுகின்றன. மேலும், மருதநிலத்து நீர் நிலைகளில் உள்ள வாளை மீன்கள் அஞ்சி துள்ளிப் பாயும் அளவிற்கு ஒலி எழுப்பிய கரும்பு பிழி எந்திரத்தை,

*கரும்பின் எந்திரம் சிலைப்பின் அயலது*
*இருஞ்சுவல் வாளை பிறழும்* (புறம்.322:7–8)

என்ற அடிகளில் அறியமுடிகிறது.

அதேபோல, சாறு பிழியும் எந்திரத்திலிருந்து கரும்புச் சாற்றைச் சாலுக்கு எடுத்துச் செல்லும் தூம்பு, இடைவிடாது சாறு ஓடுதலால் நனைந்து இருத்தலை, '

*தீம்பிழி எந்திரம் பத்தல் வருந்த'* (பதி.19:23)

என்று காட்டுகிறது பதிற்றுப்பத்து. அதேபோல, யானைகள் கதறியதைப் போல் ஆலைகள் ஆரவாரிக்கும் ஓசையை உடைய கொட்டிலில், கரும்புச்சாற்றைக் கட்டிகளாகக் காய்ச்சுவதால் தோன்றும் புகையை,

*கணஞ்சால் வேழங் கதழ்வுற் றாஅங்கு*
*எந்திரஞ் சிலைக்குந் துஞ்சாக் கம்பலை*
*விசய மடூஉம் புகைசூழ் ஆலை'* (260–262)

என்று பெரும்பாணாற்றுப்படையும் காட்டுகின்றன. அதேபோல, பசிய கரும்பைப் பிழிந்து, பாகை அடும் கொட்டிலில் காய்ச்சுதலை,

*கார்க்கரும்பின் கமழாலைத்*
*தீத்தெறுவிற் கவின்வாடி* (9–10)

என்று காட்டுகிறது பட்டினப்பாலை.

மேலும், கரும்பு ஆலையின் எந்திரத்தில் அசைந்த கரும்பினையும், மழை பெய்வதைப் போல் கரும்புச் சாறு கொட்டுவதையும், கரும்புகளின் கணுக்களை எந்திரம் பிழிவதால் அந்தக் கரும்பினின்று எழும் ஆராவாரத்தையும்,

*'ஆலைக் கலமருந் தீங்கழைக் கரும்பு'* (மலைபடு.119)

என்பதிலும்,

*மழை கண்டன்ன ஆலைதொறும் ஞெரேரெனக்*
*கழை கண் உடைக்கும் கரும்பின் ஏத்தமும்*
(மலைபடு.340–341)

என்பதிலும் அறியமுடிகிறது. இவ்வாறு கரும்பு பிழிவதாலும், ஆலையில் காய்ச்சப்படுவதாலும் ஊர்களின் தோற்றப் பொலிவானது, கரும்பாலைப் புகையினால் பரப்பப்பெற்று, இருண்ட மேகம் சூழ்ந்த பெருமலைபோல தோன்றியதை,

*பொங்கழி ஆலைப் புகையொடும் பரந்து*
*மங்குல் வானத்து மலையில் தோன்றும்* (சிலம்பு.10:151,152)

என்று காட்டுகிறது சிலம்பு. இச்சான்றுகளின் வழி, கரும்பு பிழி எந்திரம் பெரிதாக ஒலிக்கும் தன்மையுடையதாகவும், இடை விடாமல் இயங்கும் ஆற்றல் கொண்டதாகவும், அதிகப்படியான கரும்புகளைப் பிழிந்தெடுக்கும் வன்மை வாய்ந்ததாகவும் உருவாக்கப்பட்டிருந்த பொறியியல் தொழில்நுட்பம் பெறப்படுகிறது.

### கட்டுமானத் துறையில் பொறியியல் நுட்பம்

பாதுகாப்புத் துறையில் பழந்தமிழரின் கட்டுமானப் பொறியியல் நுட்பம் மிகுதியும் காணப்படுகிறது. குறிப்பாக அரண்களின் கட்டுமானத்தில் பதவிதமான மதிலுறுப்புகள் அமைக்கப் பட்டிருந்தன. அவை மிகவும் நுட்பமான வேலைபாடுகளுடன் காணப்படுகின்றன.

### மதிலுறுப்பு

'பதப்பாடு, எந்திரம், சோசம், தோணி, விதப்பு, ஞாயில், நாஞ்சில் மதிலுறுப்பே' (ப.318) என்று மதிலுறுப்பின் பெயர்கள் ஏழினைச் சுட்டுகிறது சேந்தன் திவாகரம். இவற்றுள் பதப்பாடு, சோசம், விதப்பு எனும் பெயர்கள் பழந்தமிழ் நூல்களில் காணப்படுகின்றன.

### எந்திரம்

மதிலுறுப்புகளில் எந்திரமும் ஒன்று. எய்தல் எனல் வீசுதல்; எடுத்தல் எனல் வஞ்சித்தல். எட்டுதல் எனல் கிட்டுதல், அகப்படுதல் (செந்தமிழ் அகராதி, ப.93&95). எய்யும் திரமும், எத்தும் திரமும், எட்டும் திரமும் உடைய பொறி எந்திரம் எனப்பட்டது. வாழ்வில் பிற செயல்களுக்குப் பயன்படுத்திய எந்திரநுட்பங்களை நாளடைவில் போரியலுக்கும் பயன்படுத்த

முற்பட்டனர் என்பது அறியப்படுகிறது. தானே அம்பெய்யும் பொறியியல் நுட்பத்துடன் கட்டப்பட்ட எந்திர முகப்பை,

*செம்பொறிச் சிலம்பொடு அணித்தழை தூங்கும்*
*எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்* (பதி.53:6–7)

*மற்றும்,*

*அமர் எனின் திங்களும் நுழையா*
*எந்திரப் படுபுழை* (புறம்.177:4–5)

என்பனவற்றால் அறியலாம். இதில், போர் நடைபெறும் காலங்களில் அயலவர் படைகளைத் தாக்க, அழிக்கப் பயன்படும் வகையில் அரண்களில் பல்வேறு பொறிகள் பொருத்தப் பட்டிருந்தன என்பது தெரிகிறது. புழை என்பது துளை, வாயில், ஒடுக்க வழி, மதிலில் அம்பெய்யுமிடம் (ஏவறை) என பொருள்படும் (செந்தமிழ் அகராதி, ப.534).

பகை வீரர்களின் பார்வைக்குச் சிறுவழி போலத் தோன்றும் மதிலின்கண் உள்ள இருள் சூழ்ந்த ஒடுக்க வழிகளில் பல்வேறு எந்திரப் பொறிகள் பொருத்தப்பட்டிருந்தன. இருளில் இடம் பெற்றிருந்த இவ்வெந்திரப் பொறிகள் பகை வீரர்களின் கண்ணுக்கு எளிதில் புலப்படாது; பகை வீரர்கள் புழைகளைக் கடக்கும் பொழுது கட்டாயமாக அந்த எந்திரப் பொறிகளில் சிக்கித் துன்புற்று அழிவர். இத்தகு பொறிகளுடன் கோட்டை மதில்மேல் வேறுபல எந்திரப் பொறிகளும் இடப்பெற்றிருந்ததை,

*மிளையும் கிடங்கும் வளைவில் பொறியும்*
*கருவிரல் ஊகமும் கல்லுமிழ் கவணும்*
*பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்*
*காய்பொன் உலையும் கல்லிடு கூடையும்*
*தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை அடுப்பும்*
*கவையும் கழுவும் புதையும் புழையும்*
*ஐயவித் துலாமும் கைபெயர் ஊசியும்*
*சென்றுஎறி சிரலும் பன்றியும் பணையும்*
*எழுவும் சீப்பும் முழுவிறல் கணையமும்*
*கோலும் குந்தமும் வேலும் பிறவும்* (15:207–16)

என்று தொகுத்துரைக்கிறது சிலப்பதிகாரம். இதில், வளைவிற் பொறி என்பதை 'வளைந்து தானே அம்பெய்யும் இயந்திரவில்' என்கிறார் ந.மு.வேங்கடசாமி நாட்டார். அதோடு, கருவிரலுடைய

கருங்குரங்கு போன்ற பொறிகளும், கல்லினை வீசும் கவணும், மதிலைப் பற்றுவார் மீது சொரிவதற்காக எண்ணெய் கொதிக்கும் மிடாக்களும், செம்பினை உருக்கும் மிடாக்களும், இரும்பினைக் காய்ச்சி உருக்குதற்கு அமைத்த உலைகளும், கல் இடப் பெற்ற கூடைகளும், தூண்டில் வடிவாக அமைந்த கருவிகளும், கழுத்தை முறுக்கும் சங்கிலிகளும், பறவை தலை போன்ற அடுப்புகளும், மதிலைப் பற்றி ஏறும் போது தள்ளுகிற கவறுபட்ட கொம்புகளும், கழுக்கோலும், அம்புக் கட்டுகளும், மறைந்துகொண்டு போரிடும் ஏவறைகளும், நெருங்கினார் தலையைத் திருகும் மரங்களும், மதிலின் உச்சியைப் பற்றுவார் கையைத் துளைத்துத் துன்புறுத்தி அப்புறப்படுத்தும் ஊசிப் பொறிகளும், பகைவர் மீது பாய்ந்து தாக்கும் மீன்கொத்திப் பறவை போன்ற பொறிகளும், மதிலில் ஏறியவரைக் கோட்டால் கிழித்தெறியும் பன்றிப் பொறிகளும், கதவிற்கு வலிமை சேருமாறு கதவின் குறுக்கே உட்பக்கத்தில் அமைக்கப்படும் கணையம் போன்ற பொறிகளும், களிற்றுப்பொறி, புலிப்பொறி ஆகிய பிற எந்திரப் பொறிகளும் சுட்டப்படுகின்றன.

அதேபோல, பகைவர் வந்து முற்றுகையிட்டபோது மறைவிடத்திலிருந்து முன் வந்து, அவர்கள் மீது படைக் கலங்களை எறியும் தானியங்கிப் பொறிகள் பொருத்தப்பட்ட கோட்டையை,

*வந்தெறி பொறிகள் வகைமாண் புடைய*
*கடிமதில் ஓங்கிய இடைநிலை வரைபு* (28:23–24)

என்று மணிமேகலையும் காட்டுகிறது. மேலும், உயர்ந்து வளர்ந்த கோபுரங்களிடத்தே, வில்விசையைவிட விரைந்து உயரே எழுதலும், தாழ்தலும் ஆற்றும் எந்திரப் பாலமாம் ஐயவி துலாமையும், அம்பு உமிழ்கின்ற வேல் நிறைந்த காப்பிடத்தையும்,

*நெடு மதில் நிறை ஞாயில்*
*அம்பு உமிழ் அயில் அருப்பம்* (65–66)

என்று சுட்டுகிறது மதுரைக்காஞ்சி. காவற்காடு, கிடங்கு, உயர்ந்த கோபுரங்கள், வரிசையான வாயில்கள், நெடிய மதில், நிரல்பட்ட சூட்டுகள் ஆகியவற்றை உடைய வேல், அம்பு வீசும் அரண்கள் ஆகியவை இதில் சுட்டப்படுகின்றன. 'பெருமளவில் பகை வீரர்கள் வரும் முக்கிய பெருவழிகளை நிலையான தொலை இலக்காகக் கொண்டு அம்பு எய்யவும், அவ்வழிகளைக் கடக்கும்போது வீரர்கள் மேல் வீழ்ந்து வீழ்த்தவும் பொருத்தப்படுவன வளைவில் பொறிகள். 'அம்பு உமிழ் அயில் அருப்பம்' எனும் தொடர் இத்தகு

பொறிகள் அரண்களில் பொருத்தப்பட்டிருந்தமையைக் குறிக்கிறது. இவை, இக்காலப் போரியல் நிலைக்காப்பிடங்களில் படைகளை எதிர்நோக்க பொருத்தப்பட்டிருக்கும் தொலை இலக்கு நிலைப் படைக் கருவிகளை ஒத்தன' (போரியல் அன்றும் இன்றும், ப.132) என்பது பெறப்படுகிறது.

ஞாயில்

ஞாயில் என்பது கோட்டையின் ஏவறை (செந்தமிழ் அகராதி,ப.32). ஞா+இல்=ஞாயில் ஆயிற்று. ஞாலுதல் எனில் தொங்குதல் (செந்தமிழ் அகராதி,322). 'எய்தால் மறைதற்கு உயரப்படுப்பது' எனவும் 'ஏப்புழைக்கு நடுவாய் எய்து மறையுஞ் சூட்டு' எனவும் ஞாயிலை விளக்குவர் நச்சினார்க்கினியர் (மதுரைக்.66, உரை; சிந்தாமணி. 105, உரை). எனவே, தொங்குதல் போன்று அமைக்கப்படும் உயர் சூட்டுடன் கூடிய ஏவறைகள் ஞாயில் என்பது பெறப்படுகிறது.

*வாயிலொடு புழை அமைத்து*
*ஞாயில் தொறும் புதை நிறீஇ* (பட்டினப்.287–288)

எனும் தொடர்கள் ஞாயிலின் இயல்பு உணர்த்தும். புதை என்பது மறைவு, மறைவிடம், அம்புக் கட்டு, புதுமை என்றும் குறிக்கப் படுகிறது (செந்தமிழ் அகராதி, ப.527). பெரிய வாயில்களுடன் சிறிய வழிகளையும் அமைத்துச் சூட்டுதொறும் அம்புக் கட்டுகளைக் கட்டி வைத்தலுக்கு உரியது ஞாயில் என்பதாகிறது.

மேலும், ஞாயில்தோறும் பகைவர் காட்சியினின்றும் கருவிகளின் தாக்குதலினின்றும் மறையவும், காக்கவும், தாக்கவும் அமைப்புகள் உண்டு என்பது விளங்கும். 'குறுந்தாள் ஞாயில்' (பதி.71:12) என்பதால் குறுகியிருக்கும் படிகளையுடைய ஞாயில் எனவும், நெடுமதிலின்கண் வரிசையாக இருக்கும் சூட்டுகள் 'நிரைஞாயில்' (மதுரைக்.66), 'நிரை நிலை ஞாயில்' (அகம்.124:16) எனவும் குறிக்கப்படுகின்றன.

மதிலின்மேல் விளங்கும் ஞாயில்கள் வானில் விளங்கும் விண்மீன்களை ஒத்துத் தோன்றின (புறம்.21:3-4). 'மதிலும் ஞாயிலும் இன்றே' (புறம்.355:1) எனும் தொடரால் மதிலின் கண் விளங்கும் ஓர் உறுப்பு ஞாயில் என்பது விளங்கும். ஞாயில் என்பதற்கு 'மதிலின் மேலுள்ள ஏப்புழைக்கு நடுவாய் எய்து மறையும் சூட்டு' என பொருளுரைப்பார் உ.வே.சாமிநாதையர்

(புறம்.355:1, உ.வே.சா., பாடல் குறிப்புரை). இக்குறிப்புகளின் வழி, மதிலின் முக்கிய உறுப்பாகிய ஞாயிலின் கட்டமைப்பில் காணப்படும் தொழில்நுட்பம் பெறப்படுகிறது.

### புழை

புழை என்பது துளை, வாயில், ஒடுக்கவழி, மதிலில் அம்பெய்யுமிடம் (ஏவறை) எனும் பொருளுடையதாகும் (செந்தமிழ் அகராதி, ப.534). 'வாயிலொடு புழை அமைத்து' (பட்டினப்.287) எனும் தொடரால் கோட்டைகளில் பெருவாயிலொடு சிறுவழிகளையும் அமைத்திருந்தனர் என்பது விளங்கும். அம்பெய்வதற்கென அமைக்கப்பட்ட சிற்றிடம் ஏப்புழை எனப்பட்டது.

தானே எய்யக் கூடியதும், தொடர்ச்சியாகத் தாக்கவல்ல ஆயுதங்களை வெளியிடக்கூடியதுமான பலவித எந்திரப்பொறிகளையும் இதில் பொருத்தினர். அதற்கான எந்திரங்களை வடிவமைக்கும் நுட்பத்தினையும் பெற்றிருந்தனர். இத்தன்மை வாய்ந்த அரண்கள், குன்றுகள் போல அருகருகே காட்சியளித்தன. போர்க்காலங்களில் நிலவின் ஒளியும் நுழைய முடியாதவாறு அமைக்கப்பட்ட பலவகை எந்திரப் பொறிகள் நிறைந்த புழைகளை,

*தமரெனின் யாவரும் புகுப அமரெனில்*
*திங்களு நுழையா எந்திரப் படுபுழைக்*
*கண்மாறு நீட்ட நணிநணி இருந்த*
*குறும்பல் குறும்பின்* (பா.177:4–7)

என்கிறது புறநானூறு.

### படைக் கருவிகளோடு கூடிய அரண்கள்

வீரர்களால் எடுத்துச் செல்லக்கூடியவை, ஓரிடத்தில் நிலையாக இருந்து எய்தக்கூடியவை என வேறுபட்ட படைக் கருவிகளும், படைக்கருவிகளோடு கூடிய அரண்களின் அமைப்பும் அறியப்படுகிறது. படைக் கருவிகளில் அம்பின் வகைகளை,

***பகழி, வாளி, வண்டு, பாணம்,***
***நிகழ்சரம், பத்திரி, சிலீமுகம், பல்லம்,***
***புங்கம், கணை, குதை, கங்கபத்திரம்,***
***அத்திரம், தோணி, கோல், விசிகம், அம்பே*** (ப.138)

எனச் சேந்தன் திவாகரமும்,

*பகழி, வாளி, தோணி, வாணம்,*
*கதிரம், பல்லம், கணை, கோல், சரமொடு,*
*வண்டு, பத்திரம், சீலிமுகம், விசிகம்,*
*அம்பின் பெயர் உருவாகலும் உரித்தே* (ப.1539)

எனப் பிங்கல நிகண்டும் தொகுத்துரைக்கின்றன. அம்புகளில் மட்டும் இத்தனை வகைகளை உருவாக்கிப் பயன்படுத்திய பழந்தமிழரின் தொழில்நுட்ப அறிவினை இதில் அறியலாம். மேலும் இக்கருவிகள் ஒவ்வொன்றுக்குமான தன்மையும், வடிவும் வேறுபட்டது என்பதும் பெறப்படும்.

ஆழமான அகழிகளையும், நீண்ட மதில்களையும், வலிமையான கோட்டைகளையும் வடிவமைத்ததோடு, அம்புகள் பொருத்தப்பட்ட காவல் மிக்க அரண்களையும் அமைத்தனர். இவ்வரண், 'அம்பு துஞ்சும் கடியரண்' (புறம்.20:16) எனப்பட்டது. கோட்டைகள் மிகவும் பாதுகாப்பானதாகவும், எதிரிகளைத் தாக்கும் எந்திரங் களையும், ஆழமான அகழிகளையும், நீண்ட மதில்களையும் கொண்டு தொழில்நுட்பத்தோடு விளங்கின. இவ்விதமான எல்லா வகை படைக்கலன்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் அரணை 'முழுமுதல் அரணம்' என்கிறார் தொல்காப்பியர் (தொல். 1011).

கணையமரம் செறிக்கப்பட்ட உயரிய நிலையினையுடைய மதில் வாயிலிடத்தே, வில்லினது அம்பு செலுத்தும் வன்மையோடு பொருந்திய சிறப்புடைய ஐயவித் துலாமும், காவற்காடும், ஆழ்ந்த கிடங்கும், நெடிய மதிலிடத்தே நிரல்படவமைத்த பதணமும் கொண்டு விளங்கிய எந்திரப் பொறிகளமைந்த கோட்டையை,

*துஞ்சுமரந் துவன்றிய மலரகன் பறந்தலை*
*ஓங்கு நிலை வாயில் தூங்குபு தகைத்த*
*வில்லிசை மாட்டிய விழுச்சீர் ஐயவிக்*
*கடிமிளைக் குண்டு கிடங்கின்*
*நெடுமதில் நிரைப் பதணத்து*
*தண்ணலம் பெருங்கோட்டகப்பா எறிந்த*
*பொன்புனை உழிஞை வெல்போர்க் குட்டுவ* (பதி.22:21–25)

என்ற பாடலடிகள் காட்டுகின்றன.

இதில், ஐயவி துலாம் என்பது, மதிலில் பொருத்தப்படும் ஒருவகை போர்க்கருவி; இதனை வாயிலில் தொங்கும்படி அமைப்பர்; அப்பொறியைப் பகைவர் மீது விசையம்பு செலுத்தும் விற்பொறியுடன் பொருந்த வைத்திருப்பர் என்பது பெறப்படுகிறது.

அதனால் 'வில்விசை மாட்டிய விழுச்சீர் ஐயவி' என்கிறார் ஆசிரியர். 'தகைந்த' என்பது 'கட்டிய' எனப் பொருள்படும் என்றும், விசை வில் என்பது தானே வளைந்து அம்பை எய்யும் வில் என்றும், நிரைப்பதணம் என்பது கவண், கூடை, தூண்டில், துடக்கு, ஆண்டலை அடுப்பு, சென்றெறி சிரல், நூற்றுவரைக்கொல்லி, தள்ளி வெட்டி என்பவை பொருத்தப்பட்ட, காவல் செய்பவர் தேவையில்லாத நொச்சி மதில் என்றும் சுட்டப்படுகிறது.

எந்திரப் பொறிகளும், எய்யப்படும் அம்பும், பகைவரைத் தடுக்கும் வளைவில் பொறி, கருவிரல் ஊகம் முதலிய பலவகையான பொறிகளும் அமைக்கப்பட்ட மதிலும், கொலைவல்ல முதலைகளையுடைய ஆழ்ந்த இடத்தையுடைய அகழியும், வளைவு வளைவாகக் கட்டப்பட்டு வானளாவ உயர்ந்த மதிலும் கொண்ட எயிலை,

*செம்பொறிச் சிலம்பொடு அணித்தழை தூங்கும்*
*எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்*
*கோள்வன் முதலைய குண்டுகண் அகழி*
*வானுற ஓங்கிய வளைந்துசெய் புரிசை* (பதி.53:6–9)

என்ற அடிகள் காட்டுகின்றன. மேலும், மலைச் சிகரங்களைப் போன்ற வளைந்த இடத்தையுடைய புற மதிலும், அகன்ற நாட்டைக் கண்டாற் போலப் பேரிடத்தை அகத்தேகொண்ட அம்புக்கட்டுகள் பொருந்திய இடைமதிலும், கதவிடத்தே செறிந்து கிடக்கும் கணையமரங்கள் பலவற்றோடு, ஐயவித்துலா மரங்களும் சேர்த்துக் கட்டப்பட்ட மதிலை,

*கோடுறழ்ந்து எடுத்த கொடுங்கண் இஞ்சி*
*நாடுகண் டன்ன கணைதுஞ்சு விலங்கல்*
*துஞ்சு மரக்குழாந் துவன்றிப் புனிற்றுமகள்*
*பூணா ஐயவி தூக்கிய மதில்* (பதி.16:1–4)

என்ற அடிகளும் காட்டுகின்றன.

## ஊர்திகளும் சக்கரங்களும்

பழந்தமிழகத்தில் பலவிதமான ஊர்திகளின் பயன்பாடு காணப் படுகிறது. பொறியியலின் நுண்மையான படைப்பாக சக்கரங்கள் கருதப்படுகின்றன. பிற்காலத்தில் உருவான பலவகையான தொழில்நுட்பங்களுக்குச் சக்கரங்களின் உருவாக்கமே அடிப்படையாக அமைந்ததை அறியலாம். பழந்தமிழ் இலக்கியங்களில் இச்சக்கரங்கள் பொதுமக்கள் பயன்படுத்திய ஊர்திகள், வணிக

வண்டிகள், தேர்கள், அரசர்கள், தலைவர்கள் போன்றோர் பயன்படுத்திய தேர்கள் போன்றவற்றில் காணப்படுகின்றன. இவை தேவைக்கும், பயன்பாட்டிற்கும் ஏற்ப பலவகை பொறியியல் நுட்பங்களோடு உருவாக்கப்பட்டன.

மேலும், சக்கரத்தின் பயன்பாடு மண்பாண்டத் தொழிலிலும் அறியப்படுகிறது. மண்பாண்டங்கள் வனைதற்குச் சக்கரங்கள் பயன்படுத்தப்பட்டன. இவ்வகை சக்கரங்களின்மீது சுழலும் குமிழி பொருத்தப்பட்டிருந்ததை மலைபடுகடாம் (அடி. 247) காட்டுகிறது.

**கப்பல் கட்டுமானம்**

கடல் வாணிகத்தில் தலைசிறந்து விளங்கியவர் பழந்தமிழர். துறைமுகங்களில் கப்பல்கள் சுற்றித்திரிந்த காட்சியைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. இக்கடல் வாணிகத்திற்காக, கப்பல்களை உள்நாட்டிலேயே தயாரிக்கும் நுட்பத்தினைப் பெற்றிருந்தனர். தமிழரின் கடல் வாணிகம் குறித்தும், கடல் பயணம் குறித்தும் பல்வகையான இலக்கியப் பதிவுகளும், வெளிநாட்டுக் கடல் பயணிகளின் குறிப்புகளும் பகர்கின்றன. இலக்கியங்களிலும், நிகண்டுகளிலும் காணப்படும் கடல்போக்குவரத்திற்கான கலன்கள் குறித்த பல்வேறு பெயர்கள் பழந்தமிழரின் கடல் போக்குவரத்தினையும், கலன்களின் கட்டுமானத் தொழில்நுட்பத்தினையும் உறுதிசெய்கின்றன.

*வங்கம் பாதை தோணி யாணம்*
*தங்கு மதலை திமில் பாறு அம்பி*
*பஃறி சதாவே பாரதி நவ்வே*
*போதம் தொள்ளை நாவாய் என்றிவை*
*மேதகு நீர்மேல் ஓடும் மரக்கலம்* (ப.418)

என்று மரக்கலன்களின் வகைகளைச் சுட்டுகிறது திவாகரம். அவற்றிலும் தோணியின் வகைகளை,

*பஃடு பஃறி யம்பி யோடம்*
*திமிலை தோணி யெனச் செப்பினரே* (ப.419)

என்றும்,

தெப்பத்தின் வகைகளை,

*பகடு பட்டிகை யாணம் அம்பி*
*படுவை தொள்ளை புணை மிதவை தெப்பம்* (ப.419)

என்றும் தொகுத்துரைக்கிறது திவாகரம்.

நீர்ப்போக்குவரத்தில் பயன்படுத்தப்பட்ட பல்வேறு கலன்களின் பயன்பாடும், பயன்பாட்டிற்கேற்ற பல்வேறு வடிவங்களில் அவற்றை உருவாக்கிய பழந்தமிழரின் நுட்பமும் இதில் அறிய முடிகிறது.

துறைமுகங்களில் கப்பல்கள் சுற்றித்திரிந்த காட்சியை இலக்கியங்கள் படம்பிடிக்கின்றன. இத்தகைய கடல் போக்குவரத்திற்குத் தேவையான கலன்களைத் தயாரித்த பழந்தமிழரின் தொழில்நுட்ப வளத்தை அவர்தம் இலக்கியச் சான்றுகள் காட்டுகின்றன. கடல் வாணிகத்தில் ஈடுபடும் கலன்களில் பழுது ஏற்பட்டால் அவற்றை நீக்குதற்காக கப்பல் பொறியாளர் பணி அமர்த்தப்பட்டனர். பயணத்தில் இவர்களும் உடனிருப்பர். இவ்விதம், கடல் வாணிகத்தில் ஈடுபட்டு, சுற்றித் திரிந்து பழுதுபட்டுவிட்ட கப்பலைப் பழுது நீக்குவோரை,

*பெருங்கட ணீந்திய மரம்வலி யுறுக்கும்*
*பண்ணிய விலைஞர்* (பதி.76:4–5)

என்று சுட்டுகிறது பதிற்றுப்பத்து. இதற்கு, பெருங்கடலைக் கடந்துசென்று மீளுதலால் பழுதுற்ற மரக்கலத்தின் பழுதைப் போக்கிப் பண்டுபோல வலியுடைத்தாக்கும் கடல் வணிகர் போல என்று பொருள் கொள்கிறார் அ.மாணிக்கனார்(பதி.உரை). கப்பல் கட்டுமானக் கூடத்தின் ஒரு பகுதியாக, பழுதுபட்ட கலன்களைச் செப்பனிடும் தொழிற்கூடம் (பணிமனை) அமைந்திருந்ததையும் அறியமுடிகிறது. அதேபோல, பேரொலி எழும் நீரையுடைய கடல் துறைகளில் கப்பல் தொழில் புரிவோரை,

*'முழங்கு நீர் முன்றுறைக் கலம்புணர் கம்மியர்'* *(மணி.7:70)*

என்பதில் அறியலாம். கப்பல் தொழில் புரிவோர் 'கம்மியர்' என அழைக்கப்பட்டனர். கடல் பயணத்தில் மரக்கலம் செய்யும்/ பழுதுபார்க்கும் கம்மியரை உடன் அழைத்துச் செல்லும் வழக்கத்தினை,

*'கலஞ்செய் கம்மியர் வருகென'* *(மணி.25:124)*

என்பதில் காணமுடிகிறது.

**வானவூர்தி**

ஓட்டுநர் தேவையில்லாத வான ஊர்தியைச் சிந்தித்துப்பார்த்த பழந்தமிழர் தொழில்நுட்ப அறிவினை,

*'வலவன் ஏவா வான ஊர்தி'* *(புறம். 27:7,8)*

என்ற பாடலடி கோடிட்டுக் காட்டுகிறது. அதேபோல, உம்பர் உறையும் ஒளிகிளர் வானத்தின்கண், வைமானிகர் ஊர்ந்து திரியும் விமானங்களின் நிழல் வைகை ஆற்று நீரில் விழுந்து ஒளிவிட்டதை,

*உம்பர் உறையும் ஒளிகிளர்வா னூர்பாடும்*
*அம்பி கரவா வழக்கிற்றே* (பரி.15:70,71)

என்ற அடிகள் சுட்டுகின்றன.

## இல்லப் பயன்பாட்டுப் பொருள்கள்

### திரிகை (அரைக்கும் எந்திரம்)

இல்லப் பயன்பாட்டுப் பொருள்களில், உழுந்து, அரிசி, தினை போன்ற தானியங்களை அரைக்க திரிகை பயன்படுத்தப்பட்டது. அரிசியை இட்டுச் சுழலும் திரிகையின் ஒலி போன்று, தேரின் சக்கரம் மணலை அறுத்துக் கொண்டு வந்ததை,

*ஐதுஉணங்கு வல்சி பெய்துமுறுக்கு உறுத்த*
*திரிமரக் குரல்இசை கடுப்ப* (அகம்.224:12,13)

என்ற அடிகள் காட்டுகின்றன. அதேபோல, முல்லை நில மக்கள் உறையும் இல்லின் முன், யானையின் காலை ஒத்த திரிமரம் நிறுத்தப்பட்டிருந்த பந்தரும் காணப்படுகிறது (பெருபாண்.*185-187*).

### எந்திரப் பாவை

மகளிர், பாவை வைத்து விளையாடுதல் பழந்தமிழர் பழக்க வழக்கங்களில் ஒன்றாகும். மண்பாவை, மரப்பாவை போன்றவை இவ்விளையாட்டில் இடம்பெற்றிருந்ததைப்போல, எந்திரத்தினாலான பாவையும் பயன்பாட்டிலிருந்தது தெரியவருகிறது. இவ்வெந்திரப் பாவை, தானே இயங்கும் எந்திரத் தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டிருந்தது. இதனை,

*––– ––– நல் வினைப்*
*பொறி அழி பாவையின் கலங்கி* (பா.308:6,7)

என்கிறது நற்றிணை.

இதில், நல்ல வேலைப்பாடமைந்த, தானே இயங்கும் எந்திரப் பாவை அதிலுள்ள எந்திரம் அழிந்துபட்டதால் இயங்காமல் கிடந்தது உவமையாக்கப்பட்டுள்ளது.

### எந்திரவாவி

எந்திரவாவி எனப்படும் எந்திரம் பொருத்தப்பட்ட நீர்நிறை தொட்டி பழந்தமிழகத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தது தெரிய வருகிறது. இவ்வெந்திர நீர்த்தொட்டியில், இளைஞரும் மகளிரும் நீராடியதையும், அப்போது எந்திரத் தொட்டியிலிருந்து வெளியேற்றப்பட்ட நீரினையும்,

*எந்திர வாவியில் இளைஞரும் மகளிரும்*
*தந்தமில் ஆடிய சாந்துகழி நீரும்* (28:7,8)

என்கிறது மணிமேகலை. இவ் எந்திரவாவியை, வேண்டும் பொழுது நீர் நிறைத்தற்கும், வேண்டாதபொழுது போக்குதற்கும் உரிய எந்திரங்களுடைய நீர்நிலை என்று விளக்குகிறார் உ.வே.சாமிநாதையர் (மணி. உ.வே.சா. உரை. ப.326).

### மேற்கண்ட சான்றுகளின் வழி

பழந்தமிழரின் பொறியியல்' தொழில்நுட்பக் கூறுகளை வேளாண்மை, பாதுகாப்பு, கட்டுமானம், கைவினைப் பொருள்கள் உற்பத்தி போன்ற பல நிலைகளில் காணமுடிகிறது.

பழந்தமிழர், அடிப்படை வாழ்வாதாரமான வேளாண் உற்பத்தியில் அதிக பலனை ஈட்டவும், கால மேலாண்மைக்கும், இரண்டாம் நிலை உற்பத்திப் பொருள்களைப் பெறுவதற்கும் பலவிதமான பொறியியல் நுட்பங்களைப் பயன்படுத்தியது தெரியவருகிறது.

வேளாண்மைத் துறையில் பயன்பாட்டுக் கருவிகள், உற்பத்திப் பொருள்களைப் பிரித்தெடுக்கும் எந்திரங்கள், விலங்குகளிடமிருந்து விளை பொருள்களைப் பாதுகாக்கும் பொறிகள் என்பனவாகவும், பாதுகாப்புத் துறையில், மதிலுறுப்புகள், எந்திரப் புழைகள், தானியங்கி எந்திரப் பொறிகள் என்பனவாகவும் காணப்படுகின்றன.

நாட்டின் பாதுகாப்பு என்கிற நிலையில், பலவிதமான தொழில் நுட்பங்களை உள்ளடக்கிய எந்திரங்களையும், மதில்களையும், அரண்களையும் அமைத்ததும், தானியங்கி எந்திரக் கருவிகளைப் பயன்படுத்தியதும் அறியப்படுகிறது.

அடுத்த நிலையில், நீர்நிலை கட்டுமானங்கள், நீர் ஏற்றக் கருவிகள், வாகனங்கள், இல்லப் பயன்பாட்டுப் பொருள்கள்,

சிறுவர் விளையாட்டுப் பொருள்கள் போன்றவற்றிலும் பொறியியல் நுட்பம் பயன்படுத்தப்பட்டது அறியப்படுகிறது.

அதேபோல, கட்டுமானத் துறையில் அரண்களில் கருவிகளை ஏவப் பயன்படுத்தப்படும் எந்திர மேடைகள், அணைகளில் பயன்படுத்தப்பட்ட தானியங்கி நீர் இயக்கிகள் என்பனவும், கப்பல் கட்டுமானம், ஊர்திகள், தானியங்கி எந்திரப் பாவை போன்ற பலவும் பழந்தமிழரின் பொறியியல் தொழில்நுட்பத்திற்குச் சான்றுகளாய் அமைகின்றன.

எனவே, இவ்வகையான எந்திரப் பொறிகளும், கட்டுமான அமைப்புகளும் இன்றைய நவீன போர்க்கருவிகளுக்கு முன்னோடியாக விளங்கியதையும், இவையனைத்தும் இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும், பொறியியல் நுட்பங்களுக்கும் அடித்தளமாக அமைந்தவை என்பதையும் இதன்வழி உணரமுடிகிறது.

# சங்க இலக்கியத்தில்
# மனிதவள மேம்பாடும் ஆளுமைத்திறனும்

## மனிதவள மேம்பாடு

தொல்காப்பியர் கூற்றுப்படி, ஆறாவது அறிவாகிய பகுத்தறியும் ஆற்றல் கொண்ட மனித இனமே உயிரினங்களில் மேலானதாகக் கொள்ளப்படுகிறது. இம்மனித இனமே தம் இனத்தை மட்டுமல்லாது பிற உயிரினங்களையும் அரவணைத்துச் செல்லும் அல்லது தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளது. இவ்வகைச் சிறப்பு பெற்ற மனித இனத்தின் எண்ணம் விரிவடைந்து ஆக்கமும் ஊக்கமும் பெற்றுத் திகழ மனித வளத்தை மேம்படுத்துதல் வேண்டும்.

ஒரு நாட்டில் வாழும் மக்களின் கல்வித்தரம், ஆண் பெண் சமத்துவம், சுற்றுச்சூழல், ஆரோக்கியம், திட்டங்களைச் செயல்படுத்தும் முறைகள் ஆகிய அனைத்துத் தகுதிகளையும் உடையனவே 'மனிதவள மேம்பாடு' என்று விளக்கம் தருகிறது மனிதவள மேம்பாட்டு அமைச்சகம். மேலும், மனிதவள மேம்பாடும் பொருளாதாரமும் பின்னிப் பிணைந்தவை என்று கே.சீனிவாசன் குறிப்பிடுகிறார். இன்றைய சூழலில், மனிதவள மேம்பாட்டைப் பொறுத்தவரையில் உலக நாடுகளில் 127வது இடத்தில் இந்தியா இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவள மேம்பாட்டு அறிக்கைத் தெரிவிக்கின்றது. மக்கள் தொகையில் உலக அளவில் 2வது இடத்தில் இருக்கிற ஒரு நாடு மனிதவள மேம்பாட்டில் 127வது இடத்தில் இருக்கிறது என்பது கவலைதரக்கூடிய ஒன்றாகும். இந்நிலையில் பண்டைத் தமிழகத்தில் மனிதவள மேம்பாடு எவ்வாறு காக்கப்பட்டது, மேம்படுத்தப்பட்டது என்பதைச் சங்க இலக்கியங்கள்வழி காண்பது தேவையாகிறது. இவ்வகை மீட்டுருவாக்கம் இன்றைய மனிதவள மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு உறுதுணை புரியும்.

## மனிதவள மேம்பாட்டின் தேவை

'சேவைகள் பிரிவு என்றதுமே அதில் மனிதனுக்குரிய தேவைகள், வசதிகள், அத்தியாவசியச் சௌகரியங்கள் ஆகியவையே

மேலோங்கி நிற்கின்றன. வளர்ந்து வரும் நாடுகள், தம் மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்த வேண்டுமானால், அங்கு மனிதவளத் துறையிலும், அவர்தம் நிர்வாகத் தொழில்நுட்பத் திறமைகளிலும் பெருமளவு முதலீடுகள் தேவைப்படும். அந்த வகையில் மொத்தம் 175 நாடுகள் அடங்கிய பட்டியலில் இந்தியா 134வது இடத்தில் இருக்கிறது. காரணம் நம் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 73 சதவீதம்பேர் போதிய கழிப்பிட வசதிகள் அற்றவர்களாகவும், 21 சதவீதம் மக்கள் நல்ல குடிநீர் கிடைக்கவே வாய்ப்பிழந்த நிலையிலும் உள்ளனர்'(இந்தியா 2020, ப.117) என்ற புள்ளிவிவரம் மனித வளத் தேவையில் இன்றையச் சமூகம் கடக்க வேண்டிய தொலைவைச் சுட்டும்.

சமூக மேம்பாட்டில் மக்கள் வளம் என்பது, பிற வளங்களுக்கு அடிப்படையாக அமைகிறது. இது உணவு, உடை, இருப்பிடங் களோடு சுகாதார மேம்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. சுகாதார மேம்பாடே பண்பட்ட, அறிவுடைமையைக் கொண்ட'சமுதாயத்தை அடையாளப்படுத்துகிறது. ஆனால், 'இந்தியாவில் ஏழையாகவோ, நோயாளியாகவோ இருப்பது மிகக் கொடுமையான ஒன்று. கோடிக்கும் மேற்பட்டவர்கள் மருத்துவ உதவியைப் பெறமுடியாத நிலையில் இருக்கிறார்கள்' என்ற இன்றைய உண்மை நிலை சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக அமைவதைக் காட்டுகிறது.

மனிதவளம் என்பது, நோயற்ற சமுதாயத்தையும், சுகாதாரமான வாழ்க்கை முறையையும் அளவுகோல்களாகக் கொண்டது. மனிதரின் உடல் பிணியும், மனப்பிணியும் தடையற்ற சமூக முன்னேற்றத்திற்கு ஊறு விளைவிப்பன. வளமில்லா உடல் மற்றும் மனத்தில் வளமான சிந்தனைகளும், அதன்வழி நற்செயல்பாடுகளும் வெளிப்பட்டு நிற்பது அரிது. எனவே, சமூகப் பிணியைக் களைவது சமூகக் கடமை என்பதைப் பழந்தமிழ்ச் சான்றோர் அறிவுறுத்தினர். பிணிகளற்ற சமூகத்தை வரவேற்றனர்.

*'நோயிலன் ஆகிப் பெயர்கதில் அம்ம'* *(புறம்.13:9)*

என்று சமூகத் தலைமையையும், 'பிணி நீங்குக' (ஐங்குறு. 2:2; சிலம்பு.5:72-73; மணி.1:70-71; 16:134;) என்று மக்கள் கூட்டத்தையும் வாழ்த்தினர். பசி என்பது, பிணிக்குக் காரணமாகவும், தாமே பிணியாகவும் அமைந்ததால் அதனை இல்லாதொழிக்கப் பலவழிகளிலும் அற்றைச் சமூகம் முயன்றது. அதற்கு அடுத்த நிலையில், பிற காரணங்களால் உடற்கும்,

மனத்திற்கும் ஏற்படும் பிணிகளிலும் அவற்றைப் போக்கும் முறைகளிலும் தீவிரம் காட்டப்பட்டது. இவற்றில், சுகாதாரமான இருப்பிட வசதி, இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறைகள், குடிநீர்ப்பாதுகாப்பு, இயற்கையான உணவு, எளிமையான பல்வகை மருத்துவ முறைகள் என்பன சிறப்பிடம் பெறுகின்றன.

## மக்கள் நலவாழ்வு

'நாம் வாழும் உறைவிடங்கள் அல்லது பணியிடங்களில் சிறந்த பொதுச் சுகாதாரச் சூழ்நிலைகள் அவசியம். மேம்படுத்தப்பட்ட தூய்மையான சுற்றுச்சூழலும் நம் உடல் ஆரோக்கியத்திற்கு மிக மிக அவசியம். இத்தகைய நல்ல தூய்மையான சுற்றுச்சூழலுக்கு அடுத்தபடி, போதுமான துணைச் சத்துக்களுடன் கூடிய சிறந்த ஊட்டச் சத்துணவின் தேவை எழுகிறது. பொது சுகாதாரச் சேவைகள் இன்று கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றன. மருத்துவச் சேவையை வணிக மயமாக்கும் போக்கும் தென்படுகிறது. இவற்றையெல்லாம் தாக்குப்பிடிக்கும் வகையில் காப்புறுதி அல்லது சமூகநலப் பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைவராலும் பெற இயைந்த வகையில் பரவலாக்கிவிட வேண்டும்' (இந்தியா 2020, ப.145) என்பது, இன்றைய மனிதவள மேம்பாட்டிற்கான திட்டவரையறையாக அமைகிறது.

உடல் நலத்தையும், மனநலத்தையும் பாதிக்கும் காரணிகளுள் வாழும் சூழல் முக்கிய பங்கினைப் பெறுவதால், வாழும் சூழலையும், தம்மைச் சுற்றி வாழ்வோரையும் தேர்ந்தெடுப்பதில் பழந்தமிழ்ச் சமூகம் கவனம் கொண்டிருந்தது. வாழும் சூழலோடு, ஒருவரின் உணவுப் பழக்கமும் ஆரோக்கிய வாழ்வில் பெரும்பங்களிப்பினைச் செய்கிறதென்பதை உணர்ந்ததால் இவை இரண்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. மனிதர்க்கு வரும் மூப்பை விரட்டும் ஆற்றல், வாழும் நற்சூழலுக்கு உண்டு என உணர்ந்தனர். ஆண்டு பலவாகியும் தலைமுடி நரையாமலும், மூப்பெய்தாமலும் இருப்பதற்கு, தாம் வாழும் சூழலும், தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களுமே காரணம் என்பார் சங்கப் புலவர் பிசிராந்தையார் (புறம்.191). இங்கு, வாழும் சூழல் மனஅழுத்த மேலாண்மையைத் தீர்மானிக்கும் முதன்மைக் காரணி என்பது அறியப்படுகிறது.

அற்றைநாள் கடமைகளினூடே மன நலத்திற்கும், உடல்நலத் திற்குமாக ஒதுக்கும் நேரம் இன்றியமையாததாயிருந்தது. சிறுவர்முதல் முதியவர்வரை பொழுது போக்கவும், ஆடி மகிழவும்

ஊரின் பொதுவான இடங்களாகப் பொதியிலும், மன்றமும் விளங்கின(கலி.102). அதேபோல, இருப்பிடங்கள் சுகாதார வசதிகளுடனும், காற்றோட்டமுள்ளதாகவும் அமைக்கப்பட்டன (மதுரைக். 356-358; பட்டினப்.142-145). வீட்டிலிருந்தும், தெருவிலிருந்தும் கழிவுநீர் வெளியேற சாய்க்கடை வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன (சிலப். 14:65; மணி.28:5). மகளிர் விளையாடப் பொது மன்றங்களும் (கலி.58; 141), இல்லத்தின் மேனிலை மாடங்களும் (நிலா முற்றம்) (நெடுநல்.60-63; 95; சிலம்பு.5:7-8;முல்லை.86;பெரும்பாண்.348-49)விளையாட்டுத் திடல்களாயின. மாடங்களில் பெண்களே பெரும்பாலும் தங்கி இருந்தனர். அவர்களது பொழுதுபோக்கு இடமாகவும் அவை விளங்கின. வரிப்பந்தாடுதல், கழங்கு ஆடுதல் போன்ற விளையாட்டுகள் மாடங்களிலே நடைபெற்றன. இதனை,

*'வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇ'* *(பெரும்பாண்.333)*

என்பதில் அறியமுடிகிறது.

**உணவே மருந்து**

உணவே மருந்தாக அமைவதைப் பழந்தமிழர் உணர்ந்திருந்தனர். தேவையான உணவினைத் தேவையான அளவில் சரியான கால இடைவெளியில் உண்டாலே நோய்கள் அண்டாது என்பதையும், இவற்றின் தன்மைகள் மாறுபடின் நோயும், அதன் வழி சினமும் பெருகும் என்பதையும் ஆய்ந்தறிந்தனர். இதனை,

*'பெரிது ஆராச் சிறுசினத்தர்'* *(புறம்.360:1–2)*

என்று வெளிப்படுத்தினர். இதில், உணவைத் தேவைக்கும் அதிகமாக உண்ணாதவர், அதிகம் சினம் கொள்வதில்லை என்பது பெறப்படுகிறது. அதிக சினமே நோய்கள் பலவற்றிக்குக் காரணமாக அமைகிறது. அதேபோல,

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
*அற்றது போற்றி உணின்* (குறள்.942)

என்றும்,

*அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு*
*பெற்றான் நெடிதுய்க்கு மாறு* (குறள்.943)

என்றும், உடல் நலம் காப்பதில் உணவின் பயன்பாட்டு முறையை விளக்குவார் வள்ளுவரும்.

### தூய்மையாக்கப்பட்ட குடிநீர்

குடிநீர் மாசுபாட்டால் உண்டாகும் நோய்கள் மிகுதி என்பதை அறிந்ததால், மாசுபடா குடிநீருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. நாட்டில் உள்வளத் தேவைகளுள் ஒன்றான நீர்நிலைகளுக்கு எதிரிகளாலும், விலங்குகளாலும் தீங்கு நேரா வண்ணம் பாதுகாப்பு போடப்பட்டது (*புறம்.15:9-10; அகம்.252:11-13*). குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்ட காலத்தில், கூவலில் இருந்து பெறப்பட்ட கலங்கிய சிறிதளவு நீரினையும் கலங்கல் போக சுத்திகரிப்புச் செய்து பயன்படுத்தினர். இதற்கு, 'தேற்றா' மரத்தின் கொட்டை பயன்படுத்தப்பட்டது (*கலி.142:63-65*).

### மருத்துவம்

பழந்தமிழரின் மருத்துவத்தை உடல் நலத்திற்கான மருத்துவம், மன நலத்திற்கான மருத்துவம் என இரு கூறுகளாக்கிப் பார்க்க முடிகிறது. இவற்றுள், உடல் நலத்திற்கான மருத்துவத்தை இயற்கை மருத்துவம் அல்லது கை மருத்துவம், இசைமருத்துவம், நுண்மருத்துவம் (தொழில்நுட்பம் சார்ந்தது) என்று வகைப் படுத்தலாம். மன நலத்திற்கான மருத்துவ முறைகள் தேற்றுதல், ஆற்றுப் படுத்துதல், சந்து செய்வித்தல், வெறியாட்டுதல் போன்ற முறைகளில் அமைகின்றன. மன அழுத்தத்தைப் போக்குவதில் இம்மருத்துவ முறைகள் பெரும்பங்கு வகித்தன. மன அழுத்தத்தைப் போக்கக் கூடியவர்களாக சான்றோர், தோழன், தோழி, கட்டுவிச்சி, பாணன், பாடினி, விறலி போன்றோர் விளங்கினர். இவர்களின் கூற்றுகளாக அமைந்த பாடல்களே சங்க இலக்கியத்தில் பெரும்பங்கு வகிப்பதை அறிகிறோம்.

### முதியோரைப் பேணுதல்

இன்று, நாட்டில் நீதிமன்றங்களும், காவல் நிலையங்களும், முதியோர் இல்லங்களும், அநாதை இல்லங்களும் எண்ணிக்கையில் அதிகரித்துக்கொண்டு போவது சமூக ஆரோக்கியமற்ற தன்மையின் வெளிப்பாட்டுக் குறியீடாக விளங்குவதைக் காணமுடிகிறது. இத்தன்மை, நாட்டில் குற்றங்கள் பெருகுவதையும், குடும்பப் பிணைப்பின் சிதைவையும், பாதுகாப்பற்ற முதுமையையும் மறைமுகமாக உணர்த்தி நிற்கிறது. குறிப்பாக, இன்று சமூகச் சிக்கல்களுள் முக்கியமான ஒன்றாக முதியோர் தொடர்பான சிக்கல்கள் கருதப்படுகின்றன. 'சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுள் ஒன்றாக, உடனடித் தீர்வை வேண்டி நிற்பது முதியோர்கள்

தொடர்பான பிரச்சினைகளாகும். எதிர்காலத்தில் நல்ல வசதி இருந்தும் தனிமையில் வாழும் முதியோர் அதிகம்பேர் இந்தியாவில் இருப்பார்கள். காரணம் அவர்களது பெற்றோரைப் பிரிந்து இந்தியாவில் வெவ்வேறு பகுதிகளிலோ உலகில் எங்கெங்கோ தங்கி வாழக்கூடும். அந்த முதியவர்களுக்குத் தேவைப்படும் அனைத்துச் சேவைகளும் இன்றியமையாத சமூகப் பிரச்சினை (இந்தியா 2020, ப.120) என்கின்றனர் சமூக நோக்கர்கள்.

இவ்வகைச் சமூகச் சிக்கல்களைக் களைவதில் அரசின் செயல்பாடுகள் முக்கியமானதாக அமைகின்றன. அவ்வகையில், நாட்டில் பெரியோரையும், சிறியோரையும் பேணிக்காத்த பழந்தமிழ் மன்னர்களின் செயல்பாடுகள் மனிதவளத்தைக் காப்பதில் சிறப்பிடம் பெறுகின்றன. பெருஞ்சேரல் இரும் பொறையின் இத்தகைய மனிதநேய நோக்கை அரிசில்கிழார் புகழ்கிறார் (பதி.79:2,3). அதேபோல, நாட்டில் வாழும் முதியவர்களைப் பேணிக்காத்து, அவர்களுக்குத் தொண்டினைச் செய்விக்கும் மன்னனை,

*வணங்கியசாயல் புதல்வரின் முதியர்ப் பேணி*
*(பதி.70:20)*

என்பதில் அறியலாம். இதில், நட்பு அமைந்த சான்றோர்க்குப் பணிந்து ஒழுகும் மென்மையையும் பகைவர்க்கு வணங்காத ஆண்மையினையுமுடைய, மக்களைக் கொண்டு முதியவரைப் போற்றித் தொன்றுதொட்டு வரும் கடமையைச் செய்த செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் போற்றுகிறார். அதேபோல,

*முதுவோர்க்கு முகிழ்த்த கையினை எனவும்*
*இளையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும்*
*ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும்*
*தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும்* (231–234)

என்ற சிறுபாணாற்றுப்படை அடிகளும், முதியோருக்கு எப்போதும் குவித்த கையினையுடைய மன்னனைக் காட்டுகிறது. அனுபவம் பெற்ற முதியவர்கள் இல்லற வாழ்விலிருந்து விடுபெற்று துறவறம் மேற்கொள்ளுதல் தமிழ் பண்பாடு அன்று. இல்லத்திலிருந்து இனியவற்றைத் தம் சமூகத்திற்குப் பயிற்றுவித்தலே முதுமையின் கடமை என்று தொல்காப்பியமும்(தொல்.1138) முதியவர்களின் சிறப்பினை எடுத்துரைக்கிறது.

**பெண்களைப் பேணுதல்**

நாட்டில் பெண்கள் அச்சமற்று இருப்பதில் காவலும்,

மன்னனின் ஆட்சிச் சிறப்பும் முக்கியப் பங்கினை வகிக்கின்றன. ஒரு நாட்டில் பெண்கள் சுதந்திரமாக எந்தவித அச்சமும் இன்றி அவர்தம் கடமைகளை ஆற்ற வழிவகை செய்ய வேண்டுவது அரசின் கடமையாகிறது. நாட்டில் பெண்கள் நிலையினையும், சுதந்திரத் தன்மையையும் அடிப்படையாகக் கொண்டே அந்நாட்டின் மதிப்பு பிற நாடுகளில் போற்றப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் காவேரி ஆற்றினை மாதவி வாழ்த்திப் பாடும் கானல் வரிப் பாடலானது, காவேரியைப் பெண்ணாக உருவகித்து, அந்தப் பெண் மகிழ்ந்து துள்ளித்திரிந்து இன்பமுற்றிருக்கக் காரணம் மன்னனின் ஆட்சிச் சிறப்பே என்பதாக அமைகிறது(சிலம்பு.7: 25-29; சிலம்பு.7: 29-32). மேலும், அரிய வலிமையுடைய அரசர் செங்கோல் முறைப்படி ஆட்சி செய்தாலன்றிப் பெரும் புகழ் மகளிர்க்குக் கற்பு நிலை சிறப்புறாது என்பதை,

*அருந்திறல் அரசர் முறைசெயின் அல்லது*
*பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது*
(சிலம்பு.28:207—208)

என்ற அடிகளில் வலியுறுத்துகிறார்.

பெண்களின் தேவைகளை நிறைவு செய்து, அவர்களின் நலன் பேணி, அவர்களையும் சமுதாய வளர்ச்சியில் பங்கு பெறச் செய்தல் என்பது, வளரும் நாடுகளின் இன்றியமையாத தேவையாகிறது. மக்கள்வளம் என்பதன் அடிப்படையே பால்-இன-மத-வயது-பொருளாதார வேறுபாடு இன்றி அனைவரையும் சமநிலையில் கருதுதல் என்பதில்தான் உள்ளது. பெண்களைச் சிறப்பு செய்தல் வேண்டும் என்ற இளங்கோவின் நோக்கமே சிலப்பதிகாரம் தோன்ற வழிவகுத்தது. பெண்களைப் பேணும் இவ்வகைக் கடமைகளில் பழந்தமிழ் மன்னர் கவனம் செலுத்தியதையும், எதிரிநாட்டிலிருந்து அடிமைகளாகக் கொண்டுவரப்பட்ட பெண்களாயினும், அவர்களையும் தம்நாட்டு குடிமக்களுக்கு உண்டான அனைத்து வகை உரிமைகளோடு பேணிப் பாதுகாத்ததையும் அகநானூறும் (அகம்.307:6-10) காட்டுகிறது .

## ஆளுமைத் திறன்

ஆளுமைத் திறன் என்பது, நிறுவனத்தை மையமாகக் கொண்டதாக இன்று வழங்கப்பட்டாலும் சமூகக் காரணியாகச் சுட்டப்படும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தேவையான, பொதுவான ஒன்றாகும். தனிமனிதனின் ஒவ்வொரு செயல்பாட்டிலும், அணுகுமுறையிலும் வெளிப்படுத்த, கடைப்பிடிக்கத்

தேவையான பண்பு நெறியே ஆளுமைத் திறன் எனப்படுகிறது. ஆளுமைத் திறன் நம் எண்ணம், பேச்சு, நடத்தை, பழக்கம், கட்டுப்பாடு, ஆரோக்கியம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியது. இது குடும்பம், உறவுகள், தொழிற்படு இடங்கள், சமூகம் என அனைத்து நிலைகளிலும் எதிரொலிக்கிறது. குறிப்பாக, நிறுவன அமைப்பில், அதன் நிர்வாகத் தலைமைக்கு இருக்க வேண்டிய முதன்மை குணங்களாக ஆளுமைப் பண்புகள் சுட்டப்படுகின்றன. இன்றைய இளைஞர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கு மூல காரணமாக ஆளுமைத் திறன் அவர்களிடத்து குறைந்துள்ளதே காரணம் என அறிவுறுத்தப்படுகிறது. இந்நிலையில், சங்க இலக்கியங்களில் தனிமனிதர், குடும்பத் தலைமை, சமூகத் தலைமை என அவரவர் தன்மைக்கும் பொறுப்பிற்கும் ஏற்ப ஆளுமைப் பண்புகள் வலியுறுத்தப்பட்டன.

### தனிமனித ஆளுமைத் திறன்

'ஒரு தேசத்தின் முன்னேற்றம் என்பது, அந்நாட்டு மக்கள் எவ்விதம் சிந்திக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே அமையும். சிந்தனைகளே செயல்பாடுகளாக உருமாறுகின்றன' (இந்தியா 2020, ப.186) என்பார் அ.ப.ஜெ. அப்துல் கலாம். இக்கருத்து, ஒரு குறிப்பிட்ட சமூகம் அல்லது நாடு என்றில்லாமல், உலகின் எந்தவொரு நாட்டிற்கும், சமூகத்திற்கும் ஏற்புடையதாகும். எந்தவொரு சிந்தனையும், திட்டமும் மக்கள் ஒத்துழைப்பின்றி செயலாக்கம் பெறுதல் கடினமாகிறது. மனிதன், ஒரு குடும்பம், குழு, அரசு போன்றவற்றில் இணைந்தே செயல்படுகின்றான். சமுதாயம் தனிமனிதனைச் சமுதாய உறுப்பினனாக்கப் பெருமளவிற்குத் தொண்டு புரிகின்றது. பொதுவாகச் சமூக இயல்பு தனிமனிதன் இயல்பு ஆகிய இரண்டும் ஒருங்கே வளர்கின்றன (சமூகவியல், ப.64). எனவேதான் சமூக அமைப்பிலிருந்து விலகி நிற்க முயலும் தனிமனிதனையும் சமூகத்தோடு இணைக்கும் கருத்தாக்கங்களும் பழந்தமிழகத்தில் வெளிப்பட்டு நிற்கின்றன.

### பண்புகள்

ஒரு நாட்டின் நில அமைப்போ, இயற்கையில் அமையப்பெற்ற வளங்களோ அந்நாட்டை நல்லநாடாக முன்னெடுத்துச் செல்வதில்லை. அந்நாட்டில் வாழும் மனிதச் செயல்களே அச்சமூகத்தை முன்னேற்றுகின்றன என்பதை,

*நாடா கொன்றோ காடா கொன்றோ*
*அவலா கொன்றோ மிசையோ கொன்றோ*

*எவ்வழி நல்லவர் ஆடவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே* (புறம். 187)

என்று வலியுறுத்துவார் ஔவையார். தனிமனிதன் எதிர்கொள்ளும் இன்ப துன்பங்களுக்குச் சமூகமோ, பிறரோ காரணமன்று; அவன் செயல்களே காரணிகளாகின்றன என்று கணியன் பூங்குன்றனாரும் கூறுகிறார். இதனை,

*தீதும் நன்றும் பிறர்தர வாரா*
*நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன* (புறம்.192:3,4)

என்பதில் அறியலாம். எனவே, நீதியும், நட்பும், இழிசெயல் விலக்கலாகிய நாணும், பிறர்க்கும் தமக்கும் பயன்படும் திறமாகிய பயனும், நற்குணங்கள் நிறைந்த பண்பும், பிறர் தன்மை அறிந்து ஒழுகும் பாடும் ஆகிய ஆறு பண்புகளைத் தனிமனித ஒழுக்கங்களாக அற்றைச் சமூகம் அறிவுறுத்தியது. இதனை,

*நயனும் நண்பும் நாணு நன்கு உடைமையும்*
*பயனும் பண்பும் பாடு அறிந்து ஒழுகலும்* (நற்.160:1–2)

என்கிறது இலக்கியம்.

**தனிமனித ஒழுக்கம்**

சமூகத்தின் முதன்மைக் காரணியாகத் திகழும் தனிமனிதரின் ஒழுக்கம் மிகவும் போற்றப்பட்டது. அறிவு, வீரம், கொடை போன்ற எக்காரணத்தைக் கொண்டு புகழ் ஈட்டினாலும் அது ஒழுக்கத்தைக் கொண்டே மதிப்புபெற்றது. ஒழுக்கமில்லா எப்புகழும் போற்றப்படவில்லை. எனவே, ஒழுக்கக் கேட்டால் அழியும் புகழை யாராலும் சீர்செய்ய இயலாது என்று அறிவுறுத்தப் பட்டது (குறிஞ்சி.13-18).

மேலும், மனிதப்பண்புகளை மற்றை எல்லாவற்றிலும் உயர்வாக மதித்த நிலையினைப் பழந்தமிழ்ப் பாடல்கள் காட்டு கின்றன. தனி வாழ்க்கையில் அறக்கோணல் ஏற்படுமாயின், அது சமுதாயத்திற்கு ஊறு பயக்குமென்ற நம்பிக்கை அக்காலத்தி லிருந்தது. தம் பெற்றோர், தன்னை நொதுமலர்க்கு வரைந்தால் அவ்வறமில் செயலால் வள்ளியும் கிழங்கு கீழ்வீழா; மலைமிசைத் தேனுந்தொடா என்று எண்ணுகிறாள் தலைமகள் (கலி.39:11-14). இதனால், தனிமனித வாழ்க்கைக்கும் சமூகத்திற்குமான பிணைப்பு அறியப்பெறும்.

தனிமனிதப் பயனோடு, சமூகப் பயனையும் பழந்தமிழ்ச் சமூகம் முன்னிறுத்தியது. எல்லோரையும் ஒன்றுகூட்டி, சமூக முன்னேற்றத்தை அடைய திட்டமிட்டது. இந்த அறைகூவலே,

*'யாதும் ஊரே, யாவரும் கேளிர்'* *(புறம்.192:1)*

என்று கணியன் பூங்குன்றனாரின் கூற்றுவழி வெளிப்பட்டு நின்றது.

வாழ்க்கையில் பொருள் தேடலும், இன்பம் துய்த்தலும் அறத்தின் வழி செய்யப்பெறல் வேண்டும் என்ற குறிக்கோளை அற்றைச் சமூகம் கொண்டிருந்தது(புறம்.1-2). தமக்கு வரும் பயன்பாடு கருதாது, பிற உயிர்க்கு விளையும் நன்மை கருதுதலே அறத்தின் அடிப்படை. பயன்மரமும் ஊருணியும் மருந்து மரமும் போல, செல்வத்துப் பயனே ஈதலெனை வாழ்ந்தோரையும் வலியுறுத்தியோரையும் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. முல்லைக்குத் தேரீந்தவனும், மயிலுக்குப் போர்வையளித்தவனும், மது அருந்தும் வண்டுகள் அஞ்சி ஓடுமே என்று தேரின் மணியினை ஓசை எழுப்பாமல் இழுத்துக் கட்டியவனும் அஃறிணைக்கும் அறம் செய்த அறவோர்களாக காட்சியளிக்கின்றன. கொடையறம் என்பது இரக்கத்தையும், புகழ் வேட்கையுமே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இம்மைச் செய்தன மறுமைக்காகும் என்ற நோக்கம் இதற்குக் காரணமாகவில்லை.

*'செய்குவம் கொல்லோ நல்வினை'* *(புறம்.214)*

என்று இம்மையில் அறத்தை முன்னிறுத்தியது பழந்தமிழ்ச் சமூகம். புகழுக்குத் தலை நிமிர்தலும், பழிக்குத் தலையிறைஞ்சுதலும் சான்றோர் இயற்கைப் பண்புகள். பழி படர்ந்த நெறியில் செல்லாமையும், பழியொடு வரும் செல்வம் வெஃகாமையும், செல்நெறி, குறிக்கோள் இரண்டிலும் பண்டைச் சான்றோர் தூய தன்மை உடையவராயிருந்தார். 'பழியெனில் உலகு உடன் பெறினும் கொள்ளல'ராகவும் (புறம்.182.5),

*'கழியக் காதலர் ஆயினும்,*
*சான்றோர் பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்* *(புறம்.112:11–12)*

எனத் தம் திறத்தில் உறுதியாயிருந்தனர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலே வீடுபேறு நல்குமெனக் கருதினர். தத்தம் கடமையைப் புறக்கணியாது செய்வோர்க்குத் தொய்யா நல்லிசைத் துறக்கம் வந்தெய்தும் என்ற கருத்து அக்காலத்துச் சான்றோரால் பரப்பப்பட்டது. பேரெயின்

முறுவலார், நம்பிநெடுஞ்செழியன் இறந்தபோது 'அவன் செய்ப எல்லாம் செய்தனன், ஆதலின் அவனை வாளான் அடுக அல்லது சுடுக. யாது வேண்டுமானாலும் செய்க' என்று பொருள்படப் புகழ்வார்(புறம்.239). மற்றவர்க்கு ஏற்படும் துன்பத்தைக் கண்டால் நல்லோர், தாங்கள் பிறரே ஆனாலும் வருந்தி அத்துன்பத்தைப் போக்க முயல்வர். தமக்கு உற்ற துன்பத்தைத் தமக்குப் பெரிதாய்க் கொள்ளாமல் அதனை எளிதாகக் கொள்ளும் இயல்பினராய் இருந்தனர்(அகம்.382:1-2).

**வினையை உயிரெனப் போற்றுதல்**

தன் முயற்சியால் உழைத்துப் பொருள் தேடலை வற்புறுத்தும் இடங்கள் இலக்கியத்தில் பல உண்டு(புறம் 160:1-5, அகம் 29, நற் 110:10,11). பெற்றோரின் இல்லத்தையே பிறரின் இல்லம் எனப் பழித்து, பொருள் தேட அறிவுறுத்தலையும் காணமுடிகிறது.

*'பிறர் செய்த இல்லிருப்பாய்'* (கலி.111:10)

என்று பெற்றோரை நம்பிப் பிழைப்போனைப் பகடி செய்கிறது இலக்கியம். கணவன் வறுமையிலிருப்பினும், தன் பெற்றோரின் கொழுஞ் செல்வத்தில் ஒரு சிறு பகுதியும் எதிர் நோக்காத தலைவியின் வழியே, முயன்று வாழ வேண்டுமென்ற அறக்கோட்பாட்டைக் காணலாம் (குறு.295, அகம் 93:1-7). அதேபோல, 'எலி முயன்றனை யராகி' வாழும் வாழ்வை வெறுத்தனர் (புறம்.160:3). புலிபோல் தம் முயற்சியால் கிட்டும் செல்வத்தைப் போற்றினர். 'வினையே ஆடவர்க்கு உயிர்'(குறு.135:1) என்றும் வலியுறுத்தினர். சமூகத்தில் அவரவர் கடமையில் பிறழாமல், தத்தம் உழைப்பால் உயர்வு பெற அறிவுறுத்தப்பட்டனர்.

*'தமது செய் வாழ்க்கையின் இனியது உண்டோ'* (நற்.130:5)

என, தம் தேவையைத் தாமே உழைத்து நிறைவேற்றிக் கொள்ளும் வினை ஆளுமை போற்றப்பட்டது.

இவ்வினையாற்றல் தற்சார்பு நிலையிலிருந்து சமூகச் சார்பிற்குக் கொண்டுசெல்லப்பட்டது. பிறர்க்காக மேற்கொள்ளும் வினையே உயர்ந்ததாக மொழியப்பட்டது (நற்.186:8). பிறர்க்காக வினை மேற்செல்லவும், தம்மிடம் இயல்பாக உள்ளதைப் பிறர்க்கு வழங்கவும் தனிமனித இயல்பு உயர்த்தப்பட்டது. தம்மைச் சுற்றி இருப்போரின் துயர்

களையப் பயன்படும் செல்வமே உண்மையான செல்வம் எனச் சிறப்பிக்கப்பட்டது(நற்.210:5-9).

### வாழ்வின் பயன் சமூக நோக்கே

தனக்கும் தன் மனைவி மக்களுக்கென்றும் வாழ்ந்த தனி வாழ்க்கையிலிருந்து, ஊரும் நாடும் சமூகமும் தன்னால் பயன் பெறற்குரிய ஒரு வாழ்வை மேற்கொள்ளும் நிலையைக் கோப்பெருஞ்சோழன்-பொத்தியார் பாடல்கள் காட்டுகின்றன (புறம். 214, 216, 220, 221, 222, 223). தனக்கென முயலாமல், பிறர்க்கென முயலும் சான்றோர் சங்கச் சமுதாயத்தில் இருந்தனர். ஊரமைதிக்கு அத்தகு ஆன்றவிந்த கொள்கைச் சான்றோரே காரணமென்பார் பிசிராந்தையார் (புறம்.191).

*நல்லிசை வேட்ட நயனுடை*
*நெஞ்சின் கடப்பாட்டாளன்* (குறு.143–45)

என்று பொருளைப் பூட்டி வைக்காது பிறர்க்குதவும் தன்மை கூறப்பெறும். இரப்போரின் கை நிறைய மகிழ்ச்சியோடு விரைந்து பொருள்களை அளிப்பதற்காகவே செல்வத்தை ஈட்ட வேண்டும் என்பது சமூகக் கோட்பாடாக மொழியப்பட்டது. எனவேதான், 'செல்வத்துப் பயனே ஈதல்' (அகம்.389, புறம்.189) என்கிறார் நக்கீரர். மேலும், இரப்பவர் கை நிறைய தந்து மகிழவே பொருள்தேடச் செல்வார் ஆடவர் என்றும் குறிப்பார் (அகம்.389). அதேபோல,

*பிறர்க்கென முயலும் பேரருள் நெஞ்சமொடு*
*காமர் பொருட்பிணி போகிய*
*நாமவெங் காதலர் சென்ற வாறே* (நற்.186:8–11)

என்பதில், பொருளீட்டுவதற்குக் காரணம் பிறர்க்கு உதவ வேண்டுமென்பதே என்பார் நற்றிணைப் புலவரும். காட்டுவழிச் செல்வாரை அழைத்து 'யாம் குறமகளிர்; கல்லகத்தது எம் ஊர்; நீவிர் இங்குத் தங்கி நறவுண்டு குரவையாட்டம் கண்டு பின்னர்ச் செல்க' என விருந்தோம்பும் பண்பு எளிய மக்களிடத்தும் இயல்பாக அமைந்தது காட்டப்பெறும் (நற்.276:5-10). சமூகத்தில் வறுமையைத் துடைத்தற்கு ஒவ்வொருவரின் கொடைப்பண்பும் உதவியாக அமைந்தது. பழிக்கு நாணுதல், பொய்கூற உடன்படாமை, அஃறிணை உயிர்களும் கொலைப்படக்கூடாது

என்னும் அருளுணர்ச்சி, மரம் பட்டுப்போகுமாறு அதனிடத்துப் பயன்கொள்ள மனமில்லா இரக்கப் பண்பு, சிறுதவறும் நேராதவாறு நட்பினைப் பாதுகாத்தல், உள்ளம் விழைந்தவழி எல்லாம் ஒழுகாது அதனைக் கட்டியாளும் திறம் போன்ற சான்றாண்மைப் பண்புகள் அவரவர் குடிகாத்ததோடு மட்டுமன்றிச் சமூக நெறியையும் வகுத்தன. மேலும், இப்பண்புகள் ஆளுமைத் தன்மைக்கு அடையாளங்களாயின.

**நல்வினையின் விளைவும் தீவினையின் தீதும்**

ஒருவன் நன்மை செய்தால் அவனுக்கு நன்மையும், தீமை செய்தால் தீமையும் விளையுமெனச் சுட்டிய சான்றோர், அதன்வழிச் சமூகத்தை நெறிப்படுத்த முயன்றனர். இதனால், தனிமனித ஒழுக்கம் தவறுதல் சமூகக் குற்றமாகக் கருதப்பட்டது. இவ்வகை நன்னெறியினின்று விலகுவோரிடமிருந்து சமுதாயம் விலகி நிற்கவும் துணிந்தது. இவ்வகைக் குணத்தாரிடம் சேர்தல் தகாது என்பதை,

*நல்லதன் நலனும் தீயதன் தீமையும்*
*இல்லை என்போர்க்கு இனன் ஆகிலியர்* (புறம்.29:11–12)

எனச் சுட்டுகிறது இலக்கியம். தீமை புரிந்தால் அவருக்கு மட்டுமல்லாது சமுதாயத்திற்கும் துன்பம் வந்து சூழும் என்பதை,

*வள்ளி கீழ் விழா வரைமிசைத்தேன் தொடா*
*கொல்லை குரல் வாங்கி ஈனா மலைவாழ்நர்*
*அல்ல புரிந்து ஒழுகலான்* (கலி.39:12–14)

என்ற அடிகளில் அறியலாம். ஒருவன், தன் வாழ்நாளில் அறம், பொருள், இன்பம் தருவதற்கு ஏதுவான செயல்களையே செய்தல் வேண்டும். ஒருவனுக்கு நல்வினைதான், அவன் துன்பத்தில் உழலும் காலத்தில் கை கொடுத்து உதவுவது (புறம்.213:20-24) என வலியுறுத்தப்பட்டது. இம்மைக்கும் மறுமைக்கும் வாழ்வுதரும் நல்வினையை ஒருவரால் செய்ய இயலாது போயினும், தீமை செய்யாது ஒழிதல் பேரறமென்று வலியுறுத்தப்பட்டது. தீங்கின்றி வாழ்ந்தால் உலகத்தோர் மகிழ்வர். நல்ல வழிக்குக் கொண்டு செல்லும் ஒரு தூண்டுதலும் தீவினை செய்யாமையேயாகும். எனவே,

*நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்*
*அல்லது செய்தல் ஓம்புமின்*

*நல் ஆற்றுப்படூஉம் நெறியுமார் அதுவே* (புறம்.195:6–9)

என்று அறிவுரை கூறுகிறார் நரிவெரூஉத்தலையார். இவ்வகை அறநெறிக்குட்பட்ட வாழ்க்கை முறையால், ஒழுக்க நெறியால் சமூகத்தை மேம்படுத்தவும், தனிமனித ஒழுக்கத்தைப் பேணவும் சமூகக் கட்டுப்பாடுகளையும், நன்னெறிகளையும் பழந்தமிழ்ச் சான்றோர் வகுத்தனர். அதில் வெற்றியும் பெற்றனர். இவ்வகைத் தனி மனித ஒழுங்கிலும், வினைத் தேட்டத்திலும் சமூகம் கட்டமைக்கப்பட்டது.

இதன்வழி, சங்க இலக்கியங்களில் தனிமனித ஆளுமைக்குத் தேவையான பண்புகள், தவிர்க்க வேண்டிய பண்புகள், சமூக நலன் நோக்கிய தனிமனித ஒழுங்கு, அறநெறிக்குட்பட்ட வாழ்க்கை முறை, தன்முயற்சியால் வாழ்தல், சமூக வறுமை நோக்கிய தனிமனிதப் பொருளாக்கம், தீவினைக்கு அஞ்சுதல், உயிரிரக்கம் ஆகியவை சிறப்பிடம் பெற்றிருந்ததை அறிய முடிகிறது.

மேற்குறிப்பிட்ட இப்பண்புகளிலும், செயல்பாடுகளிலும் பால் வேறுபாடு சுட்டப்படவில்லை. 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்பதிலும், வீட்டையும், ஊரையும், நாட்டையும் பிரிந்து, வெளியில் தங்கி பொருள் தேடும் முயற்சியே ஆடவர்க்கென தனியே சுட்டப்பட்டது தெளிவாகிறது. ஆனால், பொருள் தேட்டம் என்பதும், குடும்ப, சமூக முன்னேற்றம் என்பதும் இருபாலரும் இணைந்த செயல்பாடுகளாகவே காணப்படுகின்றன. இதில், முல்லை நிலத்து ஆயர் பெண்களும், உப்பு விற்கும் உமணப் பெண்களும், மீன் விற்கும் பரதவப் பெண்களும் முன்னிலை பெறுகின்றனர். அதேபோல, விருந்தோம்பல், கொடை, போன்றவற்றில் மகளிரின் செயற்பாடு போற்றுதற்குரியதாய் அமைகிறது. இவ்வகைச் செயல்பாடுகளின் பெருக்கமே ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தில் முக்கிய அளவுகோலாகிறது என்பது தெளிவு. இவ்வகைத் தனிமனித ஆளுமை பண்புடைய சமூகமே தாமும் முன்னேறி, பிற சமூகத்தையும் முன்னேற்றவும், வழிநடத்தவும் ஆற்றல் பெற்றதாகத் திகழ்கின்றது.

# பழந்தமிழின் மருத்துவ முறைகளும் உடல்நல மேலாண்மையும்

உலகில் அதிக மக்கள்தொகையைக் கொண்டிருக்கக் கூடிய நாடுகளின் தரவரிசையில் இந்தியா இரண்டாவது இடத்தில் இருக்கிறது என்பதும், முதல் இடத்தை அடைவதற்கான காலம் வெகுதொலைவில் இல்லை என்பதும் அறிந்ததே. 'மக்கள் தொகைப் பெருக்கம்' என்பது, மனிதவள 'மூலதனமாக' அமைவதும் அடிப்படைத் தேவைகளின் பற்றாக்குறைக்கான 'காரணியாக' மாறுவதும் அரசு மேற்கொள்ளும் 'மனிதவள மேலாண்மை' திட்டங்களைப் பொறுத்தே அமைகிறது. மனிதவள மேலாண்மை என்பது, அடிப்படைத் தேவைகளின் நிறைவு, சுகாதாரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. இவற்றுள் அடிப்படைத் தேவைகள் என்பதை உணவு, உடை, உறையுள் ஆகியவற்றின் தன்னிறைவு என்று கொண்டால், சுகாதாரம் என்பது நாட்டின் சுற்றுச்சூழல் மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவற்றை அடியொற்றியதாக அமைகின்றது. எனவேதான், மனித ஆற்றலை நம்பியிருக்கிற இந்தியா போன்ற வளரும் நாடுகளில் மருத்துவப் பயன்பாடும் மருத்துவத் தொழில்நுட்பமும் இன்றியமையாத தாகின்றன. 'குடியரசுத் தலைவருக்குக் கிடைக்கும் மருத்துவ வசதிகள் கிராமத்துக் குடிமகனுக்கும் கிடைக்க வேண்டும்' என்ற முன்னாள் மத்திய சுகாதாரத்துறை அமைச்சரின் கூற்று இங்கு எண்ணத்தக்கது. இது, நம் நாட்டில் மருத்துவம் அனைவருக்கும் பொதுமையாக்கப்படவில்லை என்பதையும், மருத்துவ வசதிகள் அனைவரையும் முறையாக எட்டவில்லை என்பதையும் காட்டுகிறது. மேலும், மருத்துவத்துறையிலும், மக்கள் உடல்நலப் பாதுகாப்பிலும் நாம் கடக்கவேண்டியது நெடுந்தொலைவு என்பதையும் சுட்டுகிறது.

இந்நிலையில், மருத்துவத்துறையில் தீய விளைவுகளை ஏற்படுத்தாத நவீனத்தைக் கைகொள்கிற அதேவேளையில், மரபுசார்ந்த மருத்துவ அறிவினையும் தொழில்நுட்பங்களையும் மீட்டுருவாக்கம் செய்தல் கட்டாயத் தேவைகளாகின்றன. அனைவருக்குமான எளிய மருத்துவம் என்பதில் இது முதன்மை

பெறுகிறது. அவ்வகையில், பழந்தமிழகத்தில் மருத்துவ முறைகள், மருந்துப்பொருட்கள், மருத்துவர், உடல் நலத்திற்கான வாழ்வியல் நெறிகள் ஆகியன குறித்துப் பழந்தமிழ் நூல்களின்வழி காண்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

### மருத்துவ முறைகள்

உடல்-மனம் இரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையது; ஒன்றின் நிலை மற்றொன்றைப் பாதிக்கும் தன்மையுடையது என்பதைப் பண்டைத் தமிழர் நன்கு அறிந்திருந்தனர். உடல்நலம், மனநலம் என இரு நிலைகளிலும் தங்கள் கருத்தைச் செலுத்தினர். எனவே, வளமான வாழ்விற்கு மனநல மேலாண்மையும், உடல்நல மேலாண்மையும் போற்றப்பட்டது. உடல்நல மேலாண்மையில், இயற்கை மருத்துவம் (அ) கை மருத்துவம், இசை மருத்துவம், நுண் மருத்துவம் (தொழில்நுட்பம் சார்ந்தது) போன்ற மருத்துவ முறைகளும் நோய்வராமல் காக்கும் உடல்நல மேலாண்மை செயல்பாடுகளும் அறியப்படுகின்றன. மனவள மேம்பாட்டிற்கான முறைகளாக தேற்றுதல், ஆற்றுப்படுத்துதல், சந்துசெய்வித்தல், வெறியாட்டுதல் போன்றவை இனங்காணப்படுகின்றன. இவற்றுள், உடல் நலத்திற்கான மருத்துவ முறைகள் குறித்து மட்டும் இங்கு நோக்கப்படுகின்றது.

### இயற்கை மருத்துவம் (அ) கை மருத்துவம்

இயற்கை மருத்துவம் (அ) கை மருத்துவம் என்பது, இயற்கையாக எளிதில் கிடைக்கக் கூடிய மருந்துப் பொருட்களைப் பயன்படுத்தி செய்யப்படுவது. இவ்வகை மருத்துவ முறைகள், வீட்டில் பெண்கள் முதல் அனைவராலும் எளிதில் கையாளப்பட்டு வந்ததால் இது 'கை மருத்துவ'மாக கொள்ளப்படுகிறது. வேம்பைப் பயன்படுத்துதல், ஐயவி புகைத்தல், அத்திப்பாலினைப் பூசுதல் போன்றவை இவ்வகை மருத்துவ முறைகளுள் அடங்கும்.

### வேம்பு

பழந்தமிழரின் இயற்கை மருத்துவத்தில் முதன்மை இடத்தினைப் பெற்ற பொருள் 'வேம்பு'. இது, தமிழர் வாழ்விலும் வழிபாட்டிலும் கலந்து, தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்ட புனித மருந்துப் பொருளாகும்.

'வேம்பும், கடுவும் தமிழரின் ஆதி மருந்துகளாக, கற்ப மருந்துகளாகத் திகழ்ந்தன' என்பார் முனைவர் வே.நெடுஞ்செழியன்

(தமிழர் கண்ட தாவரவியல் பக்.50). வேம்பு ஒரு கிருமிநாசினி என்பது இன்று நவீன மருத்துவத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. கிருமிகள் மூலம் பரவக்கூடிய நோய்களைத் தடுக்கும் ஆற்றல் வேம்பிற்கு உண்டு. இன்றும் கிராமங்களில் நோய் வாய்ப்பட்டாலோ, அம்மை போன்றவை ஏற்பட்டாலோ, தொற்றுநோய் அறிகுறிகள் தென்பட்டாலோ நோய்த் தடுப்பு முறையாக, மனையையும் மனையைச் சுற்றியுள்ள பகுதிகளையும் தூய்மைப்படுத்தி, வேம்பின் இலைகளை அரைத்து மஞ்சள் போன்றவற்றுடன் கலந்து தெளிப்பதைக் காண்கிறோம். மேலும், வெளிப்புறமிருந்து நோய்க்கிருமிகள் மனைக்குள் புகாமல் பாதுகாக்கும் பொருட்டு, மனையின் முகப்பில் வேம்பின் தழைகள் கொத்தாகச் செருகியும் வைக்கப்படுகின்றன. பழந்தமிழர் மருத்துவ முறைகளின் தொடர்ச்சியாகவே இச்செயல் பாடுகள் அமைவதைக் காண முடிகிறது. மருத்துவத்திற்கு வேம்பு பயன்படுத்தப்பட்டதை,

*––– ––– வேம்புசினை ஒடிப்பவும்* (296:1)

என்றும், வீட்டின் முகப்பில் வேம்பு செருகி இருந்ததை,

*தீங்கனி இரவமொடு வேம்பு மனைச் செரீஇ* (281:1)

என்றும் சுட்டுகிறது புறநானூறு. 'இனிப்பான பழங்களைத் தரும் இரவ மரத்தின் தழையுடன் வேப்பிலைகளையும் வீட்டில் செருகி...' என்று இதற்குப் பொருளுரைக்கப்படுகிறது.

வீட்டின் முற்றத்திலும், பலர் கூடுகின்ற பொது மன்றங்களிலும் வேம்பினை வளர்த்தல் உடல் நலத்திற்கு நன்மை பயக்கக்கூடியது. பலர்வந்து கூடுகின்றபோது நோய்வாய்ப்பட்டோரிடமிருந்து கிருமிகள் பிறருக்கும் பரவ வாய்ப்புகள் உள்ளன. வேம்பு கிருமிநாசினி ஆதலால் இச்செயல்பாடு கட்டுப்படுத்தப்படும். அதனாலேயே சங்ககாலத்தில் பலர் கூடுகின்ற ஊர்ப் பொதுமன்றங்களில் வேம்புகள் வளர்க்கப்பட்டுள்ளன. இதனை,

*மன்ற வேம்பின் மாச்சினை ஒண்டளிர்* (76:4)
*மன்ற வேம்பின் ஒண்குழை மலைத்து* (79:2)
*மன்ற வேம்பின் ஒண்பூ வுறைப்ப* (371:7)

என்று புறநானூறு காட்டுகின்றது.

வேம்பின் இலை, பட்டை, விதையிலுள்ள தைலம் போன்றவை பலவகையான பாக்டீரியாக்களைக் கட்டுப்படுத்தும் திறன் உள்ளவை எனவும், ஸ்டெப்டொமைசின் (Streptomycin) போன்ற

மருந்துக்கும் கட்டுப்படாத காசநோய்க் கிருமிகள் வேப்ப எண்ணெய்க்குக் கட்டுப்படுவதாகவும் இன்றைய ஆய்வு அறிக்கைகள் சொல்கின்றன. லக்னோவிலுள்ள கிங் ஜார்ஜ் மருத்துவக் கல்லூரியில் செய்த ஆய்வின் மூலம் வேப்பிலை பலவித தோல் நோய்களையும் கட்டுப்படுத்துவதோடு, குடல் புழுக்களையும் அகற்றும் ஆற்றல் உள்ளது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. வேப்பிலையிலுள்ள குயிர் சிடின் என்னும் சத்து, பாக்டீரியாக்களைக் கட்டுப்படுத்தும் தன்மை உள்ளது என்று தற்காலத்தில் கண்டறியப் பட்டுள்ளது. அதேவேளையில், வேம்பின் இம் மருத்துவக் குணங்களையும், மருத்துவ முறைகளையும் பன்னெடுங்காலத்திற்கு முன்பே தமிழர் அறிந்திருந்தனர். மரபுவழி பெற்ற மருத்துவ அறிவால், கிராமங்களில் இன்றும் குடற் புழுக்களை அழிக்க வேப்பம் பட்டைச் சாறு அருந்தப்படுவதைக் காணலாம்.

வேம்பையும் கடுகையும் பற்றிக் குறிப்பிடுமிடத்து,

*வேம்பும் கடுவும் போல வெஞ் சொல்* (தொல்.1369)

என்கிறது தொல்காப்பியம். இந்நூற்பாவிற்கு, 'முற்பருவத்துக் கைத்துப் பிற்பருவத்து உறுதி பயக்கும் வேம்பும் கடுவும் போல வெய்யவாய சொல்லினைத் தடையின்றிப் பிற்பயக்குமெனக் கருதிப் பாதுகாத்து' என்று பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் உரை வகுக்கின்றனர்.

**ஐயவி**

வேம்பு, கடுகு போலவே ஐயவி(வெண்சிறுகடுகு) என்ற பொருளையும் காயம்பட்ட வீரர்களைக் குணப்படுத்தும் மருந்தாகப் பயன்படுத்தியதைக் காணமுடிகிறது. ஐயவியிலிருந்து புகையினை உண்டாக்கி நோய் எதிர்ப்புப் பொருளாகப் பயன்படுத்தியுள்ளனர். இச்செயல்பாடுகளை,

*நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்* (புறம்.296:2)

என்றும், 'ஐயவி சிதறி'(புறம்.281:4) என்றும் இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. மேலும், ஐயவி பற்றிய செய்திகளைப் பழந்தமிழ் இலக்கியங்களின் பல பாடல்கள் பதிவுசெய்துள்ளதைக் காணமுடிகிறது.

**மிளகு**

வேம்பு, வெண்சிறுகடுகு, இரவம் போல, மிளகும் மிகச்சிறந்த மருந்துப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்திலிருந்து

ஏற்றுமதி செய்யப்பட்ட மருந்துப் பொருட்களில் மிளகு முதலிடம் பெறுகிறது.

*யவனர் தந்த வினைமான் நன்கலம்*
*பொன்னொடு வந்து கறியொடு பெயரும்*
*வளங்கெழு முசிறி* (149:9–11)

என்கிறது அகநானூறு. யவனர்கள், அழகிய வேலைப் பாடமைந்த கலங்களில் பொன்னைக் கொண்டுவந்து கொடுத்து, அதற்கு ஈடாக மிளகினைப் பெற்றுச் சென்றதை இப்பாடலடிகள் காட்டுகின்றன. மிளகின் மருத்துவ குணங்களை யவனர்கள் அறிந்ததாலேயே பண்டமாற்றில் பொன்னிற்கு ஈடாக மிளகைப் பெற்றனர் என்பது தெளிவு.

தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட மருந்துப் பொருட்களைக் குறிப்பிடுமிடத்து, 'பழந்தமிழ்ப் பட்டினத் துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதியான பொருள்களில் குறிப்பாக, இலவங்கம், மிளகு, இஞ்சி, அரிசி, ஏலம், தேக்கு, கருங்காலி, நூக்கு, சந்தனம், யானைத்தந்தம் போன்றவை குறிப்பிடத் தகுந்தவை. இவற்றுள் மிளகு, இஞ்சி ஆகிய இரண்டும் மருந்துப் பொருள்கள். மருந்துக்கென்றே பெறப் பெற்றவை. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த 'இப்போ கிரேசு' (Hippocrates) என்ற புகழ் பெற்ற கிரேக்க மருத்துவர் இந்திய மருத்துவ முறைகளையும், மருந்து வகைகளையும் கையாண்டு வந்துள்ளார். மிளகை 'இந்திய மருந்து' என்றே குறிப்பிட்டிருக்கிறார். பண்டைய தமிழர் உணவுப் பொருள்களில் ஒன்றான நல்லெண்ணெயின் பயனையும் அவர் அறிந்திருக்கிறார்' என்கிறார் முனைவர் இரா வாசுதேவன் (தமிழில் மருத்துவ இலக்கியங்கள்). இவற்றின்வழி, தமிழக மருந்துப் பொருள்கள் உலகப் புகழ் பெற்றவையாகத் திகழ்ந்ததையும், ஏற்றுமதி வணிகத்தில் முக்கியப் பொருள்களாகி, பண்டமாற்று முறையில் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்ததையும் அறியமுடிகிறது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகிய மூன்றும் மருந்துகளின் பெயர்களால் தலைப்பினைப் பெற்றிருப்பது சிறப்பு. மேலும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பலவற்றிலும் உடல் நலம் குறித்த கருத்துகளும், மருந்து, மருத்துவர், நோய்கள் குறித்த செய்திகளும் காணப்படுகின்றன. உடல்நலக் குறைவு மனநலத்தையும் பாதிக்கும் என்பதால் உடல் நலத்தைப் பேணவேண்டியதன் தேவை வலியுறுத்தப்பட்டது.

உடலின்கண் மூப்பு தோன்றின் இளமை நலம் கெடும் என்பதை,

*––– ––– மெய்த்தாக*
*மூத்தல் இறுவாய்த்த* (நான்.19:1–2)

என்று அறிவுறுத்தினர். மேலும், குழந்தைகளுக்கு நோய் வந்தால் மிகுந்த துன்பத்தைக் கொடுக்கும் என்பதை,

*குழவிகள் உற்ற பிணி இன்னா* (இன்னா.35:3)

என்று சுட்டினர்.

*பொய் சிதைக்கும் பொன்போலும் மேனியை* (நான்.23:2)

என்று, தீய ஒழுக்கத்தினால் ஏற்படும் நோய்(உடற்தேய்வு நோய்) பொன் போன்ற அழகிய மேனியைச் சிதைக்கும் என்று எச்சரிக்கப் பட்டது. இந்நோய் பெரும்பிணி எனப்பட்டது. கள்வரைவிட அஞ்சக்கூடிய, உடம்பைக் கரையச் செய்து வருத்துகின்ற தீராத நோய் இது என அடையாளப்படுத்தப்பட்டது (எயிட்ஸ் என்னும் உடற்தேய்வு நோயாக இருக்கலாம்). இதனை,

*––– ––– உருவினை*
*உள்ளுருக்கித் தின்னும் பெரும்பிணியும்* (18:2–3)

என்கிறது திரிகடுகம்.

இதைப்போலவே, கொடிய நோயுடையவராக, சிக்கர் (தலை நோயுடையவர்); திதடர்(பித்தர்); சிதலை (புற்று-சிதலைபோல் வாயுடையார்-வாய் புற்று); துருநாமர் (மூலநோய்) ஆகியோர் சுட்டப்படுகின்றனர். இந்நோய்களுக்கு வினைப்பயன் காரணமாகச் சொல்லப்பட்டது. மேலும், பிணியுடையோர்க்கு உலகத்தில் இன்பம் எதுவுமில்லை என்றும்(*சி.மூ.84*), இளமையில் நோயின்றி வாழ்தல் நன்று என்றும் வலியுறுத்தப்பட்டது (*நாலடி.219:1-2*).

### இசை மருத்துவம்

இசையால் உண்டாகும் ஒலியலைகள் மூளையில் தூண்டுதலை உண்டாக்கி, உடலில் உள்ள உயிர்வேதி நிகழ்வுகளில் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்கிறது இன்றைய அறிவியல். இதனை உணர்ந்திருந்த பழந்தமிழர், திணைவாழ்விற்கு ஏற்றவாறு குறிஞ்சிப்பண், முல்லைப்பண், மருதப்பண், நெய்தல் பண், பாலைப்பண் எனப் பல்வேறு இசை வடிவங்களையும், பல்வேறு இசைக்கருவிகளையும் கொண்டு, பொழுதிற்குத் தக்கவாறு காலை,

மாலை என இசைத்து மகிழ்ந்தனர். இந்த இசை நுணுக்கங்களைப் பல்வேறு நிலைகளில் பயன்படுத்தி வந்ததைப் போன்று மருத்துவத்துறையிலும் பயன்படுத்தியுள்ளதை அறிய முடிகிறது.

*--- --- ஆம்பல் ஊதி*
*இசைமணி எறிந்த காஞ்சி பாடி*
*நெடுநகர் வரைப்பின் கடிநறை புகைஇக்*
*காக்கம் வம்மோ காதலந் தோழி* (புறம்.281:4–7)

என்ற அடிகள், இயற்கை மருத்துவத்தோடு இசைமருத்துவத்தையும் ஒருங்கே சுட்டுகின்றன. இதில், போரில் ஈடுபட்டு புண்பட்டுக் கிடக்கும் வீரனின் உயிரினைக் காக்க, ஐயவியைப் பயன்படுத்துவதோடு, ஆம்பல் என்னும் குழலை ஊதியும், காஞ்சிப் பண்ணை இசைத்தும் இசைமருத்துவம் செய்ததை அறியமுடிகிறது. மேலும், இசை மருத்துவம் பற்றிய செய்தியை,

*தீங்கனி இரவமொடு வேம்புமனைச் சேரீஇ*
*வாங்குமருப்பு யாழொடு பல்லியம் கறங்க* (புறம்.281:1–2)

என்றும்,

*வேம்புசினை ஒடிப்பவும் காஞ்சி பாடவும்*
*நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்*
*எல்லா மனையும் கல்லென் றவ்வே* (புறம்.296:1–3)

என்றும் காட்டுகிறது புறநானூறு. இவற்றில், மகளிர், போரில் தம் கணவன்மார்கள் பட்ட புண்களை ஆற்றுவதற்கு யாழ், பல்லியம் போன்ற கருவிகளை இசைத்ததும், 'காஞ்சி' என்ற இசை வகையினைப் பாடியதும் அறியப்படுகிறது. இம் மருத்துவ முறை போரில் காயமடைந்த வீரர்களின் இல்லங்கள்தோறும் செய்யப்பட்டதால் அனைத்து இல்லங்களிலிருந்தும் இசையொலி எழும்பியதாகப் பாடல் காட்டுகிறது. மேலும், இந்த இசைமருத்துவ முறையினை இல்லத்துப் பெண்களே கற்றிருந்தனர் என்பதும் இதில் புலப்படுகிறது. அதேபோல, கொடிச்சியர், வரிப்புலி மார்பைக் கிழித்தது போல் போர்க்களத்தில் ஏற்பட்ட வீரர்களின் விழுப்புண்ணை ஆற்றுதற்கு இசைப்பாடலை இசைத்தனர் என்று மலைபடுகடாமும் குறிப்பிடுகிறது.

**நுண் மருத்துவம்**

இயற்கை மருத்துவம், இசை மருத்துவம் என்பதோடு, மருத்துவத் துறையின் நவீனத் தொழில்நுட்பமான 'அறுவை

மருத்துவம்' (Operation), புண்ணிற்குப் பஞ்சு வைத்துக் கட்டுக்கட்டுதல் போன்ற செயல்பாடுகளுடன் கூடிய நுண் மருத்துவ முறைகளும் பழந்தமிழகத்தில் இருந்துள்ளன.

அறுவை மருத்துவ முறையினைக் குறிப்பிடும் பதிற்றுப்பத்து, 'போர்க்களத்தில் காயம்பட்ட வீரர்களின் மார்புப் புண்களுக்குத் தையல் போடும்போது அப்புண்ணின் குருதியிலே மூழ்கி மறைந்து மேலெழும் நெடிய வெண்மையான ஊசியானது, நீரில் மூழ்கி மேலெழும் சிரற்பறவையின் அலகு போன்று உள்ளது' என்கிறது. இதனை,

*மீன்றேர் கொட்பிற் பனிக்கயம் மூழ்கிச்*
*சிரல்பெயர்ந் தன்ன நெடுவள் ஊசி*
*நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்* (பதிற்று.42:2–4)

என்ற அடிகள் காட்டுகின்றன. இதில், சிரற்பறவை நீரில் மூழ்கி மேலெழும்போது, அதன் அலகில் மீன்கள் மாட்டி இருபுறமும் தொங்குதல் போல, காயங்களில் ஆழ்ந்து மேலெழும் ஊசியின் காதில் தையல் இழை தொங்குதலும் ஒப்புமையாகக் காட்டப்பட்டுள்ளது.

மேலும், மருத்துவம் முதலிய பல்வேறு துறைகளின் பயன்பாட்டிற்கான வெவ்வேறு வகையிலான ஊசிகள் உருவாக்கப்பட்டிருந்ததையும் அறியமுடிகிறது. தோல் தொழிலில் பயன்படுத்தப்படும் கூரிய ஊசிகள் (பதிற்று.7474: 13,14), செந்நாயின் பற்கள் போல் விளங்கிய, அரத்தால் அராவப்பட்ட வலிமையான ஊசிகள் (அகம்.199:8) போன்றவற்றோடு, அறுவை மருத்துவத்திற்குப் பயன்படுத்தப்பட்ட நுண்மையான ஊசிகளையும் காணமுடிகிறது. மருத்துவத் துறையில் அறுவை மருத்துவத்திற்குப் பயன்படும் வண்ணம் உருவாக்கிய நுண்மையான நெடிய ஊசியை, நெடுவள் ஊசி என்கிறது பதிற்றுப்பத்து (42:3).

அதேபோல, புண்ணுக்கு மருந்துவைக்கும்போது புண்ணின் மேல் பஞ்சுவைத்துக் கட்டும் இக்கால நவீன மருத்துவமுறை பழங்காலத்திலேயே இருந்ததை,

*பஞ்சியும் களையாப் புண்ணர்* (அகம்.353:16)

என்னும் அடி உறுதி செய்கிறது. இக்காட்சி பாசறையின்கண் என்பதால், தற்போது இராணுவ மருத்துவமனைகள் இயங்குதல் போல, அக்காலத்திலும் இராணுவ மருத்துவமனைகள் அமைக்கப்

பட்டிருந்ததையும், அம் மருத்துவமனைகளில் அறுவை மருத்துவம் அறிந்த சிறப்பு மருத்துவரும், அதற்கான தொழில்நுட்பங்களும், கருவிகளும் இடம்பெற்றிருந்ததையும் அறிய முடிகிறது.

மேலும், போர்க்களத்தில் காயம்பட்டு பாசறையின்கண் இருக்கும் வீரர்களின் புண்களுக்கு, கையில் விளக்குகளை ஏந்திக் கொண்டு ஆராய்ந்து மருந்திடும் மருத்துவரை,

*மண்டுஅமர் அழுவத்து எல்லிக் கொண்ட*
*புண்தேர் விளக்கின் தோன்றும்* (111:13–14)

என்று காட்டுகிறது அகநானூறு. அதேபோல, நவீன சிகிச்சை முறையால், போர்க்களத்தில் உடம்பில் பெற்ற விழுப்புண்களின் வடுக்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து, பழைய தோற்றத்துடன் காணப்பட்ட வீரனை,

*இறையுறு விழுமம் தாங்கி, அமர்அகத்து*
*இரும்புசுவைக் கொண்ட விழுப்புண்நோய் தீர்ந்து*
*மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி*
*'வடுவின்றி வடிந்த யாக்கையன்' ———* (180:2–5)

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் காட்டுகின்றன. 'போர்க்களத்தில் விழுப்புண்களை ஏற்றுக் கொண்டதால், மருந்துக்காகப் பல இடங்களில் வெட்டப்பட்ட அடிமரம் போல், உடலெல்லாம் வடுக்கள் நிறைந்திருந்தவன் தற்போது வடுக்கள் மறைந்து அழகிய உடலுடையவனாகக் காட்சியளிக்கிறான்' என்பது இதன் பொருள். இப்பாடலடிகள், மருந்து மரத்தையும் மருத்துவ முறைகளால் வடுக்கள் மறைந்த வீரனையும் ஒருங்கே காட்டுகின்றன.

### மருந்து பெறும் முறை (சேகரித்தல்)

இயற்கை மருத்துவத்திற்குப் பயன்படும் தாவரங்களைப் பட்டறிவால் அறிந்து வைத்திருந்தனர் பழந்தமிழர். தாவரங்களுக்கு உயிரும் ஓர் அறிவும் உண்டு என்பது தொல்காப்பியர் கூற்று (ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே - மரபியல்). மரங்களில் இருந்து மருந்து பெறப்பட்டதை,

*மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி* (புறம்.180:4)

என்பதில் அறியலாம். அவ்வகையில், உயிரும் அறிவும் உள்ள தாவரங்களிலிருந்து மருந்தைப் பெறுவதிலும் சில வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. இதனை,

*மரம்சா மருந்தும் கொள்ளார் மாந்தர்* (226:1)

என்ற நற்றிணைப் பாடலடியில் காணமுடிகிறது. அதாவது, உயிர்களுக்கு ஏற்படுகிற பிணிகளைப் போக்குவது மருந்து மரத்தின் இயல்பு. ஆனால், பிணியைப் போக்குகிறது என்பதற்காக மரத்தை வேரோடு பிடுங்கிப் பயன்படுத்திவிடக்கூடாது. அப்படி செய்துவிட்டால் மரம் அழிவதோடு, எதிர்காலத் தேவைக்கும் இல்லாமல் போகும் என்று, மருந்து கொள்ளுதலிலும் அறநோக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

**மருத்துவர்**

சங்க இலக்கியங்கள், மருத்துவ முறைகள் குறித்தும், மருந்துப் பொருட்கள் குறித்தும், மருத்துவன் இயல்பு குறித்தும் சுட்டிச் சென்றிருக்கின்றன. ஆயினும், சங்க இலக்கியங்களின் தொடர்ச்சியாகவும், பிழிவாகவும் காணப்படும் திருக்குறளில் மருந்து, மருத்துவம், மருத்துவன் இயல்புகள், நோய், நோய்க்கண்டறியும் முறைகள், நோயாளியை மருத்துவன் அணுகும் முறைகள், நோயாளிக்குத் துணை செய்வோர், நோயில்லா வாழ்க்கை, உணவுப் பழக்கம் என மருத்துவத்துறை குறித்தும் உடல்நலம் குறித்தும் விரிவாகப் பேசப்பட்டுள்ளதை அறிகிறோம்.

அக்காலத்தில் மருத்துவர், 'அறவோன்' (நற்.136), 'மருத்தன்', 'மருத்துவன்' (கலி.17:20,21; 137:24,25; புறம்.173:11) என அழைக்கப்பட்டனர். தொல்காப்பியர் 'நோய் மருங்கு அறிநர்' (தொல்.அக.192) என்கிறார். வள்ளுவர் 'கற்றான்' (குறள்.949), 'தீர்ப்பான்' (குறள்.950) என்று குறிப்பால் சுட்டுகிறார். கற்றான் என்பது மருத்துவ நூல்களைக் கற்றுத் தேர்ந்தவன் என்பதையும், தீர்ப்பான் என்பது நோயினைத் தீர்க்கும் மருத்துவ அறிவு பெற்றவன் என்பதையும் குறிக்கும்.

மருத்துவரின் இயல்புகளும் இலக்கியங்களில் சுட்டப்படுகின்றன. மருத்துவர் என்பவர், நோயுற்றவர் வேட்கைகொள்ளும் அனைத்தையும் வழங்காமல், நோயின் தன்மைக்கு ஏற்ப மருந்துகளை ஆய்ந்துக் கொடுத்து நோயினைக் குணப்படுத்தும் தன்மை வாய்ந்தவராக இருந்ததை,

*அரும்பிணி உறுநர்க்கு, வேட்டது கொடாஅது,*
*மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன் போல* (136: 2–3)

என்று காட்டுகிறது நற்றிணை. அதேபோல, நோய்க்குத் தகுந்த நன்மருந்தினை ஆய்ந்து கொடுத்து, உடலைப் பிணியிலிருந்து காத்து நன்மைபுரியும் மருத்துவரை,

*... யாக்கையுண் மருத்துவன் ஊட்டிய*
*மருந்துபோல் மருந்தாகி* (17:19–20)

என்று கலித்தொகையும் சுட்டுகிறது.

முதலில் நோய் இன்னதென்பதை ஆராய்ந்து, நோயின் காரணம் எது என்பதை அறிந்து, அதனைத் தணிப்பதற்குரிய வழிகளைக் கண்டு, அந்த வழிகளையும் நோயாளியின் உடலுக்குப் பொருந்தும் வகையில் மேற்கொள்ள வேண்டும் என மருத்துவத்திற்கான இலக்கணத்தை வகுப்பார் வள்ளுவர். இதனை,

*நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்* (குறள்.948)

என்பதில் அறியலாம். மேலும், மருத்துவன் நோயுற்றவனின் வயதளவையும், நோயின் அளவையும், காலத்தையும் ஆராய்ந்தே செயல்பட வேண்டும் என்பதை,

*உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்*
*கற்றான் கருதிச் செயல்* (குறள்.949)

என்று குறிப்பிடுகிறார். இம்மருத்துவத் துறையில் மருந்தாளும் செவிலியும் முக்கிய இடம் பெறுகிறார். நோய் குணமடையும் தன்மையானது, நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, அருகிலிருந்து காலம் தவறாமல் மருந்தைக் கொடுக்கும் செவிலி ஆகியோரைப் பொறுத்தே அமையும் என்பதை,

*உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று*
*அப்பால்நாற் கூற்றே மருந்து* (குறள்.950)

என்று குறிப்பிடுகிறார்.

அதேபோல, நோயாளி மருத்துவரை அணுகும் முறையும் சுட்டப்பட்டுள்ளது. மருத்துவரிடமும், வழக்குரைஞரிடமும் உண்மையை மறைக்கக்கூடாது என்பது இன்றைய மொழி. மருத்துவரிடம் செல்லும்போது நோயாளி தன் நோய் குறித்த அனைத்து விவரங்களையும் மறைவின்றி சொல்லிவிடுதல் வேண்டும், அப்பொழுதுதான் மருத்துவரால் நோயின் காரணத்தையும் நோயின் தன்மையையும் அறிந்து, விரைவில் குணப்படுத்தும் மருத்துவத்தை மேற்கொள்ள முடியும். இதனை,

*––– ––– மருத்துவன்*
*சொல்கவென்ற போழ்தே பிணியுரைக்கும்* (77:2–3)

என்கிறது நான்மணிக்கடிகை.

## நல வாழ்விற்குத் தமிழர் வகுத்த நெறி

மருத்துவன், மருத்துவ முறைகள், மருந்துப்பொருள்கள் என மருத்துவம் சார்ந்து பல செய்திகள் பழந்தமிழ் நூல்களில் சுட்டப்பட்டிருப்பினும், நல்லொழுக்கம், சீரான உணவுப் பழக்கம், இயற்கையோடு இயைந்த வாழ்க்கைமுறை போன்றவையே வளமான வாழ்விற்குப் பழந்தமிழர் வலியுறுத்திய வாழ்வியல் நெறிகள். உணவே மருந்தென்பது தமிழர் கண்ட உண்மை. இவற்றைத் திருக்குறள் உள்ளிட்ட பதிணென்கீழ்க்கணக்கு நூல்கள் பெரிதும் வலியுறுத்துகின்றன. குறிப்பாக, உணவு கொள்ளும் முறை-உணவின் தன்மை, உறங்கும் விதம்- இடம்- திசை போன்றவை உடல்நலத்தோடுத் தொடர்புடையவையாகச் சுட்டப்படுகின்றன.

### உணவு உட்கொள்ளும் முறை

படுத்துக்கொண்டும், நின்றுகொண்டும், திறந்த வெளியிலும் உண்ணுதல் கூடாது, வேட்கை மிகுதியால் அதிகமாகவும் உண்ணுதல் கூடாது, கட்டிலில் அமர்ந்தபடி உண்ணுதல் கூடாது என்கிறது ஆசாரக்கோவை (பா.23). நாவைக் காத்து, வேண்டிய அளவு மட்டும் உணவு உண்பவனுக்கு நோய்கள் வருவதில்லை என்கிறது சிறுபஞ்சமூலமும். இதனை,

*காத்துண்பான் காணான் பிணி* (சி.மூ.8:4)

என்பதில் அறியலாம். திருவள்ளுவரோ உணவு உட்கொள்ளும் முறையினை மிக விளக்கமாகவே எடுத்துரைக்கிறார். முறைப்படி உணவை உட்கொண்டால் மருந்து எடுக்க வேண்டிய தேவையே ஏற்படாது என்பதை,

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்திய*
*அற்றது போற்றி உணின்* (குறள்.942)

என்று அறிவுறுத்துகிறார். மேலும்,

*அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு*
*பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு* (குறள்.943)

என்று, உண்ட உணவு செரித்த பிறகு, தேவையானதை ஆராய்ந்து உண்டால் வாழ்நாள் நீடிக்கும் என்றும்; உண்ட உணவானது நன்கு செரித்து, நன்றாகப் பசியெடுத்த பின்னரே முறைப்படி உணவை உட்கொள்ளவேண்டும் என்றும் (குறள்.944); உடலிற்கு மாறுபாடு

செய்யாத உணவினை அளவோடு உண்டுவந்தால் பிணி அண்டாது என்றும் (குறள்.945); அளவான உணவு உட்கொள்வோருக்கு நிலையான இன்பம் இருக்கும் என்றும், அளவு மீறி உண்போருக்குத் துன்பம் மிகும் என்றும் (குறள்.946,947) உணவு உட்கொள்ளும் முறைகளை வலியுறுத்துகிறார்.

### உணவின் தன்மைக்கேற்ப உண்ணுதல்

உண்டது செரித்தபின் உண்ணுதல், அளவு மிகாமல் உண்ணுதல் என்பது போலவே, கசப்பான உணவு வகைகள் இறுதியிலும், இனிக்கும் பண்டங்கள் முதலிலும், எஞ்சியவை இடையிலும் முறைப்படி உண்ணப்பட வேண்டும் (ஆ.கோ.25.) என்பதும், உண்டபின், நீர் உட்புகாதபடி நன்றாக மூன்றுமுறை கொப்பளித்துத் துப்ப வேண்டும், வாயை நன்றாகக் கழுவ வேண்டும், நீர் குடிக்க வேண்டும் என்பதும் வலியுறுத்தப்படுகிறது (ஆ.கோ.25).

### உறங்கும் காலம்

இரவில் பெரியவர்கள் குறைந்தது எட்டு மணிநேரம் உறங்கவேண்டும் என்பதும், பகல் உறக்கம் கூடாது என்பதும் இன்றைய அறிவியல் உலகில் மருத்துவர்களால் வலியுறுத்தப் படுகிறது. பகலில் உறங்கினால் உடலை நோய் அண்டும் என்னும் இக்கருத்தைப் பழந்தமிழ் நூல்களும் வலியுறுத்துகின்றன.

பகல் பொழுதில் கண்ணுறக்கம் கூடாது என்கிறது ஆசாரக் கோவை (29:1). மேலும், நோயினை விரும்பி ஏற்றுக்கொள்பவரே பகலில் உறங்க ஆசைகொள்வார் என்பதை,

> *––– ––– பகல்வளரார்*
> *நோயின்மை வேண்டுபவர்* (ஆ.கோ.57:3–4)

என்றும் வலியுறுத்துகிறது.

### உறங்கும் திசை

படுத்துறங்கும் நேரத்தைப் போலவே திசைகளும் நம் உடல் நலத்தோடுத் தொடர்புடையனவாக இருக்கின்றன என்பதைப் பழந்தமிழர் நன்கு அறிந்திருந்தனர். அதனால், எத்திசையில் தலைவைத்துப் படுக்கவேண்டும் என்பதோடு, கட்டாயம் தலைவைத்துப் படுக்கக்கூடாத திசைகளையும் சுட்டிச்சென்றனர். அவ்வகையில், மிக அதிக ஆபத்தை (நோய்) விளைவிக்கக்கூடிய திசைகளாக வடக்கும், கோணங்களும் சுட்டப்பட்டுள்ளன. இதனை,

*கிடங்குங்கால் கைகூப்பித் தெய்வம் தொழுது*
*வடக்கொடு கோணம் தலைசெய்யார் மீக்கோள்*
*உடற்கொடுத்துச் சேர்தல் வழி* (ஆ.கோ.30)

என்பதில் அறியலாம். வடக்கிலும், வட - கிழக்கு போன்ற கோண திசைகளிலும் புவியின் காந்த சுழற்சி அதிகமாக இருக்குமென்பதும் அது அத்திசைகளில் தலைவைத்துப் படுக்கும் மனிதர்களின் மூளையின் செயற்திறனைப் பாதிக்கும் என்பதும் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவியல் உண்மையாக இருப்பதை அறிகிறோம். அதேபோல இரவில் மரத்தினடியில் படுக்கக்கூடாது என்பதை,

*இராமரமும் சேரார்* (ஆ.கோ.13:2)

என்ற அடி காட்டுகிறது. தாவரங்கள் பகலில் உயிர்க் காற்றையும், இரவில் நச்சுக்காற்றையும் வெளியிடுகின்றன என்ற அறிவியலின் அடிப்படையிலேயே மேற்கண்ட முடிவு எட்டப்பட்டிருக்கும் என்பது தெளிவு.

## முடிவு

மேற்சுட்டிய சான்றுகளின் வழி, பழந்தமிழ் நூல்களில் மருத்துவ முறைகள், பயன்படுத்தப்பட்ட மருந்துகள், மருத்துவன் இயல்பு, மருந்து பெறும் முறைகள் போன்றவை பதிவு செய்யப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

மருத்துவன் தாமோதரன் போன்று தொழில் வகையால் மருத்துவராக இருந்துகொண்டு கவிதை பாடிய புலவரையும் சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது.

பழந்தமிழர் இயற்கையையும், இயற்கையோடு இயைந்த பொருள்களையும், இசைகளையும் மருந்துகளாக்கி இன்ப வாழ்வு வாழ்ந்தது அறியப்படுகிறது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் மருத்துவம் குறித்தும், மருந்து வகைகள் குறித்தும் மிகுதியாக பேசப்படுகின்றன. திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி என்று மருந்துகளின் தன்மைகளையும் தேவைகளையும் முன்வைத்து நூல்களின் தலைப்புகளும், மருந்தின் சிறப்பால் ஆசிரியர்களின் பெயர்களும் அமைந்திருந்ததைக் காண்கிறோம். இவை, மருத்துவத்துறையின் உயர் வளர்ச்சியைக் காட்டுவதாக அமைகின்றன.

உடம்பை வளர்ப்பதற்கு உணவை உட்கொள்ளாமல் உயிரைப் பேணுதற்கு உணவு உட்கொள்ளும் தன்மை, முறையான உறக்கம், இயற்கையோடு இயைந்த வாழ்வியல் போன்றவை மனிதனை நோயிலிருந்து காத்து செம்மைபடுத்தும் என்று அறிவுறுத்தப்பட்டது.

சித்தர்களின் காலத்தில் தமிழ் மருத்துவத்தின் பயன்பாடும் ஆய்வும் சிறப்பான இடத்தில் இருந்தது. சித்தர் காலத்திற்குப் பின் தமிழ் மருத்துவம் 'சித்த மருத்துவமாக' இன்றும் தொடர்கிறது.

இதன்வழி, தொல்லியல் சான்றுகள், காலந்தோறும் பதிவு பெற்றுள்ள இலக்கியச் சான்றுகள், சுவடிக் குறிப்புகள், நடப்பில் உள்ள சித்த மருத்துவ முறைகள் போன்றவற்றை ஒருங்கே தொகுத்து, முறைப்படுத்தி, தமிழர் மருத்துவம் குறித்த முழு ஆய்வு நூலினை வெளிக்கொணர்தலும், அதன் அடிப்படையில் தமிழர் மருத்துவ முறைகளை மீட்டுருவாக்கம் செய்தலும் தேவையாகிறது என்பது பெறப்படுகிறது.

# சங்க இலக்கியத்தில் சமூக மதிப்பீடுகள்

## சமுதாயம்

'சமுதாயம்' என்னும் சொல்லிற்குத் தமிழில் ஆறுவகையான பொருள்கள் வழங்கிவருகின்றன. அவை: மக்களின் திரள், பொருளின் திரள், கோயிலின் நிருவாக அதிகாரிகளின் கூட்டம், பொதுவானது, பொதுவாகவேனும் அவரவர்க்குரிய பங்குப்படி பிரித்தேனும் அனுபவிக்கப்படும் ஊர்ப் பொதுச் சொத்து, உடன்படிக்கை என்பன (தமிழ் லெக்சிகன். ப.1302).

இவற்றில், 'மக்களின் திரள்' என்னும் முதற் பொருளில் 'சமுதாயம்' என்னும் சொல் இப்பொழுது வழங்கப்படுகிறது. சமுதாயம் என்னும் சொல் சங்க இலக்கியங்களில் சுட்டப்பெற வில்லை. ஆனால், சமூகம் என்னும் சொல் உணர்த்தும் பொருண்மையோடு,'மன்பதை' என்னும் சொல்லைச் சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. 'மன்பதை காக்கும்நின் புரைமை' (புறம்.210:1), 'உலகத்து மன்பதைக் கெல்லாம்'(புறம். 358), 'மன்பதை யெல்லாம் மடிந்த இருங்கல்குல்' (கலி.65) என்பனவற்றில், மன்பதை என்னும் சொல் 'மக்கட்பரப்பு' 'மக்கள் கூட்டம்' அல்லது 'உயிர்க் கூட்டம்' என்னும் பொருளில் அறியப்படுகிறது.

*'மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்*
*துன்ப மல்லது தொழுதக இல்'* (25:103–104),

என்று சிலப்பதிகாரத்திலும்,

*'இன்பச் செவ்வி மன்பதை எய்த'* (5:74)

என்றும்,

*'மன்பதைக்கு எல்லாம் அன்பு ஒழியார்'* (23:137)

என்றும் மணிமேகலையிலும் மன்பதை என்னும் சொல் பயின்று வந்துள்ளது. இவற்றில், மன்பதை என்பது 'உயிர்ப்பன்மை' என்னும் பொருளைக் கொண்டுள்ளது. ஆனால், இக்காலத்தில்

'சமுதாயம்' என்னும் சொல் ஓரளவிற்குச் சுருங்கிய பொருளில் 'சொசைட்டி' (Society) என்னும் ஆங்கிலச் சொல்லிற்கு நேரான சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது. 'சொசைட்டி' என்னும் ஆங்கிலச் சொல் பல்வேறு பொருள்களை உணர்த்துகிறது. 'கூடிச்செயற்படுவதில் நாட்டத்தையும், பொதுவான நோக்கங் களையும் பற்றார்வத்தையும் உடையதாய் உள்ள சமூகமோ, நாட்டினமோ, பரந்துபட்ட மக்கள் கூட்டமோ சமுதாயம் எனப்படும் (தமிழக வரலாறு சங்ககாலம்-வாழ்வியல்,ப.2). தற்போது குமூகம், குமுகாயம் என்ற சொல்லாக்கங்களும் சமுதாயம் என்பதற்கு இணையானச் சொற்களாகப் பயன்படுத்தப் படுகின்றன.

உயிரின வளர்ச்சிக்கும் அவற்றின் பாதுகாப்பிற்கும் சார்ந்து வாழ்தலும் கூடி வாழ்தலும் இன்றியமையாததாகிறது. கூடி வாழ்தலால் உயிர்கள் தங்கள் தேவைகளை எளிதில் பெற முயல்கின்றன. இவ்வெற்றியின் பயனாகவே மனிதன் பண்டைக் காலம் முதல் இன்றுவரை கூட்டு வாழ்க்கையை ஏற்று வாழ்ந்து வருகிறான் என்பது மனித இன வரலாற்றின் வாயிலாக அறியப்படுகிறது. இவ்வகை இனக்குழுவையும் இனக்குழுவின் தலைவனையும் சங்கப்பாடல்கள் பலவற்றில் காணமுடிகிறது. பெருவேந்தருக்கு நிகராக இவ்வகை இனக்குழுத் தலைவர் போற்றப்பட்டுள்ளனர். 'சமுதாயம் என்னும் சொல் இன்றைய சமுதாயத்தை விளக்குகின்றது; குழு என்னும் சொல் பண்டைக் காலச் சமுதாயத்தை (primitive society) ஓரளவு எடுத்து விளக்கியுள்ளது' (சமூகவியல்,ப.11) என்பர். எனவே, தனிமனிதர், குடும்பர், அரசு என்ற பல்வகை நிலைகளிலிருந்தும் வெளிப்பட்டு நிற்கும் விழுமியங்களான சமூக மதிப்பீடுகளை இனங்காண்பது ஏற்புடையதாகிறது.

## தனிமனிதனும் சமூகமும்

தனிமனித சிந்தனைகளின் ஒருங்கிணைப்பே சமூக வளர்ச்சிக்கு அடித்தளமாகிறது. நற்சிந்தனைகளைக் கொண்ட மனிதர்கள் வாழும் சமூகமே வளர்ச்சிப் பாதையில் முன்னணியில் நிற்கிறது. 'ஒவ்வொரு தனி மனிதனும் அவனுடைய எண்ணம், செயல் ஆகியவற்றால் எல்லா மக்களுக்கும் நன்மைபயக்க வேண்டும் என்பதை எண்ணினால் சமுதாயம் முன்னேற்றமடைவதில் ஐயம் இல்லை' (சமூகவியல், ப.170) என்பது தனிமனிதனுக்கான சமூகவியல் கோட்பாடாக அமைகிறது .

தனிமனிதன், ஒரு குடும்பம்-குழு-அரசு போன்றவற்றில் இணைந்தே செயல்படுகின்றான். சமுதாயம் தனிமனிதனைச் சமுதாய உறுப்பினனாக்கப் பெருமளவிற்குத் தொண்டு புரிகின்றது. பொதுவாகச் சமூக இயல்பு தனிமனிதன் இயல்பு ஆகிய இரண்டும் ஒருங்கே வளர்வதாகச் சுட்டப்படுகிறது (சமூகவியல், ப.64). அவ்வகையில், தனிமனிதர், குடும்பம் மற்றும் தலைமையின் விழுமியங்களுள் முக்கியக் கூறுகளாக, விருந்தோம்பல், உடை வழங்கல், கொடை, உடைமையைப் பங்கிட்டுக் கொடுத்தல், பெற்ற பெருவளம் பெறாதோர்க்கு அறிவுறுத்தல் - வழங்கல், இருப்பிடம் அளித்தல், அருளுணர்வு, உயிரிரக்கம் போன்றவை அமைகின்றன. இவற்றின் செயலாக்கக் காரணிகளுள் (தனிமனிதர், குடும்பம், அரசு) ஒன்றிலிருந்து ஒன்றும் ஒன்றுக்குள் ஒன்றுமாக அமைவதைக் காணமுடிகிறது. மேலும், சமூக அமைப்பிலிருந்து விலகி நிற்க முயலும் தனிமனிதனையும் சமூகத்தோடு இணைக்கும் கருத்தாக்கங்களும் பழந்தமிழகத்தில் வெளிப்பட்டு நிற்கின்றன. சமூகத்திலிருந்து விலகி நிற்கும் இவ்வகைத் தனி மனிதச் செயல்களை,

*'தானும் உண்ணான் உலகமும் கெடுமே'* *(புறம்.184:11)*

என்று சமூகம் பழித்தது.

### தனிமனிதனும் சமூக மதிப்பீடும்

இல்வாழ்க்கையின் தன்மையே ஒருவரைச் சமுதாயத்தில் அடையாளப்படுத்துகிறது. மனங்கள் ஒத்து வாழ்வதற்குத் தேவையான குணங்களைச் சுட்டுவதோடு, வேண்டாத குணங்களாக, 'நேயமின்மை, இரக்கமின்மை, தன்னை வியத்தல், புறமொழி கூறுதல், வன்சொல், மறவி, சோம்பியிருத்தல், தன் குடியுயர்வை எண்ணி மகிழ்தல், பணிவுடமையை மறத்தல், ஒப்பிட்டு நோக்கல்'(தொல்.1220) என்பவற்றையும் தொல்காப்பியர் பட்டியலிடுகிறார். மனிதநேயம் போற்றும் எச்சமுதாயத்திற்கும் இத்தன்மை ஏற்புடையதாவது இயல்பு.

தனி மனிதனுக்கான சமூக மதிப்பீடு மிக நுண்மையாக மதிப்பிடப்பட்டது. ஒருவன் நற்குணங்களைப் பெற்றிருப்பதோடு எக்காரணத்தாலும் அதனை இழக்கக்கூடாது என அறிவுறுத்தப் பட்டது. அப்படி இழத்தலால் கெடும் புகழ் திருப்பப் பெற இயலாத ஒன்றாக அறிவுறுத்தப்பட்டது.

*முத்தினும் மணியினும் பொன்னினும் அத் துணை*
*நேர்வரும் குறைப கலம் கெடின் புணரும்*
*சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்*
*மாசு அறக் கழீஇ வயங்கு புகழ் நிறுத்தல்*
*ஆசு அறு காட்சி ஐயர்க்கும் அந் நிலை*
*எளிய என்னார் தொல் மருங்கு அறிஞர்* (குறிஞ்சி.13–18)

என்பதில், முத்து, பொன், மணி என்பனவற்றைக் கொண்டு செய்யப்படும் அணி கெடுமாயின் அத்தொழில் வல்லவர் அதனைத் திரும்பவும் திருத்தி அமைக்க இயலும். ஆனால், சான்றாண்மை, பெருமை, ஒழுக்கம் என்பவை ஏதேனும் ஒரு காரணத்தினால் கெடுமானால் அங்குத் தோன்றிய பழியை நீக்கிப் பழைய நிலையில் நிறுத்துதல் அரிய செயலாகும் என்ற கருத்து சுட்டப்படுகிறது. எனவே,

*புகழ்எனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்*
*உலகு உடன் பெறினும் கொள்ளலர்* (புறம்.182:5–6)

என்று அற்றைச் சமூகம் உயிருக்கும் மேலானதாகப் புகழை முன்னிறுத்தியது. மனிதப் பண்புகளே மற்றை எல்லாவற்றிலும் உயர்வாக மதிக்கப்பட்ட நிலையினைக் இங்குக் காண்கிறோம். எனவே, சங்கச் சமூகம் தீவினையைத் தூற்றியது. நல்வினையே தனி மனித 'அறம்' என்று போற்றியது. அதனாலேயே,

*செய்குவம் கொல்லோ நல்வினை* (புறம்.214:1)

என்று அறிவுறுத்தியது.

வாழ்க்கைக்கு இன்றியமையாதது பொருள். அறமும், இன்பமும் பொருளினால் ஆகும் என்று பொருளின் சிறப்பு கூறப்பட்டது. ஆயினும் பழியொடு வரும் பொருளினை பண்டைச் சமூகம் வெறுத்தது. இதனை,

*கழியக் காதல் ஆயினும் சான்றோர்*
*பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்* (அகம்.112:11–12)

என்கிறது அகநானூறு.

தனிமனித விருப்பு-வெறுப்புகள் சமூக நலனிற்கு கீழாகவே அணுகப்பட்டன. 'ஒரு சமூகம் என்பது செயற்பாடுடைய ஒரு குழுவாகும். தனி மனிதர் பலரால் உருவாக்கப்பட்டிருப்பினும்,

சமூகம் என்ற நிலையிலேயே அது தொழிற்படுகிறது. சமூக அமைப்பில் தனிமனிதர்களின் நலன்கள் சமூக நலன்களுக்குக் கீழாகவே அமைகின்றன' (ச.இ.ச.அ.ப.1) என்ற இன்றைய சமூகக் கருத்தியல் இங்கு நோக்கத்தக்கது.

ஒரு நாட்டின் நில அமைப்பும், வளங்களும் எத்தன்மையதாக இருப்பினும் அந்நாட்டில் வாழும் தனிமனிதச் சக்திகள் ஒன்றிணைந்து செய்யவேண்டியச் செயல்களைக் செய்தால் அந்நாடு மேன்மையடையும் என்று அறிவுறுத்தப்பட்டது (புறம்.187). அதே நேரத்தில், தனிமனிதப் பங்களிப்பாக நன்மைகளைச் செய்ய இயலாது போயினும் தீமைகளைக் செய்யாது இருக்க வலியுறுத்தப் பட்டது (புறம்.195).

### வினை- ஆடவர் உயிர்

வினை மேற்கொள்ளுதல் ஆடவர் பண்பாகச் சுட்டப்பட்டது. வினையே உயிராகப் போற்றப்பட்டது. தன் முயற்சியால் உழைத்துப் பொருள் தேடுதலும் அப்பொருளைக் கொண்டு தன் குடும்பத்தார், சுற்றத்தார், அயலவர், வறியவர் என அனைவரையும் காத்தோம்புதலும் உயர் பண்பாக, சமூகக் கடமையாக நெறிப்படுத்தப்பட்டது. எனவே, பிறர் முயற்சியால் வாழும் ஆடவன், எலி வாழ்வைப் போன்ற சிறுமையை உடையவன் என இகழப்பட்டான். மேலும்,

*இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்*
*அசையுநர் இருந்தோர்க்கு அரும் புணர்வு ஈன்ம்* (நற்.214:1–2)

என்று, புகழும் இன்பமும் கொடையும் மூன்றும் சோம்பலோடு இருப்பவர்க்குப் பொருந்துவதில்லை என அறிவுறுத்தப்பட்டது.

### மடியில்லா பொருளாக்கம்

'அரும் பொருட் கூட்டம் இருந்தோர்க்கு இல்' (252:4) என நற்றிணை வலியுறுத்தும். அறநெறியினின்று நீங்காத இல்வாழ்க்கை நடத்துதலும், சிறந்த சுற்றத்தவரின் துன்பத்தைப் போக்கித் தாங்குதலும் ஆகிய இவை எஞ்ஞான்றும் முயற்சியை மேற்கொண்டு வருந்தாது மடிந்த உள்ளத்துடன் இருப்பவர்க்கு இல்லையாகும் என்று அகநானூறும் உரைக்கும் (அகம்.173:1-3).

எனவே, ஈதல் இன்பம் கருதிய செய்பொருளுக்காகத் தம் இல்லம் துறந்தும்(அகம்.12; 69:5,6), தம் உறவினரைத் துன்பம் போக்கித் தாங்கிடவும், மேலும் சுற்றத்தார் பெருகவும் உறவினர்

அல்லாதவரும் உறவினர் போலப் பொருந்தியிருக்கவும் காரணமான முயற்சிக்குப் பொருந்திய ஊக்கத்தினோடும், விருப்பினால் சிறந்தும், பொருள் ஈட்டும் தொழிலைச் செய்து முடிந்த ஆடவரைச் சமூகம் போற்றியது(அகம்.93:1-7). பொருள் ஈட்டி வருதலையும், இல்லார்க்கு வழங்குதலையும் இவர்கள் உயிரினும் மேலாகக் கருதினர் (அகம்.245:1,2).

### குடும்பமும் சமூக மதிப்பீடும்

ஒரு குடும்பத்தில் மனிதனின் நிலை எதுவோ அதுபோலவே சமுதாயத்திலும் அவனுடைய நிலை அமையும் என்பார் அல்டர் (சமுதாயத் தத்துவம், ப.60). ஒரு குழந்தையைப் பொறுப்பு மிக்க குடிமகனாக வளர்க்க உதவுவது குடும்பமே. குழந்தையின் ஒழுங்கு, நடத்தை ஆகியவற்றை குடும்பமே நெறிப்படுத்துகிறது.

சங்கப்பாடல்களில் 'குடும்பம்' என்ற சொல் பயன்பாட்டில் இல்லை. 'கடும்பு' என்ற சொல்லே கூட்டு வாழ்க்கையைக் குறித்து நின்றதை உணர முடிகிறது.

*'.......... ..................... ........ கருங்கலை*
*கடும்பு ஆட்டு வருடையொடு தாவன உகளும்'* (நற்.119:6–7)

என்ற நற்றிணைப் பாடல் தரும் செய்தியால் மலையாட்டினத்தின் கூட்டு வாழ்வு 'கடும்பு' என அறியப்படுகிறது.

*'............ ................. .............. நேரிழை*
*கடும்பு உடைக் கடுஞ்சூல் நங்குடிக்கு'* (நற்.370:1–2)

என்பதில், மனிதருடைய கூட்டு வாழ்க்கையைக் 'கடும்பு' என்னும் சொல் குறித்தது தெரிகிறது. ஆனால், திருக்குறள் காலத்தில் குடும்பம் என்ற சொல் பயன்பாட்டில் வழங்குகிறது.

*இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்*
*குற்ற மறைப்பான் உடம்பு* (குறள்.1029)

என்ற குறளிலே குடும்பம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டதைக் காணலாம். 'சங்கப்படல்களில் பயன்படுத்தப்பட்ட 'கடும்பு' என்பதே மருவி, குடும்பம் என வழங்கப் பட்டிருக்கலாம்' (பண்டைத் தமிழர் வாழ்வியல் கோலம். ப.5) என்பர்.

சமுதாயம், தன்னுடைய பண்பாட்டு மரபுகளைக் குடும்ப அமைப்பு மூலமாகத்தான் மனிதர்களுக்கு அளிக்கிறது. எனவே சமுதாயத்தில் குடும்பத்தின் பங்கு இன்றியமையாததாகிறது.

மனிதனைச் சமுதாயம் சார்ந்தவனாக - சமூக இயல்பினனாக மாற்ற உதவும் ஓர் இயக்கமாகவும் குடும்ப அமைப்பு செயல்படுகிறது (சமுதாயத் தத்துவம், ப.61) என்று குடும்பத்தின் இயல்பும், தேவையும், கடமையும் சுட்டப்படுகிறது. பழந்தமிழகம் இவ்வகைக் குடும்ப அமைப்பினைப் பெற்றிருந்தது. குடும்பத்தில் ஒவ்வொருவருக்கென்றும் தனித்தனி கடமைகள் இருந்தன. பிள்ளையை ஈன்று புறந்தருதல் மட்டுமல்லாது, சமுதாயத்திற்குப் பயன்படும் சான்றோனாக்கலும் குடும்பத்தின் கடமையாயிற்று *(புறம்.312:1,2)* .

இல்லற வாழ்க்கையில் இன்பத்திற்கும், பொது வாழ்க்கையில் புகழுக்கும், தனிமனித ஒழுக்கத்துக்கும், தலைமைக்குத் தேவையான தன்மைக்கும் இலக்கணம் வகுத்த தொல்காப்பியர், இல்வாழ்வானின் சமூகக் கடமையையும் சுட்டுவார். துறவறம் என்பது தமிழர்நெறி அல்ல என்பதை உணர்த்துவதோடு, நல்வாழ்வு வாழ்ந்து முடித்தவரின் முதுமைக்காலச் செயல்பாடுகளாக,

*காமம் சான்ற கடைக் கோட் காலை*
*ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி*
*அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்*
*சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே* (தொல்.1138)

என்பதை வலியுறுத்துகிறார். இல்லற வாழ்க்கையின் இறுதிக் காலத்து, பெருமை பொருந்திய மக்களுடன் நிறைந்து, அறத்தினைப் புரிகின்ற சுற்றத்தோடு தலைவனும் தலைவியும் சிறந்ததாகிய வாழ்க்கை முறையினையும், நன்னெறியினையும் சமூகத்திற்குப் பயிற்றுவித்தல், அவர்கள் வாழ்ந்ததன் பயனாகும் என்கிறார்.

## இல்வாழ்வின் நோக்கம்

தலைவன் ஒருவன், தான் காதலிக்கும் தலைவியைத் தவறாது மணக்க உறுதி கூறும் பொழுது,

*சாறு அயர்ந்தன்ன மிடாஅச் சொன்றி*
*வருநர்க்கு வரையா வள நகர் பொற்ப*
*மலரத் திறந்த வாயில் பலர் உணப்*
*பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்*
*வசைவில் வான்திணைப் புரையோர் கடும்பொடு*
*விருந்துண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை*
*நின்னொடு உண்டலும் புரைவது* (குறிஞ்சி.201–207)

என்கிறான். இதில் தலைவன், தலைவியைத் தழுவியபோது அவளது மனத்தில், மணந்து இல்லறம் நடத்த வேண்டும் என்று எண்ணுவாள் என நினைத்தான். அவ்வெண்ணத்திற்கு ஏற்ப 'வரும் விருந்தினர்க்கெல்லாம் உணவை உண்பித்து எஞ்சியதை நீஇட நான் உண்ணுவது உயர்ந்ததே எனக் கூறுகிறான். வருவோர்க்கெல்லாம் வரையாது நல்லுணவு அளித்தல் இல்லறத்தின் கடமைகளுள் தலையாய ஒன்றென்று கருதியிருந்தனர். விருந்தினர் உண்டு எஞ்சிய மிச்சிலை உண்பதில் நிறைவு கொண்டனர். அத்தகைய இல்லறத்தினை நடத்துதற்காகவே தலைவியை மணமுடித்தல் வேண்டும் என்கிறான் இத்தலைவன்.

*அரசும் சமூக மதிப்பீடும்*

தனிமனிதன் ஒருவனின் நற்சிந்தனைகள் என்பவை, நல்ல குடும்ப உறவை வேராகக் கொண்டு கிளைத்தெழுகின்றன. தனிமனிதச் சிந்தனை, நல்ல குடும்ப அமைப்பு, சிறந்த உறவு முறை, பாதுகாப்பு உணர்வு என்பனவற்றில் அரசின் செயற்பாடு முக்கியப் பங்கினை வகிக்கிறது. மக்களின் சுய சிந்தனைக்கும், அரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் சுதந்திரத்திற்கும் இடமளிக்காத சட்ட திட்டங்களைக் கொண்டுள்ள அரசு 'கொடுங்கோலாக'க் கருதப்படும். எனவே, ஒரு நாட்டின் அல்லது சமுதாயத்தின் முன்னேற்றத்தில், அவற்றின் முதன்மை காரணியாகிய தனிமனிதர், நிறுவனங்களான குடும்பம் மற்றும் அரசு ஆகியவற்றின் செயல்பாடுகள் முதன்மை பெறுகின்றன. அவற்றிலும், குறிப்பாக அரசு என்று சொல்லக்கூடிய சமூகத் தலைமையின் பொறுப்பு மற்ற எல்லாவற்றையும் தன் கட்டுக்குள் அடக்கியதாக அமைகிறது. எனவே, சமூக முன்னேற்றத்தில் அரசின் பங்கு முதன்மையானதாகக் கருதப்படுகிறது.

இதனை உணர்ந்தே,

*நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே*
*மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்* (புறம்.186:1–2)

என்றனர் பழந்தமிழ்ப் புலவர்.

பழந்தமிழ்ச் சமூகத்தில் மக்களுக்கு மன்னன் உயிராகவும் (புறம்.186:1,2) மன்னனுக்கு மக்கள் உயிராகவும் (மணி.7:11,12) மதிக்கப்பெற்றனர். எனவே, பிறரால் விளையும் கேட்டைவிட ஆள்பவர் தீச்செயலால் மக்கள் அடையும் துன்பம் அதிகம் என்பதையும், ஆள்பவர் ஒழுங்கில்லை என்றால், அச்சமூகம்,

*'ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்'* *(கலி.5:12)*

துன்பமுறும் என்றும் அறிவுறுத்தினர். இவ்வகை முக்கியத்துவம் வாய்ந்த தலைமைக்கென்று சில அடிப்படைப் பண்புகளையும், தகுதிகளையும் பழந்தமிழ்ச் சமூகம் வரையறை செய்தது.

### பண்டைய மன்னர்

பழந்தமிழ் நூல்களில் பெருவேந்தர்கள் ஆளுமை நிறைந்த நிலையிலேயே குறிக்கப்பட்டிருக்கின்றனர். சங்க இலக்கியங் களுக்கு முற்பட்டதாக அறியப்படும் தொல்காப்பியமும்,

*'போந்தே வேம்பே ஆரென வரூஉம்,*
*மாபெரும் தானையர்'* *(தொல்.1006)*

என்று இவர்களை அடையாளப்படுத்துகிறது. ஏனை குறுநில மன்னரும் வேளிரும் இருப்பினும் தமிழகத்தை, 'பொதுமை சுட்டிய மூவருலகம்' (புறம்.357:2) என்று புறநானூறு குறிப்பிடும். நாட்டில் நல்லாட்சி நடைபெற்றால் பருவமழை தவறாது பொழியும் என்ற நம்பிக்கை நிலவி வந்தது (புறம்.117:6-7). நாட்டில் பருவ மழை பொய்த்தாலும், நாட்டின் வருவாய் குறைந்தாலும், இயற்கைக்கு மாறான செயற்கைத் தீங்குகள் நேர்ந்தாலும் மக்கள் அரசனையே பழித்தனர்(புறம்.75:4-5). மக்களின் இவ்வாறான பழிச்சொல்லுக்கு மன்னரும் அஞ்சினர் (புறம்.72:10-13). தம் நன்னடத்தையோடு, தம் குடிகளையும் நன்னடத்தை உடையவர்களாக விளங்கச் செய்தல் அரசனின் கடமை என்று வலியுறுத்தப்பட்டது(புறம்.312:4).

அஞ்சாமை, நற்குடிப்பிறப்பு, நாட்டைக் காத்தல், நீதி நூல்களைக் கற்றறிதல், முயற்சியுடைமை, செய்வதற்குரிய செயல் பற்றி ஆராய்தல், ஆராய்ந்து செய்தல், அறிவுரைகளைத் துணிந்து சொல்லுதல், அறங்களை அறிதல், அறிவு நிறைந்த சொல்லை உடையவனாதல், மதிநுட்பம் கொண்ட பெரியோரைத் துணையாகக் கொள்ளுதல் போன்ற குணங்களை அரசர்க்கு ஏற்றதாக வள்ளுவர் சுட்டுகிறார் (குறள்.632,634,635, 636).

### தலையாய பண்புகள்

அரசனுக்கு வேண்டும் பண்புகளாக, தம்மக்கள் செய்யும் பிழையைப் பொறுத்துக் கொள்ளுதல், பிறரது வறுமைக்குத் தான் நாணம் கொள்ளுதல், படையில் பிறரால் பழித்துக் கூறப்படாத வன்மை உடையவனாதல், மன்னர் கூடிய அவைக் களத்தில் மேம்பட நடத்தல் ஆகியவற்றைச் சுட்டுகிறார் குறமகள்

இளவெயினி (புறம்.157). அதேபோல, மன்னன் தீயவரைத் தண்டித்தலும், நடுவுநிலையிலிருப்போரை அருள் செய்தலும், இடைவிடாத முயற்சியை உடையவனாதலும், சோம்பல் இல்லாதவனாதலும் மேலும், நல்வினையிலும், தீவினையிலும் நம்பிக்கை இல்லோரிடமிருந்து விலகுதலும் வேண்டுமென உறையூர் முதுகண்ணன் சாத்தனாரும் தலைமைக்கான பண்புகளுள் சிலவற்றை வலியுறுத்துகிறார்(புறம் 29:9-12).

### அற நோக்கு

அறம் என்பதை வாழ்நாட் கடமையாகக் கொள்ள மன்னன் அறிவுறுத்தப்பட்டான். அறம் சார்ந்து 'நட்டவர் குடியுயர்க்குவை' (மதுரைக்.131) என வலியுறுத்தப்பட்டான். வறுமைத் துயரைக் களைய அறத்தை முதன்மை நிலையில் அற்றைச் சமூகம் போற்றியது. கொடைப்பழக்கமுடைய வேந்தன் இறந்துபட்ட போது, 'வித்தட்டு உண்டனை' என்று கூற்றுவனை நோக்கிக் கூறுகின்றார் புலவர் (புறம்.227).

*அருளும் அன்பும் நீக்கி நீங்கா*
*நிரயம் கொள்பவரொடு ஒன்றாது காவல்*
*குழவி கொள்பவரின் ஓம்புமதி* (புறம்.5:5–7)

என்று அரசர்க்குரிய நெறிமையிலிருந்து நீங்காதிருக்குமாறு நரிவெரூஉத்தலையார் அறிவுறுத்துவார். படைவலிமையும், கோட்டை, கொத்தளங்களும், வலியுடைய அரண்களும் அமையப் பெற்ற செல்வவளம் மிக்கதாகச் சமூகத் தலைமை இருந்தாலும் அறநெறியின்பால் செல்லுதலே முதன்மையாக்கப்பட்டது.

*வேந்துமேம் பட்ட பூந்தார் மாற*
*கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்*
*நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகன்மறவருமென*
*நான்குடன் மாண்டது ஆயினும் மாண்ட*
*அறநெறி முதற்றே அரசின் கொற்றம்* (புறம்.55:6–10)

### அறிவுடைமை

அறிவுறுத்த அமைச்சர்கள் அமைந்தாலும், அதில் நல்லனவற்றைத் தேர்ந்தெடுக்கும் அறிவின் நுட்பம் தலைமைக்குத் தேவையாகிறது. இதனால், மிக்க அறிவாளனான தலைமையைச் சமூகம் ஏற்றது. 'புலவரை இறந்த புகழ்சால் தோன்றல்' (புறம்.21:1) என்று, புலவர்களின் அறிவின் எல்லையைக் கடந்த புகழுடைய தலைவனைப் போற்றியது. அதேபோல,

*இருமுந்நீர்க் குட்டமும்*
*வியன்ஞாலத்து அகலமும்*
*வளிவழங்கு திசையும்*
*வறிதுநிலைஇய காயமும், என்றாங்கு*
*அவையளந்து அறியினும் அளத்தற்கு அரியை*
*அறிவும் வீரமும் பெரும் கண்ணோட்டமும்* (புறம். 20:1–5)

என்று சிறப்பித்தது. இதில், பெரிய கடலின் ஆழமும், அகன்ற உலகத்தின் பரப்பும், உலவும் திசையும், உருவம் இல்லாத நிலையான வானமும் எனக் கூறப்படுவனவற்றை இன்னவை என வரையறுத்து அறிந்து கொண்டாலும், அவன் அறிவு, வீரம், மிக்க கண்ணோட்டம் ஆகியவற்றை அறிவதற்கு இயலாது என்று புகழ்கிறார் புலவர்.

### அருளுடைமை

மன்னன் காட்சிக்கு எளியவனாவதோடு, வறுமையால் தம்மை நாடி வந்தோரது துயரினைப் போக்கவல்ல அருளுடையவனாகவும் அமைதல் வேண்டும். தம்மை நாடி வந்தோரில், உயர்வு தாழ்வு கருதாது, அவரின் வறுமை ஒன்றினையே கருதியவனாக அருள் செய்தல் வேண்டும். இதனை,

*வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும்*
*வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி*
*அருள வல்லை ஆகுமதி* (புறம்.27:15–17)

என்று வலியுறுத்துவார் உறையூர் முதுகண்ணன் சாத்தனார்.

### காட்சிக்கு எளிமை

அரசன் என்பவன் காட்சிக்கு எளியவனாக, கடுஞ்சொல் அற்றவனாக இருத்தல் வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டது.

*அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து*
*முறைவேண்டும் பொழுதின் பதன் எளியோர் ஈண்டு*
*உறை வேண்டு பொழுதில் பெயல்பெற் றோரே* (35:14–16)

என்கிறது புறநானூறு. இதில், நீதிகேட்கும் நிலையில் காட்சிக்கு எளிய தன்மையாய் இருத்தலால், கேட்பவர் இங்கு மழை வேண்டிய காலத்தில் மழையைப் பெற்றவர் ஆவர் என்கிறார் வள்ளைக்குடி நாகனார். மேலும், தம் மக்களுக்குக் காட்சிக்கு

எளியனாகவும், பகைவர்க்கு அருமையானவனாகவும் விளங்கிய அதியமானை,

*ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்*
*நீர்த்துறை படியும் பெருங்களிறு போல*
*இனியை பெரும எமக்கே மற்றதன்*
*துன்னரும் கடாஅம் போல*
*இன்னாய் பெருமநின் ஒன்னா தோர்க்கே* (புறம்.94)

என்று ஔவையாரும் புகழ்வார்.

### அரச நீதி

முறையுடைய அரசே குறையில்லாத அரசாகப் போற்றப் பட்டது. அரசு முறை செய்க! *(ஐங்குறு.8)* என்கிறது ஐங்குறுநூறு.

*சினனே காமம் கழிகண்ணோட்டம்*
*அச்சம் பொய்ச் சொலல் அன்புமிக உடைமை*
*தெறல் கடுமையொடு பிறவும் இவ்வுலகத்து*
*அறந் தெரி திகிரிக்கு வழியடையாகும்* (பதி.22:1–4)

என்று அரசர்க்கு வேண்டாத பண்புகள் பட்டியலிடப்பட்டன. இதில், மிக்கசினமும், மிக்க காமமும், மிக்க கண்ணோட்டமும், பகைவர்க்கு மிக அஞ்சுதலும், வாய்மையுடன் பொருந்தாத பொய் சொல்லுதலும், தொடர்பு கொண்டவரிடம் அளவற்ற அன்புடைமையும், அளவற்ற தண்டத்தைச் செய்தலும் இவை போன்ற பிறவும் இவ்வுலகத்தில் அறம் வழி நின்ற அரசியலுக்குத் தடைகளாகச் சுட்டப்படுகின்றன. எனவே,

*முறை வேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும்*
*வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கு அருளி*
(பெரும்பாண்.443–444)

என, தம்மிடம் முறையிட்டோருக்கும், குறை வேண்டுநர்க்கும் தேவையான பொழுது தேவையானதை அருளி, சமூக நீதியைப் பழந்தமிழ் மன்னர்கள் நிலைநாட்டினர்.

### நடுவுநிலை தவறாமை

தலைமைக்காகும் தன்மைகளுள் குறிப்பிடத்தக்க மற்றொன்று நடுவுநிலை தவறாமையாகும். கொடுங்கோலன் என்ற கூற்றுக்கு ஆளாகாமல் இருக்க, நன்றையும் தீதையும் பிரித்தறியும் திறமும்,

அன்பின் காரணமாக முறைமாற்றி நீதிவழங்காத பண்பையும் கொண்டிருத்தல் வேண்டும். எனவே, நடுவுநிலையிலிருந்து நீதி வழங்க வேண்டும் என்பது சுட்டப்பட்டது(புறம்.239). இதற்குத் தீக்குணம் இல்லா நல்லமைச்சர்களைத் தம் அருகில் அமர்த்துதல் வேண்டும்.

*நடுவு இகந்து ஒரீஇ நயன் இல்லான் வினை வாங்க*
*கொடிது ஓர்த்த மன்னவன் கோல் போல ஞாயிறு*
*கடுகுபு கதிர் மூட்டிக் காய்சினம்* (கலி. 8:1–3)

என்ற கலித்தொகையின் அடிகள், நடுவுநிலையைக் கைவிட்ட, அருட்குணம் இல்லாத அமைச்சன், தன் மனத்தில் எழுந்த தீசெயலை வெளிப்படுத்த, அதை அப்படியே கேட்டுக் கொடிய செயலைச் செய்யும் மன்னனின் செயலால் மக்கள் துன்புறுவர் என்கிறது. மேலும்,

*தெரிகோல் ஞமன் போல ஒருதிறம்*
*பற்றல் இலியரோ நின்திறம் சிறக்க* (புறம்.6: 9–10)

என்பதில், அரசர்கள் துலாக்கோலில் உள்ள நாபோல ஒரு பக்கத்தில் பொருந்தாது இருக்கவேண்டுமென்றும், நடுநிலையுடன் விளங்க வேண்டுமென்றும் வலியுறுத்துகிறார் காரிகிழார். இப்பண்பையே,

*சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்*
*கோடாமை சான்றோர்க்கு அணி* (குறள்.118)

என்கிறார் வள்ளுவர்.

**சமத்துவம்**

தொழில் அடிப்படையில் சமூகப் பாகுபாடு அமைவதைக் காணமுடிகிறது. அதேவேளையில், ஒருவனுக்குச் சேரவேண்டிய அடிப்படை உரிமைகள் எவ்வகைக் காரணத்திற்காகவும் மறுக்கப்படவில்லை என்பதும் தெளிவாகிறது. விருந்தோம்பலில் எளியோராகிய வழிப்போக்கருக்கு வழங்கப்பட்ட உணவே நாடாளும் மன்னன் வந்தாலும் வழங்கப்படும் என்பதிலே (புறம்.333) சமூகச் சமத்துவம் சுட்டப்பட்டது. அதேபோல,

*தென்கடல் வளாகம் பொதுமை இன்றி*
*வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்*
*நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்*
*கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்*

*உண்பது நாழி உடுப்பவை இரண்டே*
*பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே* (புறம்.189:1–6)

என்பதில், நாடாளும் மன்னனாக இருந்தாலும், வேட்டையாடி உண்ணும் வாழ்க்கையை உடைய கீழ்நிலையிலுள்ள கல்லாத ஒருவனானாலும் இருவருக்கும் பொதுவானது நாழி அளவு உணவும், இடைக்கும் மேலுக்குமான இரண்டு உடையுமே என்பார் நக்கீரனார். இதில் சமூகப் பாகுபாடு கருதாத சமத்துவப் பண்பு புலப்படும். மேலும், சமூகத்தில் எளியவன் ஒருவனின் நல்லறிவைப் புறந்தள்ளுதலோ, வலியவன் ஒருவனின் சிற்றறிவைப் போற்றுதலோ தவறு என்பதையும், அத்தகைய செயல்பாடுகள் பழந்தமிழகத்தில் இல்லை என்பதையும் இப்பாடல் அறிவிக்கும்.

*பெரியோரை வியத்தலும் இலமே*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே* (புறம்.192:12–13)

என்ற பொதுமை நோக்கும் அவற்றின் வெளிப்பாடே.

# தனித்தமிழ் இயக்கப் பார்வையில் செவ்வியல் இலக்கியங்களின் சமயநிலை

இந்தியாவின் சமூக வரலாற்றில் எந்த மாநிலத்திற்கும் இல்லாத சிறப்பு தமிழகத்திற்கு உண்டு. அச்சிறப்பு தமிழகத்தில் தோன்றிய பல்வேறு 'இயக்கங்களைச்' சாரும். தமிழகத்தில் மொழிக்காகவும், இன உணர்வுக்காகவும், தன்மான உணர்வுக்காகவும் தோன்றிய இயக்கங்கள் பல. அவற்றுள் குறிப்பிடத்தக்கது 'தனித்தமிழ் இயக்கம்'. உலகினரோடு தமிழர்க்கும் மொழியின் சிறப்பையும், தனித்தன்மையையும், தமிழ்ப் பண்பாட்டின் உயர்வையும் வெளிப்படுத்தி, மொழி உணர்வை வீறுகொண்டு பாய்ச்சிய பெருமை இவ்வியக்கத்திற்கு உண்டு.

தமிழக இயக்கங்கள் பொதுவாக தமிழை - தமிழினத்தை மேம்படுத்த வேண்டும், வளப்படுத்த வேண்டும் என்ற பெரும் பொருண்மைக்குள் இயங்கினாலும் தங்களுக்கென சிற்சில மாறுபட்ட கருத்து நிலைகளையும், கொள்கைகளையும் கொண்டவையாகவே திகழ்கின்றன. அவ்வகையில், தனித்தமிழ் இயக்கத்தின் பார்வையில் பழந்தமிழர் மதம் குறித்தான கருத்துநிலைகளைக் காண்பதாக இக்கட்டுரை அமைகிறது. மேலும், பிற இயக்கத்தினரின் சில கருத்துகள், மேலும் விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டு ஏற்பு-ஏற்பின்மை குறித்து முடிவுசெய்தல் வேண்டும் என்ற நிலையில் இருப்பது போன்றே, தனித்தமிழ் இயக்கத்தினரின் மதம் சார்ந்த கருத்துகளும் மேல் விவாதத்திற்கு உட்படுத்தவேண்டியவை. என்றாலும், தலைப்பின் தன்மை கருதி பழந்தமிழரின் மதம் குறித்த கொள்கையைத் தனித்தமிழ் இயக்கத்தினரின் பார்வையில் எடுத்தியம்புவதை மட்டுமே இக்கட்டுரை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**தனித்தமிழ் இயக்கம்**

தனித்தமிழ் இயக்கம், "தமிழ் மொழி, இயற்கையாகவே தனித்து இயங்கக்கூடியது; அதற்குப் பிறமொழிகளின் துணை தேவையில்லை என்ற கொள்கையின் அடிப்படையில் தோன்றியது

தனித்தமிழ் இயக்கமாகும். 'தனித்தமிழ் என்பது வேறு ஒரு தனிமொழியன்று; கலப்புத் தமிழினின்று அதை வேறுபிரிக்கவே அதைத் 'தூயதமிழ்' என்றும் 'தனித்தமிழ்' என்றும் அடைகொடுத்து வழங்க வேண்டுவதாயிற்று' என்கிறார் பெருஞ்சித்திரனார் *(இலக்கிய இயக்கங்கள், ப.59)*.

இவ்வியக்கத்தைத் தோற்றுவித்தவர் மறைமலையடிகள். ஆயினும், இக்கொள்கைக்கு வித்திட்டவர் மொழியியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு, தமிழின் தனித்தியங்கும் பண்பை உலகினரோடு தமிழருக்கும் உணர்த்திய இராபர்ட் கால்டுவெல் ஆவார். அவர் தமிழ் மொழியை வடமொழியுடனும் தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற திராவிட மொழிகளுடனும் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்து, அதுவரை இருந்த மொழியியல் நம்பிக்கைகளை உடைத்தெறிந்தார். 'வடமொழியே பிற மொழிகளுக்குத் தாய், அதிலிருந்தே மற்றமொழிகள் தோன்றின, அது தேவமொழி' என்னும் கருத்துக்களும் நம்பிக்கைகளும் வலிமையாகப் பரப்பப்பட்டிருந்த சூழலில், தமிழ் மொழி, வடமொழியின் துணையில்லாமல் இயங்க இயலாது என்ற நம்பிக்கை வேர் ஊன்றியிருந்த காலகட்டத்தில், கால்டுவெல்லின் ஆராய்ச்சி வேறுவிதமான உண்மைகளைக் கூறியது. வடமொழிக் குடும்பத்திலிருந்து தமிழ் வேறுபட்டது. அது, திராவிட மொழிக் குடும்பத்தின் தாய்மொழி. அதிலிருந்தே தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற பல மொழிகள் தோன்றின. தமிழ், வடமொழியின் துணையில்லாமல் தனித்தியங்கும் தன்மை வாய்ந்தது என்றும் தமிழ், வடமொழியின் கலப்பை எந்த அளவுக்கு நீக்குகிறதோ அந்த அளவுக்குத் தூய்மை அடைந்து சிறந்து விளங்கும்" என்றும் அவரின் ஆய்வு முடிவுகள் கூறின. இக்கண்டுபிடிப்பு 1956இல் நிகழ்ந்தது. அதன் விளைவாக எழுந்த நூல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' ஆகும்.

அதேபோல, மனோன்மணீயம் சுந்தரனாரும் அத்தகையதொரு மொழியியல் கருத்தைத் தாம் இயற்றிய மனோன்மணீயம் நாடகநூலின் தமிழ்த்தெய்வ வணக்கப் பாடலில் கூறியிருந்தார். அதில் 'கன்னடம், களிதெலுங்கு, மலையாளம், துளு ஆகிய மொழிகள் தமிழ் என்னும் ஒரே வயிற்றில் தோன்றிய மொழிகள்' என்றும், 'வடமொழி அழிந்துபோன மொழி என்றும் தமிழ் என்றும் இளமையாக வாழும்மொழி' என்றும் பாடிய அவர் கருத்தும் மறைமலையடிகளுக்கு முன்னோடி கருத்துக்களாக இருந்தன.

மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கம் தோன்றியது 1916ஆம் ஆண்டு என்றாலும், அதற்கு முன்பிருந்தே தமிழர்- ஆரியர் பற்றிய ஆராய்ச்சியில் அவர் ஈடுபட்டு உழைத்து வந்தார். அவர் தமிழ், ஆங்கிலம், வடமொழி என்னும் மும்மொழிகளில் புலமை பெற்றிருந்தார். ஆதலால், ஆரியர்களின் மறை, உபநிடதம் முதலியவற்றை நன்கு ஆய்ந்து உணர்ந்திருந்தார். அத்துடன் நில்லாது தம் இதழ்களில் எழுதியும் சொற்பொழிவுகள் செய்தும் அறிஞர்களிடத்திலும் பொது மக்களிடத்திலும் அக்கருத்துக்களைப் பரப்பிவந்தார். 1905ஆம் ஆண்டு பாண்டித்துரைத்தேவர் தோற்றுவித்த 4ஆம் தமிழ்ச்சங்க விழாவில் வலிமையான சொற்பொழிவு நிகழ்த்தினார். ஆரியர்க்குத் தமிழர் கடமைப் பட்டிருக்கவில்லை, அவர்களுக்கு முற்பட்ட சிறந்த நாகரிகம் தமிழ்மக்கள் நாகரிகம் என்ற அடிப்படையில் அவர் உரை விளங்கியது. இதனால் ஆரியப் பிடிப்புள்ள புலவர் சிலருக்கும் இவருக்கும் கருத்து மோதல்கள் ஏற்பட்டன என்பது செந்தமிழ் இதழ் சுட்டும் வரலாறு. ஆயினும், தமிழின் சிறப்பையும், வேதம் பலவற்றைத் தமிழர்களே உருவாக்கினர் என்னும் கருத்தையும் மறைமலையடிகள் தொடர்ந்து வெளிப்படுத்தி வந்தார்.

### தனித்தமிழ் இயக்க தோற்ற நிகழ்வு

மறைமலையடிகள் சைவ சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். தமிழையும் சைவத்தையும் இரு கண்களெனக் கொண்டவர். அவர் பல்லவபுரத்தில் தம் மகளாருடன் ஒருநாள் உலவிக்கொண்டிருந்தார். அப்போது அவருடைய மகளார் நீலாம்பிகை அம்மையார் இராமலிங்க அடிகளாரின் திருவருட்பாவிலிருந்து,

*பெற்றதாய்தனை மகமறந்தாலும்*
*பிள்ளையைப் பெறுந்தாய் மறந்தாலும்*
*உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்*
*உயிரை மேவிய உடல் மறந்தாலும்*
*கற்றநெஞ்சம் கலைமறந்தாலும்*
*கண்கள்நின் றிமைப்பது மறந்தாலும்*
*நற்றவத்தவர் உள்ளிருந்தோங்கும்*
*நமச்சிவாயத்தை நான்மற வேனே.*

என்ற பாடலை மனமுருகிப் பாடிய அவர், பாட்டின் இடையே "தேகம்" என்னும் ஒரு வடசொல் வருவதைக் கண்டு அது பற்றித் தந்தையிடம் பேசினார். இப்பாட்டில் எல்லாச் சொற்களும் தமிழாய் இருக்கின்றன. 'தேகம்' என்னும் ஒருசொல் மட்டும் வடசொல்லாக

இருக்கிறது. அதையும் மாற்றினால் நன்றாக இருக்குமே என்பதாக அவர்கள் உரையாடல் அமைந்தது. 'தேகம்' என்பதற்கு மாற்றாக "யாக்கை" என்னும் தனித்தமிழ்ச் சொல் இருந்தால் இனிமையாய் இருக்கும் என்று அடிகள் கூறினார். அவரின் மகளார், 'தந்தையே இனிமேல் நாம் ஏன் வடசொற்களை நீக்கி முற்றிலும் தனித்தமிழைப் பயன்படுத்தக் கூடாது?' என்று கேட்டார். இது 1916 இம் ஆண்டு நிகழ்ந்தது. அது முதல் அப்படியே செய்ய எண்ணிப் பல மாற்றங்களை மறைமலையடிகள் செய்யத் தொடங்கினார். 'உன்னிலிருந்து தொடங்கு' என்பதைப்போல, இவர்கள் தம்மிலிருந்தும் தமது இல்லிலிருந்தும் தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கினர் என்பது சிறப்பு.

**விளைவுகள்**

மறைமலையடிகளும் அவர் மகள் நீலாம்பிகையும் ஒப்புக்கொண்ட கொள்கையின் விளைவாக அடிகளாரின் பெயரும் அவரின் பிள்ளைகளின் பெயர்களும் வடமொழியில் இருந்து தமிழுக்கு மாறின. வேதாசலம் என்ற அவருடைய இயற்பெயர் மறைமலையடிகளானது. அவருடைய பிள்ளைகள் பெயர்களும் அவ்வாறே அவர் மகள் நீலாவால் மாற்றப்பட்டன. மகன்களான திருஞான சம்பந்தன் - அறிவுத் தொடர்பன் என்றும், மாணிக்கவாசகம் - மணிமொழி என்றும் சுந்தரமூர்த்தி - அழகுரு என்றும் மகள் திரிபுர சுந்தரி - முந்நகரழகி என்றும் மாற்றப்பட்டனர். அதேபோல, அவர் நடத்திய மாதஇதழான 'ஞான சாகரம்' - அறிவுக்கடல் என்றாயிற்று; அவர் நடத்திய 'சன்மார்க்கசங்கம்' - பொதுநிலைக்கழகம் என்றாயிற்று;

ஆரியத்தை நீக்கிய தமிழ்த்திருமணம், திருவள்ளுவர் ஆண்டுமுறை, தமிழர் மதம், தமிழரின் நான்மறை முதலிய கோட்பாடுகள் முதன்முறையாகத் தமிழ் நிலத்தில் அவரால் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றைத் தம் குடும்பத்தில் பயன்படுத்தி எடுத்துக்காட்டாய் வாழ்ந்தார். அவருடைய கருத்துகள் மத மூடநம்பிக்கைகளையும் வேள்வி நிகழ்த்துதல், ஆரியவழிபாட்டு முறைகள் முதலியவற்றையும் எதிர்த்தன. பெரியாரின் தன்மான இயக்கத்திற்கும் அடிகளாரின் ஆய்வு முடிவுகளும், கருத்துகளும் பெரிதும் பயன்பட்டன.

மறைமலையடிகளைப் பின்பற்றியே தமிழ்த் திருமணம், தமிழர் மதம் ஆகிய கொள்கைகளைப் பெரியார் பரப்பினார். ஆரிய ஏமாற்று, மூடநம்பிக்கைகள், மதச்சடங்குகள், முதலியவற்றையும் பெரியார் மக்களிடத்தில் பரப்பினார். அவரிடமிருந்து பிரிந்து

உருவான திராவிட முன்னேற்றக் கழகமும் அதே கருத்துக்களைப் பெரிய அளவில் மக்களிடத்தில் பரப்பியது. மக்களிடத்தில் மாற்றங்கள் நிகழ்ந்தன. தி.மு.க-வினர் வடமொழியிலிருந்த தம்பெயர்களைத் தனித்தமிழில் மாற்றிக்கொண்டனர். தமிழ்த் திருமண முறையைப் பின்பற்றத் தொடங்கினர்.

### தேவநேயப் பாவாணர்

மறைமலையடிகள் காலத்தில் அவரைப் போன்ற ஆற்றலுடன் 'வேர்ச்சொல்' ஆய்ந்த தேவநேயப்பாவாணர் மொழியியல் வளர்ச்சிப்பணியைச் செய்தார். சொற்பிறப்பியல் அகரமுதலி தமிழுக்குப் பலவகையான நன்மைகளும் செய்யும் என்ற எண்ணத்தை அவர் அறிஞர்களிடத்தில் உருவாக்கினார். 1950இல் மறைமலையடிகள் மறைந்த பின்னர் இயக்கத்திற்குத் தலைவராகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். அவர்க்கு அன்பர் பலர் தோன்றினர். அவருடைய மாணவர் துரை.மாணிக்கம் என்ற பெருஞ்சித்திரனார் தனித்தமிழ்ப் பணிகளில் ஆர்வம் கொண்டு பலவகைப் பணிகளை ஆற்றினார். அவரது "தென்மொழி" என்னும் மாத இதழ் குறிப்பிடத்தக்க தனித்தமிழ்ப் பணிகளைச் செய்தது. பாவாணரைத் தலைவராய்க் கொண்டு 'உலகத்தமிழ்க்கழகம்' என்னும் அமைப்பைப் பெருஞ்சித்திரனார் பரவலாக்கினார். உலகத் தமிழ்க்கழகம் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் என பதவிகளைக் கொண்டு முறைப்படுத்தப்பட்ட அமைப்பாக மாறியது. மாவட்டந்தோறும் கிளைகள் தோன்றின. கொள்கைகள் வகுக்கப்பட்டன. தனித்தமிழ் உணர்ச்சி தமிழ்நாடு முழுவதும் பரவலாகப் பேசப்படும் அளவில் பணிகள் சில நடைபெற்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்க பணி பெயர்ப்பலகைத் தமிழாக்கப்பணியாகும். இப்பணியைத் தனித் தமிழ்க்கழகம், தமிழ்காவற்குழு ஆகியவற்றை அமைத்து அவற்றின் வாயிலாக நண்பர்கள் துணையுடன் செய்தார்.

### தனித்தமிழ் இயக்கத்தினரின் சமயக் கொள்கை

#### மறைமலையடிகளார்

பண்டைத் தமிழ் இலக்கணமான தொல்காப்பியத்தில் 'மதம்' என்னும் சொல்லோ, 'சமயம்' என்னும் சொல்லோ எவ்விடத்தும் காணப்படவேயில்லை. இதுகொண்டு பல்வகை மதங்களும் இத் தமிழ்நாட்டில் தோன்றுதற்கு முன்னமே தொல்காப்பியம் இயற்றப்பட்டமை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு

விளங்கும் (தமிழர் மதம், அடிகளார், ப10) என்கிறார் அடிகளார். மேலும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து முன்னில்லாத சமயப் பகுப்புகளும் மத மாறுபாடுகளும் இத்தென்றமிழ் நாட்டிற் தோன்றித் தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதைத்து, அவரை ஒருவரோ டொருவர் மாறுபடச் செய்து அலைக்கழிக்கலாமை தெரிகிறது (தமிழர் மதம், அடிகளார்,ப.21) என்ற முடிவிற்கும் வருகிறார்.

'வடநாட்டுப் பார்ப்பனரைத் தொடர்ந்து இத்தமிழ்நாடு போந்து நிலைபெற்ற பௌத்தர் சமணர்களாலேதாம் இங்கே பல்வேறு மதங்களும் தம் வழக்குகளும் கிளைக்கலாயினவென்று அறிதல் வேண்டும்' (அடிகளார், ப.22). சமயம், மதம் என்ற பெயரும் அப்பெயராற் குறிக்கப்படும் கொள்கைகளும் இல்லாமல், எல்லாம் ஒரே கொள்கையினராய் அமைதியாய் எல்லாம் வல்ல ஒரு முழுமுதற் கடவுளை வணங்கிக்கொண்டு இனிதுயிர் வாழ்ந்த தமிழ் மக்களிடையே வடக்கிருந்து வந்து நிலைபெற்ற பௌத்த சமண சமயத்தவராலும் அவர்க்குப் பின்வந்த குழுவினராலுமே பல்வேறு மதங்களும் மதப் போர்களும் இந்நாட்டின்கண் மேன்மேற் கிளைத்து வரலாயின வென்றுணர்ந்து கொள்ளல் வேண்டும்' (அடிகளார், ப.23) என்ற கருத்தையும் முன்வைக்கிறார்.

பௌத்தம், சமணம் என்னும் சமயங்கள் இரண்டும் வடநாட்டகத்திருந்த பழைய தமிழ் மக்களிடையே தோன்றிச் சிறிதேறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறாண்டுகளாக இவ்விந்திய நாட்டில் நிலவியவைகளே. ஆதலால், இவையிரண்டனையும் தமிழர் மதம் எனக் கொள்ளாமை வேண்டும் என்கிறார். அப்படியாயின் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகத்தில் கடவுள் கொள்கை என்னவாக இருந்தது என்ற கேள்விக்கு, 'பண்டைத் தமிழர் தாம் ஒளிவடிவிற் கண்ட முழுமுதற் கடவுளை அவ்வொளி வடிவில் வைத்து வழிபடுதலையே தமக்கு முதற்பெருங் கொள்கையாகக் கொண்டனர். அதனை அடுத்தே கொல்லா அறத்தினைத் தமக்குச் சிறப்புடைக் கொள்கையாகக் கொண்டனர்' (தமிழர் மதம், அடிகளார், பக்.146-147) என்பது அடிகளாரின் விடையாக உள்ளது.

## ஒளிக்கடவுள் - அம்மையப்பர்

பண்டைத் தமிழர் முழுமுதற் கடவுளாக அம்மையப்பரைக் கண்டனர். அக்கடவுளை ஒளி வடிவாக வழிபட்டனர் என்கிறார் அடிகள். 'பண்டைக் காலத்தில் இந்நிலவுலகின் பல பகுதிகளிலும்

உறைந்தவரான நாகரிகமக்கள் குழுவினர் அனைவரும் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை 'அம்மையப்பர்' வடிவினராகவே வைத்து வழிபட்டு வந்தனர்; பழைய தமிழ் முன்னோர் ஒளிவடிவே இறைவன் வடிவென உணர்ந்தபின், பகற்காலத்தே பேரொளிப் பிழம்பாய்த் துலங்காநின்ற கதிரவனையே கடவுளாகக் கருதி வழிபட்டு வரலானார்; பேரோளிப் பிழம்பாக இறைவனைக் கண்டு வணங்கி வந்த பண்டைத் தமிழர் நாளேற நாளேற அவன்பால் அன்புமீதூரப் பெற்று, அதனால் அவனை எட்டாத்தொலைவில் வைத்து வழிபடுதலில் மனநிறைவு பெறாராய், அவன்போன்ற ஓர் ஒளியுருவினைத் தமதெதிரே நிறுத்தி வழுத்துதற்குப் பெருவிழைவு கொண்டனர்(தமிழர் மதம், ப.*94*, ப.*151*) என்கிறார்.

**தீயின் வடிவமே சிவலிங்கம்**

ஒளிக்கடவுள் என்னும் இக்கருத்தை மையமிட்டே சிவன் என்னும் கடவுள் உருவாக்கம் அமைந்தது என்பதும், அவ்வொளிக் கடவுளை அருகிலிருந்து வழிபட. எண்ணிய பழந்தமிழரின் விருப்பே நெருப்பை உண்டாக்கி அதில் சிவனைக் கண்டது என்பதும் அடிகளாரின் கருத்து.

'தீ'க்கு முன்னோர் கொடுத்த வடிவமே சிவலிங்கம்(தீ அணையாமல் இருக்க வட்ட வடிவிலான கல். அதன் நடுவில் எழுந்து எரியும் தீ - அதற்கான உருவம் சிவலிங்கம்). அம்முது மக்கள் தீக்குழியையும் அதில் வளர்ந்தெரியும் தீச்சுடரையும் ஒப்பதாகத் தாம் கருங்கல்லில் சமைத்து நிறுத்திய பண்டைத் திருவுருவே பிற்காலத்திற் சிவலிங்கம் என்னும் பெயரால் வழங்கப்பட்டு வரலாயிற்று என்றுணர்தல் வேண்டும் என்பதோடு, ஆரியர் வருகைக்கு முன்பே பழந்தமிழர் இத்தீவடிவான சிவலிங்கத்தை அமைத்து வழிபட்டனர் என்பதற்குச் சான்று அரப்பா, மொகிஞ்சதாரா சிதைவுகள் என்பதும் அடிகளார் முன்வைக்கும் கருத்துகளாக உள்ளன (தமிழர் மதம், ப.*155*).

பின்னாளில் சிவலிங்கத்தின் உருவமாக அமைந்தது மண்ணைத் தோண்டி தீமூட்டி, அத்தீ மேலெழுந்த அவ்வுருவமே. அத்தீயின் குறியீடாகவே சிவலிங்க வழிபாட்டின் இறுதியில் ஓர் ஒளியினைக் காட்டி முடிக்கின்றனர். இதுவே இன்று விளக்குத் திரியொளி யாகவும், கருப்புரக் கட்டியொளியாகவும் காட்டப்படுகிறது. இக்கால கட்டத்தில் மக்கள், தாம் நிலையாக இருந்து உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதனவான இல்லங்களை முதலில் மரங்களாலும் பின்னர்ச் சிலகாலங்கழித்துக் கற்களினாலும்

அமைக்கலாயினர். இறைவனைப் பழந்தமிழர் 'கோ' என்னும் ஓரெழுத்து ஒருமொழியால் அழைத்தமையின், அவ்விறைவனைச் சிவலிங்க உருவில் எழுந்தருளச் செய்து, தாம் அமைத்த ஓர் இல்லினையும் அம்மொழியோடு சேர்த்துக் 'கோயில்' என வழங்கலாயினர் என்பது அடிகளாரின் கருத்தாக உள்ளது.

## அசுரர்

தமிழர்களை 'அசுரர்கள்' என ஆரியர்கள் குறிப்பிட்டதற்கான காரணத்தைப் பின்வருமாறு விளக்குகிறார் அடிகளார். தமிழர்களை அழிக்க ஆரியர்கள் வேண்டிக் கொண்ட ஆவிகளே இந்திரன், வருணன், மித்திரன் ஆகியோர். ஆரியர் வேள்வியில் சோமப்பூண்டின் சாற்றைக் கொண்டு மதுபானம் தயாரித்தனர். அதைப் பருகிய அவர்கள் தங்களைச் 'சுரர்' என்று அழைத்துக் கொண்டர். அதைப் பருகாத தமிழர்களை 'அசுரர்' என்று அழைத்தனர் என்கிறார். இதில், ஆரியர்களால் தமிழர்கள் சிறுமைப் படுத்தப்பட்டக் காரணத்தைத் தெரிவிக்கிறார்.

## நந்தி மற்றும் பலிபீடம்

வேள்வித் தீயில் பசுவைப் பலியிடுதல் ஆரியர் வழிபாட்டு முறைகளுள் ஒன்று. ஆரியர் தென்னகம் புகும்பொழுது பசுவைத் தெய்வமாகப் போற்றிய தமிழர்களின் பண்பாடு அவர்களின் பசுவதை யாகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. ஆயினும் மாட்டை வெட்டிப் பலியிடும் அவர்களின் வழிபாட்டு முறைகளைப் பெருங்கோயில்களின் குறியீடுகள் அடையாளப்படுத்துகின்றன.

இதனை, 'வேள்வித் தீக்கு எதிரிலே மாட்டை வெட்டி (ஆரியர்) அதன் தசையை அதற்குப் படைத்தெடுத்துத் தின்னல் பெருந்தீவினையாதலில் அதனைத் தமக்கு மெய்ப்பொருள் அறிவுறுத்திய தமிழாசிரியர் துணைகொண்டொழித்து, வேள்விக் குண்டத்திற்கும் அதன்கண் வளர்க்கப்பட்ட தீச்சுடருக்கும் அறிகுறியாக அமைத்து, நிறுத்தப்பட்ட சிவலிங்கத்தின் எதிரிலே அதனைச் சென்றணுகுந் தூய உயிருக்கும் முன் வேள்விக் களத்தே வெட்டப்பட்ட மாட்டுக்கும் அடையாளமாக ஒரு மாட்டினுருவைக் கல்லில் சமைத்து அதற்கு 'நந்தி' என்னும் பெயர் சூட்டி அதனைச் சிவலிங்கத்தின் எதிரே நிறுத்தலாயினர்' (பக்.158-159) என்று விளக்குகிறார்.

அதேபோல, சிவலிங்கத்தின் எதிரே மாட்டின் உருவை நிறுத்துங்கால், முன்னே வேள்விக்களத்தில் மாட்டின் தலையை வைத்து வெட்டுதற்கு இடமாயிருந்த மேடையைப் 'பலிபீடம்'

எனப் பெயர் தந்து, அதனையும் அம்மாட்டிற்குப் பின்புறத்தே அமைத்து வைக்கலாயினர் (ப.159) என்கிறார்.

முருகன் - சிவன்

முருகனும் சிவனும் இருவேறு வடிவங்களில் வழிபடப் படினும் இருவரும் ஒன்றே என்பது அடிகளாரின் கூற்று. காலத்தின், பண்பின் தன்மைக்கேற்பவே முருகன் மற்றும் சிவன் என்னும் இரண்டு பெயர்கள் வழங்கப்படலாயின. சொல்லொற்றுமையிலும் பொருளொற்றுமையிலும் இரண்டும் ஒன்றே என்கிறார்.

சிவன் என்னுஞ் சொல் முருகப் பிரான் பெயராகப் பண்டைத் தொல்காப்பிய நூலுள் ஓதப்பட்ட சேயோன் என்னுஞ் சொல்லின் திரிபேயாகும் (ப.122). காலைஞாயிறு இளஞ்செவ்வியதாகலின் முருகவேள் எனவும் மாலைக் காலத்து ஞாயிறு முதிர்ந்து செவ்விய தாகலிற் சிவபெருமானெனவும் கருதப்பட்டமையின் இளமுருகன் சிவபிரானுக்கு மகனெனக் கொள்ளப்பட்டான் (காலை சூரியன் - முருகன்; மாலை சூரியன் சிவபெருமான்).

சேயோனாகிய முருகப்பிரான் விடியற்காலையிற் கிழக்கே மேலெழுந்து கதிர் விரிக்கும் இளவள ஞாயிற்றின் திருவுருவே யாகலின், அவன் என்றும் இளையோன் எனப்பட்டான். கதிரவனுக்குக் கீழ்த் தோன்றும் நீலநிறக் கடலே அவன் ஊரும் நீலமயிலாகவும் கருதி வழுத்தப்படலாயினவென்க (ப.164).

எனினும் காலை ஞாயிறும் மாலை ஞாயிறுங் கால வேறுபாட்டால் இரண்டாகக் காணப்படினும், பொருளளவில் இரண்டும் ஒன்றேயாதல் எல்லார்க்கும் ஒப்பமுடிந்தமையின், முருகப்பிரானும் சிவபிரானும் இருவராக வைத்து வணங்கப் பட்டாலும் இருவரும் ஒருவரேயென்பது ஆராய்ச்சிவல்லார்க் கெல்லாம் ஒத்த கருத்தேயாம் (ப.165).

சேயோன் என்னும் சொல்லும் சிவந்த நிறத்தினன் என்னும் பொருளையே தருகிறது. சிவன் என்னும் சொல்லும் சிவந்த நிறத்தினன் என்னும் பொருளையே தருகிறது. எனவே பொருளொற்றுமையாலும் சொல்லொற்றுமையாலும் முருகனும் சிவனும் ஒரே முழுமுதற் கடவுளாதல் பெறப்பட்டமை காண்க (ப.165) என்பவை அடிகளாரின் விளக்கங்களாக உள்ளன.

மேற்கூறியவற்றின் அடிப்படையில், பழந்தமிழரின் மதம் என்பது சைவமே என்கிறார் அடிகளார். அது சிவனை வழிபடுவதாக இருந்தாலும், முருகனை வழிபடுவதாக இருந்தாலும், தாய்

வழிபாடான உமையம்மை வழிபாடாக இருந்தாலும் சமயம் என்று நோக்கும்பொழுது அது சைவம் மட்டுமே என்பது இவர்தம் முடிவு.

'சிவ' என்னும் சொல் தமிழர் வணங்கிய முழுமுதற் கடவுளுக்குச் சாலச்சிறந்த பெயராகவும், அவரது மதம் அச்சொல்லின் வழியே 'சைவம்' என்னுஞ் சிறப்புப் பெயருடைய தாகவும் வழங்கி நிலைபெறலாயினவென்று ஓர்ந்து கொள்க *(அடிகளார்,ப.130)* என்கிறார்.

**சைவம் - வைணவம்**

சைவம் வைணவம் இரண்டும் ஒன்றே என்பது அடிகளாரின் கருத்து. நீண்ட காலம் வரையில் அப்பனையும் அம்மையையும் வணங்கிவந்த பண்டைத் தமிழர், பின்னர் இருவேறு வகையினராய்ப் பிரிந்து அப்பனையே வணங்குவோர் ஒரு குழுவினராயும், அம்மையையே வணங்குவோர் மற்றொரு குழுவினராயும் நிலைபெறலாயினர். இவ்விருவேறு குழுவினரில் அப்பனை வணங்குவோர் அம்மையை வணங்குவோரையும், அம்மையை வணங்குவோர் அப்பனை வணங்குவோரையும் இழித்துப் பேசிக் கலாம் விளைக்கலாயினர். இக்கொள்கைப் போரில் இரு குழுவினரும் பெண்பிறவியைக் குறைவாகக் கருதவும் பேசவுந் துவங்கவே, அம்மையை வணங்கிய குழுவாரில் ஒரு பெரும் பகுதியார் கடவுளைப் பெண் வடிவில் வைத்து வழிபாடு புரிதல் தமக்கு இழிவெனக் கருதி அம்மையையும் அப்பனாக்கி அவற்கு 'மாயோன்', திருமால்' எனும் பெயர்களைப் புனைந்து விடலாயினர் (தமிழர் மதம்,ப.135-136) என்பது திருமால் உருவாக்கம் குறித்த அடிகளார் முடிவாக உள்ளது.

இதற்குச் சான்றுகளாக, பெருமான் என்று வழங்காமல் பெருமாள் எனப் பெண் பெயரால் வழங்குதல்; திருமால் மோகினி வடிவம் கொண்டு சிவனோடு சேர்ந்து சாத்தனை பெறுதல்; திருமால் உமையம்மைக்குத் தமையன் என வழங்குதல்; உமையைப் போன்றே திருமாலை நீலநிறமாகக் காட்டுதல் போன்றவற்றைச் சுட்டுகிறார். இவ்விரு பிரிவினரும் தங்களை வேறுபடுத்திக்கொள்ள சைவர், வைணவர் என அழைத்துக்கொண்டனர். ஆயினும், இவ்விருவரும் கடவுள் விரோத போக்கு கொண்டிராமல், இரு கடவுளையுமே வணங்கினர். 'அரியும் சிவனும் ஒன்னு; அறியாதார் வாயில் மண்ணு'. எனவே, இவ்விரு மதங்கள்தான் தமிழர் மதங்களே அன்றி வேறில்லை என்பது அடிகளாரின் தமிழர் மதம் பற்றிய கொள்கையாக அமைகிறது.

சைவ-வைணவ பூசல் பற்றிக் குறிப்பிடுமிடத்து, வடக்கிருந்து வந்தவர்கள் பிறவியே இல்லாத முழுமுதற் கடவுளாகிய திருமாலுக்குப் பலபிறவிகளைக் கற்பித்துப், பொய்யும் புனை சுருட்டும் நிரம்பத் தாம் அம்மொழியிற் கட்டவிட்ட புராண கதைகளில் திருமாலின் பிறவிகளை உயர்த்திச் சிவ பிரானை மக்களினுங் கடைப்பட்டவராகத் தாழ்த்தி, வைணவர்க்கு முறைகாலத்திலில்லாத வெண்மண் செம்மண் குறியீடுகளையும் அவரது நெற்றியிற் தீட்டி, இவ்வாற்றால் வைணவர் சைவரோடு பெரிதும் இகலிக் கலாம் விளைக்குமாறு செய்து விட்டனர் என்கிறார்.

'சமய உணர்ச்சி சிலர் மட்டும் விரும்பக்கூடிய அலங்காரப் பொருள் அன்று. மக்களை விலங்கினின்று பிரித்து தெய்வ மாக்குவதற்கு இன்றியமையாது வேண்டப்படும் சக்தியாகும் அது' என வலியுறுத்துகிறார் அடிகளார். 16 வயதிலேயே இந்து மதாபிமான சங்கத்தைத் தோற்றுவித்தவர்; தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவர்; 40க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர்; குறிப்பாக தமிழர் மதம், பழந்தமிழ்க் கொள்கையே சைவம் போன்ற சைவத்தை வலியுறுத்தும் நூல்களை எழுதியவர். மேலும், இது தொடர்பாக பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியவர். தனித்தமிழை நிலைநிறுத்துவதும், சைவத்தைப் பரப்புவது இவரது வாழ்நாள் பணிகளாக அமைந்தன.

'கனவிலும் நனவிலும் தமிழையும் சைவத்தையும் எண்ணி வருகிறேன். இன்னும்யான் இப்படியே எண்ணிவர இறைவன் அருள் செய்வானாக' என்கிறார். ஆக, இவருடைய கருத்துகளும் செயல்களும் 'பழந்தமிழர் மதம் சைவமே' என்பதை வலியுறுத்து வதும், நிறுவுவதும், நிலைநிறுத்துவதுமாக இருந்ததை அறிய முடிகிறது. தமிழே சிவமாகவும் சிவமே தமிழாகவும் அடிகளுக்குத் தோன்றின.

பாவாணர் கிறித்துவர். பாவாணர் 'கிறித்துவக் கீர்த்தனம்' என்ற நூலை 1932இல் எழுதி வெளியிட்டபின் சமயச்சார்பில் எதனையும் எழுதவில்லை. தம் மக்களுக்குச் சமயச் சார்பிலாத் தனித்தமிழ்ப் பெயர்களைச் சூட்டினார். எத்தகைய சமயச்சார்பு வினைப்பாடு களிலும் அவர் ஈடுபட்டதில்லை. வாழ்நாள் இறுதிவரை அவர் பணியாற்றியதெல்லாம் தமிழுக்கும் தமிழர்க்குமே. தமிழர் இயக்கத்தைச் சமய நெறியில் அமைத்தல் வேண்டும் எனக்

கருதியவர் மறைமலையடிகள். பாவாணர் சமயப் பற்றுள்ளவர் எனினும் தமதியக்கத்தைச் சமயத்தோடு தொடர்பு படுத்தவில்லை. தாம் கிறித்தவராயினும் தம் ஆய்விற்கண்ட முடிபான 'சிவமதமும் திருமால்மதமும் தமிழ் மதங்களே' என்பதைச் சான்றுகாட்டி நிறுவியர்.

உலகத்தமிழ்க் கழகத்தின் முதல் நோக்காக, 'குல, மத, கட்சிக் சார்பின்றியும், தன்னல, வணிக, விளம்பர நோக்கின்றியும், குமரிநாட்டு மரபைத் தழுவியும், மறைமலையடிகள் காட்டிய வழியைக் கடைப்பிடித்தும் எல்லாத் துறையிலும் தமிழைத் தூய்மையாக வளர்த்தல்' என்பதையும், 'உலகத் தமிழ்க் கழகத்திற்கு மதவியல் கொள்கையில்லை. கடவுளை நம்புவாரும் நம்பாதவரும் ஒருவரை ஒருவர் குறை கூறாது அதில் இருக்கலாம் என்றும் பாவாணர் அறிவித்தது இங்கு நோக்கத்தக்கது.

மேற்கண்ட கருத்துகளின் அடிப்படையில் அடிகளாரை மையமிட்ட தனித்தமிழ் இயக்கத்தின் தமிழர் மதம் பற்றிய கருத்துகளைக் கீழ்க்காணுமாறு வரையறுக்கலாம்.

- ★ இறைவன் 'அம்மையப்ப'-ராக வழிபடப்பட்டான்.
- ★ இறைவன் ஒளி வடிவானவன்
- ★ ஒளி வன்மை-மென்மை என்ற தன்மைகளைக் கொண்டது
- ★ வன்மையானது - சிவப்பு - சிவம் ; மென்மையானது - நீலம் - உமை
- ★ காலப்போக்கில் மென்மை - திருமாலாக மாறியது
- ★ தமிழர் சைவம் - வைணவமாகப் பிரிந்தனர்
- ★ ஆனால் அவர்களுக்குள் போர்கள் இல்லை.
- ★ சிவனும் முருகனும் ஒன்று
- ★ சிவன் - சிவந்த நிறத்தினன்; சிவன்தான் முருகன் (காலை - முருகு; மாலை - சிவன்)

# சங்க இலக்கிய அகவாழ்வில் ஆடவர்க்கான அறம்

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்களிலிருந்து காலத்தால் பிற்பட்டவை பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள். அறத்தை நேரடியாக வலிந்து வலியுறுத்தும் தன்மையை இப்பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் கொண்டுள்ளன. சங்க இலக்கியங்களில் அறம் வலிந்து வலியுறுத்தப்படுவதில்லை. எனினும், தேவையான இடங்களில் அறக்கருத்துகள் பாடல் கருத்தோடு இயைந்து அறிவுறுத்தப்படுவதைக் காணமுடிகிறது. மேலும், அறம் வாழ்வியலோடு இயைந்ததாக, இன்பமும் பொருளும் அறத்தின் வழிப்பட்டதாக அமைய நெறிப்படுத்தப் பட்டது. அவை, பாடல்களின் இடையே இழைந்தோடுகிற அற உணர்த்தல்களாக உள்ளன.

அவ்வகையில், புறநிலையில் அரசன், ஆட்சிமுறை போன்ற வற்றிற்கான 'அரசு' சார்ந்த அறங்கள் பரவலாகவும் தனிமனித அறமும் அவற்றின்வழி குடும்ப அறமும் ஆங்காங்கேயும் வலியுறுத்தப்படுகின்றன. அகநிலையில் மாந்தர்களான தலைவன், தாய் (நற்றாய்,செவிலி) போன்றோரோடு நேரடியாக 'அறன்' அல்லது 'அறம்' என்ற சொற்கள் பயின்று வருவதைக் காண முடிகிறது. இக்கட்டுரையில், ' தனிமனிதன், ஒரு குடும்பம்-குழு-அரசு போன்றவற்றில் இணைந்தே செயல்படுகின்றான்' என்ற சமூகவியல் கோட்பாட்டின் படியும் தனிமனித அறங்கள் சமூக அறங்களாக முன்னிறுதப்படுகின்றன என்பதன் வழியும் அகமாந்தர்களில் ஆடவர்க்கான அறம் பற்றிப் பேசுகிறது.

### அறம் என்னும் சொல்

'அறு' என்ற வினைச்சொல் அடியாகப் பிறந்ததே 'அறம்' என்னும் சொல். இச்சொல்லுக்கு அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என்ற பலவகைப் பொருள்கள் வழங்கப்படுகிறது. இதன் அடிப்படையில் அறம்

என்னும் சொல்லிற்கு, 'மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே - முழுநிறை வடிவமே அறம்' என்று சமூகவியல் விளக்கமும் 'பிறவிதோறும் மனிதனைப் பற்றிக்கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம்' என்ற ஆன்மீக விளக்கமும் தரப்படுகிறது(திருக்குறள் - நீதி இலக்கியம் - ப. 23).

மேலும், நல்ல அல்லது தீய செயல்கள் மூலம் தானே வெளிப்படும் மக்களுடைய நடத்தையைப் பற்றிய ஆய்வியல் கலையே 'எதிக்ஸ்' என வழங்கப்படுகிறது. இது தமிழில் 'அறவியல்' எனப்படுகிறது. 'எதிக்ஸ்' என்னும் இக்கிரேக்கச் சொல் முதன் முதலில் பழகிப்போன நடத்தை, வழக்கம், மரபு என்னும் பொருள்களை உணர்த்தியும் பின்னர் நடத்தை என்னும் பொருளையும் வழங்குவதாக உள்ளது.

தனிமனித நடத்தையின் சிறப்பால் அது பெரும்பாலோரால் பின்பற்றப்படுகிறது. நாளடைவில் அது ஒழுக்கமெனும் பண்பாக மலர்ந்து, வாழ்க்கை நெறியாக பின்பற்றவும் வலியுறுத்தவும் படுகிறது. எனவே 'அறம்' என்பது மனிதவாழ்வின் உயர் மதிப்பீடான விழுமியங்களை உருவாக்குவதாக அமைகிறது. அது மரபினருக்குத் தொடர்ந்து வழிவழி கற்பிக்கப்படுகிறது. அறத்தை மீறுவது சமூகக் குற்றமாக, தெய்வக் குற்றமாக கருதும் சூழல் உருவான நிலையில் 'சட்டம்' என்ற ஒன்று உருவானது எனலாம். இந்நிலையில், அறம் தவறிய சமூக ஒழுக்கச் செயல்களில் ஈடுபடுவோர் சட்ட தண்டனைக்கு ஆளாகினர்.

## இலக்கியத்தில் அறம்

இலக்கியதில் அறம் பல நிலைகளில் சுட்டப்படுகிறது. தனிமனித மற்றும் சமூகச் செயல்பாடுகளில் அறம் வலியுறுத்தப் பட்ட நிலையிலிருந்து, தனிமனிதர் எண்ணமும் அறத்தின் பாற்பட்டதாக இருக்க வலியுறுத்தப்பட்டது. மனம் தூய்மை யானதாக இருக்கவேண்டும் என்பதை,

*'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்' (குறள்.34)*

என்கிறார் வள்ளுவர்.

தனிமனித அறம் சமூகத்தோடு பொறுத்திப் பார்க்கப்பட்டது. தனி வாழ்க்கையில் மேற்கொள்ளப்படும் அறத்திற்கு எதிரான

செயல் சமுதாயத்திற்கு ஊறு பயக்குமென்று அஞ்சப்பட்டது. தலைவி, தாம் காதலிக்கும் தலைவனுக்குத் தன்னை மணமுடிக்காமல் அயலவர்க்கு தம் பெற்றோர் மணமுடிக்க எண்ணுவது அறமில்லாத செயல் என்று கூறுகிறாள். இந்த அறமில்லாத செயலால் வள்ளிக் கிழங்கும் கீழ்வீழாது; மலையின்மீது தேனுந்தோன்றாது என்று எண்ணுகிறாள் (கலி.*39:11-14*). இங்கு அறக்கோணல் தெய்வக் குற்றமாக, பாவச் செயலாகக் கருதப்பட்ட சமூகப் பார்வை தெரிகிறது.

சங்க இலக்கியங்களில் அறன்இல், மாசுஇல், நிறைஇல் போன்ற சொற்களின் பயன்பாடு காணப்படுகிறது. 'இல்' எனும் சொல்லின் முன் அறன், பண்பு, மாசு, மரன், வறன், நயன் . நார், நிறை, முனிவு, புலை, மாண்பு, அன்பு, அருள், ஊறு, அசை, ஈரம் போன்ற சொற்கள் பயின்று வந்துள்ளன. இவற்றுள், 'அறன்இல்' எனும் சொல் அன்னை, யாய் எனும் சொற்களோடு சேர்ந்து அறன்இல் அன்னை, அறன்இல் யாய் என வந்துள்ளது.

அறன் இல்லாத என்பதை உணர்த்தும் அறன்இல் எனும் சொல்லன்றி, 'அறனிலாளன்', 'அறனும் அன்றே', 'அறன் இன்று' எனும் சொற்றொடர்களும் சங்க அக இலக்கியத்துள் பயின்று வந்துள்ளன. இச்சொற்கள் தலைவன், தலைவியின் ஊர், அஃறிணைகள் குறித்து செவிலி, தோழி மற்றும் தலைவியால் சுட்டப்பட்டுள்ளன. ஆயினும், அறம், அறன் எனும் சொற்கள் பயின்று வருகிற இடங்களைக் கொண்டு மட்டுமே தலைவனுக்குச் சுட்டப்படுகிற அறத்தை வரையறுத்துவிட முடியாது. இச்சொற்கள் இடம்பெறாமல் ஆனால் கருத்து நிலையில் அறம் வலியுறுத்துகிற இடங்களையும் கருத்தில் கொண்டே தலைவனுக்கான அறக் கோட்பாட்டை வரையறுக்கமுடியும். மேலும், ஒரே வகையான செயல், தொடர்புடைய இருவேறு மாந்தர்களின் பார்வையில் வேறுபட்டு விளங்குவதையும் காணமுடிகிறது. அவ்வகையான செயல்களுக்குப் பொதுவானவர்களின் (சான்றோர்) கருத்து பெறப்பட்டு அறம் உறுதிசெய்யப்படுகிறது (எ.கா.உடன்போக்கு). அக வாழ்க்கையில் தலைவனுக்கான அறத்தை களவு, கற்பு என்ற இருநிலைகளிலும் பார்க்க முடிகிறது. இவ்விரு நிலைகளிலும் காணப்படும் மாந்தர்களான தலைவன், தலைவி, செவிலி, நற்றாய், தோழன், தோழி, வாயில்கள், கண்டோர் ஆகியோரின் கூற்றுகளின் வழி தலைவனுக்கான அற வரையறை பெறப்படுகிறது.

### களவு வாழ்வில் அறம்

தலைவனின் களவு வாழ்க்கையில் இணை மாந்தரான தலைவி மட்டுமே பெரும்பாலும் காட்டப்படுகிறாள். தலைவியோடு அவளின் பெற்றோர், தமையன்கள், உறவினர், ஊர் காட்டப்படுவதுபோல தலைவனைச் சுற்றி பிற மாந்தர்கள் பெரும்பாலும் காட்டப்படுவது இல்லை. தோழனே துணை நிற்கிறான். இக்களவு வாழ்க்கை தலைவனுக்கான அறங்கள் சிலவற்றைக் கொண்டுள்ளது.

தலைவனின் கூற்று புணர்ந்து நீங்கும் தலைவன், அல்லகுறிப்பட்ட தலைவன், தோழியை இரந்து பின்நிற்கும் தலைவன், இடித்துரைக்கும் பாங்கன்முன் தலைவன், மடல் வலித்த தலைவன், உடன் போகும் தலைவன், பிரிவு வலித்த தலைவன், இடைச் சுரத்து நின்ற தலைவன், பாசறைக்கண் தலைவன், வினை முற்றி மீளும் தலைவன் எனப் பல்வேறு சூழல்களில் அவனுக்கமைந்த மன நிலைகள் எதிரொலிக்கின்றன. இவற்றின் அடிப்படையில் களவு வாழ்வில் ஆடவர்க்கான அறங்கள் பெறப்படுகின்றன.

### புணர்ந்தாரைப் பிரியாமை

அகவாழ்வில் ஆடவர்க்கான அறத்தில் முதன்மையானதாக 'புணர்ந்தாரைப் பிரியாமை' என்பது வலியுறுத்தப்படுகிறது. தலைவன்-தலைவி களவொழுக்கத்தில் இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்ததற்கான எந்தவொரு சாட்சியும் இல்லை. இந்நிலையில் 'புணர்ந்தாரைப் பிரியாமை' என்ற ஆடவர்க்கான அறக்கோட்பாடே சமூக விழுமியமாக அமைந்தது. பொதுவாக அறங்களை மீறுவது இயற்கைக்கு எதிரான செயலாகவும் தெய்வக்குற்றமாகவும் பதியப்பட்டது.

நட்புப் பூண்ட தலைவன் தலைவி பிரிவு என்பது சாதலுக்கு ஒப்பானது என்பதை,

*................. யாக்கைக்கு*
*உயிரியைந் தன்ன நட்பின் அவ்வுயிர்*
*வாழ்தல் அன்ன காதல்*
*சாதல் அன்ன பிரிவறியேமே* (அகம்.259)

என்கிறது அகநானூறு.

தலைவன் புணருமுன் அல்லது புணர்ந்து பிரியுமுன் சூள் உரைத்து தலைவிக்கு நம்பிக்கை அளிக்கிறான். தலைவன் வரைவு நீட்டித்த போதும், வரைவு இடையிட்ட போதும் தோழி தலைவனின் சூளில் ஐயம் கொள்கிறாள். சூள் பொய்த்த தலைவனின் செயலைப் பண்பற்ற செயலாகவும், அவன் மொழியை வாய்மை என நம்புமாறு தந்த பொய்ம் பொழியாகவும் தோழி சாடுகிறாள். தலைவியோ, தலைவன் வாய்மை தவற மாட்டான் என நம்பிக்கை கொள்கிறாள். இங்குச் சூள் பொய்த்தல் அறமற்றதாகக் கருதப்படுகிறது.

தலைவன், தன் வாய்மையில் பொய்த்தானோ என ஐயுறும் தோழிக்கு,

*குன்றகல் நன்னாடன் வாய்மையில் பொய் தோன்றில்*
*திங்களுள் தீ தோன்றியற்று* (கலி.41:23–24)

எனப் பதில் மொழிகிறாள் தலைவி. மேலும், இவ்வுலகம் தன்நிலை பெயர்ந்து மாறினாலும் காதலர் தான் சொன்ன சொல் மாறமாட்டார் என்பதை,

*அம்ம வாழி தோழி! காதலர்*
*நிலம்புடை பெயர்வது ஆயினும் கூறிய*
*சொல்புடை பெயர்தலோ இலரே* (நற். 289)

என்கிறாள்.

குறிப்பிட்ட பருவத்திற்குள் உன்னை அடைவேன் என்று சொல்லிச் செல்கிற தலைவன் வராது காலம் நீட்டிக்கும்போது அவன் உரைத்த சூளினைத் தலைவி எண்ணுகிறாள். இயற்கை பொய்சொல்லும்; ஆனால், தலைவன் பொய்மொழி கூறமாட்டான் எனத் தேறுகிறாள். கார்காலத்திற்கு உரிய நிகழ்வுகள் நடந்தாலும் அவற்றை உண்மையெனத் தலைவி ஏற்க மறுப்பதை,

*வண்டுபடத் ததைந்த கொடியிணர் இடையிடுபு*
*பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்*
*கதுப்பில் தோன்றும் புதுப்பூங் கொன்றை*
*கானம் காரெனக் கூறினும்*
*யானோ தேறேன் அவர் 'பொய் வழங்கலரே'* (குறுந்.21)

எனக் காட்டுகிறது இலக்கியம். ஆயினும் உண்மையான கார்காலம் கண்டு கலங்கும் தலைவியும் உண்டு. இது கார்காலம் தானே, தலைவன் இன்னும் வரவில்லையே என ஐயுறும் தலைவியை, 'இது

கார்காலம் அன்று'! அஃறிணைப் பொருட்களாகிய இயற்கைப் பொருள்கள் காலம் உணராது தவறு செய்கின்றன எனத் தேற்றுகிறாள் தோழி.

*நீர் அற வறந்த நிரம்பா நீள் இடைத்*
*துகில் விரித்தன்ன வெயில் அவிர் உருப்பின்*
*அஞ்சுவரப் பனிக்கும் வெஞ்சுரம் இறந்தோர்*
*தாம்வரத் தெளிந்த பருவம் காண்வர*
*இதுவோ? என்றிசின் மடந்தை! –மதியின்று*
*மறந்து கடல் முகந்த கமஞ்சூல் மாமழை*
*பொறுத்தல் செல்லாது இறுத்த வண்பெயல்*
*காரென்று அயர்த்த உள்ளமொடு தேர்வுஇல*
*பிடவும் கொன்றையும் கோடலும்*
*மடவ ஆகலின், மலர்ந்தன பலவே* (நற்.99)

இதில், 'மழை பெய்கிறதே இந்த மேகம் என்று நினைக்கிறாயா? தலைவி, கலங்காதே! அறிவில்லாதது இந்த மேகம்! மறதியினால் நீரை உண்டது; உண்டஉடனே மேகம் சூல் கொண்டுவிட்டது; வேறு வழி இன்மையால் மழையைப் பெய்துவிட்டது. மழை பெய்தவுடன் அஃறிணைப் பொருள்களாகிய பிடவு (முல்லை) காந்தள், கொன்றை முதலியன பூத்துவிட்டன. அவை அறிவுடைய பொருள்களாயின், இது கார்காலமன்று என்று அறிந்திருக்கும். பாவம்! அஃறிணைப் பொருள்களாதலின், கார்காலம் என நம்பிப் பூத்துவிட்டன. அவற்றின்மேல் தவறு இல்லை. எல்லாம் இந்த முட்டாள் மேகம் மறதியால் செய்த வேலையாகும். நீயும் இது கார்காலம் என நம்பிக்கொண்டு, 'செல்லத் தொலையாததும் நீரில்லாமல் வறண்டு போனதுமான நீண்ட வழியினிடத்து வேட்டியை விரித்தது' போன்ற வெயில் அடிக்கிற கொடுமையால், காண்பார் நெஞ்சு நடுங்கும் கொடிய காட்டின்கண் சென்ற காதலர் 'வருகிறேன்' என்று கூறிச் சென்ற பருவம் இதுதானே என்று கேட்கிறாய். இது அன்று அப்பருவம்" என்கிறாள்.

தலைவி நம்பிக்கையோடு இருந்தாலும், தோழி தேற்றினாலும் தலைவன் சொன்னசொல் தவறாமல், உற்ற சூள் மாறாமல் தலைவியை மணந்தால்தான் உண்டு. காரணம் தலைவன்-தலைவி இருவருக்குமான இயற்கைப் புணர்ச்சிக்குச் சாட்சிகள் அவர்களைத் தவிர வேறொருவர் இல்லை. அதனால்தான்,

*'யாரு மில்லைத் தானே கள்வன்*
*தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ* (குறு.25:1–2)

என்கிறாள் ஒரு தலைவி. இந்நிலையிலேயே,

*'போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை'* (கலி.133:7)

என்ற அறம் வலியுறுத்தப்படுவதாயிற்று. அதேவேளை, ஆடவன் ஒருத்தியோடு பழகிவிட்டு, பின் அவளை எனக்குத் தெரியாது எனக்கூறி ஏமாற்றும் செயலும் நடந்துள்ளது. ஏமாற்றுவோன் 'அறனிலாளன்' என்று சமூகத்தால் பழிக்கப்பட்டான். அவ்வாறு ஏமாற்றுபவனுக்குத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

*தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனி,*
*கரும்புஅமல் படப்பை, பெரும்பெயர்க் கள்ஊர்,*
*திருநுதற் குறுமகள் அணிநலம் வவ்விய*
*அறனி லாளன், 'அறியேன்' என்ற*
*திறன்இல் வெஞ்சூள் அறிகரி கடாஅய்,*
*முறிஆர் பெருங்கிளை செறியப் பற்றி,*
*நீறுதலைப் பெய்த ஞான்றை,*
*வீறுசால் அவையத்து ஆர்ப்பினும் பெரிதே* (அகம்.256:14—21)

என்ற பாடலில், ஒரு பெண்ணோடு களவு வாழ்வில் ஈடுபட்டு விட்டு, பிறகு அந்தப் பெண்ணைத் தெரியாது என்று ஏமாற்றியவனை, மரத்தில் கட்டிவைத்துச் சுண்ணாம்பு நீறினை அவன் தலையில் வைத்து தண்டித்த செய்தி காணப்படுகிறது.

### களவில் பரத்தமை ஒழுக்கம் இல்லை

களவு வாழ்வில் தலைவன் கொள்ளும் பரத்தமை ஒழுக்கம் பற்றித் தொல்காப்பியர் விதி வகுப்பினும் இலக்கியங்களில் அதற்குச் சான்று இல்லை. தலைவிக்கு நிகழும் கூற்றுகளைக் குறிப்பிடும் இடத்து,

*'தன்வயின் உரிமையும் அவன்வயின் பரத்தையும்*
*அன்னவும் உளவே ஓரிடத் தான'* (தொல்.1057)

என்கிறது தொல்காப்பியம். இதற்கு நச்சினார்க்கினியர், 'அவன்கண் பரத்தமை இன்றேனும் காதன் மிகுதியான் அங்ஙனம் கருதுதல் பெண்தன்மை. உம்மை எதிர்மறையாகலின் இவ்விரண்டும் இலவாதலே பெரும்பான்மை' என்கிறார்.

### மடல் ஏறுதல் - தலைவனுக்கான அறம்

களவு வாழ்வில் மடலேறுதல் என்பது தலைவனுக்கான அறமாகக் கொள்ளப்படுகிறது. தொல்காப்பியர் விதிப்படி தலைவிக்கு இச்செயல்பாடு தவிர்க்கப்பட்டது தெரியவருகிறது. மடல் பற்றிய பேச்சு இரு சூழல்களில் இடம் பெறுகிறது.

1. களவின் தொடக்கத்தில் பின்னின்ற தலைவனுக்குத் தோழியால் குறைமறுக்கப்படும்போது 2. களவின் முடிவில் தலைவனுக்குத் தமரால் வரைவு மறுக்கப்படும்போது. முன்னது கூற்றளவில் பெரிதும் காணப்படுகிறது. பின்னது செயல்வடிவம் பெறுகிறது.

தலைவியை எப்படியும் மணக்கவேண்டும், தலைவியின் பெற்றோரால் அவள் தலைவனைப் பிரிந்து துன்பத்திற்கு ஆளாகி விடக்கூடாது என்ற சூழலில் இச்செயல் நடைபெறுவது தெரியவருகிறது.

## உடன் போக்கு

சங்க இலக்கியங்கள் சுட்டுகிற களவு வாழ்க்கையில் அறம் எது, அறம் அல்லாதது எது என்பது குறித்த எதிர்நிலை கருத்துகள், விவாதங்கள் காணப்படுகின்றன. 'அறனில் அன்னை' என்ற சொல்லாட்சியும் 'அறனிலாளன்' என்ற சொல்லாட்சியும் நோக்கப்படவேண்டியவை. 'அறனில் அன்னை' என்பது தலைவியின் தாயையும் 'அறனிலாளன்' என்பது தலைமகனையும் குறிப்பிடுகின்றன.

தலைவன்-தலைவி உடன்போக்கு மேற்கொள்கின்றனர். அவர்கள் சென்ற வழியோ கொடிய பாலைநிலம். 'அந்தப் பாலை நிலத்தில் அறனிலாளனாகிய தலைவன் தோண்டிய கலங்கிய நீரைத் தலைவி அருந்தித் துன்புறுவாளோ' என்று தாய் புலம்புகிறாள். இங்கு, தாயின் பார்வையில் தலைவன் அறனில்லாதவன் ஆகிறான் (அகம்.207). அதேபோல 'அறனில்லாதவனோடு சென்றாளே' என்று தலைவி பற்றிப் பிறிதொரு தாய் கலக்கம் உறுகிறாள் (அகம்.25). இங்கும் பெற்றோரையும் உறவினர்களையும் பிரித்து தலைவியை அழைத்துச் செல்லும் தலைவன் அறனிலாதவன் ஆகிறான்.

மேலும், 'என் மகள் உடன் போக்குச் செல்லக் காரணமான ஊழ் அறம் அற்றது; அந்த அறனில் ஊழ், காட்டிடை எரியில் வெந்து ஒழிவதாக' என்று ஒருதாய் சாபம் இடுகிறாள் (ஐங்.376). அதேபோல, தலைவி தலைவனுடன் உடன் போக்கினை மேற்கொள்கிறாள்; இதனை அறிந்த அன்னை அறத்தினை வெறுத்தும் பழித்தும் உரைக்கிறாள் (ஐங்.393). இங்கு ஊரும் அறமும் பழிக்கப்படுகிறது.

இதற்கு எதிர்நிலையாக களவு வாழ்க்கையை அனுமதிக்காத அன்னை, தலைவியின் பார்வையில் அறம் அற்றவளாகச்

சுட்டப்படுகிறாள். தினைப்புனம் காக்க சென்றால் தலைவனைச் சந்திக்கலாம்; ஆனால் தாய் தலைவியைத் தினைப்புனம் காக்க அனுமதிக்கவில்லை. அனுமதிக்காத அன்னையைத் தலைவி அறனில் அன்னை என்கிறாள்(அகம்.302). தலைவன் -தலைவி உறவு பற்றி ஊரில் அலர் தோன்றுகிறது; அதனால் அன்னை தலைவியை இற்செறிக்கிறாள்; அலர் கூறும் ஊரும் அறமில்லாதது; இச்செறிக்கும் அன்னையும் அறமற்றவள் (குறு.262; நற்.63) என்பது தலைவியின் கோபம். தலைவியை இற்செறித்து வைத்திருப்பது அறிநெறி அன்று. 'இதனை இற்செறித்து வைத்திருக்கும் அன்னையிடம் யாரேனும் கூறமாட்டார்களோ' என்று தலைவி கேட்கிறாள்(நற்.68). 'புலிகள் வழங்கும் மலைகள் பிற்பட உன்மகள் சுரங்களைக் கடந்து தலைவனுடன் சென்றனள் என்று அறனில் அன்னைக்குக் கூறுங்கள்' என்று வழிப்போக்கரிடம் கூறுகிறாள் உடன்போக்கு மேற்கொண்ட ஒரு தலைவி (ஐங்.385).

ஆக, களவு வாழ்க்கையில் உடன்போக்கு என்பது காதலர் பார்வையில் அறமாகத் தெரிகிறது; பெற்றோர் பார்வையில் அது அறமற்றதாகத் தெரிகிறது. உடன்போக்கு மேற்கொள்ளும் தலைவன், தலைவியின் பெற்றோர் பார்வையில் அறமில்லாதவன் ஆகிறான். களவு வாழ்க்கையைத் தடைசெய்யும் தாய் தலைவியின் பார்வையில் அறமற்றவள் ஆகிறாள். இந்நிலையில் அறம் எது என்ற வினா எழுகிறது.

தலைவன்-தலைவி களவு வாழ்க்கையை வெளிப்படுத்தும் தோழியின் செயற்பாட்டை 'அறத்தொடு நிற்றல்' என்கிறது இலக்கணம். இங்கு அறத்தொடு நிற்றல் என்பது களவு வாழ்க்கையைக் கற்பு வாழ்க்கையை நோக்கி நகர்த்துதல் ஆகிறது; தலைவியின் காதலைப் பெற்றோர்க்கும் உறவினர்க்கும் உணர்த்துதல் ஆகிறது. அவ்வாறு அறத்தொடு நிற்கும் தோழி ஒருத்தி காதலர் களவு வாழ்க்கையை அனுமதிக்காத மலை வாழ்நரை 'அல்ல புரிந்து ஒழுகுவோர்' (கலி.39) என்கிறாள். இங்கு ஊரார் அறமற்றவர்களாகின்றனர். களவு வாழ்க்கையைத் தடை செய்வதால் 'வள்ளிக்கிழங்கு விளையாது, மலையில் தேன் கூடுகட்டாது, தினைப்புனத்தில் தினைக்கதிர்கள் விளையாது' என்கிறாள் (கலி.39). அறம் வழுவுதல் இங்குத் தெய்வக் குற்றமாகிறது.

தலைவியின் பெற்றோர் தமையன்களுக்கு அறத்தொடு நின்று காதலை உணர்த்தி வரைவிற்கு உடன்பட வைக்கும் செய்தியும் சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. இந்நிலையில், காதலை

உணர்த்தியும் உணராமல், எதிர்நிற்கும் பெற்றோர் மற்றும் தமையன்களுக்கு எதிராக உடன்போக்கு மேற்கொள்ள வேண்டிய சூழல் தலைவிக்கு ஏற்படுகிறது. 'புணர்ந்தாரைப் பிரிதல் அறமன்று' என்ற தலைமகனுக்கான அறத்தின் அடிப்படையில் தலைவியைப் அவளது பெற்றோரைப் பிரிந்து அழைத்துச்செல்ல வேண்டிய கட்டாயம் தலைவனுக்கு ஏற்படுகிறது. எனவே களவு வாழ்வில் உடன்போக்கு அறமாகிறது.

அதேவேளையில், கொளற்குரி மரபினரான தலைவனின் குடும்பத்தினர் பெற்றுக்கொள்ள, கொடைக்குரி மரபினரான தலைவிக் குடும்பத்தினர் கொடுக்க ஏற்படும் திருமணத்தையே முதல் நிலையில் வைக்கிறார் தொல்காப்பியர். அடுத்த நிலையையே உடன்போக்கிற்கு கொடுக்கிறார் என்பதும் இங்கு நோக்கத்தக்கது. இதனை,

*கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்*
*கொளற்குரி மரபின் கிழவன் கிளத்தியை*
*கொடைக்குரி மரபினர் கொடுப்பக் கொள்வதுவே* (தொல்.1088)

என்பதிலும்,

*கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே*
*புணர்ந்து உடம்போகிய காலையான* (தொல்.1089)

என்பதிலும் அறியலாம். 'கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே' என்பது விதியாக இல்லாமல், விதிவிலக்காக அமைவது தெரிகிறது. இதன் அடிப்படையிலேயே, உடன்போக்கு மேற்கொண்ட காதலர்களைத் தேடிச் செல்லும் தாயிடம் காதலரைத் தேடிச் செல்ல வேண்டாம், காதலர்கள் செய்தது 'அறம்' என்று சுட்டுகின்றனர் தவமுடையோர். அதனாலேயே,

*சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்*
*அறம்தலை பிரியா ஆறுமற்றதுவே* (கலி.9:23–24)

என்கிறது கலித்தொகை. தலைவி வீட்டார் பார்வையில் அறனிலாளனாகத் தெரியும் தலைவன், சான்றோர் பார்வையில் சிறந்தவன் என்று சுட்டப்படுகிறான். தலைவியின் நலன் கருதி அவன் மேற்கொண்ட செயலே அதற்குக் காரணம் ஆகும்.

### தலைவியின் உறவினரைத் துன்புறுத்தாமை

தலைவியைப் பிரியாமல், அவள் நலம் பேணும் தலைவன், உடன்போக்கின்போது அறத்தோடு நடந்துகொண்ட செய்தியும்

காணப்படுகிறது. தலைவன் தலைவியின் குடும்பத்தினர்க்கு எதிரி அல்ல; அவர்களைத் தண்டித்துவிட்டு தலைவியைக் கொண்டு போகும் தீய எண்ணமும் அவனிடத்தில் இல்லை. எனவே, இடைச்சுரத்தில் கள்வர்கள் வந்தால் அவர்களை அடித்துத் துரத்துவேன் எனக்கூறும் தலைவன், தலைவியின் உறவினர் வந்தால் அவர்களை எதுவும் செய்யாமல் மறைந்துகொள்வேன் என்கிறான். இதனை,

*அமர் வரின், அஞ்சேன், பெயர்க்குவென்;*
*நுமர் வரின், மறைகுவென் மாஅயோளே!* (நற்.362:9–10)

என்கிறது நற்றிணை.

### கற்பு வாழ்க்கை

கற்பு வாழ்க்கை, கொடுப்போர்-பெறுவோர் என்ற முறைமையின் அடிப்படையிலான முதல்நிலை திருமண நிகழ்வோடோ அல்லது தலைவன்-தலைவியுடனான காதல் என்ற முறைமையின் அடிப்படையில் உடன்போக்கு என்ற இரண்டாம் நிலை நிகழ்வோடோ தொடங்குகிறது. முறைப்படுத்தப்பட்ட திருமண நிகழ்வாயினும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடன்போக்கு நிகழ்வாயினும் அதற்குப் பின்னான கற்பு வாழ்வில் தலைவனுக்கான அறங்கள் சில அறிவுறுத்தப்பட்டன.

*ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்*
*ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை* (கலி.18:10–11)

என்று, தலைவன் தலைவிக்கான எண்ண ஒற்றுமை சுட்டப்பட்டது. ஆகவே, தலைவன் தலைவியின் ஒன்றிய வாழ்க்கைக்கும், திருமண வாழ்வின் நோக்கத்திற்கும், சுற்றத்தின் உயர்விற்கும், சமூக நலனிற்குமாக தலைவன் தலைவியிடத்தே இருக்க வேண்டிய அறச் செயல்பாடுகள் முன்னிறுத்தப்படுகின்றன.

### மாறாத அன்பு

தலைவியைப் புணருமுன் காட்டுகிற அன்பு, களவில் அவளைப் பிரிந்திருக்கிற சூழலில் வெளிப்படுத்துகிற அன்பு, அவளோடு நிரந்தரமாகக் கற்புவாழ்வில் சேர்ந்தபின்பும் மாறாமல் இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. உடன்போக்கு மேற்கொள்ளும் சூழலில் தலைவனிடம் தோழி கூறுவதாகக் கீழ்க்கண்ட பாடல் அமைகிறது.

*அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும்*
*பொன்நேர் மேனி மணியில் தாழ்ந்த*
*நன்னெடும் கூந்தல் நரையொடு முடிப்பினும்*
*நீத்தல் ஓம்புமதி* (நற்.10)

இதில், தலைவியின் மார்புகள் தளர்ச்சியுற்ற காலத்தும், கரிய நெடிய கூந்தல் நரை எய்திய முதுமைக் காலத்தும் தலைவிமீது கொண்டிருக்கிற அன்பு மாறாமல் இருக்க வேண்டும் என்று தலைவனிடம் வேண்டுகிறாள் தோழி. எனவே, தலைவியை என்றும் பிரியாமல் இருப்பதும், மாறாத அன்போடு இருப்பதும் அறமாகச் சுட்டப்படுகிறது.

பெற்றோர், உறவினர் என அனைவரையும் பிரிந்து வந்த தலைவிக்குத் தலைவனே அனைத்துமாகிறான். அனைவரின் அன்பையும் தலைவன் ஒருவனே தலைவிக்குக் கொடுக்கும் கடப்பாடுடையோன் ஆகிறான். இவ்வகைக் கடமையை உணர்ந்த தலைவனை,

*யாரினும் இனியன் பேரன் பினனே* (குறு.85:1)

என்றும்.

*தவச்சேய் நாட்ட ராயினும் மிகப்பேர்*
*அன்பினர்* (நற்.115)

என்றும் பெருமிதம் கொள்கிறாள் தலைவி.

தலைவன், தலைவிக்குத் தாய், தந்தை என அனைத்து உறவாகவும் இருக்க தலைவி எண்ணுகிறாள்.

*......... ............ .......அவர் நமக்கு*
*அன்னையும் அத்தனும் அல்லரோ தோழி* (குறுந்.93:2–3)

'அவர் நமக்கு அன்னையும் அத்தனும் அல்லரோ' என தலைவி கேட்பதன் வழி தலைவன் அன்னையாகவும், தந்தையாகவும் இருக்கவேண்டும் என்ற கருத்து புலனாகிறது. இவ்வன்பு மாறும் இடங்களில் தலைவியாலும், தோழியாலும் நேரடியாகவும், மறைமுகமாகவும் தலைவன் இடித்துரைக்கப்படுகிறான். இச்சூழல்களில் களவு காலத்துத் தலைவனின் அன்பு நினைவு கூறப்படுகிறது.

**துணையைப் பிரியாமை**

களவு, கற்பு என்ற இரு நிலைகளிலுமே பிரிவிற்கான இலக்கணத்தை வகுக்கிறார் தொல்காப்பியர். இரண்டிற்குமான பிரிவிலும் காரணங்களும் கால வரையறைகளும் உண்டு. ஆயினும் களவு கற்பு இருநிலைகளிலுமே பிரிவு என்பதைத் தலைவி ஏற்றுக் கொள்வதில்லை. எச்சூழலிலும் தலைவன் உடன் இருக்கவேண்டும் என்ற தலைவியின் எண்ணமும், எவ்வகைச் செல்வத்தினும்

தலைவியுடன் இருப்பதே சிறந்தது என்ற தலைவனின் எண்ணமும் கற்புக் கால நிகழ்வுகளில் பதிவுசெய்யப்படுகிறது.

தலைவியை விட்டுப் பிரியாத அன்புடைய தலைவனை,

*நின்ற சொல்லர் நீடுதோறு இனியர்*
*என்றும் என் தோள் பிரிபு அறியலரே!* (நற்.1:1–2)

என்கிறாள் தலைவி. தம்மை விரும்புவர், தாம் விரும்புகிறவர் ஆகியவருடன் கூடி மகிழ்ந்து வாழ்தலே செல்வம் ஆகும். அச்செல்வம் இழத்தலே வறுமையாகிறது என்பதை,

*தம் நயந்து உறைவோர்த் தாங்கித் தாம்நயந்து*
*இன்னமர் கேளிரொடு ஏமுறக் கெழீஇ*
*நகுதல் ஆற்றார் நல்கூர்ந்தோர்* (அகம்.151:1–3)

என்கிறது இலக்கியம். இந்நிலையில்,

*'முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்*
*வார்இருங் கூந்தல் வயங்கிழை ஒழிய*
*வாரேன்; வாழிய நெஞ்சே!'* (பட்.218–220)

என்று, பெருவளங்கள் நிறைந்த கரிகால் பெருவளத்தானுடைய ஒப்பற்ற காவிரிப்பூம்பட்டினத்தையே எனக்குப் பரிசிலாகத் தந்தால்கூட நான் என் காதலியை விட்டு வரமாட்டேன்! எனக் கூறும் தலைவனையும்,

*களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்*
*இழந்த நாடுதந் தன்னே*
*வளம்பெரிது பெறினும் வாரலென் யானே* (அகம்.199:22–24)

என்று, களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் இழந்த நாட்டைத் தந்தாலும் தலைவியைப் பிரிந்து வாரேன் எனக்கூறும் தலைவனையும்,

*அரிதுசெய் விழுப்பொருள் எளிதினிற் பெறினும்*
*வாரேன் வாழி என் நெஞ்சே* (அகம்.149:6–7)

என்று, அரிய செயல்களையெல்லாம் செய்யவல்ல சிறந்த பொருள்களை எளிதில் பெறினும் தலைவியைப் பிரிந்து வாரேன் எனக்கூறும் தலைவனையும் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன.

அதேபோல, தலைவியைப் பிரிந்து பொருள்தேடச் செல்லுதல் அறமற்றதாகத் தலைவியால் சுட்டப்படுகிறது. இல்லறத்திற்குத் தேவையான பொருளைத் தேடுதல் ஆடவர்க் கடமை ஆயினும்,

அக்கடமையைத் தலைவி உணர்ந்திருப்பினும் அன்பின் காரணமாக, பொருள்தேடச் செல்லும் தலைவனை அறனில்லாளன் என்கிறாள்.

*'நம் நோய் அறியா அறனில்லாளர்'* (அகம்.294:14)

பொருள் தேடுதல் போன்ற காரணங்கள் தலைவியின் அன்பினால் அறமற்றதாகச் சுட்டப்படினும், சமூக நோக்கில் அவ்வாறு எண்ணப்படவில்லை. தலைவியை ஆற்றுப்படுத்திவிட்டு பொருள்தேடிச் செல்லும் தலைவனை 'வினையாளனாக' காண்கிறது சமூகம். அதேவேளையில், குடும்பச்சிக்கல்கள் காரணமாகத் தன்துணையைத் பிரிந்து தவிக்கவிடும் ஆடவரைச் சமூகம் பழிக்கிறது. அச்செயல் அறமற்றதாக மொழியப்பட்டது. அரசனான பேகன் தன்மனைவி கண்ணகியைப் பிரிந்ததைச் சான்றோர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த அறமற்றச் செயலைத் தவிர்த்து அருளுடையவனாகத் தன் மனைவியோடு கூடி வாழுமாறு பேகனைப் புலவர்கள் வலியுறுத்துகின்றனர். பேகனை,

*அருளாய் ஆகலோ கொடிதே!* (புறம்.144:1)

என்கிறார் பரணர்.

### குடும்பம் காத்தல் மற்றும் பாதுகாப்பு

மனைவி மற்றும் குடும்பத்தினரின் பாதுகாப்பு ஆடவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இது கடமையாகவும் அறமாகவும் உணர்த்தப்பட்டது. தன் துணையையும் குட்டிகளையும் பாதுகாப்பான இடத்தில் நிறுத்திவிட்டு, ஆயுதத்தோடு வேட்டையாட வந்த வீரனை வழிமறித்து எதிர்கொள்கிறது ஆண்பன்றி ஒன்று. இதனை,

*இளையர் எய்துதல் மடக்கிக் கிளையொடு*
*நால்முலைப் பிணவல் சொலியக் கான்ஒழிந்து*
*அரும்புழை முடுக்கர் ஆட்குறித்து நின்ற*
*தறுகட் பன்றி* (அகம்.248:3–6)

என்று காட்டுகிறது அகநானூறு. பன்றியின் இச்செயலைப் பார்த்த வீரன் திரும்பிச் சென்றுவிடுகிறான். ஒரு மனிதன் தன்மனைவி மக்களைக் காக்க நினைக்கின்றான். ஓர் ஆண் பன்றி தன் துணையையும் குட்டிகளையும் காப்பாற்றும் பொருட்டு வீரத்தோடு செயல்படுகிறது. இங்கு பன்றி வாயிலாக ஆடவரின் பொறுப்பும் அறமும் வலியுறுத்தப்படுகிறது.

அதேபோல, கணவனை இழந்த மனைவியைப் பற்றிய பாடல்களோடு, மனைவியை இழந்த கணவனைப் பற்றிய பாடல்களையும் இலக்கியங்கள் கொண்டுள்ளன. மனைவி இறந்தபின் தானும் அவளோடு உடன்கட்டை ஏற முடியாமல் சமூகப் பொறுப்புகள் தடுக்கின்றனவே என வருந்தும் தலைவனைப் பார்க்க முடிகிறது. இச்செயற்பாடு அஃறிணை உயிர்களுக்கும் ஏற்றப்படுகிறது. தன் துணையாகிய பெண்மான் இறந்தபோது தாமும் இறந்துவிட எண்ணி, பிறகு குட்டிகளுக்காக உயிர் வாழும் ஆண்மான், பள்ளத்தில் கிடக்கும் சிறிய நீரைக்கூட அருந்தாமல் வருந்தி இருக்கும் காட்சி காட்டப்படுகிறது.

*கணையிடக் கழிந்ததன் வீழ்துணை உள்ளிக்*
*குறுநெடுந் துணைய மறிபுடை ஆடப்*
*புன்கண் கொண்ட திரிமருப்பு இரலை*
*மேய்பதம் மறுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து*
*நெய்தலம் படுவில் சில்நீர் உண்ணாது*
*எஃகுஉறு மாந்தரின் இனைந்துகண் படுக்கும்* (அகம்.371:3–8)

## இல்வாழ்வின் நோக்கம்

தலைவன் ஒருவன், தான் காதலிக்கும் பெண்ணிடம் மணமுடிக்க விரும்பும் நோக்கத்தைக் கூறும்போது,

*விருந்துண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை*
*நின்னொடு உண்டலும் புரைவது* (குறிஞ்சி.6–7)

என்று சமூக நோக்கை வெளிப்படுத்துகிறான். பழந்தமிழர் வருவோர்க்கெல்லாம் வரையாது நல்லுணவு அளித்தல் இல்லறத்தின் கடமைகளுள் தலையாய ஒன்றென்று கருதியிருந்தனர். விருந்தினர் உண்டு எஞ்சிய மிச்சிலை உண்பதில் நிறைவு கொண்டனர்.

## வினை மேற்கொள்ளல்

வினையாற்றாது சோம்பியிருத்தல் பிழையெனப் பழிக்கப் பட்டது. எனவே, புகழும் இன்பமும் கொடையும் மூன்றும் சோம்பலோடு இருப்பவர்க்குப் பொருந்துவதில்லை என அறிவுறுத்தப்பட்டது.

*இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்*
*அசையுநர் இருந்தோர்க்கு அரும் புணர்வு ஈன்ம்* (நற்.214:1–2)

மேலும், அறத்தோடு வாழவும் சுற்றம் போற்றவும் தொழில் செய்தல் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

*அறம்தலைப் பிரியாது ஒழுகலும் சிறந்த*
*கேளிர் கேடுபல ஊன்றலும் நாளும்*
*வருந்தா உள்ளமோடு இருந்தோர்க் கில்லெனச்*
*செய்வினை புரிந்த நெஞ்சினர்* (அகம்.173:1–4)

எனவே, வினை ஆடவர் அறமாகவும் உயிராகவும் முன்மொழியப்பட்டது. இதனை,

*வினையே ஆடவர்க்கு உயிரே* (குறு.135:1)

என்கிறது குறுந்தொகை. அப்படிப்பட்ட வினையை நினைத்து செயல்படுகிற உள்ளம் உயர்ந்த உள்ளமாகப் போற்றப்பட்டதை,

*வினையே நினைந்த உள்ளமொடு துணைஇச்*
*செல்ல* (நற்.296:7–8)

என்கிறது நற்றிணை.

பெற்றோர், மனைவி, மக்களைப் போற்றவும் உறவினர்க்கும் ஊரார்க்கும் உதவவும், வறியவர்க்கு வழங்கவும் பொருள்தேவை என்பதும், அடுத்தவர் பொருளில் வாழ்தல் அறம் அல்ல என்பதும் ஆடவர்க்கு அறிவுறுத்தப்பட்டது. தம் காதலியைவிட உயர்வானதாக ஈதல் அறத்தை எண்ணிய தலைவனை,

*'இவளினும் சிறந்தன்று ஈதல் நமக்கு'* (அகம்.131:5)

என்று காட்டுகிறது சங்கப்பாடல். அதேபோல, தலைவனைப் பிரிந்து நாம் துன்பமுற்றாலும் தலைவன் தாம் மேற்கொண்ட வினையை முடித்து வரட்டும் என்று கூறும் தலைவியை,

*நோய் நாம் உழங்குவம் ஆயினும் தாம்தம்*
*செய்வினை முடிக்க தோழி* (அகம்.155:5–6)

என்ற அடிகள் காட்டுகின்றன.

வினை மேற்கொள்ளுதல் என்பது தன் குடும்பம், உறவினர் என்றில்லாமல் பிறருக்காகவும் மேற்கொள்ளப்பட்டது. ஆடவர்க்கான வினை சமூக நோக்கத்தை முன்னிறுத்தியதாக அமைந்தது. அவ்வாறு பிறருக்காக வினைமேற்கொள்ளுதல் பேரருளாகப் போற்றப்பட்டது. இதனை,

*பிறர்க்கென முயலும் பேரருள்* (நற்.186:8)

என்பதில் அறியலாம்.

பொருள் தேடுதலில் அறம்

செல்வம் என்பது அறம் பொருள் இன்பம் மூன்றையும் ஆற்றக்கூடியதாக இருத்தல்வேண்டும் என்றும், அப்படிப்பட்ட செல்வத்தைத் தேற்றுதல் ஆடவர் கடமை என்றும் அறிவுறுத்தப் பட்டது.

*அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்*
*ஆற்றும் பெரும நின் செல்வம்* (புறம்.28:15–16)

என்கிறது புறநானூறு. பொருளின் தேவையைக் குறிப்பிடும் இடத்து,

*அறன் கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்*
*பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்*
*பொருளினால் ஆகும்* (அகம்.155:1–3)

என்கிறது அகநானூறு. அறன்வழிப்பட்ட வாழ்விற்கும் பிறரிடத்துச் சென்று கையேந்தி நிற்காத நிலைக்கும் பொருள் தேவையாகிறது.

அதேவேளை, வினை மேற்கொள்ளுதலும், பொருள் தேடுதலும் ஆடவரின் சமூகக் கடமையாக அறமாக அறிவுறுத்தப் பட்டாலும், இன்பமும் பொருளும் அறத்தின் வழிப்பட்டதாக இருத்தல் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. அறம் தவறிய பொருளாக்கம் பழியென ஒதுக்கப்பட்டது.

*'கழியக் காதலர் ஆயினும், சான்றோர்*
*பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்* (புறம். 112:11–12)

என்கிறது புறநானூறு. அதேபோல, அறத்திற்கு அழிவைத் தரும் பொருள் எவ்வளவு பெரிய பலனைத் தந்தாலும் அது வேண்டாம் எனப் பழிக்கப்பட்டது. இதனை,

*அறக் கழிவுடையன பொருட்பயம்படவரின்*
*வழக்கென வழங்கலும் பதித்தன்று என்ப* (தொல்.1164)

என்பதில் அறியமுடிகிறது. மேலும், பொருள் தேடி இன்புற்று வாழ்தல் நோக்கம். ஆயினும் அறமே வழியாதல் வேண்டும் என்னும் உயர்கொள்கையை,

*சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்*
*அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல்* (புறம்.31:1–2)

என்கிறார் தொல்காப்பியர்.

மேலும், இன்பமும் பொருளும் அறமும் என்று சொல்லப்பட்ட அன்பொடு இணைந்த ஐந்து ஒழுக்கங்கள் என்பதை,

*இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு*
*அன்பொடு புணர்ந்த ஐந்திணை* (தொல்.1038)

என்றும் காட்டுகிறது தொல்காப்பியம்.

**கூரில் ஆண்மை**

தன் வினையால் பொருள் தேடாமல் மூத்தோர் சேர்த்துவைத்த செல்வத்தில் வாழ்க்கை நடத்துதல் இழிவாக எண்ணப்பட்டது. எலி போலப் பிறர் உழைப்பைச் சுரண்டுவோர் உள்ளம் இல்லாதவர்; உள்ளத்தில் ஊக்கம் இல்லாதவர். புலிபோலத் தன்னுழைப்பில் தான் வாழ்வோர் மெலிவற்ற உள்ளம் உடையோர் என்று போற்றப்பட்டது.

*எலிமுயன்று அனையர் ஆகி உள்ளதம்*
*வினைவலி உறுக்கும் உளமி லாளர்*
*புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்து*
*உரனுடை யாளர்* (புறம்.190:3–6)

மேலும், மூத்தோர் சேர்த்துவைத்த செல்வத்தை அழிப்பவரும் 'இல்லாதவரே (வறுமையாளர்)' என்று ஏளனம் செய்யப்பட்டனர்.

*உள்ளது சிதைப்போர் உளரெனப் படார்*
*இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு* (குறுந்.283:1–2)

மன்னர்க்கு மகன் ஆனமையால் மன்னராகும் மரபு உரிமை சங்க காலத்தில் நிலவியது. ஆயினும் தன் வீர ஆற்றலால் ஆட்சி பெறுதலே சிறப்பு எனச் சோழன் நலங்கிள்ளி கருதியுள்ளான். 'பெருமுயற்சியால் பேரரசு அமைந்த மன்னர் மாண்டு மறைந்து போயினர். ஆகவே மரபு உரிமையால் ஆட்சியில் அமர்ந்து மக்களிடம் வரி வாங்கி வாழ்தல் மன்னர்க்கு அழகு இல்லை என்றும் அதனைக் 'கூரில் ஆண்மை' எனப் பழிக்கிறான்.

*மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்*
*பால்தர வந்த பழவிறல் தாயம்*
*எய்தினம் ஆயின் எய்தினம் சிறப்பெனக்*
*குடிபுரவு இரக்கும் 'கூரில் ஆண்மை'* (புறம்.75:1–4)

**உயிர் இரக்கம்**

வினை மேற்கொள்ளல், பொருள் தேடல் போன்றவற்றொடு உயிர் இரக்கம் கொள்ளுதலும் தலைவனுக்கான அறமாகக்

காட்டப்படுகிறது. தலைவன் வினைமுற்றி மீண்டு வருகிறான். வருகின்ற காலமோ கார்காலம். வரும் வழியோ அடர்ந்த காட்டு வழி. கார்காலம் ஆகலின், காடு முழுவதும் பூத்துக் குலுங்குகின்றது. அப்பூக்களிடத்து வண்டுகள் மொய்க்கின்றன. அவ்வாறு வண்டுகள் நிறைந்துள்ள வழியில் தலைவன் தேரில் வருகிறான். தேரில் நிறைய மணிகள் கட்டப்பட்டுள்ளன. காட்டில் திடீரென்று இவ்வாறு மணி ஒலி கேட்குமானால், துணையுடன் மகிழ்ந்து தேன் உண்ணும் வண்டுகள் அச்சத்தால் சிதறி ஓட நேரிடும். துணையுடன் மகிழ்ந்திருக்கும் அவை பிரிந்து செல்லத் தான் காரணமாய் இருக்க விரும்பவில்லை அத்தலைவன். எனவே, தன் தேரில் உள்ள மணிகளின் நாவைப் பிடித்துக் கட்டிவிடுகிறான். தேரினை மெதுவாகச் செலுத்தி வருகிறான். இதனை,

*பூத்த பொங்கர் துணையொடு வதிந்த*
*தாதுஉண் பவவை பேதுறல் அஞ்சி*
*மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்* (அகம்.4:10–13)

என்று காட்டுகிறது சங்கப்பாடல்.

### பரத்தமை ஒழுக்கம்

சங்க காலத்தில் பரத்தமை ஒழுக்கம் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்தது என்ற தவறான கருத்து பலரால் முன்வைக்கப்படுகிறது. பரத்தமை ஒழுக்கம் தீய ஒழுக்கமாக, களையப்படவேண்டிய ஒழுக்கமாக இருந்ததைதான் பல பாடல்கள் பல்வேறு நிலைகளில் சுட்டிச்செல்கின்றனவே அன்றி அவ்வொழுக்கத்தை உயர்வுபடுத்தும் கருத்துகள் சங்க இலக்கியங் களில் இல்லை. மேலும், பரத்தமை ஒழுக்கத்தால் தலைவிக்கு நேரும் துன்பங்கள் பலவிதங்களில் எடுத்துக்காட்டப்படுகின்றன என்பதும் நோக்கத்தக்கது.

பரத்தமை ஒழுக்கம் ஆடவர்க்கு இழிவைத் தரும் என்ற உண்மையை அரச புலவர்களின் பாடல்கள் நேரடியாகப் பதிவு செய்கின்றன. உள்ளக் காதலான உண்மையான காதல் இல்லாதவர்களே பரத்தையர். நான் போரில் தோற்றால் அப்படிப்பட்ட பெண்டிர்களின் முயக்கத்தால் என் மாலை வாடுவதாக என்று வஞ்சினம் கூறுகிறான் நலங்கிள்ளி. இதனை,

*தீதில் நெஞ்சத்துக்காதல் கொள்ளாப்*
*பல்லிருங் கூந்தல் மகளிர்*
*ஒல்லா முயக்கிடைக் குழைக என் தாரே* (புறம்.73:12–14)

என்பதில் அறியலாம். ஆக, பரத்தமை ஒழுக்கம் மிகக் கீழ்நிலை ஒழுக்கமாகக் கருதப்பட்டதும் அவ்வகை ஒழுக்கத்தில் ஈடுபடுதல் ஆடவர்க்கு அறமாகாது என்பதும் சமூகத்தால் மிகவும் பழிக்கப்படும் என்பதும் இதன்வழிப் பெறப்படுகிறது.

### பண்பு நலன்கள்

நீதியும், நட்பும், இழிசெயல் விலக்கலாகிய நாணும், பிறர்க்கும் தமக்கும் பயன்படும் திறமாகிய பயனும், நற்குணங்கள் நிறைந்த பண்பும், பிறர் தன்மை அறிந்து ஒழுகும் பாடும் ஆகிய ஆறு பண்புகளைத் தனிமனித ஒழுக்கங்களாக அற்றைச் சமூகம் அறிவுறுத்தியது. இதனை,

*நயனும் நண்பும் நாணு நன்கு உடைமையும்*
*பயனும் பண்பும் பாடு அறிந்து ஒழுகலும்* (நற்.160:1–2)

என்கிறது நற்றிணை. ஒரு நாட்டின் நில அமைப்போ, இயற்கையில் அமையப்பெற்ற வளங்களோ அந்நாட்டை நல்லநாடாக முன்னெடுத்துச் செல்வதில்லை. அந்நாட்டில் வாழும் மனிதச் செயல்களே அச்சமூகத்தை முன்னேற்றுகின்றன என்பதை,

*நாடா கொன்றோ காடா கொன்றோ*
*அவலா கொன்றோ மிசையோ கொன்றோ*
*எவ்வழி நல்லவர் ஆடவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே* (புறம். 187)

என்று வலியுறுத்துவார் ஔவையார். அதேபோல, தனிமனிதன் எதிர்கொள்ளும் இன்ப துன்பங்களுக்குச் சமூகமோ, பிறரோ காரணமன்று; அவன் செயல்களே காரணிகளாகின்றன என்பார் கணியன் பூங்குன்றனார். இதனை,

*தீதும் நன்றும் பிறர்தர வாரா*
*நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன* *(புறம்.192:3–4)*

என்பதில் அறியலாம்.

# செந்தமிழ் இதழில்
# சேர அரசர் - சேர நாடு - சேரர் இலக்கியம்

பாண்டித்துரை தேவரால் மதுரையில் நிறுவப்பட்ட நான்காம் தமிழ்ச்சங்கத்தின் நோக்கங்களைக் கீழ்க்காணுமாறு வரையறுத்துச் சுட்டுகிறது செந்தமிழ் இதழின் முதல் பதிப்பு.

1. தமிழ்க் கலாசாலை உளவாக்குதலானும்
2. இறவாதுள்ள தமிழேடுகள் பலவற்றையும் அச்சிட்டு தமிழ் நூல்கள் அனைத்தையும் தேடிப்பெற்றுப் பிறர்க்குப் பயன்படுமாறு ஒருவழித் தொகுத்து வைத்தலானும்
3. வெளிவராத அரிய தமிழ் நூல்களைப் பரிசோதித்து அச்சிட்டுப் பரவச் செய்தலானும்
4. வடமொழி ஆங்கிலம் முதலிய பிற பாடைக் கண்ணுள்ள அரிய நூல்களைத் தமிழின் மொழிபெயர்த்துப் பதிப்பித்தலானும்
5. தமிழ்க்கல்வியே பற்றிய பத்திரிகை வெளியிடலானும்
6. தமிழிற் பரீக்ஷை பல வைத்து உயர்தரத்தே தேறியோர்க்குப் பட்டம் பரிசு முதலிய அளித்தலானும்
7. தமிழறிஞரான் உபந்நியாஸங்கள் புரிவித்தலானும்
8. இக்காலத் தமிழறிவு மிக்கார் பலரையும் ஒருங்கு கூட்டித் தமிழாராய்தலானும்
9. வேண்டும் நூல் உரை முதலியன செய்வித்தலானும்
10. பிறர் செய்த நூல் உரைமுதலியவற்றை அரங்கேற்று வித்தலானும்

தமிழனை வளர்த்தலாகும் எனத் தேர்ந்து மதுரையில் 'மதுரைத் தமிழ்ச்சங்கம்' உருவாக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை, 1. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை 2. பாண்டியன் புத்தகசாலை 3. தமிழ்ச்சங்க

முத்திராசாலை ஆகியவை. இம்மூன்றனுள், தமிழ்ச்சங்க முத்திராசாலை வழி செந்தமிழ் இதழ் வெளிவந்தது. முதல் இதழ் - 1902, டிசம்பர் 7ஆம் நாள் ரா.இராகவையங்கார் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ளது. முதல் இதழில் செந்தமிழ் இதழின் பெயர்க்காரணங்கள் கீழ்வருமாறு சுட்டப் பெறுகின்றன.

1. இஃது தமிழின் செம்மையினையே உலகிற்கு நன்கறிவுறுத்தலானும்
2. செந்தமிழ் வளர்ச்சியே செய்தலானும்
3. செவ்விதாய தமிழானே நடத்தலானும்
4. செந்தமிழ்நாட்டுத் தலைநகர்க்கண்ணே தோற்ற முடைத்தாகலானும் 'செந்தமிழ்' எனப் பேர்பெற்று விளங்கும்.

இதழ் நோக்கத்தைக் காணும்போது, 'இதுகாறும் அச்சிடப் படாத செந்தமிழ் நூல்களும் தமிழ் நாட்டுப்புராதான சரிதங்களும் சாசனங்களும் வடமொழியிலும் ஆங்கிலத்தினும் தமிழிற்கு வேண்டுவனவாகக் கருதப்படும் நன் மொழி பெயர்ப்புகளும், தமிழின் அருமைபெருமை அடங்கிய விசயங்களும் தமிழாராய்ச்சியைப் பற்றியனவாகப் கருதப்படும் நூன் மொழிபெயர்ப்புக்களும் தமிழாராய்ச்சியைப் பற்றியனவும், தமிழ் வளர்ச்சிக்கு வேண்டுவன பிறவும் இதன் வாயிலாக வெளிவரும்' என்ற பெரும் தமிழ்ப்பணியை முன்னெடுக்க முயன்ற சிறப்பு தெரியவருகிறது. இவ்வுயரிய நோக்கங்களைக் கொண்டு தொடங்கப்பட்ட செந்தமிழ் இதழில் 'சேர அரசர் - சேர நாடு - சேரர் இலக்கியம் ' பற்றிய செய்திகளைக் காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## சேர நாடு

செந்தமிழ் இதழில் சேர நாடு குறித்த கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன. குறிப்பாக, 'சேரநாடு', 'சேரநாட்டின் தொன்மை' ஆகிய தலைப்புகளில் ஒளவை சு.துரைசாமிப் பிள்ளை அவர்கள் கட்டுரைகள் எழுதியுள்ளார். இத்தனிக் கட்டுரைகளோடு, தனது பிற ஆராய்ச்சிக் கட்டுரைகளிலும் சேரநாடு குறித்து ஆங்காங்குக் குறிப்பிட்டுள்ளார். மேலும், சேரர் தலைநகரங்கள் குறித்த ஆய்வுக் கட்டுரைகளும் ஒளவை. சு.துரைசாமிப்பிள்ளை, மு.ராகவையங்கார், ரா.இராகவையங்கார் போன்றோர்களால் எழுதப்பட்டுள்ளன. சேர நாடு குறித்த கட்டுரைகள் இருவேறு வாதத்தை முன்வைக்கின்றன. ஒன்று, சேரநாடு மூன்று பிரிவுகளாக

இருந்த பழந்தமிழகத்தின் ஒரு பகுதி என்பது; மற்றொன்று, சேரநாடு பலராமனால் கடலிலிருந்து தோற்றுவிக்கப்பட்டது, அதன் முன்னோர் தமிழர்கள் அல்ல என்ற பிற்காலக் கேரள வரலாற்றை உண்மையென்று முன்னெடுப்பது.

ஔவை சு.துரைசாமிப்பிள்ளை அவர்களின் 'சேரநாடு' என்ற கட்டுரை 'பண்டைநாளில் இத்தமிழகம் சேர-சோழ-பாண்டியர் என்ற வேந்தர்க்கு உரியதாய் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என மூன்று பெரும்பிரிவுற்று விளங்கிற்று' என்பதை மையக் கருத்துரையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இதற்குச் சான்றுகளாக, பண்டைத் தமிழாசிரியர் சுட்டிய 'பொதுமை சுட்டிய மூவருலகு' (புறம் 357), 'வண்புகழ் தண்பொழில் வரைப்பு (தொல்.செய்.78) என்பன போன்ற பழந்தமிழ் நூற் கருத்துகளைக் கொடுக்கிறார்.

**எல்லை**

சேரநாட்டின் எல்லைகளைக் குறிப்பிடும்பொழுது, மேலைக் கடலுக்கும் மலைத்தொடருக்கும் இடையிலுள்ள நிலப்பகுதி சேரநாடாகும். தெற்கில் கொல்லத்துக்கும், வடக்கில் கோகரனத்துக்கும் இடையில் குட்டம், குடம் என இரு பெரும் பகுதியாகத் தோன்றும் சேரநாட்டுக்குத் தெற்கில் வேணாடும் வடக்கில் கொண்கானமும் எல்லைகளாய் விளங்கின. இந்தச் சேரநாட்டை ஏனைத் தமிழ் மண்ணின்றும் பிரித்து வைப்பது மேற்குமலைத் தொடர் என்கிறார்.

**வரலாற்றுப் போலி**

சோழர்களைப் பற்றியும் பாண்டியர்களைப் பற்றியும் வரலாறுகள் உண்டானதுபோல சேரநாட்டுக்கு வரலாறொன்றும் தோன்றவில்லை. சேரநாடு பிற்காலத்தே கேரளநாடென வழங்கப்பட்டது. அதன்பின் 'கேரளோற்பத்தி', 'கேரளமகாத்மியம்' ஆகிய வரலாற்றுப் போலிகள் உண்டாயின என்பது இவர்தம் கருத்து.

அதேபோல, 'சேரநாட்டின் தொன்மை' என்ற தனது கட்டுரையில், கேரள வரலாற்றைச் சொல்ல பிற்காலத்தில் எழுந்த 'கேரளோற்பத்தி', 'கேரளமகாத்மியம்' என்ற இரண்டு நூல்களின் கருத்துகளை மறுத்து எழுதுகிறார். தம் கருத்துக்கு பழைய இலக்கணம், இலக்கியம், மேலைநாட்டார் குறிப்புகள் போன்றவற்றைச் சான்றுகளாகக் கொள்கிறார்.

### தொன்மைச் சான்றுகள்

சேரநாட்டின் தொன்மை நிலையை உணர்வதற்குப் பண்டைச் சங்கத் தொகை நூல்கள் ஓரளவு துணைசெய்கின்றன. ஆனாலும் அவற்றால் சேர வேந்தர்களையும் சேரநாட்டுக் குறுநிலத் தலைவர்களையும் முறைப்படுத்திக் காண்பதற்குப் போதிய வாய்ப்பு இல்லை. இந்நூல்களில் சேரநாட்டு மலைகளிற் சிலவும் ஆறுகளிற் சிலவும் ஊர்களிற் சிலவும் தெரிகின்றன. நூல்களில் பதிற்றுப்பத்தும் புறநானூறும் சேர வேந்தர்களையும் சேர நாட்டையும் சிலபல பாடல்களில் சிறந்தெடுத்துக் கூறுகின்றன. ஏனையவை ஆங்காங்குச் சிற்சில குறிப்புக்களையே வழங்கு கின்றன. சங்கத் தொகை நூல்களை அடுத்துப் பின்னர்த் தோன்றிய சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சேரநாட்டைப் பற்றிச் சிறிது விரிவாகக் கூறுகின்றன என்கிறார் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை. சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகியவற்றின் ஆசிரியர்கள் சேரநாட்டவராதலால் அவர் கூறுவதைத் தமது ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணையாகக் கொள்கிறார்.

### கேரள வரலாற்றுப் புதிய நூல்கள்

இப்போது சேரநாட்டின்கண் அதன் தொன்மை கூறும் வகையில் வரலாற்று நூல்கள் இரண்டு நிலவுகின்றன. அவை, கேரளமகாத்மியம், கேரளோற்பத்தி என்பனவாம். அவற்றுள் மான்மியம் வடமொழியிலும் கேரளோற்பத்தி மலையாள மொழியிலும் உள்ளன. இரண்டும் காலத்தால் பிற்பட்டவை யாயினும் நாட்டு வரலாறாகக் கூறப்படுவதால் கேரள நாட்டு வரலாறு பற்றி ஆராய இவற்றை எடுத்துக் கொண்டு உண்மை நிலையை ஆராய முற்பட்டதாகக் கூறுகிறார் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை.

### நூலில் உள்ளவை

வேந்தர் குலத்தை வேரறுத்துவந்த பரசுராமன் புதிதாக நாடு ஒன்று படைக்க விரும்பி தன் தவ வன்மையால் கடலிலிருந்து மலையாள நாட்டை வெளிப்படுத்தி, அதன்கண் பிராமணர்களை வாழச் செய்தான். சில காலத்துக்குப்பின் அவர்களுக்கு நாகர்களால் பெருந்துன்பம் உண்டாயிற்று. அதனால் அவர்கள் அனைவரும் அந்நாட்டின்றும் போய்விட்டனர். பின்னர், பரசுராமன் வடக்கில் உள்ள ஆரிய நாட்டில் அறுபத்துநான்கு ஊர்களில் வாழ்ந்த பிராமணர்களைக் கொணர்ந்து குடியேற்றினான். நாகர்களால் உண்டான இடுக்கண் நீங்க நாக வழிபாடும் நாகர்கட்குக்

கோயில்களும் ஏற்படுத்தினான். அச்செயலால் நாகர் துன்பம் குறைந்தது. அதனையறிந்த பழைய பிராமணர்கள் தங்களைப் பழந் துளுவரென்றும் துளு பிராமணர்கள் என்றும் கூறிக்கொண்டு திரும்பி வந்தனர். பரசுராமன் அவர்களுக்கு நாகர் இடுக்கண் தொலையும்பொருட்டு மந்திரங்கள் கற்பித்து, கோயில்களில் பணிபுரியுமாறு ஏற்பாடு செய்தான். மருமக்கள் தாய முறையினை முதற்கண் ஏற்படுத்தியவனும் பரசுராமனே. நாளடைவில், அப்பிராமணர்களிடையே பூசல்களும் போர்களும் ஏற்பட்டன. அதனால் நான்கு பேரூர்களில் வாழ்ந்த பிராமணர்களை வரவழைத்து, ஊருக்கு ஒருவராக நால்வரைத் தேர்ந்தெடுத்து அவர்களை அரசியலை நடத்துமாறு பரசுராமன் ஏற்பாடு செய்தான். நால்வரில் ஒருவன் தலைவனாக வேண்டும் என்றும் அவன் மூன்று ஆண்டுகளுக்குமேல் தலைமை தாங்குதல் கூடாதென்றும் அவர்கள் தங்களுக்குள் வகுத்துக்கொண்டனர்.

பின்னாளில் மக்களுக்கும் இவர்களுக்கும் பிரச்சினைகள் ஏற்பட்டன. இவர்களால் மக்களுக்கு இன்னல்கள் ஏற்பட்டன. பிராமணர்கள் ஒன்றுகூடி தங்கள் நாட்டுக்குத் தலைவனாகிறவன் தங்கள் நாட்டவனாக இருத்தல் கூடாதென்று தீர்மானித்தனர். 'கேயபுரம்' என்னும் இடத்திலிருந்து ஒருவனைத் தேர்ந்தெடுத்து கேயபெருமான் என்று சிறப்புப் பெயர் நல்கித் தங்கட்குப் பன்னிராண்டு வேந்தனாக இருக்குமாறு ஏற்பாடு செய்தனர். அவனுக்கு முடிசூட்டும்பொழுது 'சேரமான் பெருமான்' என்று பெயர் கூறப்பட்டது. இவனுக்குப் பின் சோழன் பெருமாளும், அவன்பின் குலசேகரனான பாண்டிப் பெருமாளும் ஆட்சி செய்தனர். அதன்பின் பலர் ஆட்சி செய்தனர். அவர்களின் தலைநகர்கள் மாறின.

### கேரளம் - பெயர்க் காரணமாக நூலில் சுட்டப்படுவது

கேரளோற்பத்தி நூல் வழி - மலையாள நாட்டு வேதியர்கள் ஒருகால் சோழமண்டலம் சென்று தங்கட்கொரு வேந்தன் வேண்டுமென்று ஒருவனை வேந்தனாகக் கொணர்ந்தனர். அவன் பெயர் கேரளன். அவன் பெயராலேயே கேரளம் என்று அழைக்கப்படுகிறது என்கிறது கேரள வரலாற்று நூல். இதனை ஔவை சு.துரைசாமிப்பிள்ளை புனைவு என்கிறார்.

'உண்மைக்கு மாறாகப் பொய் நிறைந்த கதை செறிந்த இந்நூல்களை இந்நாட்டு வேதியர்கள் தங்கள் நலமே பெரிதும் பாதுகாக்கப்பட்டு நிலைபெறும் பொருட்டு வெறிதே பொய் புனைந்து அமைத்துக்கொண்ட புளுகு மூட்டை' என்ற மேனாட்டு

அறிஞர் வில்லியம் லோகன் கூற்றைக் கட்டுரை ஆசிரியர் முன்வைக்கிறார்.

மேலும், சங்க இலக்கியங்கள் யாவும் சேர நாட்டை, சேரநாடென்றும் நாட்டு வேந்தர்களைச் சேரரென்றும் தெளியக் கூறுகின்றன. பிற்காலத்துத் தமிழ் நூல்களும் அந்நெறியில் வழுவியது கிடையாது. வடநாட்டு வடமொழி நூல்களுள் வேதங்களும் இதிகாசங்களும் சேரர்களைச் சேரரென்றே குறிப்பதைக் காண்கிறோம். மேலைநாட்டார் மெகசுதனிசு என்பார் கங்கைக்கரை பாடலிபுரத்திலிருந்து எழுதிய குறிப்பும் சேரர்களைச் சேரமான்களென்றே குறித்துள்ளது என்கிறார்.

அதேவேளையில், அசோக மன்னனுடைய கல்வெட்டுக்கள் சேரர்களைக் கேரளப்புத்திரன் என்று கூறுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டி, கல்வெட்டுகளைப் படித்தோர் சேரளப் புத்திரன் என்பதைக் கேரளப் புத்திரன் என்று படித்திருக்கவும், அதுவே வழக்கமாகியிருக்கவும் வாய்ப்பு உள்ளது என்கிறார். மேலும், கி.பி. ஏழாம் நூற்றாண்டின் திருஞான சம்பந்தர் பாடல்களில் சேரர் என்றே காணப்படுவதையும் எடுத்துக்காட்டுகிறார்.

### பெயர் மாற்றக் காரணங்கள்

சேரர், கேரளர் என்று பெயர் மாறியதற்கான காரணங்களையும் ஒளவை சு.துரைசாமிப்பிள்ளை தம் கட்டுரையில் தெளிய வைக்கிறார். பெயர் மாற்றத்திற்கான மூன்று காரணங்களைச் சுட்டுகிறார். 'வேதகாலத்துக்குப் பின்வந்த வடமொழியாளர் தாங்கள் புதியவாய்க் காணும் நாடு நகரங்களின் பெயர்களையும், ஆறுகள் ஊர்கள் முதலியவற்றின் பெயர்களையும் மக்களினத்தின் பெயரையும் தாங்கள் கலந்து வழங்கும் வகையில் மூன்று நெறிகளை மேற்கொண்டனர். முதலாவது எதிர்ப்படும் பெயர்களைத் தம்முடைய மொழியில் மொழிபெயர்த்துக் கொள்வது; இரண்டாவது திரித்துக் கொள்வது; மூன்றாவது ஒரு திரிபுமின்றி ஏற்றுக்கொள்வது' என்கிறார்.

ஆக, கேரள வரலாறு என்ற பெயரில் எழுந்துள்ள இரண்டு நூல் கருத்துகளும் புனைவுகளும் பொய்களும் நிறைந்தவை. சேரநாடு என்பதே தொன்மை. அதற்கான சான்றுகள் பழந்தமிழ் இலக்கியங்களில் பரவிக் கிடக்கின்றன. மூவேந்தர்களுள் ஒருவரான சேர வேந்தர்களே சேர நாட்டை ஆண்டனர் என்பது இவர் துணிபு.

ஔவை சு.துரைசாமிப்பிள்ளை அவர்களின் மற்றொரு கட்டுரை 'சேர மன்னர்' என்பது. இக்கட்டுரையில் சேர நாடு, எல்லை, தலைநகரங்கள், சின்னங்கள், அரசர்கள், சிறப்புப் பெயர்கள், பொதுப்பெயர்கள், அரசமுறை போன்றவற்றை விளக்கியுள்ளார். இக்கட்டுரையில், சேரநாட்டில் வாழ்ந்த மக்கள் சேரநாட்டு செந்தமிழ் பேசுபவர். பாண்டியநாட்டுத் தமிழர்க்குப் பாண்டியரும் சோழநாட்டுத் தமிழர்க்குச் சோழரும் வேந்தராயினது போலச் சேரநாட்டுத் தமிழர்க்குச் சேரர் வேந்தராவார். இந்நாட்டுக்குக் கிழக்கெல்லையாகச் சுவர் போல் தொடர்ந்து நிற்கும் மேற்கு மலைத் தொடர். இது தெற்கே பொதியமலை முதல் வடக்கே தபதி நதிக்கரை வரையில் நிற்கும். சோழநாட்டுக்கு உறையூரும் பாண்டி நாட்டுக்கு மதுரையும் போல சேரநாட்டுக்கு வஞ்சிமாநகர் தலைநகராகும். சேரநாட்டின் இரு பகுதிகள் குட்டநாடு, குடநாடு. குட்டநாட்டுக்கு - வஞ்சி; குடநாட்டுக்கு - தொண்டி ஆகியவை தலைநகரங்கள். மேலும், சேரநாடு - குட்டநாடு, பொறைநாடு, குடநாடு, கடுங்கோநாடு எனப் பிரிந்திருந்தது என்பன போன்ற செய்திகள் காணப்படுகின்றன.

மேலும், சேரநாட்டுக் கடற்கரை நகரங்களைக் குறிப்பிடும் பொழுது, பாண்டியநாட்டுக்குக் கொற்கையும் சோழநாட்டுக்குக் காவிரிப்பூம்பட்டினமும் போல சேரநாட்டிற்கு முசிறியும் தொண்டியும் கடற்கரை நகரங்களாக விளங்கின என்கிறார். சேர அரசர்களின் சின்னத்தைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது, 'இச் சேரமன்னர் மலைநாட்டில் வாழ்ந்தமையின் மலைகளிலும் சரிவுகளிலும் மண்டியிருந்த பெருங்காடுகளிலும் வேட்டம் தொழில் தொடக்கத்தில் மேற்கொண்டிருந்தனர். அதனால் இவர்களுடைய கொடியில் வில்லே பொறிக்கப்பட்டிருந்தது. கடற்கரையோரங்களில் பனைமரங்கள் காடுபோல் செறிந்திருந்தன. அதனால் அவர்களின் அடையாள மாலையாகப் பனந்தோட்டால் மாலை தொடுத்துத் கொண்டனர்' என்கிறார். சேர அரசர்களின் சிறப்புப்பெயர்களாக, வானவரம்பன், வானவன், குடக்கோ, பொறையன், இரும்பொறை, கடுங்கோ போன்றவை விளங்கியதையும், பொதுப்பெயர்களாக, சேரலர், சேரல், சேரமான் ஆகியவை வழங்கப்பட்டதையும் சுட்டிக் காட்டுகிறார்.

### அரசர் முடிசூடும் முறை

சேர அரசர்கள் முடிசூட்டிக்கொள்ளும் முறைமையில் மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. 'பண்டைநாளைத் தமிழர்கள்

அரசெய்திய முறை ஒரு சிறப்பு முறையாகும். ஒருவேந்தனுக்கு மூன்று புதல்வர்களென்றால் அவர் ஒருவர்பின் ஒருவராக முடிசூட்டிக்கொள்வர். முன்னவன் முடிவேந்தனாக பின்னோர் இருவரும் இருவேறு பகுதிகளில் சிற்றரசர்களாக முடிவேந்தற்குத் துணைபுரிவர். இம்மூவரும் முடிசூடி வாழ்ந்தபின்பே இவர்மக்களுள் மூத்தவன் எவனோ அவன் முடிசூடுவான். இம்முறை இடைக்காலச் சோழவேந்தரிடத்தும் இருந்திருக்கிறது' என்பது ஔவை சு.துரைசாமிப்பிள்ளை அவர்களின் கருத்தாக உள்ளது.

சேரர் தலைநகர் பற்றி, வி.வெங்கடராம சர்மா அவர்களும் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். சேரர் தலைநகர் முசிறி என்பது இவர் கருத்து. முரஸி என்னுஞ் சொல் ஆற்றிற்குப் பெயராவது உணரப்படும். இப்பெயரே அவ்வூர்க்கும் (கொடுங்கோளூர்) வழங்கி வரலாயிற்று என்பதற்குச் சான்றுகள் உள்ளன என்கிறார்.

அதேபோல, சேரநாட்டின் பரப்பு, தலைநகர் போன்ற கருத்துகளை மையமாகக் கொண்டு கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்(மான் முருகனார்) அவர்கள் 'சேர மரபு' என்ற கட்டுரையை எழுதியுள்ளார். இக்கட்டுரையில் சேரநாட்டின் பரப்பைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து, 'சேரநாடு மிகப் பரந்ததொன்று. போர்வகையால் அது பலபோது மிகுந்தும் குறைந்தும் வந்திருக்கிறது. பழைய சேரநாடு கருவூர்ப்பிரதேசமுட்பட கோயம்புத்தூர், சேலம், நீலகிரி சில்லாக்களும் மைசூர் நாட்டின் தென் பகுதியும் மேற்குத் தொடர்ச்சிமலை நெடுக உள்ள பக்கங்களுமாம் எனச் சேரன் செங்குட்டுவன் என்றொரு ஆராய்ச்சி நூல் கூறுகிறது' என்று அவர் காலத்து வெளிவந்த ஆராய்ச்சி நூலினைச் சான்று காட்டுகிறார்.

### சேரர் தலைநகர்

சேரர் தலைநகர் பற்றிய விவாதங்களும் செந்தமிழ் இதழில் தொடர்ச்சியாக வெளிவந்துள்ளன. குறிப்பாக, வஞ்சிமாநகர் பற்றிய ஆராய்ச்சிகள் கட்டுரைகளாக வெளிவந்து விவாதங்களாகவும் மாறியுள்ளதைக் காணமுடிகிறது.

வஞ்சிமாநகர் - திருச்சிக்கருகில் உள்ள கரூர் என்றும், இல்லை கொடுங்கோளூரே என்றும் இருவித கருத்துகள் சுட்டப்படுகின்றன. செந்தமிழ் இதழில் 'வஞ்சிமாநகர்' பற்றிய செய்திகளும், வஞ்சிமாநகர் எது என்பது பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும்

வெளிவந்துள்ளன. மு. இராகவையங்கார் அவர்கள் தன்னுடைய கட்டுரைகளில் திருச்சி ஜில்லாவில் உள்ள கருவூரே வஞ்சி மாநகர் என்று பல இடங்களில் சுட்டிச் செல்கிறார். இக்கருத்தை ஏற்றும் மறுத்தும் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

மதுரைத் தமிழ்ச்சங்கத்துத் தலைவரான சேது மன்னரின் கட்டளைக்கிணங்க பத்திராதிபர் திரு நாராயணையங்கார் அவர்களும் வஞ்சிமாநகர் குறித்து ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

'வஞ்சி என்பது கருவூர் என்றும் அதுவே திருவஞ்சைக்களம் என்றும் பலர் கூறுகின்றனர். சேரர் தலைநகரம் திருவஞ்சைக்களம் என்றே பெரியபுராணம் கூறுகின்றது. வஞ்சி சேரரது தலைநகரம் எனச் சங்க நூல்களும் பரவக்கூறும்.' என்கிறார் கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்.

சு.ஸ்ரீநிவாசையங்கார் அவர்கள் தனது 'வஞ்சிமாநகர்ப் பெயர்க்காரணம்' என்ற கட்டுரையில், 'வஞ்சுளாரணியம் என்னும் வடமொழிப் பெயர் தமிழில் வஞ்சி என்று வந்ததாகக் கூறுவர். வஞ்சுளாரணியம் என்னும்சொல் ஒரு வகை மரத்திற்கும் கொடிக்கும் பெயராம். எனவே அவை, மிகுதியாகக் காணப்படும் நாடு வஞ்சுளாரணியம் என்பதாம் என்றும், அதன் சுருக்கம் வஞ்சி என வந்தது என்றும் கூறப்படுகிறது' என்கிறார். மேலும் ஒரு காரணமாக, சேரமான் வஞ்சன் என்னும் அரசன் இந்நகரை முதன் முதல் சேரனாட்டிற்குத் தலைநகராகக்கொண்டு ஆண்டிருத்தல் வேண்டும் என்று ஊகித்தறியலாம். அக்காரணத்தால் அந்நகரம் வஞ்சியென்று பெயர்பெற்றது போலும் என்கிறார்.

வஞ்சி என்பது பேரியாற்றங் கரைக்கண் உள்ள கரூர் என்று சிலரும் திருச்சிராப்பள்ளி சில்லாவைச் சார்ந்த கருவூர் எனச் சிலரும் கூறுவர். திரு.ரா. இராகவையங்கார் கருத்து திருச்சி சில்லாவில் உள்ளக் கருவூர் என்பது. திரு ஐயங்கார் அவர்கள் கூறும் பிற ஆராய்ச்சி நுட்பங்கள் அவராற் கூறப்படும் கருவூரே சேரர்க்குப் பழைய தலைநகரமாக இருந்திருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தும். மிகப் பரந்த சேரநாட்டிற்குச் சோழ நாட்டையடுத்த கருவூர் தலைநகராக இருப்பது வியப்பும் அன்று. கருவூரைப் பிற்காலத்துச் சோழர்க்கு உரிமைப்படுத்திப் பலநூல்கள் கூறுவதற்குக் காரணம் சேரர்தம் பழைய தலைநகரை மாற்றிக் கொண்டதேயாகும் என்கிறார் கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்.

அதே நேரத்தில், சி.எஸ். செலுவைய்யர் வஞ்சி மாநகரம் கொங்கு குடபுலமன்று என்கிறார். இவ்விவாதங்களை முடித்து

வைக்கும் முகமாக பத்திராதிபர் திரு நாராயணய்யங்கார் எழுதிய 'வஞ்சிமாநகராராய்ச்சி' என்ற கட்டுரை முடிபாக, 'இதுகாறும் செய்த வாதக்ஷி முடிவுரையின் ஏகதேசமான 'கொங்கு குடபுலம்' என்பதன் வாக்கியார்த்த விசாரணையாலேயே கொங்கு குடபுலமாகதென்பது பெறப்பட்டமையால், கொங்குவஞ்சி குடபுல வஞ்சியாகா தென்பதும் கூறவேண்டாதாயிற்று' என்று கூறுகிறது.

## சேர அரசர்கள்

செந்தமிழ் இதழில் சேர அரசர்கள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன. இக்கட்டுரைகள், சேர பெரு வேந்தர்கள், சிற்றரசர்கள், வேளிர்கள், தாயமுறை, முன்னோர்கள், வீரதீரச் செயல்கள் பற்றிப் பேசுகின்றன. சேர அரசர்கள் சிலரை முன்வைத்த கட்டுரைகள், அவ்வரசர் பெருவேந்தரா? சிற்றரசரா? என்ற ஆய்வினையும் முன்னெடுக்கின்றன.

'சேர மன்னர்' என்ற ஔவை சு.துரைசாமிப்பிள்ளை அவர்களின் கட்டுரையும் அதன் தொடர்ச்சியாக வெளிவந்த அவரின் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆகிய கட்டுரைகளும் சேர அரசர்கள் பற்றி விரிவாகப் பேசுகின்றன. பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து, 'புறநானூற்றுப் பழைய வுரைகாரர் இப்பாட்டின் உரையில் 'பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோன்' என்பது பெருஞ்சோற்றுதியற்கு முன்னோன் என்றும், முன்னோன் செய்தது இவ்வுதியஞ்சேரல்மேல் ஏற்றிக் கூறப்படுகிறதென்பதும் கூறாமையால் இதனைக் கண்டோர், இச்சேரலாதன் பாரத காலத்தவனென்றும் பாரதவீரர்களுக்குப் பெருஞ்சோறு அளித்தவன் இவனே என்றும் இவனது இச்செயலைப் பாராட்டிப் பாடும் இம்முடிநாகனாரும் இவரது காலத்தவரென்றும் கருதி யுரைப்பாராயினர் என்கிறார். மேலும், இருவரும் வேறு வேறு என்று மு. இராகவையங்கார் சுட்டியதையும் எடுத்துக்காட்டுகிறார்.

மேலும், அவர்கள் கூறுமாறு பாண்டவ-கௌரவர் செய்து கொண்ட போரைத் 'தென்னாட்டில் ஒரு மூலையில்' வாழும் சேரவேந்தர் பாராட்டி, அப்போரில் இறந்தோர் பொருட்டுப் பெருஞ்சோற்று விழாவை செய்தற்கு ஒரு தொடர்பும் இல்லை. அந்நாளில் வடவாரியர்களுக்கும் தென் தமிழர்க்கும் சிறந்த நட்புரிமை இருந்ததாக எண்ணுதற்கும் இடமில்லை. இனி,

பிற்காலத்தே தென்னாட்டு ஊர்களில் பாரதம் படிப்பதும் அது குறித்துத் தென்னாட்டுச் செல்வர்கள் பாரதவிருந்தி யென்னும் நிவந்தங்கள் விடுவதும் உண்மையேயன்றி சங்ககாலத்தே இந்நிகழ்ச்சிகள் நடந்தன என்று கொள்வதற்குச் சங்க நூல்களில் ஆதரவு சிறிதும் இல்லை என்கிறார். 'இத்துணையும் கூறியதனால் பெருஞ்சோற்றுதியன் கொங்குநாட்டிற் பெற்ற வெற்றிவிழாவில் மேற்கொண்டு மகிழ்ந்த பெருஞ்சோற்று நிலையென்னும் புறத்துறைச்செயல், அவனுக்கே சிறப்பாய் அமைந்தமையின் அவன் பெருஞ்சோற்றுதியன் எனச் சிறப்பிக்கப் பெற்றான் என்பதும், அதனைப் பாராட்டவந்த முடிநாகனார் ஒப்புமை கருதி முன்னோன் ஒருவன் செயலை இவன் மேலேற்றிக் கூறினாரென்பதும் தெளியப்படும்' என்பது இவர் ஆய்வு முடிவாக உள்ளது.

செந்தமிழ் இதழில் 'ஒரு மாணவன்' என்ற பெயரில் சில கட்டுரைகள் வெளிவந்துள்ளன. யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை, சேரமான் பெருஞ்சேரலாதன் என்ற தலைப்புகளில் வெளியான இக்கட்டுரைகள் இவ்விரு அரசர்களையும் பேரரசர்கள் என்பதை நிறுவுவனவாக உள்ளன. இவ்வாய்வு முடிவுகளுக்கு இலக்கியங்களிலிருந்தும் கல்வெட்டுகளிலிருந்தும் சான்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இக்கட்டுரைக்குப் பார்க்கப்பட்ட இதழ் தொகுதிகளில், வித்துவான் சு.குமாரஸ்வாமி ஆச்சாரி என்பவர் மட்டுமே சேர அரசர்களைப் பற்றி ஆறு கட்டுரைகள் எழுதியுள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. 'சங்க கால மன்னர்கள் - சேரமரபினர்' என்ற தனது கட்டுரையில், சேர நாடு, சேர அரசர், சேர மன்னர்களைப் பற்றி விரிவாகப் பேசுகிறார். பிற்காலத்தில் சேர நாடு பற்றி எழுதப்பட்ட வரலாற்று நூல்களின் கருத்துகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு, அதற்கு வலுசேர்க்கும் வகையில் இவருடைய கட்டுரைகள் அமைகின்றன. பரசுராமரால் சேரமரபினர் உருவாயினர் என்ற பிற்கால சேர வரலாற்று நூல் கருத்தை கட்டுரை ஆசிரியரும் வலியுறுத்துகிறார்.

'நம் பைந்தமிழ்நாடு பழம்பெருநாடு; தண்டமிழ் வேந்தர் மூவரால் ஆளப்பட்டு வந்தது. அவ்வேந்தர்கள் சேர, சோழ, பாண்டிய மரபினர் ஆவர். அவர்களேயன்றி வேறுபல குறுநில மன்னர்களும் இருந்தனர். சேரர் மேல்கடற்கரைப் பகுதியையும் அதையடுத்த உள்நாட்டுப் பகுதியையும் ஆண்டுவந்தனர். நெய்தல் நிலத் தலைவனைச் சேர்ப்பன் என்பது வழக்காதலின்,

கடற்பகுதியை நாடாக்கி வாழ்ந்த மரபினர் சேரர் என வழங்கப்பட்டனர் போலும். இம்மரபினரை வானவர் என்றும் குறிப்பதுண்டு' என்று குறிப்பிடும் ஆசிரியர், 'பரசுராமரால் வடக்கிருந்து கொணரப்பட்ட தெய்வத்தன்மை பொருந்திய மரபினர் இவர் எனக் கேரளவரலாற்று நூல்கள் குறிப்பது உண்மையாகலான் என நினைத்திற் கிடனளிக்கிறது. இவ்வானவர் என்னும் சொல்லும் அதுதொடர்பான தெய்வநம்பிக்கையும் தெய்வவழிபாடும் இன்றும் சேரநாட்டில் சிறந்து விளங்குகின்றன' என்றும் சுட்டுகிறார்.

சேர அரசர்கள் சங்க இலக்கியங்களில் எங்கெங்கு பாடப்பட்டுள்ளனர் என்ற குறிப்புகளை எடுத்துக்காட்டுகிறார். சேர அரசர்களின் பெயர்களான, உதியன் சேரலாதன், குடக்கோ நெடுஞ்சேரலாதன், கடலோட்டிய வேல்கெழு குட்டுவன், அந்துவன் சேரலிரும்பொறை, கடுங்கோ, ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், செல்வக்கடுங்கோ வாழியாதன், பல்யானைச் செல்கெழுகுட்டுவன், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், பெருஞ்சேரலிரும் பொறை, கோதை, இளஞ்சேரலிரும் பொறை, ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், பெருஞ்சேரலாதன், யானைக்கட்சேய் மாந்தரன்சேரலிரும்பொறை, வானவன் போன்ற பெயர்களைப் பட்டியலிடுகிறார். பிற சேர அரசர்களாக, சேரமான் எந்தை, சேரமான் இளங்குட்டுவன், சேரமான் வஞ்சன், சேரமான் முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன், கணைக்காலிரும்பொறை, சேரமான் கருவூரேறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேர லிரும்பொறை ஆகியோர்களையும் குறிப்பிடுகிறார். சேர அரசப் புலவர்களாக சேரமான் எந்தை, சேரமான் இளங்குட்டுவன், சேரமான் முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன் ஆகியோர் விளங்கியதை எடுத்துக்காட்டுகிறார்.

அதேபோல, தனது 'சேரர் மரபு' என்ற கட்டுரையில், கதம்பர்கள், கங்கர்கள், சாளுக்கியர்கள் தங்களை நாகர் மரபினர் எனக் கூறிக்கொள்கின்றனர்; துளுநாட்டு ஆளுபர் (ஆள்வார்)களும் நாகமரபினர் எனக் கூறப்படுகின்றனர்; ஆதலில் மலையாளப்பகுதி நாகர்கள் வாழ்ந்த இடம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நாகர்கள் இன்பம் நிறைந்த வாழ்க்கையினர் என்பதை நம் நாட்டுப் புராணங்களும் கூறுகின்றன. நாகர்கள் இந்தியாவில் பெரும்பான்மையான பகுதிகளில் வாழ்ந்தவர். மன்னர்களாக நாடாண்டவர் என்ற கருத்தை முன்வைக்கிறார். மேலும், முண்டாமரபினரான செரு(cheru)

குலத்தவரே- கச்சாரிகளே - நாகர்களே சேரர்கள் என்பது நன்கு புலனாகும் (சேர என்னும் மலையாளச் சொல் பாம்பெனப் பொருள் படும்). வானவன், வானவரம்பன் என்பன சேரர் மரபினைக் குறிக்கும் சொற்களே என்பதும் புலனாகும். 'நாகர்மரபின் ஒரு பிரிவினரான மாறன் என்பவர்கள் பாண்டிய மரபினராவர் என எண்ணுவதற்கிடனுண்டு. மலையாளத்து மாறன்மார் பாண்டியர்கள் எனக் கூறப்படுகின்றனர். இது ஆய்விற்குரியது' என்கிறார்.

அதேவேளையில், 'சேர மரபு' என்ற தலைப்பிலேயே கட்டுரை ஒன்றை எழுதியுள்ள கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் அவர்கள், பிற்கால சேர வரலாற்று நூல் கருத்துகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. இவர் தனது கட்டுரையில், தமிழ்நாட்டை மூவேந்தர்களே நெடுங்காலம் புகழும் புண்ணியமும் வாய்ப்ப ஆண்டு வந்தமையாலும் அவர் மொழி தமிழ் என்னும் ஒரு மொழியாகவே இருந்தமையாலும் பிறர் வந்து ஆளுவதற்கு இடங்கொடாமையாலும் தாம் தமிழர் என்ற ஒரு சாதியாராகவே இருந்தமையாலும் அம்மூவரும் மூவேந்தர் எனச் சிறப்பித்துக் கூறப்பட்டார்கள் என்கிறார்.

சேரநாடு பரசுராமரால் தோற்றுவிக்கப்பட்டது என்ற கருத்திற்கு, 'பரசுராமர் காலத்துச் சேரநாட்டில் பார்ப்பார் செல்வாக்கு மிகுதியாயிருந்தது என்பதும் அரசரை வயப்படுத்தித் தம் அதிகாரங்களை நிறுவினார் என்பதும் வேண்டுமேல் கொள்ளப்படல் ஆகும். கேரளத்தைப் பரசுராமர் பார்பார்க்குத் தானம் செய்தார் என்பதற்கு ஆங்குப்பார்ப்பார் சிலரைக் குடியிருத்தி அவர்க்கு இடங்களும் அதிகாரங்களும் அரசர் உடன்பாட்டுடன் அளித்தார் என்பதே பொருளாதல் வேண்டும். கேரளத்தைத் 'தருமராச்சியம்' என்பது பரசுராமர் அந்நாட்டைப் பார்ப்பார்க்குத் தானம் செய்ததுபற்றி அன்று; கேரளவரசர் தருமங்காத்து வருவது பற்றியே ஆகும்' என்றும் விளக்கம் அளிக்கிறார்.

அதேபோல, சேரநாட்டுப் பெயர்க் காரணம் பற்றிக் குறிப்பிடும்பொழுது, 'சேரல் என்பது, 'அலங்கல் தொடையல்' என்பன போலத் தொழிலாகுபெயராய் மலைசேர்ந்த நாட்டின் பெயராயிற்று. சிலபோழ்து இச்சொல் இருமடியாகு பெயராய்ச் 'சேரன்' என்ற பொருளிலும் நார்முடிச்சேரல் என்பது காண்க. சேரல் என்னும் மலைநாட்டை உடையவன் சேரலன் எனப்படுவான். சேரர்க்கு இப்பெயரே நூல்களில் மிகுதியும் வழங்கப்பட்டு வருகின்றது. 'ச' என்னும் எழுத்திற்கு நேராக 'க' என்னும் எழுத்து பல சொற்களில் வருகின்றது. சீரை கீரை என்பது காண்க' என்கிறார்.

இம்முறை பற்றியே சேரலன் என்பது சேரலன், கேரளன் எனத் திரிந்து வழங்கப்பட்டது என்பது இவர் முடிவு.

### சேர அரசர் தாயமுறை

'செந்தமிழ்' இதழில் சேர அரசர்களின் தாயமுறை குறித்து முதன்முதலில் ச.சோமசுந்தரபாரதியார் கட்டுரை எழுதியுள்ளார். இக்கட்டுரையைத் தொடர்ந்து ஏற்பும் மறுப்புமாக பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. சோமசுந்தரபாரதியாரின் கட்டுரை செந்தமிழ் இதழ்த் தொகுதி 27 பகுதி 4இல் வெளிவந்துள்ளது. இவருடைய இக்கட்டுரை, சேரரின் அரச மரபு மருமக்கட்தாயமுறை மரபு என்பதையும், இம்மரபு சங்க காலத்திற்குப் பின் தோன்றியிருக்க வேண்டும் என்பதையும் சுட்டுகிறது.

'சேரநாடு தமிழகத்தின் பகுதியென்றும், சேரர் பரம்பரையிலும் மற்றைத் தமிழ்வேந்தர் குடிமரபாம் மக்கட்தாயமே பண்டைநாளில் பழவழக்காய் ஆட்சி பெற்றிருந்ததென்றும் நாம் நம்புகின்றோம். எப்படியானாலும் சங்ககாலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரே சேரநாட்டில் மருமக்கட்டாய முறை புது வழக்காய்ப் புகுந்திருக்கவேண்டுமெனக் கொள்கின்றோம்' என்பது இவர் கருத்தாக உள்ளது.

மருமக்கட் தாயமுறை என்பதற்கு, 1.ஆண் வழியிலன்றிப் பெண்வழியிலேயே உறவுமுறையும் கிளைமரபும் ஆட்சி பெறும். தாய்மாரே குடிபேணும் அடிமரமாய்க் கருதப்படுவர். கிளை வளமும் குடிநிதியும் பெண்வழியே தழையும்வகை முறைவகுத்துக் குடியறங்கள் நிற்பதாகும். 2. மக்களெல்லாம் தாய்க்குடியின் கிளைஞராவர். அக்குடியில் தம் மாமன்மார்க்குரிய வழித்தோன்றல்களாய் வரன்முறையே உரிமை பெறுவர். மருகருள்ளே வயது நிரல் வரிசையிலே வரன்முறையாய்த் தனித்தனியே குடியாளும் தலைமை கொள்வர் என்று விளக்கம் தருகிறார். இக்கட்டுரையில் முடிவாக, 'தற்போது மேல்புலத்தில் வழங்கிவரும் மருமக்கள் தாயமுறை புதியதொன்றில்லை என்பதும், தொலைச் சங்ககாலப் பழஞ்சேரர் குடிகளிலும் அடிப்பட்ட தொன்மரபாய் ஆட்சிபெற்று தொன்றுதொட்டே வழங்கி வருவதாய்த் தெரிகிறது என்பதுமே இவ்வாராய்ச்சியால் நாம் காணக் கிடைக்கும் பொருளாகிறது' என்ற கருத்தை வைக்கிறார்.

அதேபோல, சேர அரசர்களின் தாய வழக்கு குறித்து மு.இராகவையங்கார் இரண்டு கட்டுரைகள் எழுதியுள்ளார். அக்கட்டுரைகள் சேர வேந்தர் தாய வழக்கு என்ற தலைப்பில் தொகுதி 27; பகுதி 10-திலும், தொகுதி 27; பகுதி 11-றிலும்

வெளிவந்துள்ளன. இவர் தனது கட்டுரைகளில் மருமக்கள் தாயமுறை என்பதற்குச் சான்றாகப் பிறர் சுட்டியுள்ள எட்டுக் காரணங்களை வரிசைப்படுத்துகிறார். பின்னர் மருமக்கட்டாய பொருளாராய்ச்சி என்ற தலைப்பில் ஒவ்வொரு காரணத்தையும் சான்றுகளோடு மறுக்கிறார். முதல் கட்டுரையில் மருமக்கட்தாய முறை என்பதை வலியுறுத்தும் கருத்துகளில் ஏழு கருத்துகளை எடுத்துச்சொல்லி அதற்கு மறுப்பு விளக்கமும், இரண்டாவது கட்டுரையில் எட்டாவது காரணத்தைச் சொல்லி அதற்கு விரிவான மறுப்பும், மக்கட் தாயமுறைக்கு இன்னபிற சான்றுகளும் காட்டி முடிவு கூறியுள்ளார்.

ஆய்வு முடிவாக, 'மருமக்கட்டாயம் பழையசேரர்க்கு உரியதாகாமை, மேலேயான் விரிவாகக் கூறியப் போந்தவற்றால் தெளிவாக அறியப்பட்டமையின், அத்தாய முறை வழங்கிய மலையாளக் கொடுங்கோளூரே பழைய தலைநகராதல்வேண்டும் என்ற கூற்றும் வலியற்றதாதல் காணலாம். கொங்குக் கருவூரே சேரரிருந்தாண்ட பழைய தலைநகரன்றி வேறெதனைக் கூறினும் அது முன்னூல் வழக்குகளுடன் பெரிதும் முரணுவதாம். இதனைச் சேரன் செங்குட்டுவன் என்ற நூலின் இரு பதிப்புகளினும் விளங்க விரித்தெழுதியுள்ளேன்' என்று கூறுகிறார்.

அதேவேளை, மு. இராகவையங்கார் அவர்களின் ஆய்வு முடிவிற்கு மறுப்பாக அட்வகேட் எல். கிருஷ்ணசாமி அவர்கள் 'சேரர் தாயமுறை' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றினை எழுதியுள்ளார் (தொகுதி 28, பகுதி 7). மு.இராகவையங்கார் கருத்தை மறுக்கும் இவர், 'சரிதநூலறிஞர் அனைவருக்கும் இது பொருந்தாவாதம் என்பது ஒருதலை. மக்கட்சமுதாயமெல்லாம் முதலில் தாய்வழித் தாயம் மேற்கொண்டிருந்து, பின் நாளடைவிற் பலவகுப்பினர் தந்தைவழித்தாயிகளாகியுள்ளனர் என்பதே தற்காலம் மதிநுட்பம் நூலோடுடைய ஆராய்ச்சியாளர் அனைவர்க்கும் ஒப்பமுடிந்ததோர் சரித்திர உண்மையாகும். ஆகவே, தமிழரும் மக்கட்சமுதாயத்தில் அடங்குவதால் அவருள்ளும் ஆதியில் மருமக்கட்டாயமே பழவழக்காய்நின்று, பிறகே மக்கட்டாயம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டுமென்பது சரித நூன்முறையிற் போதருவதாகும் என்ற கருத்தை முன்வைக்கிறார்.

இந்நிலையில் மு.இராகவையங்கார் கருத்துக்கு வலுசேர்க்கும் வகையில் பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் அவர்கள் 'சேர மரபு' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றினை எழுதியுள்ளார்.

அக்கட்டுரையில், 'சேரர் தமிழ்நாட்டு மூவேந்தருள் ஒரு மரபினர். சேர சோழ பாண்டியர் என வேந்தரைக் கூறும்பொழுது முதலில் வைத்துக் கூறுவதனாலேயே அவர்களது தொன்மை உணரப்படும்' என்றும், 'சேரவரசர் மருமக்கட் தாயத்தினர் எனச் சேரநாட்டில் இப்பொழுது சிலர் கூறி வருகின்றார்கள். 'மருமக்கள் தாயம்' பின்வந்ததாகும். குலத்தில் மைந்தர்களும் மைந்தர்கள் இல்லாவிடில் தம்பியருமே அரசாண்டு வந்திருக்கின்றனர் என்பது 'பதிற்றுப்பத்து' என்னும் நூலால் தெரியலாகின்றது' என்றும் சுட்டுகிறார்.

மேலும், 'ஒரு பொருளை நாம் உறுதியாகக் கருதலாம். மக்களிருக்கும் பொழுது, அரசுரிமை மருமக்கட்குச் செல்லாது. ஆதலால், பிற்காலத்தில் சேரர் குலத்தில் மக்கள் இலராயினாரென்றோ மக்களிருந்து அரசியலைத் துறந்தாரென்றோ கொள்ள வேண்டும். அவ்வாறான பின்னர் சேரகுல அரசியல் முந்தையரசருடைய உடன் பிறந்தாள் மக்களுக்குச் சென்றிருக்க வேண்டும். மூதாதையின் செல்வத்தை மகளுக்கு மகள் இல்லாதவிடத்து மகளுக்கு மகன் ஆள்வது முறைமையே ஆகும்' என்பதும் அவரின் ஆய்வு முடிவாக உள்ளது.

## சேரர் இலக்கியம்

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று பதிற்றுப்பத்து. இந்நூல் சேர அரசர்களைப் பற்றி மட்டுமே பாடப்பட்ட தனி நூலாகும். தமிழக அரச மரபினருள் வேறு எந்த அரச மரபினருக்கும் பதிற்றுப்பத்துபோல் தனி நூல் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பதிற்றுப்பத்து என்பது பத்து சேர அரசர்களைப் பத்துப் புலவர்கள் பத்துப் பத்துப் பாடலில் பாடிய தொகுப்பு. இந்நூலில் முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை. இரண்டாம் பத்து முதல் எட்டாம் பத்துமுடிய உள்ள எட்டுப் பத்துகளே கிடைக்கின்றன.

இப்பதிற்றுப்பத்து நூல் குறித்து 'பதிற்றுப்பத்து' என்ற தலைப்பிலேயே செந்தமிழ் இதழில் மூன்று கட்டுரைகள் வெளிவந்ததாகக் குறிப்பு இருக்கிறது. முதல் கட்டுரை, தொகுதி 31; பகுதி 8-இல் வெளிவந்துள்ளது. மற்ற கட்டுரைகள் தொகுப்பில் காணக்கிடைக்கவில்லை.

இக்கட்டுரைகள் தவிர, செந்தமிழ் இதழில் வெளியான சேர நாட்டு வரலாறு, வஞ்சிமாநகர், சேரர் தாயமுறை, சேர நாட்டுத் தொன்மை, சேர அரசர்கள் போன்ற கட்டுரைகளில் பதிற்றுப்பத்துப்

பாடல்கள் வழியும், அதன் பாயிரச் செய்திகள் வழியும், சேர மன்னர்கள், அரசமா தேவியர், புலவர்கள், புலவர்கள் பெற்ற பரிசில்கள், தலைநகர் குறித்து ஏராளமான செய்திகள் சான்றுகளாக எடுத்தாளப்பட்டுள்ளன. சேர அரசர்கள், தாயமுறை, தலைநகர், நிலப்பரப்பு குறித்த ஆய்விற்கு முதன்மைச் சான்றாக இப்பதிற்றுப் பத்து திகழ்வது நோக்கத்தக்கது. இதனை அடுத்துப் புறநானூறும், சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகிய காப்பியங்களும் சேரர்கள் பற்றிய தரவுகளைக் கொண்டு திகழ்கின்றன.

செந்தமிழ் இதழில் பதிற்றுப்பத்து குறித்த கட்டுரையை மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை, பண்டித வகுப்பு மாணவன் ஆர். வீரராகவன் அவர்கள் எழுதியுள்ளார். கட்டுரை, பதிற்றுப் பத்தென்பது புலவர் பதின்மர் சேரவரசர் பதின்மர்மீது ஒவ்வொருவருக்குப் பப்பத்துப் பாக்களாகப் புறத்துறை அமைத்துப் பாடிய நூலாகும். இதில் முதற் பத்தும் பத்தாம் பத்தும் நீங்க, மற்றை யெட்டுப் பத்துமே இப்பொழுது வழங்குகின்றன என்ற குறிப்போடு தொடங்குகிறது.

இந்நூலில் நயமிக்க பல தொடர்கள் பல்கிக் கிடக்கின்றன. இது, ஆண்டாண்டு வந்துள்ள தொடர்களது நயத்தைக்கருதி, அத்தொடர்களையே அவ்வச்செய்யுள்கட்குப் பெயராக வழங்குதலானே விளங்கும். இதில் பல அரிய இலக்கண மரபுகளும், அரும்பதங்களும் பயின்றுவந்துள்ளன; ஆதலால் தமிழ்மொழி கற்கப்புகுந்த மாணாக்கர்கட்கு இந்நூல்கற்றல், அரிய இலக்கண முடிபுகட்கு ஆட்சியிடமறிதற்கும், அரும்பதப்பொருளை அறிந்து கொள்வதற்கும் இன்றியமையாததாகும். சங்க நூல்களுள்ளே, அந்நூலிலும் அகநானூற்றிலும் கூறியது கூறலென்னும் குற்றந்தங்குமாறு கூறுவதுபோற் கூறி உய்த்துணர்வார்க்கு வேறொன்பொருள் சிறக்க வைத்திருப்பது, பயில்வோர்க்கு உய்த்துணர்வை உண்டாக்குமென்பது ஒருதலை. ஆகவே, இந்நூல்களில் இடர்ப்பட்டுப் பொருள் கண்டுய்த்துணர்வு மிக்காருக்குப் பிற நூற்குக் குறிப்புரையாயமைந்த பழையவுரையொன்றுள்ளது. அதன் உதவியின்றேல் அரும்பதம் நிறைந்த இந்நூற்பொருள் காண்டல் அரிதேயாம். ஆயினும், அது விளக்கவேண்டிய பகுதி பலவற்றை விளக்காது விடுத்தமையான் அதனுதவியைக்கொண்டு பொருள்காண்டலும் நுண்ணறிவினார்க்கன்றி என்போன்ற மாணாக்கர்கட்கும் அரிதேயாகும். ஆதலால் யான் ஆசிரியரிடம் பாடங்கேட்டவற்றுள் என் சிற்றறிவிற்கெட்டியவற்றை என்போன்ற மாணாக்கர் பிறருக்கும் உபகாரப் படுமெனக்கருதி

ஒருரையாக எழுதி வெளியிடலானேன் என்ற விளக்கத்தோடு இரண்டாம் பத்தின் முதல் பாடலை அறிமுகப்படுத்தப் புகுகிறார் கட்டுரை ஆசிரியர்.

**விளக்கமுறை**

பாடல் பகுதி பகுதியாகப் பிரித்து பொருள் சுட்டப்பட்டுள்ளது. இலக்கணக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. தனிச்சொல்லுக்கான சிறப்பு விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது.

**இலக்கணக் குறிப்பு**

பாடலில் பயின்று வந்துள்ள சொற்களுக்கு இலக்கணக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

எ.கா. ஈண்டுக் காவன்மரமாகவென்றது இசையெச்சம்; கமமென்றது நிறைதற்பொருட்டு. கடலென்னும் இடப்பொருட்கு அக்கடல்நீர் சூல்போ லகத்துள்ளிட் டிருத்தலால், சூலெனப் பட்டது,

**உவமவாகுபெயர்**

சொற்பொருள் விளக்கம்

தேவையான சொற்களுக்குப் பொருள் விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது.

எ.கா. 'முரண்மிகு சிறப்பி னுயர்ந்த வூக்கலை' *(கக)*

உயர்ந்த ஊக்கலை என்றது மிக்க ஊக்குதலையுடையாய் என்றவாறு. ஈண்டு உயர்ச்சி மிகுதிப்பொருளுணர்த்தி நின்றது. ஊக்கலென்பது உள்ளவெழுச்சி.

அணங்குதல் - வருத்துதல்

சூரென்றது சூரவன்மாவென்னும் அசுரனை.

மனாலமென்பது குங்குமம்; சாதிங்குலிகமெனினும் அமையும். சாதிங்குலிகமென்பது சாதிலிங்கமென இக்காலத்து வழங்கப்படுகிறது.

அரணென்பது ஆகுபெயராய் அரணின்கணுள்ளாரைக் குறித்து நின்றது என்பன போன்றவை.

# பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் மரபு அறிவும் பல்துறை நுட்பமும்

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்களைக் களமாகக் கொண்டு, தொழில்கள், தொழில்நுட்பங்கள், அறிவியல் கூறுகள், தொலைநோக்குச் சிந்தனைகள், மேலாண்மைக் கூறுகள், மரபு அறிவு, பல்துறை அறிவு போன்ற புதிய பொருண்மைகள் பலவற்றுள் ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. ஆனால், இலக்கியப் பகுப்பு முறையில் கீழ்க்கணக்கு நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ள பதினெட்டு நூல்களுள் திருக்குறள் தவிர்த்த ஏனையவற்றில் இத்தகைய ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப் படவில்லை. காரணம், பதினெண்கீழ்கணக்கு நூல்கள் பெரும்பான்மை அறக் கருத்துகளை வலியுறுத்துவதும், மேல்கணக்கு நூல்களை ஒப்பிடுகையில் இலக்கியச் சுவையும் கற்பனையும் குறைந்திருப்பதுமே ஆகும். ஆயினும், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆய்வுப் பொருண்மைகளைக் கீழ்க்கணக்கிலும் விரிவுபடுத்தத் தேவையான கூறுகள் உள்ளன. நுணுகி ஆய்ந்தால் பல்துறை அறிவு, மேலாண்மை, பொருளியல், தொலைநோக்கு, தொழில் நுட்பம் போன்ற பல்வகைப் புதிய சிந்தனைகளைக் கீழ்க்கணக்கிலும் அடையாளப்படுத்த முடியும். அவ்வகையில், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் வழி பண்டைத் தமிழரின் மரபு அறிவையும் தொழில்நுட்பக் கூறுகளையும் காண்பதாக இக்கட்டுரை அமைகிறது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திருக்குறளைக் களமாகக் கொண்டு இத்தகைய ஆய்வுகள் பல முன்னமே நிகழ்த்தப்பட்டுள்ளமையால் திருக்குறள் தவிர்த்த ஏனைய நூல்கள் இக்கட்டுரைக்குக் களமாக எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன.

## மரபு அறிவு

'மரபு' என்பதற்கு, 'பல காலமாகப் பின்பற்றப்பட்டு வருவது அல்லது பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதி' (க்ரியா, ப.810) என்று விளக்கமளிக்கப்படுகிறது. எனவே மரபு அறிவு என்பதை, மரபினரால் அறிமுகப்படுத்தப்பட்டு, வழிவழியாக முறைப்படுத்தப்பட்டு,

செப்பம் செய்யப்பட்ட பல்துறை சார்ந்த அறிவு எனக் கொள்ளலாம். தேவையும் பயனும் கருதி இவை ஏற்றுக்கொள்ளப்பட்டும் புறந்தள்ளப்பட்டும் வந்திருக்கின்றன. அவ்வகையில், அடிப்படைத் தேவையான உணவு உற்பத்தி தொடங்கி பல துறைகளிலும் பல நிலைகளிலும் முன்னோர்களால் ஆய்ந்து பயன்படுத்தப்பட்ட, இன்றைக்கும் பயன்தரவல்ல மரபு அறிவினைக் கீழ்க்கணக்கு நூல்களின் வழி அடையாளப்படுத்த முடிகிறது.

## வேளாண்மை

அடிப்படைத் தேவைகளில் முதலாவதான உணவின் தேவையை நிறைவு செய்வதற்கான செயல்பாடுகள் பலவித படிநிலைகளைக் கொண்டுள்ளன. இவற்றில் விளைநிலங்களை உருவாக்குதல், செப்பம் செய்தல், பயிரிடல், நீர்ப்பாய்ச்சுதல், எரு இடல், காத்தல், அறுவடை செய்தல் போன்ற நிலைகளில் துறைசார் அறிவு வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

நல்ல உழவரைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து,

*புலத்தியல்பு புக்கன் உரைக்கும்* (நான்மணி. 71:2–3)

என்கிறது நான்மணிக்கடிகை (பா.71:2-3). இதில், உழவன் என்பவன், தான் பயிர்செய்யும் நிலத்தின் தன்மையை அறிந்திருத்தல் வேண்டும் என்பதும் அவனாலேயே நல்ல விளைச்சலை ஈட்ட முடியும் என்பதும் பெறப்படுகிறது.

### விளைநிலம் மேம்பாடு

விளைநிலத்திலுள்ள வைக்கோலைச் சேமித்து நாள்தோறும் உழு மாடுகளைக் காப்பாற்றுதல்; மாடுகளைக் கொண்டு புன்செய் நிலத்தை உழுதல், பண்படுத்துதல்; எருயிடுதல், மேம்படுத்துதல் போன்றவற்றால் நிலத்தை நன்செய்யாக மாற்றுதல் ஆகியவற்றைச் செய்பவனே உழுதொழிலில் சிறந்தவனாவான் என்கிறது சிறுபஞ்சமூலம் (பா.60). அவ்வகையில், குறிஞ்சி நில மக்களால் மரம், செடி, கொடிகள் வெட்டி ஒழுங்குபடுத்தி பயிரிடப்பட்ட, பன்றிகள் கொம்புகளால் உழுத (கிளறுதல்), குளிர்ந்த கதிர்களையுடைய தினைப்புனங்களை,

*எறிந்தெமர் தாமுழுத வீர்ங்குரல் ஏனல்* (ஐ.ஐ.18:1)

என்ற அடியும்

*கேழல் உழுத கரிபுனக் கொல்லையுள்* (ஐ.எ.11:1)

என்ற அடியும் காட்டுகின்றன.

**உழுதல்**

உழுதலுக்கு ஏர் மாடுகள் பயன்படுத்தப்பட்டன. தனக்கு உரிமையுடையதாகிய ஏர் மாடுகளை வைத்திருப்பவர் உயர்வாகக் கருதப்பட்டார். அவருடைய வேளாண்மை,

*ஏருடையான் வேளாண்மை தானினிது* (இனி.3:3)

என்று போற்றப்பட்டது. உழுமாடுகள் இல்லாமல், பிறரின் எருதுகளை நம்பி உழுதொழிலில் ஈடுபடுபவர்களால் குறித்த காலத்தில் குறித்த வேளாண்மையை மேற்கொள்ள இயலாது. உழுவதற்கு நிலத்தில் ஈரப்பதம் இன்றியமையாதது என்பதால் அவர்களால் நிலத்தினைப் பண்படுத்த முடியாத சூழ்நிலை நிலவியது. எனவே வேளாண் தொழில்புரிவோருக்கு உழுமாடுகளின் தேவை வலியுறுத்தப்பட்டது. உழுமாடுகள் இல்லா உழவனின் நிலையை,

*எருதில் உழவர்க்கு போ(கு) ஈரம் இன்னா* (இன்னா.4:1)

என்பதில் அறியமுடிகிறது. இதில் எருதில்லாத உழவர்கள் சிறிதளவு மழை பெய்யும் காலத்தில் அந்தக் குறைந்த ஈரப்பதம் கொண்டு நிலத்தை உழ எருதுகள் கிடைக்காமல் துன்பம் அடைவர் என்பது சுட்டப்படுகிறது.

**நீர்ப் பாய்ச்சுதல்**

நீர்ப்பாய்ச்சுவதால் விளைநிலம் செழிப்படையும் என்பதை,

*நீராண்வீ றெய்தும் விளைநிலம்* (நான்.86:1)

என்பதில் அறியமுடிகிறது. நீரை முறையாகப் பாய்ச்சவில்லை என்றால் பசும் பயிர்கள் விளைவின் நலம் கெடும் என்று அறிவுறுத்தப்பட்டது (நான்.46:2-3). இருப்பது சிறிதளவு நீராயினும் அதை முறைப்படுத்தி பாய்ச்சுதல் வேளாண்மை நுட்பமாக அமைந்தது. எனவே சீரிய முறையில் வாய்க்கால்கள், பாத்திகள் (தி.நூ.5:1-2) அமைக்கப்பட்டன. வாய்க்காலைப் போல, எந்தப் பயனையும் எதிர்பாராமல் செயலாற்றுபவர்களின் நட்பு சமூகத்தில் போற்றப்பட்டது (நாலடி.218).

வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடி உயர கோன் உயரும் என அனைத்திற்கும் நீரே

அடிப்படை என்றும், எனவே, நீரை உயர்ந்த வரப்புகளைக் கட்டி நிறைவாகப் பாய்ச்சினால் அதிக விளைச்சல் கிட்டும் என்பதும் அறிவுறுத்தப்பட்டது(சி.மூ.46).

### களையெடுத்தல்

பயிரில் களைகளைப் பிரித்தறிந்து, அவற்றை நீக்கினால்தான் எதிர்பார்த்த விளைச்சல் இருக்கும். ஆகவே, வேளாண் மேலாண்மையில் களை கட்டுப்பாடு வலியுறுத்தப்பட்டது. அற்ப அறிவினையுடையவர்கள் பயிரில் வளரும் களைகளுக்கு ஒப்பாகச் சுட்டப்பட்டதை.

> *................................ பிணிபயிலும்*
> *புல்லன்னர் புல்லறிவின் ஆடவர்* (நான்.34:2–3)

என்ற அடிகள் காட்டுகின்றன.

### பயிர்ப் பாதுகாப்பு

எரு இடுதல், நீர்ப்பாய்ச்சுதல், களையெடுத்தல் போன்றவற்றை முறையே செய்தாலும், பயிர் நன்கு விளைந்தாலும் பாதுகாப்பு இல்லாத பயிர் எதிர்பார்த்தப் பலனைத் தராது என்பது வலியுறுத்தப் பட்டது. தினைப்புனம் காத்தல் மகளிர், ஆடவர் என இருபாலராலும் மேற்கொள்ளப்பட்டது. எனவே, விளையும் காலத்தில் பயிரைக் காப்பாற்றாதான் உழவுத்தொழில் நிலைநிற்பன போல தோன்றி கெட்டு அழியும் என்று அறிவுறுத்தப்பட்டது. இதனை,

> *................................ பைங்கூழ்*
> *விளைவின்கண் போற்றான் உழவும்*
> *................................ உள்ளனபோல கெடும்* (திரி.59:1–3)

என்பதில் காணலாம். அதேபோல, வேலியில்லாத கரும்பைக் காத்து பலன் பெறுதல் கடினம் என்பது,

> *சிறையில் கரும்பினைக் காத்தோம்பல் இன்னா* (இன்னா.5:1)

என்று சுட்டப்பட்டது.

### அறுவடை

முற்றிய பயிர்களின் தானியங்கள் அறுவடை செய்து சேகரிக்கப் பட்டன. அறுவடை செய்யும் காலத்தைப் பயிர்களின் விளைவினைக் கொண்டும், இயற்கை நிகழ்வுகளைக் கொண்டும் அறிந்தனர். தினை முதிரும் காலம் வேங்கை மரம் பூக்கும் காலத்தைக் கொண்டு அறிந்ததை,

*.......................................... நீடாப்*
*பனைவிளைவு நறிமண்ணப் பாத்தித் தினைவிளைய* (தி.நூ.5:1–2)

என்பதில் அறியமுடிகிறது. இதில், பாத்தியின் தினைப் பயிரானது விளைந்து போனபடியால் வேங்கைமரமானது தம்முடைய பூத்தலாகிய செயலினால் தினைகொய்ய வேண்டியநாள் வந்து விட்டதென்று அறிவித்தது சுட்டப்படுகிறது.

**விதை தானியம்**

முற்றிச் சேகரிக்கப்பட்ட தானியங்களில் இருந்து ஒரு குறிப்பிட்ட அளவு தானியம் அடுத்த பருவத்து விதையாகப் பாதுகாக்கப் பட்டது. எந்நிலையிலும் இவ்விதைதானியத்தைச் செலவிடக்கூடாது என்று வலியுறுத்தப்பட்டது. இதனை,

*வித்துக்குற்று உண்ணா விழுப்பம் மிக இனிதே* (இனி.40:2)

என்பதில் அறியலாம்.

**மானாவாரிப் பயிர்**

நீர் இறைத்தல், எரு இடுதல், களை எடுத்தல், காத்தல் போன்றவை இல்லாத, மழையை நம்பி மட்டுமே பயிரிடப்படும் மானாவாரி நெல்லான 'ஐவனம்' குறித்து பல இடங்களில் சுட்டப்பட்டுள்ளது. ஐவனம் என்பது, பல்வகையான மலர்களைப் பரப்பி வைத்தாற்போன்ற மலைநெல் என்பதை,

*....................................... பல்பூப்பெய்*
*தாலிலாத்த ஐவனம்* (தி.நூ.19:1–2)

என்ற அடிகள் காட்டுகின்றன.

**ஊடுபயிர்**

நன்செய் பயிர்கள், நன்செய் நிலத்தினைப் பண்படுத்திப் புன்செய்யாக மாற்றி அதில் விளைவிக்கும் பயிர்கள், மானாவாரிப் பயிரிடுமுறை போன்றவற்றோடு ஊடுபயிர் முறையும் பதினெண் கீழ்க்கணக்கில் காணப்படுகிறது. அவ்வகையில், தினைப்புனத்தில் முற்றிய நிலையிலுள்ள தினைத்தாள்களில் அவரைக் கொடிகள் பயிரிடப்பட்டிருந்ததை,

*அவரை பொருந்திய பைங்குரல் ஏனல்* (ஐ.எ.1:1)

என்ற அடி காட்டுகிறது.

அதேபோல, மாமரங்களில் மிளகுக் கொடிகள் வளர்த்து இரட்டை பயன் அடைந்ததையும் (ஐ.ஏ.8:1-2) இலக்கியங்கள் காட்டுகின்றன.

### மழை - நீர் - மேகம் குறித்த அறிவு

இவ்வுலகத்து உயிர்கள் எல்லாம் வானத்தை நம்பியே வாழ்கின்றன. வானம் வழங்காமல் பொய்த்தால் மண்ணுலகில் புல்லுக்கும் இடமில்லை என்பதைப் பண்டைத் தமிழர் அறிந்திருந்தனர். அதனால் நீரின் தேவை குறித்து உலகிற்கு உணர்த்தியதோடு, நீரின் இயல்பு, மழை உருவாகும் விதம் போன்றவற்றையும் நன்கு ஆராய்ந்தனர். ஆய்வின் உண்மைகளைப் பதினெண்கீழ்க்கணக்கு போன்ற இலக்கியங்களில் பதித்துவைத்தனர்.

இந்த உலகத்திற்கும் மழைத் துளிகளுக்குமான உறவைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து,

*.......................................... வானத்*
*துளிநோக்கி வாழும் உலகம்* (நான். 29:2–3)

என்றும்,

*மழையின்றி மாநிலத்தார்க்(கு) இல்லை* (நான்.45:1)

என்றும், நீரின்மையால் வருந்தும் பசுமையான பயிர்க்கு மழை மிக இனிது (இனி.15:3) என்றும் அறிவித்தனர். மேலும், நிலத்தின் இயல்பை அந்நிலத்தில் பெய்யும் மழையின் இயல்பே தீர்மானிக்கும் என்பதை,

*.............................. நிலத்தியல்பு*
*வானம் உரைத்து விடும்* (நான். 71:3–4)

என்று பதிவுசெய்தனர்.

மேலும், வானம் பொய்ப்பின் ஊருக்கு நன்மை இல்லை (இன்னா.20:3), மேகமானது மழைநீரைச் சொரியாதாயின் இவ்வுலகத்தில் உள்ளவர்க்கெல்லாம் பெருந்துன்பம் நேரும் (இன்னா.35:1) என்று அறிந்திருந்தனர். எனவே, குழித்துழி நிற்பது நீர் (நான். 31:1) என்ற உண்மையின் அடிப்படையில் பள்ளமான பகுதிகளில் எல்லாம் நீரினைத் தேக்கி வைக்கவேண்டும் என்று அறிவுறுத்தினர். எனவே, சோலை அமைத்தலோடு தருமத்திற்காகக் குளத்தினைத் தோண்டுதல் மிக இனிது என்பதை,

*காவோ(டு) அறக்குளம் தொட்டல் மிக இனிது* (இனி.23:1)

என்று வலியுறுத்தினர்.

### மழை மேகம் உருவாதல்

மழையைப் பொழிவிக்கும் மேகத்தைப் பற்றி பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பல இடங்களில் சுட்டுகின்றன. இவற்றில் மழை மேகம் உருவாகும் விதம், மேகம் வலமாக ஏறினால் மழை பொழியும் என்ற நுட்பம், மழை வருவதற்கு முன்பு இயற்கையில் ஏற்படும் மாறுபாடுகள், உயிரினங்களின் செயல்பாடுகள் போன்றவை நுணுக்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடல்நீர் ஆவியாதல் மூலம் உருவாகும் வெண்மேகம் மலைகள் இருக்கும் பகுதிக்குச் செல்லும்பொழுது குளிர்காற்றினால் குளிர்விக்கப்பட்டு, கருமேகமாக உருமாறி மழையாகப் பொழிகின்றன என்ற நுட்பம் பல பாடல்களில் சுட்டப் பட்டுள்ளது(*கார்.17:2-3, கார்.33:1-2, கார்.பா.34:1-3, கார்.37:1-3, ஐ.ஐ.5:1-3,...*). அதேபோல, கார் மேகம் வலப்புறமாக எழுந்தால் மழை பொழியும் என்ற செய்தியும் (*கார்.12:3-4,*), கார்காலத்து மேகங்கள் வலப்புறமாகச் சுழன்று வருவன(*ஐ.ஐ.1:4*) என்ற செய்தியும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## உடல் நலம்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மனநலம் பேணும் அறக்கருத்துகளோடு, உடல்நலம் பேணும் மருத்துவக் கருத்து களையும் கொண்டுள்ளன. திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி என மருந்துகளின் பெயர்களாலேயே தலைப்பினைப் கொண்ட நூல்கள் கீழ்க்கணக்கில் இருப்பது எண்ணத்தக்கது. உடற்கல்வி, மனவளக் கல்வி என இருவகை கல்விக்கும் அக்காலச் சமூகம் முதன்மை கொடுத்தது இதனால் விளங்கும். உடலும் மனமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. மனம் நோயுற்றால் உடலும், உடல் நோயுற்றால் மனமும் பாதிக்கும் என்பது இக்கால மருத்துவ உளவியலாக உள்ளது. இதனைக் கீழ்க்கணக்கு நூல்களும் பதிவு செய்கின்றன.

உடலில் சோர்வு நோய் உண்டாயின் அது மனத்தையும் பாதித்து இருநிலைகளிலும் துன்பத்தைத் தரும் என்பதை,

*.......................... மெய்த்தாக*
*மூத்தல் இறுவாய்த்த* (நான்.19:1–2)

என்கிறது நான்மணிக்கடிகை. அவ்வகையில், மனிதர்கள் நோய்கள் அண்டாமல் பார்த்துக்கொள்ளும் நெறிமுறைகளையும் நோய்கள் வந்தால் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் பலவற்றையும் பதினெண் கீழ்க்கணக்கில் காணமுடிகிறது. இந்நூலின் 'பழந்தமிழர் மருத்துவ முறைகளும் உடல்நல மேலாண்மையும்' என்ற கட்டுரையில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் காணப்படும் மருத்துவம் மற்றும் உடல்நலப் பாதுகாப்புக் குறித்து, மருத்துவர், உணவு உட்கொள்ளும் முறைகள், உணவின் தன்மைக்கேற்ப உண்ணுதல், உறங்கும் காலம், உறங்கும் திசை என மிக விரிவாகக் பேசப்பட்டதால் இங்கு தவிர்க்கப்படுகிறது.

## உயிரியல் அறிவு

தாவரங்கள், பறவைகள், விலங்குகள், பூச்சியினங்கள் போன்றவற்றின் நுட்பமான செயல்பாடுகள், வாழ்க்கை முறைகள், இயல்புகள் குறித்தும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பதிவு செய்துள்ளன. தாவரங்களில் புல்வகையான மூங்கிலில் ஒருவகை நெல் உருவாகும் என்பதும், அந்நெல் உருவாகியதும் மூங்கில் பட்டுப்போகும் என்பதும் காட்டப்பட்டுள்ளது. இதனை,

*.................................................. நிறைவனத்து*
*நெற்பட்ட கண்ணே வெதிர்சாம்* (நான்.4:2–3)

என்ற அடிகளில் அறியலாம். அதேபோல, வாழை மரமானது குலை ஈன்ற உடன் இறந்துவிடும் என்பதை,

*மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காய் கூற்றம் (நான்.85:2)*

என்ற அடி பதிவுசெய்கிறது. மேலும், பூவாமல் காய்க்கும் மரங்களும் (சி.மூ.*22:1*), பூத்தாலும் காயாத மரங்களும் (சி.மூ.*23:1*) உள்ளன என்ற தாவரவியல் உண்மையும் பதிவு செய்யப் பட்டுள்ளது. அதேபோல, கோட்டுப்பூக்கள் மலர்ந்து பின் கூம்பாமல் உதிரும் தன்மையுடையவை என்பதும், நீர் நிலைகளில் உள்ள பூக்கள் மலர்ந்து பின்பு கூம்பும் இயல்புடையவை என்பதும் அறியப்படுகின்றன (நாலடி.*215: 1-3*).

மேலும், பாக்குமரம் நாள்தோறும் தண்ணீர் விட்டு பராமரித்தால் மட்டுமே பலன் தரும் என்பதும், தென்னை மரம் விட்டுவிட்டு நீர் பாய்ச்சினாலும் பலன் தரும் என்பதும், பனைமரமோ ஒருமுறை வைத்தாலே போதும் நீர்ப்பாய்ச்சி பராமரிக்கவேண்டிய

தேவையில்லை, ஆனாலும் தொடர்ந்து பலன் தரும் (நாலடி.216) என்ற செய்தியும் காணப்படுகிறது.

விலங்குகளில் யானை, குதிரை, எருது, பசு போன்றவை குறித்த செய்திகள் காணப்படுகின்றன. மேலும், விலங்குகள் தொடர்பான நூல் இருந்ததையும் அறிய முடிகிறது (ஐ.ஐ.10:1). குதிரைகளைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, குதிரைகளின் இயல்பைச் சேணம் அமைத்து ஏறியபின் அறிவர் (நான்.5:1-2) என்பதும், அவை, அவற்றைச் செலுத்துவோரது திறத்திற்கேற்றவாறு இயங்கும் (நான்.73:1) என்பதும், சேணம் இல்லாத குதிரையில் சவாரி செய்வது பெரிதும் துன்பத்தையே தரும் (இன்னா.9:3-4) என்பதும் சுட்டப்படுகிறது.

அதேபோல, யானைகளைப் பிடித்துவந்து கட்டுத்தறியில் கட்டிவைத்துப் பழக்குவர் (நான்.12:1) என்பதும், ஆண் யானைகளுக்கு முகத்தில் புள்ளிகள் இருக்கும் என்ற அடையாளப் பதிவும் (கார்.38:1) குறிக்கப்படுகிறது. அதேபோல, கன்றுக்குட்டியை உண்பித்தால் பசு பால் சுரக்கும்; நல்லபாம்பினை வசப்படுத்த மந்திர மொழிகளைப் பயன்படுத்துவர் என்பது போன்ற குறிப்புகளும் அறியப்படுகின்றன (நான்.12:1-2). மேலும், இடிஇடித்தால் நல்லபாம்பு அஞ்சி நடுங்கும் என்ற செய்தி பல இடங்களில் சுட்டப்படுகிறது (கார்.17:1-2 ; கார்.17:1-2 கார்.20:1; களவழி.13: 2-3). யானை பலநாள் பழகியிருந்தும் அதற்கு மதம் பிடித்தால் பாகனையே கொல்லும் என்றும் ஆனால், நாயோ, தன்னை வளர்த்தவன் சினம் கொண்டு எறிந்த வேலானது தனது உடலில் அழுந்திக்கிடந்தாலும், அவனைக் கண்டதும் வாலை ஆட்டி அவன் அருகே செல்லும் (நாலடி.213:2-5) என்றும் யானைக்கும் நாய்க்குமான குண இயல்பு சுட்டப்படுகிறது.

மேலும், சிலந்தி தன் முட்டை வெடித்து அதனால் இறக்கும் என்பதும், கவரிமான் மயிரை நீக்குவதால் இறக்கும் என்பதும், நண்டு குஞ்சு பொறிக்க அதனால் இறக்கும் (சி.மூ.11) என்பதும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல, தலைமழுங்கியிருக்கும் புற்றின் மேல் ஏறக்கூடாது (சி.மூ.80:1) என்று வலியுறுத்தப்படுகிறது. பாம்பு குடியிருக்கும் புற்றுகளின் தலைகளே (மேல்பகுதி) மழுங்கியிருக்கும். எனவே, அந்தப் புற்றுகளில் ஏறுதல் தீமையை விளைவிக்கும் என்பதனால் அச்செயல் தவிர்க்க அறிவுறுத்தப்பட்டது. அதேபோல, மனிதர்களாலும் நிகழ்த்த முடியாத பிற உயிரினங்களின் அதிசயங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. தூக்கணாங் குருவியினால்

கட்டப்பட்ட கூடு, பேரெறும்புகளால் செய்யப்படும் அரக்கு, தூய உலண்டு என்னும் புழுக்களால் நூற்கப்பட்ட நூல், கோற் புழுவால் செய்யப்படுவதாகிய கோற் கூடு ஆகிய இவை ஐந்தும் எவராலும் செய்ய முடியாதனவாகும் என்கிறது சிறுபஞ்சமூலம் *(பா.27)*. அதேபோல, அசுணமா என்னும் கேகயப் பறவையைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து, 'பறைபட வாழா அசுணமா'*(பா.4:1)* என்கிறது நான்மணிக்கடிகை.

## பலவிதப் பொருள்களின் தோற்றம்

அகில், அரிதாரம், முத்து போன்ற பலவிதப் பொருட்களும் தோன்றும் விதங்களை,

> ***கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும் மான் வயிற்றில்***
> ***ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்***
> ***பல்விலைய முத்தம் பிறக்கும்*** **(நான்.6.1–3)**

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. இதில், கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும் என்பதும், மான் வயிற்றில் அரிதாரம் பிறக்கும் என்பதும், கடலுள் முத்து பிறக்கும் என்பதும் பெறப்படுகிறது. அதேபோல, நாகத்திலிருந்து அரிய மணிகள் கிடைக்கும் என்பதும் *(கார்.20:3)*, மூங்கில்களில் இருந்து ஒருவகை முத்துக்கள் பிறக்கும் *(தி.ஐ.18)* என்பதும், மலையின் பாறைகளில் ஒளிமிக்க மணிகள் தோன்றும் *(நான்.7:1)* என்பதும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

## சமூக நலன் (ம) சுற்றுச்சூழல்

சமூக நலனிற்கும் தனிமனித நலனிற்கும் பதினெண்கீழ்க் கணக்கில் எண்ணற்ற கருத்துகள் சுட்டப்பட்டுள்ளன. அவை பெரும் பாலும் கற்பனை கலவாத, உண்மையை நேர்படச் சுட்டுவனவாக உள்ளன. இயற்கையின் ஐந்து பூதங்களான நிலம், நீர், தீ, காற்று, வான் ஆகிய இவற்றைப் பேண வேண்டும், இல்லையேல் உடம்பில் உள்ள ஐம்பூதங்களும் நம்மை விட்டு நீங்கும்*(பா.15)* என்று இயற்கையைக் காக்கவேண்டிய தேவை வலியுறுத்தப் படுகிறது. மேலும், சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தடுக்கும் நோக்கில், புல், விளைநிலம், பசுவின் சாணம், சுடுகாடு, நடக்கும் வழி, தூயநீர் நிலைகள், கோயில்கள், நிழல் உள்ள இடம், பசுக்கள் கொட்டகை, சாம்பல் போன்ற இடங்களில் உமிழ்தல், மலம்-சிறுநீர் கழித்தல் கூடாது *(ஆ.கோ.32)* என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

சமூக நலனை விளைவிக்கும் நற்செயல்களாக, மரங்களை நட்டு வளர்த்தல், சாலைகள் அமைத்தல், குடிநீர் நிலைகள் ஏற்படுத்துதல்

ஆகியவையும்(சி.மூ.63). குளம் வெட்டுதல், அதனைச் சுற்றி மரங்களை நடுதல், பாதைகளைச் சீரமைத்தல், தரிசு நிலத்தை உழுவயல் ஆக்குதல், வளமான கிணற்றை வெட்டி சுவர் எழுப்புதல் ஆகியனவும்(சி.மூ.66) சுட்டப்படுகின்றன.

## குழந்தைச் செல்வம்

கடல் சார்ந்தும் இனிய நீர் பிறக்கும்; மலை அருகிலும் உப்பு நீர் சுரக்கும் (நாலடி.224;1-2) என்ற உண்மையின் அடிப்படையில், சான்றோர்கள் எக்குடியிலும் பிறக்கலாம் என்ற உலகியல் உண்மையை அறிந்து, வயிற்றிலிருக்கும் கருவினை அழியாமல் காத்தல், பிறந்த குழந்தையைப் பாதுகாத்தல், குழந்தைக்கு நோய் வராமல் மருந்து கொடுத்து காத்தல், குழந்தையை அச்சுறுத்தாமல் வளர்த்தல் போன்றவை சமூக அறங்களாக முன்னிறுத்தப் பட்டுள்ளன (சி.மூ.74).

### தொழில்நுட்பம்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின்வழி ஆடை வடிவமைப்பு, கட்டுமானம், உலோகவியல், தோல்தொழில், கடற்தொழில், மருத்துவம் போன்ற பல்வகைத் துறைகளிலும் பழந்தமிழர் பயன்படுத்திய தொழில்நுட்பங்களை அறியமுடிகிறது.

**ஆடைகள்**

சங்க இலக்கியங்களில், காலத்திற்கும், செய்யும் தொழிலுக்கும், செல்வநிலைக்கும் ஏற்ப பலவகை ஆடைகளைப் பண்டைத் தமிழர் பயன்படுத்தியதை அறியலாம். இந்நுட்பத்தினைப் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களிலும் காணமுடிகிறது. குளிர்காலத்திற்கு ஏற்ற உடையினைப் பணியாளர்கள் அணிந்ததை,

*இளையரும் ஈர்ங்கட்(டு) அயர* (கார்.22:1)

என்பதில் அறியமுடிகிறது. அதேபோல, பட்டம்(ஐ.எ.43:4) என்னும் மேலாடை அணியப்பெற்றதும், அருவிகளில் பட்டுத் தெறிக்கும் நீரின் வண்ணத்தைப்போல வெள்ளாடைகள் நுட்பமாக நெய்யப்பட்டதையும் காணமுடிகிறது. இதனை,

*மால்நீலம் மாண்ட துகில்* (தி.நூ.6:1)

என்கின்றனர். மேலும், பெண்கள் அணியும் புடவையில் முந்தானை அமைப்பு வைக்கப்பட்டிருந்ததை,

*தாழ்துகில் கை யேந்தி* (தி.நூ.77:3)

என்ற அடி காட்டுகிறது.

**நீர்நிலைகள்**

நீர் மேலாண்மையின் கூறுகளாக நீர்நிலைகள் மேம்பாடும், உருவாக்கமும் அமைகின்றன. பதினெண்கீழ்க் கணக்கில் மடு, குளம், ஏரி, புயம், பொய்கை, கூவல், கிணறு போன்ற பலவித நீர்நிலைகளை உருவாக்கி, பலவித தேவைகளுக்குப் பயன்படுத்திய கட்டுமானத் தொழில்நுட்பம் அறியப்படுகிறது.

வேளாண்மைக்குப் பயன்படும்வண்ணம் மடுக்கள் உருவாக்கப் பட்டதும், மடுக்களில் உள்ள நீரின் அளவை அந்நீரின் தன்மையை வைத்து அறிந்ததும் சுட்டப்படுகிறது. இதனை,

> ........................................... *மெல்லென்ற*
> *நீரான் அறிப மடுவினை* (நான்.80:1–2)

என்ற அடிகள் காட்டுகின்றன. இதில், மடுவின் ஆழத்தை அதிலுள்ள குளிர்ந்த நீரால் அறிந்தது தெரியவருகிறது.

நீர்பாசனத்திற்குப் பயன்பட்ட மற்றொரு நீர்நிலை குளம் எனப்பட்டது. குளங்கள் மழைக்காலத்தில் நீரினை நிரப்பிக்கொள்ளும் வண்ணமும், தேவைக்கேற்ப பாசனத்திற்குத் திறந்துவிட்டுக்கொள்ளும் அமைப்பிலும் உருவாக்கப்பட்டன. எனவே, குளத்தின் நீர் வேளாண் வளத்தை உறுதிசெய்தது. எனவே, நீர் வளமற்ற ஏரியின் கீழ் உள்ள நெற்பயிர் வாடிவிடும் என்று கூறி வளமான குளத்தின் தேவை வலியுறுத்தப்பட்டது(நாண்.83:3).

மேலும், நீர் வரும் வழி நன்கு அமைந்திராத குளம் வறுமையால் பீடிக்கப்படும் என்பதை,

> *வாய்நன்(கு) அமையாக் குளனும்*
> ..............................................................
> *நல்வகுரவு சேரப்பட்டார்* (திரி.84:1–4)

என்ற அடிகள் காட்டுகின்றன. இக்குளங்களிலிருந்து பாசனத்திற்கு நீர் திறந்துவிட நீர்த்தூம்புகள் (மதகுகள்) அமைக்கப்பட்டிருந்தன (களவழி.2;3-4). அதேபோல, ஏரி சிறிதாயின் நீர் கொள்ளாது நிரம்பி வழியும். எனவே பெரிய அளவிலான ஏரிகள் உருவாக்க வலியுறுத்தப்பட்டது (நான்.102:1). அதன்படி, கயத்திலிருந்து பாய்ந்து ஓடி வளம்செழிக்கும் வண்ணம் நீர்நிலைகள் பெரிதாக உருவாக்கப்பட்டன. அதனால் வேளாண்மை பெருகியது. இதனை,

> *தேங்கமழ் பொய்கை அகவயல்* (ஐ.எ.47:1)

என்பதிலும்,

*கயநீர்ப்பாய்ந்தே ஓடும் காஞ்சிநல் ஊரன்* (கைந்.46:1)

என்பதிலும் அறியமுடிகிறது.

பாசனத்திற்கு என்றில்லாமல், உண்ணும் நீருக்காகக் 'கூவல்' எனப்படும் நீர்நிலை உருவாக்கப்பட்டது. இவ்வகை நீர் நிலைகளை உண்டாக்குபவர்கள் இறவா புகழை அடைவர் என்று ஊக்குவிக்கப்பட்டனர்.

*...................................... உண்ணுநீர்*
*கூவல் குறைவின்றித் தொட்டானும்* (திரி.16:2–3)

உண்ணும் நீருக்காக கூவல் என்ற இவ்வகை அமைப்போடு, கிணறு என்ற அமைப்பும் ஏற்படுத்தப்பட்டது. கிணறு என்பது உண்ணுநீர் தேவைக்காக ஏற்படுத்தப்படும் சிறிய வகை நீர் நிலை என்பது பெறப்படுகிறது. இதனை,

*எறிநீர்ப் பெருங்கடல் எய்தியிருந்தும்*
*அறுநீர்ச் சிறுகிணற்று ஊறல்பார்த்து உண்பர்* (நாலடி.275:1–2)

என்ற அடிகள் காட்டுகின்றன. கடலின் அருகில் இருந்தாலும், அந்த நீர் குடிப்பதற்குப் பயன்படாததால், அடிக்கடி நீர் வற்றிப்போகும் சிறு கிணற்றினது ஊற்றையே தேடிக் கண்டு பருகுவர் என்பது இதன் பொருள்.

**அணை கட்டுதல்**

அணை கட்டுதல் சிறிய முயற்சி அல்ல. தண்ணீரை எதிர்கொண்டு, அதனைத் தடுத்து நிறுத்தும் கடின முயற்சி. இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டோரை,

*செறுத்தொற உடைப்பினும் செம்புனலோடு ஊடார்*
*மறுத்தும் சிறைசெய்வர்* (நாலடி.222:1–2)

என்பதில் காணமுடிகிறது. இதில், தண்ணீர், அடைக்குந் தோறும் கரையினை உடைத்துக்கொண்டே இருப்பினும், அந்த நல்ல நீருடன் யாரும் சினம் கொள்ளாமல், அதனை விரும்பி வாழ்பவர் மீண்டும் அந்த நீரை அணை கட்டித் தடுப்பர் என்பது காட்டப்படுகிறது.

**எந்திரத் தொழில்நுட்பம்**

எந்திரத் தொழில்நுட்பங்களாக தேர்கள், கரும்பு பிழிதல் ஆகியவற்றில் எந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததை அறிய முடிகிறது.

*பொறிமாண் புனைதிண்டேர் போந்த வழியே* (கார்.21:1)

என்பதில், எந்திரச் செய்கைகளால் அலங்கரிக்கப்பட்ட உறுதியான தேர் காட்டப்படுகிறது. அதேபோல,

*கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்* (நாலடி.35:1)

என்பதில், கரும்பை ஆலையில் ஆட்டி அதன் சாற்றினால் ஆகிய வெல்லக் கட்டியை நல்ல பதத்திலே எடுக்கும் நுட்பம் காட்டப்படுகிறது.

### கடல்சார் தொழிலில்நுட்பம்

மீன் பிடித்தொழிலில் பலவிதமான தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, மீன் பிடிக்கவென்று கலன்களை உருவாக்குதல், நுண்மையான வலைகளைப் பின்னுதல், காற்றின் திசையறிந்து கலனைச் செலுத்துதல், பிடித்துவந்த மீன்களைக் கொண்டு உணங்கல் மீன் தயாரித்தல் போன்றவற்றைச் சுட்டலாம்.

நுண்மையான வேலைப்பாடு அமைந்த வலையினை நுண்வலை(ஐ.ஐ.47:1-3), நுண்ஞாண் வலை(ஐ.எ.66:1-2), நூல்நல நுண்வலை(தி.நூ.32:1-3) போன்ற அடைசொற்கள் காட்டுகின்றன. அதே போல உணங்கல் மீன் தயாரித்தலும் அவற்றிற்குப் பரதவ மகளிர் காவல் இருந்ததும் பல இடங்களில் சுட்டப்படுகின்றன (தி.நூ.51: தி.நூ.56, கைந்.53:3,கைந்.58:1-3).

மேலும், மீன்பிடித் தொழில், வணிகம் ஆகிவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டதாக திமில்(களவழி.18:1), அம்பி (களவழி.37:3), நாவாய்(ஐ.எ.61:1-2) என்ற பலவித கலன்களும் காட்டப்படு கின்றன. இவற்றில் நாவாய் என்பது கடல் வணிகத்தின் பொருட்டு உருவாக்கப்பட்ட கலன் என்பதை,

*கண்திரள் முத்தம் பயக்கும் இருமுந்நீர்ப்*
*பண்டம்கொ ணாவாய் வழங்கும் துறைவன்* (ஐ.எ.59:1–2)

என்பதில் அறியமுடிகிறது.

### உலோகவியல்

பதினெண்கீழ்க்கணக்கில் உலோகவியல் தொடர்பான பல செய்திகளைக் காணமுடிகிறது. பொன்னின் இயல்பை நெருப்பில் இட்டு (புடமிடுதல்) அறியும் நுட்பத்தை,

*.............................. மாசறச்*
*சுட்டறிப பொன்னின் நலம்* (நான்.5:2–3)

என்ற அடிகள் காட்டுகின்றன.

அதேபோல, இரும்புக் கருவிகளைக் கொண்டே இரும்புக் கம்பிகள் போன்றவற்றை வெட்டும் தொழில்நுட்பத்தை,

*இரும்பின் இரும்பிடை போழ்ப* (நான்.பா.36:1)

என்பதில் அறியமுடிகிறது. மேலும், எவ்வளவுதான் சுத்தம் செய்து, கழுவி எடுத்தாலும் இரும்பில் மாசு இருக்கும் என்ற உண்மையை,

*பூசிக் கொளினும் இரும்பின்கண் மாசொட்டும்* (நான்.100:2)

என்ற அடி காட்டுகிறது. இதில் இரும்பு சுத்திகரிப்பு சுட்டப்படுகிறது. மேலும், உலைக்கலத்தில் பயன்படுத்தப்பட்ட முட்டிகை (சம்மட்டி), குறடு (நாலடி.208) போன்ற கருவிகளும் காட்டப்படுகின்றன. அதேபோல, எஃகினால் செய்யப்படும் நுண்மையான பொருளான ஊசி விற்பனை செய்யப்பட்டதும் அறியப்படுகிறது (ஐ.ஐ.21:1).

**மணிகளின் நுட்பம் அறிதல்**

விலை மதிப்புடைய, ஒளிவீசும் பலவித மணிகள் பயன்பாட்டில் இருந்துள்ளன. பழந்தமிழர் இவ்வகை மணிகளின் தன்மைகளை அறியும் நுட்பத்தினைக் கைவரப்பெற்றிருந்தனர் என்பது குறிப்புகளின் வழித் தெரியவருகிறது. மணிகளின் இயல்பைக் கழுவி அறிவர் என்பதை,

*மண்ணி யறிப மணிநலம்* (நான்.5:1)

என்பதிலும், மாசு படிந்தாலும் மணி தன்னுடைய ஒளி குறையாது என்பதை,

*மாசுபடினும் மணிதன் சீர் குன்றாதாம்* (நான்.100:1)

என்பதிலும் அறியமுடிகிறது.

**கம்மாளர், தச்சர்**

பலவிதமான புழங்குபொருளைத் தயாரிப்பதில் கம்மாளரும், தச்சரும் சமூகத்தில் முக்கியப் பங்காற்றுகின்றனர். அவ்வகையில், தாம் கண்ட பொருள்களை அப்படியே வடித்தெடுக்கும் கம்மாளரை,

*கண்டதே செய்பவாங் கம்மியர்* *(நான்.41:1),*

என்பதிலும், நிறைய ஆட்களை வைத்து தொழில்செய்யும் தச்சன் பள்ளியை,

*.......... ............ தச்சன்*
*வினைபடு பள்ளியிற் தோன்றும்* *(கள.15:2–3)*

என்பதிலும் காணலாம்.

### தோல் தொழில்நுட்பம்

தோல் தொழில்நுட்பத்தைக் கொண்டு, செருப்புகள், பறை, தோல் வாரினால் இழுத்துக்கட்டப்பட்ட முரசு (*களவழி.9:2; ஐ.ஐ.2:2*) போன்றவை தயாரிக்கப்பட்டன. இவற்றின் வழி பலவித பயன்பாடுகளுக்குமான தோல்களின் தன்மை அறிதல், அவற்றைப் பதப்படுத்துதல், அவற்றைக் கொண்டு தேவையான கருவிகள் தயாரித்தல் ஆகிய தொழில்நுட்பங்கள் உய்த்துணரப்படுகின்றன.

### மருத்துவத் தொழில்நுட்பம்

மருத்துவ முறைகளில் பத்தியம் இருத்தல் (*சி.மூ.71;1-2*), புண்ணிற்கு மருந்திடுதல் போன்ற குறிப்புகள் காணப்படுகின்றன. புண்ணினைக் குணப்படுத்து அதில் இடப்படும் 'காரம்' எனப்படும் ஒருவகை மருந்து சுட்டப்படுகிறது. இது மிகுந்த எரிச்சலைக் கொடுக்கக்கூடிய மருந்தாக அறியப்படுகிறது. இதனை,

*காரத்தின் வெய்ய* (ஐ.ஐ.24:5)

*குலம் காரம்* (தி.நூ.127:3)

ஆகிய அடிகள் காட்டுகின்றன.

### சான்றுகளின் வழி

பதினென்கீழ்க்கணக்கு நூல்கள்விழி பெறப்பட்ட சான்றுகள் பண்டைத் தமிழரின் மரபு அறிவு, தொழில்நுட்பம் ஆகியவற்றை வெளிக்கொணர்வதாக அமைகின்றன. வேளாண் துறை, மீன் பிடித்தொழில், உலோகவியல், உடல்நலம், மருத்துவம் போன்றவற்றின் அறிவும் நுட்பமும் இன்றும் பயன்படுத்தக்கூடியனவாக இருப்பதைக் காணமுடிகிறது.

உயிர்கள் பற்றிய பதிவு, அவை குறித்தான தெளிவையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்துகின்றன. நீரின் தேவை, நீர்நிலை உருவாக்கம், மேம்பாடு, பாதுகாப்பு போன்ற கருத்துகள் இன்றைக்கும் வலியுறுத்தப்பட வேண்டியவையாக உள்ளன.

ஐம்பூதங்களை உணர்ந்து பேணுதல், இயற்கையிலிருந்து விலகிவிடாமல் அவற்றைக் காத்தல், சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தவிர்த்தல், பொது இடங்களைப் பாதுகாத்தல், சாலைகள் அமைத்தல், குடிநீர் நிலைகளை உருவாக்கிப் பாதுகாத்தல் போன்ற என்றைக்கும் தேவையான சிந்தனைகள் சிறப்பு பெறுகின்றன. 'கருக்கொலை'யைப் பாவம் என்று அறிவுறுத்தியதும், குழந்தைகளை

நோயில்லாமல் வளர்க்க வலியுறுத்தியதும் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டதாக அமைகிறது.

பதினெண்கீழ்க்கணக்கின் ஆசாரக் கோவை போன்றவை அனைத்து தரப்பு மக்களுக்கும் பொதுவானதாக இல்லை, ஒரு குறிப்பிட்ட பிரிவினரை உயர்வுபடுத்துவதாக உள்ளது என்ற கருத்து சொல்லப்பட்டாலும், அனைவருக்கும் பொதுவான, ஏற்றுக் கொள்ளக்கூடிய, பயன்தரக்கூடிய சிந்தனைகளும் நிறைந்துள்ளன என்பதைச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

# பயன் நூல்கள்

அகநானூறு (மூன்று தொகுதிகள்), உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1990.

அகநானூறு (களிற்றியானை நிறை), பொ.வே.சோமசுந்தரனார் எழுதிய பதவுரைகளுடன், கழக வெளியீடு, திருநெல்வேலி, மு.ப.1970.

அகநானூறு (மணிமிடைபவளம், நித்திலக்கோவை), பொ.வே.சோமசுந்தரனார் எழுதிய பதவுரைகளுடன், கழக வெளியீடு, திருநெல்வேலி, மு.ப.1970.

இலக்கிய இயக்கங்கள், முனைவர் சிவ.மங்கையர்க்கரசி, என்.சி.பி.எச், சென்னை -98, 2004.

கலித்தொகை மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984.

குறுந்தொகை மூலமும் உரையும், உ.வே.சாமிநாதையர், உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2000.

சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், கு.வே. பாலசுப்பிரமணியன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1994.

சங்க இலக்கியத் தொகுப்புகள் (எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு), நியூ சென்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2004.

சங்க இலக்கியத் தொகுப்புகள் (எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு), வர்த்தமானம் பதிப்பகம், சென்னை. 1999.

சங்கத் தமிழர் வாழ்வியல், மு.சண்முகம் பிள்ளை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. 1997.

சமூகவியல், இரா.கல்பகம், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை. 1973.

செந்தமிழ் இதழ் , தனி இதழ்கள், 2004ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரை .

செந்தமிழ் இதழ், தொகுதிகள் 1, 3, 5, 15, 16, 17, 18, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 36, 36, 49, 50, 51, 52, 55, 62, 63, 64, 66, 67, 68, 70, 71, 73, 74, 75, 95.

சைவ சமய வளர்ச்சி, டாக்டர், மா. இராசமாணிக்கனார், பூங்கொடி பதிப்பகம், சென்னை -4.

சைவமும் தமிழும், முனைவர் இரா.செல்வகணபதி, தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை, சென்னை 90. 2005.

தமிழக வரலாறு சங்ககாலம் - வாழ்வியல், தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை. 1983.

தமிழர் கண்ட தாவரவியல், முனைவர் வே. நெடுஞ்செழியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

தமிழர் சமய வரலாறு, டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை, பாரி புத்தகப் பண்ணை, சென்னை 5. 1980.

தமிழர் மதம், தேவநேயன், நேசமணி பதிப்பகம், வ.ஆ.மாவட்டம், 1972.

தமிழர் மதம், மறைமலையடிகள், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., திருநெல்வேலி-6, சென்னை -1. 1965.

தமிழியக்க வேர்கள், டாக்டர் ச.மெய்யப்பன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை 108. 1994.

தனித்தமிழ் இயக்கம், முனைவர் கு. திருமாறன், மருதம், திருச்சி 21, 1992.

திருக்குறள், பரிமேலழகர் உரை, கழக வெளியீடு, 16ஆம் பதிப்பு, 1976.

தொல்காப்பியம் தெளிவுரை, ச.வே.சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை. ஐந்தாம் பதிப்பு, 2003.

தொல்காப்பியம் பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1986.

தொலைநோக்கு, ஆ. மணவழகன், அய்யனார் பதிப்பகம், சென்னை, 2010.

நற்றிணை, பொ.வே. சோமசுந்தரனார், கழக வெளியீடு, சென்னை, 1976.

நாலடியார் உரைவளம், தொகுதி 1,2 , தஞ்சை சரசுவதி மகால், தஞ்சாவூர்.

பத்துப்பாட்டு மூலமும் உரையும் (I, II), பொ.வே. சோம சுந்தரனார், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1973.

பதிற்றுப்பத்து மூலமும் விளக்க உரையும், ஔவை. துரைசாமிப் பிள்ளை, கழக வெளியீடு, சென்னை, 1995.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை. 2009.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், தொகுதி 1,2,3, முல்லை நிலையம், சென்னை.


பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், மீனாட்சி புத்தக நிலையம், சென்னை.

பழந்தமிழர் தொழில்நுட்பம், ஆ.மணவழகன், அய்யனார் பதிப்பகம், சென்னை, 2010.

புறநானூறு மூலமும் உரையும், உ.வே.சாமிநாதையர், சென்னை, 1971.

மறைமலை அடிகளாரின் இலக்கியப் படைப்புகள், டாக்டர் நா. செயப்பிரகாசு, அருள் ஒளி, சென்னை-34. 1981.

முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, ஆசாரக்கோவை (உரையுடன்), கழக வெளியீடு, சென்னை.



# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

## சென்னை - 600 113

### அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| சுவடிப்பதிப்புகளில் உரைவேறுபாடுகள் (தொகுதி 1) | 135.00 |
| சுவடிப்பதிப்புகளில் உரைவேறுபாடுகள் (தொகுதி 2) | 140.00 |
| திராவிட மொழிகளும் திராவிட மொழி ஆய்வுகளும் | 135.00 |
| பாணர் இனவரைவியல் | 110.00 |
| சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழிநடை | 70.00 |
| உதயணகுமாரகாவியம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள் | 50.00 |
| அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் (தொகுதி 1) | 200.00 |
| அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் (தொகுதி 2) | 175.00 |
| விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனார் தமிழியல் பண்புகள் | 80.00 |
| சுவடிப்பதிப்பு முன்னோடிகள் | 60.00 |
| திருமுறைகளில் அகப்பொருள் மரபுகளும் தொண்டு நெறிகளும் | 75.00 |
| பெரியாரிய நோக்கில் மு.வ. | 55.00 |
| திணை வரலாறு | 70.00 |
| நரம்புக்கருவிகள் | 70.00 |
| மொழிஞாயிறு தேவநேயப்பாவாணரின் பன்முக ஆளுமை | 50.00 |
| சிந்தனைச்சிற்பி ம.சிங்காரவேலரும் தந்தை பெரியாரும் | 105.00 |
| பே.நா.அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் (தொகுதி 3) | 235.00 |
| கவிஞர் புதுவைச் சிவத்தின் சீர்திருத்த நாடகங்கள் | 120.00 |
| சித்தர்களின் நெறியில் வேதாத்திரிய யோகம் ஓர் ஒப்பாய்வு | 105.00 |
| சேக்கிழாரும் இசைத்தமிழும் | 50.00 |

---

755 தமிழ்ச் செவ்வியல் நூல்களில் அறம்–அறிவியல்–சமூகம் 70.00

978-81-925359-2-8